இறைகரம்

வழிநடத்த...



தந்தை ஜேம்ஸ் தொம்பர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இறைகரம் வழிநடத்த...

என் விசுவாச அனுபவம் மற்றும் அருட்பணி
பற்றிய என் சிந்தனைகள்

ஜேம்ஸ் தொம்பர்

திருமலை ஆசிரமம், கங்கான்கடை - 629 807

இறைகரம் வழிநடத்த . . .

தொகுப்பு : வ. அருள்ராஜ்

தமிழில் : வை. அ. பொன்னையா

வ. அருள்ராஜ்

வெளியீடு : FCRT வெளியீடுகள்

பதிப்பு : முதல் தமிழ் பதிப்பு

வெளியீட்டு நாள் : 17 ஜூலை 1999

அச்சகம் : புனித லூயிஸ் செவியிழந்தோர் பள்ளி
அடையார், சென்னை

உட்புகுமுன்...

தந்தை ஜேம்ஸ் ஒரு மாமனிதர். தொலைநோக்குப்பார்வை கொண்டவர். அவருடைய எழுத்துக்களுக்கு முன்னுரை எழுதுவதை ஒரு பேறாகவே நான் கருதுகிறேன். அவருடைய "எழுத்துக்களுக்கு" என்று கூறுகிறேன். காரணம் அவருடைய பெருமை அவர் செய்து முடித்த சாதனைகளிலும் அவருடைய ஆளுமையிலும் காணக்கிடக்கிறது.

கடந்த முப்பது ஆண்டுகளாக நான் ஜேம்ஸ் அவர்களின் நெருங்கிய நண்பராகவும் அபிமானியாகவும் இருந்து வருகிறேன். நான் ஓர் இளம் பெண்ணாத் திருவனந்தபுரத்தில் மீனவர்கள் மத்தியில் பணிபுரிய ஆரம்பித்தபோது நாங்கள் செய்ய முயன்றதைப் புரிந்து கொண்ட வெகுசிலரில் தந்தை ஜேம்ஸ் ஒருவர். தம்முடைய இருசக்கர வாகனத்தில் அமர்ந்து இவர் கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் வந்து எங்களை சந்திப்பார். எங்களோடு விவாதிப்பார். எங்களை ஊக்கப்படுத்துவார். எங்களைவிட வயதிலும் அனுபவத்திலும் மிக முதியவராதலால் எங்களுடைய இளமையின் உற்சாகத்தைப் பாராட்டி எங்களுடைய தீவிரம் நடைமுறைக்கு ஒவ்வாதபோது தம்முடைய நீண்டகால அனுபவத்திலிருந்து தாம் கண்டவற்றை எங்களோடு பகிர்ந்து கொள்வார்.

தந்தை ஜேம்ஸ் அவர்கள் தாம் விசுவசித்ததை வாழ்வில் வாழ்ந்து காட்டிய விதம்தான் என்னை மிகவும் கவர்ந்தது. அன்பும் நீதியும் நிறைந்த கடவுளின் அரசு இம்மண்ணில் நம் ஒவ்வொருவராலும் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஆழ்ந்த விசுவாசமே இவர் செய்த ஒவ்வொரு செயலிலும் வெளிப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் உள்ளுணர்வுகளை வாழ்ந்து காட்டுவதில் இவர் காலத்துக்கு முற்பட்டவர். ஏழைகளுக்கான இவரது அர்ப்பணம், அவர்களது விடுதலைக்குத் துணைபுரிய இவர் கண்ட புது வழிகள், இந்திய மரபுக்கு இசைந்த

வடிவமைப்பும் கட்டக்கலை அம்சமும் கொண்டு இவர் எழுப்பிய எண்ணிலறந்த ஆலயங்கள் இவை அனைத்துமே தாம் பணிபுரியத் தேர்ந்தெடுத்த மக்களின் ஊனுடலோடு இவர் ஒன்றிப்போனதைப் பறைசாற்றுகின்றன.

எனவே, தம் பணியில் தன்னைத் தாங்கி நிற்கும் தம் அன்புக்குரிய மக்களோடு பகிர்ந்துகொள்ளும் வண்ணம் தாம் எழுதிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என இவர் விழைவது இயல்பானதே. இந்த ஆண்டு தந்தை ஜேம்ஸ் அவர்கள் தாம் குருத்துவத் திருநிலைப்படுத்தப்பட்ட 50–வது ஆண்டைக் கொண்டாகிறார். இந்நேரத்தில் இவர் நம்மோடு பகிர்ந்து கோள்ள விரும்பும் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களால் இவர் இதயம் பொங்கி எழுகிறது என்பதை நிச்சயமாக என்னால் உணர முடிகிறது. தமது நோயின் விளைவாக பேசும் வார்த்தைகளில் பரிமாறிகொள்ள இயலாத தம் நிலையை தந்தை ஜேம்ஸ் அவர்கள் ஒரு புனிதமான தாழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார். இருப்பினும் காலத்தின் தேவைக்கேற்ப வாழவேண்டுமென்ற இவரது ஆவியின் ஊக்கம் மட்டும் தளரவேயில்லை. துன்பங்களின் மத்தியிலும் பல நேரங்களில் சிரிப்பாக வெடிக்கும் இவரது நகைச்சுவை உணர்வும் புன்னகையும் தொடர்ந்து நம்மை இவர்பால் இழுக்கிறது. தந்தை ஜேம்ஸ் அவர்கள் தாம் ஒவ்வொரு நிமிடமும் இறைக்கரங்களில் இருப்பதாக நம்புகிறார். அதையே வாழ்கிறார். இதைத்தான் இந்நூல் வழியாக நாமும் அனுபவிக்கத் தூண்டுகிறார்.

எல்லாமே நிலையற்று, நிச்சயமற்றுத் தோன்றும் இக்காலக்கட்டத்தில் தம் பணியில் இவர் காட்டிய விசுவாம் நமக்கு ஓர் எடுத்துக்காட்டு, ஒரு தூண்டுதல். இப்படிப்பட்ட ஒருவரைக் கொடையாகப் பெற்றுதற்காகவும் இவரை நெருக்கமாக அறிந்துகொள்ளக் கிடைத்த பெரும் வாய்ப்புக்காவும் நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

நளினி நாயக்

உள்ளத்திலிருந்து...

பாபுஜி என்ற மரியாதையாக அழைக்கப்படும் தந்தை ஜேம்ஸ் அவர்களைப்பற்றி அறியாதவர் இந்தியாவின் இப்பகுதியில் வெகுசிலரே இருக்கமுடியும். தன் ஐம்பது ஆண்டு பணிவாழ்வில் சமூகத்தின் விளிம்புகளில் வாழும் மக்களின், குறிப்பாக பனையேற்றுத் தொழிலாளர்கள், மீனவர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், பெண்கள் இவர்களின் வாழ்க்கைப் போராட்டங்களில் தன்னையே இணைத்துக் கொண்ட தந்தை ஜேம்ஸ் அவர்கள் குமரி மாவட்டம் மற்றும் அதைத் தாண்டி வாழும் மக்களின் உள்ளங்களில் ஒரு தனிஇடத்தைப் பெற்றிருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

தந்தையைப் போன்ற பெருமக்கள் மத்தியில் தந்தை ஜேம்ஸ் உயர்ந்தோங்கி நிற்பதற்குக் காரணம் பலரும் சுட்டிக்காட்டிச்சென்ற பணிவாழ்வு-செபவாழ்வு இவற்றின் சங்கமத்தை இவர் தம் வாழ்வில் எட்டிப்பிடித்திருப்பதுதான். இவர் நிறுவிய திருமலை ஆசிரமம் மேற்சொன்ன பணி-செப இணைப்புக் கோட்டின் சந்திப்பில் நின்று இவரது ஒருங்கிணைந்த ஆன்மீகத்தைப் பறைசாற்றுகிறது.

அரை நூற்றாண்டு காலமாக இந்திய மண்ணில் வாழ்ந்து வரும் பாபுஜி ஜேம்ஸ் உண்மையாகவே இம்மண்ணின் மைந்தர். அவரது வாழ்வும் அவர் ஆற்றிய பல்வேறு பணிகளும் இம்மண், இம்மண்ணின் புதல்வர்கள், அவர்களின் சமய-கலாச்சார மரபுகள் அவர்களின் ஏக்கங்கள் கவலைகள் அனைத்திலும் இவர் இரண்டறக் கலந்துவிட்டவர் என்பதற்கு சாட்சிகள். பரக்குன்று, நல்லாயன்புரம், மேல்பாலை, இன்ன பிற இடங்களில் இவர் எழுப்பிய ஆலயங்கள் திராவிட நீரோட்டத்தில் - அதன் கலைகளில் - முக்குளித்த பெருமான் இவர் என்பதை எடுத்தியம்பும். இந்தியத் திருச்சபை இந்தியமயமாக வேண்டுமென்று நினைப்பதற்கு முன், வத்திக்கானில் ஒரு திருச்சங்கம் மக்களின் பண்பாட்டில் பிறக்கவும் ஊறவேண்டும் என்று பேசுவதற்குமுன் குமரி மண்ணில் அந்த எதிர்காலக்கனவுகள் நிகழ்காலமாகி விட்டிருந்தது.

இந்திய மக்களின் கலாச்சார நீரோடைகளில் அவர் பெற்ற திருமுழுக்கு அம்மக்களின் சமுதாயக் கல்வாரிகளிலும் அவரை அழைத்துச் சென்றது. பனையேறுவோர், மீன்பிடிப்போர், மண்பாண்டம் செய்வோர், பெண்கள், தலித் மக்கள் என சமூக விளிம்புகளில் உழல்வோரின் வாழ்வில் விடியலுக்கான உயிர்த் துடிப்புகளை இனம்கண்டார் இவர். சங்கங்கள், கூட்டுறவுகள், சேவை மையங்கள், நலவாழ்வுத்

திட்டங்கள், வாழ்வோடு பொருந்திய தொழில்நுட்பம், கல்விச்சாலைகள் என இவர் சுவடு பதித்து நடந்துசென்ற பாதைகள் நெடியது. குறுக்கும் நெடுக்குமாக நீண்ட இப்பாதைகளில் இறைவன் தாமே தம்மை கரம்பற்றி வழிநடத்தினார் என்பதை அடித்துச் சொல்கிறார் இவர்.

ஐம்பதுகள் அறுபதுகளில் வலிமையான நெடிதுயர்ந்த உடல்கட்டு மிளிர கட்டுமானப் பணிகளில் பெரிய பாறாங்கற்களையும் தன் கரங்களால் தூக்கி சூழ நின்றவர்களின் ஆச்சரியப் பார்வைகளை சம்பாதித்த போதும், தொண்ணூறுகளின் இறுதியில் தன்னந்தனியாக நிற்பதற்குக்கூட சக்தியற்றுத் துவண்டு போன நிலையிலும் வழிநடத்தும் இறைவனின் கரத்தையே காண்கிறார் தந்தை ஜேம்ஸ். இவருடைய ஆழமான உயிர்த்துடிப்புள்ள விசுவாசத்தையும் எதிர்காலத்தின் மீது இவர் கொண்டுள்ள நம்பிக்கையையும் இவரது ஒளிர்விடும் கண்களில் என்றும் காணலாம்.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் அவ்வப்போதும் இறுதி ஐந்தாண்டுகள் தொடர்ச்சியாகவும் திருமலை ஆசிரமத்தில் இவரை ஆன்மீகத் தந்தையாகக் கொண்ட ஓர் அன்பியத்தில் என்னை இணைத்துக் கொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்பை நான் ஒரு பேறாவே கருதுகிறேன். காலையில் திருப்பலி நேரம் தொடங்கி இரவு உணவுக்குப்பின் துயில் செல்லுமுன் அவ்வப்போது நடைபெறும் குழுவிளையாட்டு நேரம் வரை தந்தை அவர்கள் உச்சரித்த வார்த்தைளை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆனால் அவ்வார்த்தைகளில் மனித சமுதாயம் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சேர்த்துவைத்த சொத்துக்களாகிய ஞானிகளின் தெளிவும் செயல் வீரர்களின் தீரமும் வெளிப்படும்.

தந்தயின் எழுத்துக்களை கோவையாக்கித் தொகுத்து மறுஅச்சிடும் பொறுப்பு சில ஆண்டுகளுக்கு முன் எனக்குக் கிடைத்தது இன்னொரு பேறு. அப்பதிப்பு வெளிவரும் போதே தந்தையின் எழுத்துக்கள் அவர் பணிபுரிந்த கடைநிலை மனிதனுக்கும் எட்டும் வகையில் தமிழில் வரவேண்டும் என்ற ஆவல் வெளிப்படுத்தப்பட்டது. அதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி தந்தை அவர்கள் தன் பணிவாழ்வின் ஐம்பதாவது ஆண்டைக் காணும் இந்நேரத்தில் கைகூடிவருவது மிகச்சிறப்பு.

இம்முயற்சிக்கு முதல்காரணமாக விளங்கியவர் அக்கா என பாசத்துடன் அழைக்கப்படும் லீவ் வன்டெவாலே அவர்கள். அவர்களுக்கு நான் என்றுமே கடமைப் பட்டிருக்கிறேன். எனது பணி அழுத்தத்தின் காரணமாக எடுத்த முயற்சியை முடிக்கமுடியுமா என்று நான் ஐயப்பட்டதுண்டு. பல நாட்கள் வேலை கிடப்பில் போடப்பட்டது. இறுதியில் உதவிக்கரம் நீட்டியவர் வை. அ. பொன்னையா அவர்கள்.

நூலின் முதல்பகுதியை தமிழில் பெயர்க்க அவர் ஒப்புக்கொண்டார். எஞ்சிய அனைத்துக்கும் நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். நண்பர்களின் உதவியுடன் செய்து முடித்துவிடலாம் என்ற நம்பிக்கை தான். ஆனால் இறுதியில் அது கைகூடாமல் போய்விடவே எல்லாம் மீண்டும் என் கைகளுக்கே வந்து சேர்ந்தன. நேரத்துக்கெதிரான ஓட்டமாகவே இப்பணி எனக்குப் பட்டாலும் - இதனாலே ஆங்காங்கே சில பிழைகள்கூட இருக்கலாம் - தந்தை ஜேம்ஸ் அவர்களின் உள்ளத்துயிருக்கு தமிழில் உருகொடுக்கிறோம் என்பதுதான் ஆனந்தம்.

இப்பணி தொடங்கிய நாட்களிலிருந்து உடனிருந்து, பின், அச்சகத் தொடர்புகள் கொண்டு இறுதிகட்ட நேரத்தில் பிழைதிருத்தம் செய்ய கனிவுடன் பலமணி நேரம் அமர்ந்தவர் சகோதரி பாவோலா சேவியர். இம்முயற்சியில் உள்ளத்தால் உடனிருக்கிறோம் என வலுதந்தவர்கள் திருமலை ஆசிரம அங்கத்தினர்கள். வேலை நெருக்கடியிலும் நேர்த்தியாக இன்முகத்துடன் அச்சமைத்துத் தந்தவர்கள் புனித லூயிஸ் செவித்திறன் குன்றியோர் பயிற்சிப் பள்ளியின் அச்சக மேலாளரும் பணியாளர்களும். அனைவருக்கும் என் உளம்நிறை நன்றிகள்.

ஜூலை 12, 1999 வ. அருள்ராஜ்

தொகுப்பாசிரியர்

முன்னுரை

இக்கட்டுரைகள் முதலில் தனிச்சுற்றுக்காகவே எழுதப்பட்டவை. சென்றமுறை நான் விடுமுறைக்காக பெல்ஜியம் சென்றபோது என் பெரிய அக்கா பிரான்சுவா இந்தியாவில் எனக்குக் கிடைத்த அனுபவங்களைப்பற்றி எழுதச் சொன்னார்கள். நான் அவர்களது வேண்டுகோளை ஏற்று பிரஞ்சு மொழியில் எழுதத் தொடங்கினேன். என் குறிப்புகளை சில நண்பர்கள் வாசிக்க நேர்ந்தபோது அவற்றின் பிரதிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டினர். எனவேதான் இக்கட்டுரைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டன.

இக்குறிப்புகள் நல்லதோர் நேரத்தில் தொடங்கப்பட்டன. கடந்த 18 ஆண்டுகளாக நான் ஒரு பார்க்கின்சன் நோயாளியாகி என் உடல்நலம் குன்றி இருப்பதால் பங்குப் பணியாளர் பொறுப்புகளிலிருந்து 1974லும் கோட்டாறு சமூக சேவை நிறுவனத்தின் இயக்குனர் பொறுப்பிலிருந்து 1983லும் சமூக நல வளர்ச்சித் திட்டத்தின் இயக்குனர் பொறுப்பிலிருந்து ஜனவரி 1987லும் இறுதியாக மண்பாண்ட தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து 1987 ஜூன் மாதத்திலும் நான் இராஜினாமா செய்ய வேண்டியிருந்தது. நான் என் நேரத்தை எப்படிச் செலவிடப் போகிறேன் என்பது ஒரு கேள்வியாகவே இருந்தது. அப்போதுதான் கடவுளிடமிருந்தே வந்தது போன்று என் அக்காவின் வேண்டுகோள் வந்தது. சிந்திப்பதில், எழுதுவதில், வாசித்து எழுதியவற்றைத் திருத்துவதில் நான் பல மணி நேரங்களைச் செலவிட்டேன்.

வெவ்வேறு கட்டுரைகள் எழுதப்பட்ட தேதிகளையும் அவற்றினடியில் குறித்திருக்கிறேன். என் உடல்நிலையில் ஏற்பட்ட ஏற்றதாழ்வுகளையும் எனக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகள் என் மனநிலையை எப்படியெல்லாம் மாற்றின என்பதையும் வாசகர்கள் புரிந்துகொள்ள இஃது உதவும். நான் நேர்மையாகவும் உண்மையாகவும் என் மனசாட்சியைப் பின்பற்றி என் சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். என் நண்பர்களும் வாசகர்களுமாகிய நீங்கள் எனக்காக இறைவனிடம் வேண்டுவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் இதைச் செய்கிறேன்.

என் நன்றிகள்:

நான் காகிதத்தில் என் சிந்தனைகளை வடிக்க என்னைத்தூண்டிய என் அக்கா பிரான்சுவா அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். லீவ் வன்டெவாலே அவர்களுக்கு என் சிறப்பான நன்றிகளைக் கூறுவது என் கடமை.

கட்டுரைகளின் கையெழுத்துப் பிரதிகளை விமர்சனக் கண்ணோட்டத்தோடு வாசித்து பல அரிய பரிந்துரைகள் செய்தவர்கள் அவர்கள். கையெழுத்துப்பிரதிகளை தட்டச்சு செய்ய ஏற்பாடுசெய்து எழுத்துப்பிழைகளை சரிசெய்ததும் அவர்கள்தான். மேலும் என் துன்பமான இந்த ஆண்டுகளில் எனக்கு இடைவிடா உதவிசெய்துவருவதும் அவர்தான். முன்னுரை எழுதிய நளினி நாயக் மற்றும் கட்டுரைகளைத் தொகுத்தளித்த ஆல்வினோ நரோனா C.Ss.R அவர்களுக்கும் என் நன்றிகள். இப்புத்தகத்தில் அடங்கியுள்ள ஒளிப்படங்கள் பலரிடமிருந்து வந்திருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்த உதவியதற்காக என் நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

உயிர்ப்புப் பெருவிழா 1989 தொ. ஜேம்ஸ்

எனது நூலின் இரண்டாவது பதிப்பு வெளிவருவது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆண்டுகளில் என் விசுவாசமுள்ள தோழனாக இருந்துவரும் வ. அருள்ராஜின் முயற்சிகள்தான் இப்பதிப்பிற்குக் காரணம்.
கடவுள் அவரை ஆசீர்வதிப்பாராக!

டிசம்பர் 5, 1997 தொ. ஜேம்ஸ்

உள்ளே...

உட்புகுமுன் iii

உள்ளத்திலிருந்து v

முன்னுரை viii

உள்ளே x

I. தயாரிப்பு 1

II. வரும் வழியில்

1. பரக்குன்னு ...
எனது முதல் காதல 28

2. நல்லாயன்புரம் தந்த சவால்கள 40

III. ஒருங்கிணைந்த அருட்பணி அணுகுமுறை

3. மேல் படிப்புக்கு ஏங்கிய மேல்பாலை 53

4. பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் 65

5. கோட்டாறு சமூக சேவா சங்கம் 76

6. அருட்பணி மற்றும் வளர்ச்சிப்
பணிகளில் மகளிர் ஈடுபாடு 88

7. சமூக நல வளர்ச்சித் திட்டத்தில்
மகளிர் மேம்பாடு 99

8. மீன் தொழில் வளர்ச்சியா?
மீனவர் வளர்ச்சியா? 109

9. திருமலை மண்பாண்டத்
தொழிலாளர் கூட்டுறவு சங்கம் 133

10. திருமலை ஆசிரம சமூக மையம்
வரலாற்றுப் பின்னணி 147

11. வளர்ச்சியா? விடுதலையா? 161

IV. ஊனுடலெடுக்கும் ஆன்மீகம்

1. தந்தை வின்சென்ட் லெப் அவர்களின்
மறைத்தூது ஆன்மீகம் 171

2. கடவுளரசும் சமூக நிஜங்களும் 184

3. முழுமனித சமூகங்களை நோக்க 194

4. நான் ஒரு குரு இயேசுவின் சீடன் 199

5. என் வாழ்வில் ஜெபம் 212

6. ஓம்: முடிவற்ற ஓசை 218

7. அறுபது வயதில் ஆனந்தம் 227

8. துன்பம்: வாழ்வின் ஓர் அங்கம் 233

9. வாழ்வின் அனுபவம் சாவின் அனுபவம் 243

என் வாழ்வின் முக்கிய நாட்களில் சில... 249

I. தயாரிப்பு

1. தயாரிப்பு

1. முதல்படிகள்

என்னுடைய பெரிய அக்கா கேட்டுக்கொண்டதற்கு இணங்க என் வாழ்க்கை அனுபவங்கள் சிலவற்றை மகிழ்ச்சியோடு பகிர்ந்துகொள்கிறேன். அவர்கள் விரும்பிக் கேட்டது எனக்கொரு சவாலாக அமைந்தது. அதனை ஏற்று என்வாழ்வில் நடந்தவை, அவற்றால் உண்டான விளைவுகள், எ்ன் மனத்தில் பதிந்தவை, மற்றும் என் எண்ணங்கள் ஆகியவற்றை எழுதி வைக்கத் துணிந்தேன்.

இரண்டொரு முறை நான் பெல்ஜியம் சென்றபோது கடந்த கால நிகழ்ச்சிகள் பற்றி என் தாயார் பேசுவதை இன்பமாய்க் கேட்டிருக்கிறேன். அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்ற அவர்கள் மூன்றாவது குழந்தையைக் கருவுற்றது மருத்துவர்கள் கருத்துப்படி உகந்ததாக இல்லை: நல்லதே நினைத்து ஒருவர் இக் கருவைக் கலைத்துவிடும்படி என் அன்னையிடம் மெல்லச் சொல்லி வைத்தார். அதனை என் தாயார் ஏற்கவில்லை, கடவுள் துணை செய்வார் என்ற ஒரே நம்பிக்கை அவர்களுக்கு மூன்றாவது குழந்தை (நான்தான்) பிறந்தது, எனக்கு ஜாக் (Jacques) என்று பெயர் சூட்டினார்கள், நான் மிகவும் சின்ன உருவமாக இருந்தேனாம். என் பெற்றோர்களுக்கு மிக்க கவலை கொடுத்தேன்.

எனக்கு உள்ளதெல்லாம் கடவுள் தந்த அருமையான கொடையே. கடவுள் எனக்குத் தந்தையும் தாயும் ஆவார். எனக்குள்ளே எவ்வளவு செல்வம், எவ்வளவு ஆற்றல் என்று

கண்டு நான் வியப்பு அடைகின்றேன். எனக்குள் ஆழமாக மறைந்து கிடக்கும் வகையான திறமைகளை நான் நாள்தோறும் புதிது புதிதாய் கண்டுபிடிக்கிறேன். இது எனக்கு மிக்க மகிழ்ச்சியாய் மிக்க இன்பமாயிருக்கிறது. என் பெற்றோர்க்கு நான் எவ்வளவு நன்றிக் கடன் பட்டவன் என்பதை என்னால் மறக்க முடியாது. அவர்கள் தானே எனக்கு உயிர் கொடுத்தவர்கள் அவர்கள் வழியாக வந்த உயிரணு நிறக்கோல்கள் தானே (Chromosomes) என் உடம்பில் உள்ளவை. அவை பல நூற்றுறாண்டுகளாகச் சேர்ந்துச் சேர்த்து வைத்த மரபுரிமையாக எனக்கு இந்த வளமான திறமைகளைத் தருகின்றன. மனிதகுலம் முழுவதையும் இணைக்கும் சங்கிலியில் நான் ஒரு பகுதி. என் வாழ்க்கைப் பாதையில் என்னைச் சந்தித்து என்னோடு சிறிது தொலைவு வந்தவர்கள் பலர். அவர்கள் அனைவருமே அவரவர்க்கு உள்ள இயற்கைத் திறன்களோடு வந்து என்னோடு இருந்தும் என்னுடன் பேசியும் தங்கள் அன்பினாலும் தங்களுடைய

அந்தக் கொடைகளில் நானும் பங்கு பற்ற உதவினர். அவர்கள் மூலமாக என் வாழ்வு வளம் பெற்றது. என்னிடமும் மற்றவர்களிடமும் உள்ள எல்லாச் செல்வத்திற்கும் வளமைக்கும் மூலகாரணனாகிய அவனை நான் இவர்கள் வழியாக் கண்டு கொண்டேன்.

என் உள் உறுப்புகளை உண்டாக்கியவர் நீரே
என் தாயின் கருவில் எனக்கு உருதந்தவர் நீரே।
வியத்தகு முறையில் நீர் என்னை படைத்ததால்
நான் உனக்கு நன்றி நவில்கின்றேன்
உம் செயல்கள் வியக்கதக்கவை என்பதை
என் மனம் முற்றிலும் அறியும்
என் எலும்பு உமக்கு மறைவானதன்று மறைவான
முறையில் நான் உருவான முறையில் நான்
உருவானதையும் பூவுலகின் ஆழ்பகுகளில் நான்
உருப்பெற்றதையும் நீர் அறிந்திருந்தீர். – (தி.பா.
139:13–15)

என விவிலியத் திருப்பாடலாசிரியரோடு சேர்ந்து நானும் செபிக்கிறேன்.

என் பெற்றோர்கள் ஏழு பிள்ளைகளைக் கவனிப்பதற்கு அரும்பாடுபட்டார்கள். நான் மூன்றாவது பிள்ளை, முதல் பையன். வாழ்க்கையை அதன் உண்மை நிலையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை நான் என் பெற்றோர்களிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறேன். 1939–44 இடைப்பட்ட காலத்தில் மிகப் பெரிய பொருளாதார மந்தம் இரண்டாம் உலகப் போரில் நான்கு ஆண்டுகளாக நாடு ஜெர்மனியர் கைக்குள் இருந்தது. அந்தக் காலக்கட்டத்தில் எவ்வளவு பாடு என்பது எனக்கு இன்றும் நினைவிருக்கிறது.

1939–இல் நான் நோய்வாய்ப்பட்டேன். அது எனக்கு எவ்வளவோ பாடங்களைக் கற்றுத்தந்தது. காசநோய் கண்டு வாதத்தால் அவதிப்பட்டேன். வெப்ப நாடுகளில் வாழ்வதற்கு எனக்கு உடல்நலம் இராது என்று டாக்டர் அறிவித்தார். நல்ல வேளை, அவர் வாக்கு பொய்த்துவிட்டது. அந்த நாளிலேயே நான் ஒரு தூதுப் பணிச் நாட்டுக்குச் செல்ல

வேண்டும் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன். ஆப்பிரிக்காவுக்குச் செல்லலாம், சென்று மதபோதகரும் மருத்துவருமாக விளங்கிய டாக்டர் ஷ்வைட்சர் செய்த பணியைச் செய்யலாம் என்பது என் கனவு. அவர் செய்த அப்பணியை நான் வியந்து பாராட்டினேன். நோய் குணமாகி உடம்பு தேறிவந்த நாளில் பலப்பல புத்தகங்களை வாசித்தேன். ஒரு நாள் நான் ஓர் இளம் தூதுப் பணிச் சபையைப் பற்றி செய்தியைப் படித்தறிந்தேன். சீனாவில் உள்ள ஆயர்களுக்கு

உதவியாக மறைமாவட்டக் குருக்களை அனுப்பிவந்த சபை அது. மறைமாவட்டக் குருவாகிச் சீனநாட்டு ஆயர்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுது என் மனத்தை பெரிதும் கவர்ந்தது. ஆனால் பின்னர் அதை மறந்துவிட்டேன். புனித மேரி உயர்நிலைப் பள்ளியில் நான் என் உயர்நிலைக் கல்வியை முடிக்கும் சமயம் அங்கிருந்த ஆசிரியர்களிடையே சீன உடை அணிந்திருந்த குள்ளமான ஒருவரைச் சந்தித்தேன். உடம்பில் காயம் ஏற்பட்டுவிட்டதால் சீனாவிலிருந்து திரும்பி வந்திருக்கிறார். அவர் தூதுப் பணியின் துணையாளர்கள் சபையைச் (SAM) சேர்ந்தவர்.

இந்தச் சபையைப் பற்றித்தான் நான் முன்பு படித்தது. சீன நாட்டின்மேல் அவருக்கு எவ்வளவு பற்று! அது என்னையும் பற்றிக்கொண்டது: தீர்மானித்து விட்டேன். ஆம், சீன ஆயர் ஒருவருக்குப் பணி செய்யப் போவேன். பணி செய்த நாட்டைத் தன் சொந்த நாடாகக் கொண்ட அந்தக் குள்ளமான மனிதர் இறந்தார், அந்த நாட்டின் மேல் எனக்குப் பற்று உண்டாக்கிய அவர் மறைந்து விட்டார். ஆனால் நான் சீனா செல்ல ஆயத்தமானேன், அதற்குத் தக்கபடி என்னைத் தயாரிக்கலானேன்.

2. குருமடத்தில்

லுவேன் நகரில் என்குருமட வாழ்க்கை இனிமையாக இருந்தது. சாம் (தூதுப்பணியின் துணையாளர்கள் சபை) குருமடம் அது. அது ஒரு சிறிய குருமடமே. அங்கே நவதோமையியல் (Neo Thomism) கற்பித்தார்கள். அது விஞ்ஞானத்தையும் தத்துவத்தை இன்றைய முறையில் காணும் வழியையும் ஒருங்கு இணைத்த கல்வியாகும்.

அங்கு எங்களுக்கு இறையியல் கற்றுக்கொடுத்த இயேசு சபைக் குருக்கள் சிலர் ஆதியாகமத்தின் உண்மையான பொருள் என்ன என்று தாங்கள் கண்டுபிடிப்பதைக் குறித்துக் கட்டுரையாவது புத்தகமாவது எழுதக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தனர். திரு விவிலியத்தை எப்படி விளக்கிச் சொல்வது. விசுவாசம் என்ன என்று எவ்வாறு விளங்கிக் கொள்வது புரிந்துகொள்வது என்று ஆய்வு செய்யும் அறிஞர்களை உரோமை ஆட்சிக்கு குழு (Curia) வேவு பார்த்துவந்த காலம் அது. இந்தப் படிப்பெல்லாம் என் மனக் கண்ணைத் திறந்தன, உள்ளதை உள்ளவாறு கண்டுகொள்ள உதவின. ஆயினும் அங்கு மதிநுட்பமே அளவுக்குமேல் இருந்தது. ஞானவாழ்வு போதுமான அளவு இல்லை என்று எனக்குப் பட்டது.

போர் நடந்துகொண்டிருந்த சமயம் ஒரு குளிர்காலத்தில் குருமடத்தில் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு. நானும் இரண்டு சகோதரர்களும் விவசாயிகளிடம் சென்று கோதுமை வாங்கிவரப்போனோம். உறைபனி பெய்து கொண்டிருந்தது. அலாஸ்காவிலே எஸ்கிமோ மக்கள் பனிக்கட்டியால் இக்ளு எனப்படும் குடில் கட்டி அதனுள் குளிரின்றி இருப்பார்களே, அதுபோல நாங்களும் செய்துபார்ப்பது என்று முடிவுசெய்தோம். வேறு வேலை இல்லாத நேரங்களில் பனிக்கட்டியால் சுவர்களையும் கூரையையும் கட்டினோம். அதற்குப் பனிக்கட்டித் தரையிலேயே பாதையும் அமைந்தோம். இரவை அக்குடிலில் கழிக்கத் தீர்மானித்தோம். அதைப் பார்த்த விவசாயிகள் எங்களுக்கு என்ன ஆகுமோ என்று மிகவும் கவலைப்பட்டார்கள். நடுச்சாமத்தில் எழுந்து வந்து நாங்கள்

இன்னும் உயிரோடிருக்கிறோமா என்று பார்த்தார்கள். நாங்கள் இரவு முழுவதும் அந்தப் பனிக்கட்டிக் குடிசைக்குள்ளேதான் இருந்தோம். உள்ளே வெதுவெதுப்பாக இதமாக இருந்தது. இன்னொரு சமயம் நான் பிரான்சில் லியோன் நகரில் புனிதர் ஆல்பன் பங்குக்குச் சென்றேன். அப்பொழுது அப் பங்கு திருவழிபாட்டிலே மறுமலர்ச்சி

ஏற்படப் புது வழிகளிலே முயன்று கொண்டிருந்தது. பூசைக்குப் பணம் கொடுக்கும் வழக்கத்தை கைவிட்டுவிட்டுக் கோயில் வாசலில் காணிக்கைப் பெட்டி ஒன்றை வைத்திருந்தார்கள். மக்கள் அதிலே தங்கள் காணிக்கைகளைப் போட்டத்தோடு தங்களுக்கு என்னென்ன கருத்துக்காக வேண்டிக்கொள்ள வேண்டும் என்று எழுதிய கடிதங்களையும் போட்டார்கள். மாதக் கடைசியில் காணிக்கையாகச் சேர்ந்த தொகை எவ்வளவு என்ற கணக்கு

விவரத்தைப் பங்கின் செய்தி மடலில் வெளியிட்டது. சாமியார்கள் யாரும் ஒருநாளும் பட்டினியாய்க் கிடக்கவில்லை.

இன்னோர் ஆண்டிலே நானும்சாம் குருவானவர் ஒருவரும் லூர்துக்குத் திருயாத்திரை சென்றோம். சென்றோம் என்றால் வழியே செல்லும் மோட்டார் வண்டிகளை நிறுத்திக் கெஞ்சிக் கேட்டு ஏறித்தான். நாங்கள் லூர்து வந்தடைந்ததும் எனக்குச் காய்ச்சல் வந்துவிட்டது.... ஒரு மடத்தில் மேல்மாடியில் ஓர் அறையில் என்னை வைத்திருந்தார்கள். அரசாங்கச் செலவில் என்னை வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவைக்க வேண்டியதாயிற்று. பின்னால் என் தந்தைக்கு எனக்காக இவ்வளவு செலவாயிற்று என்று பில் வந்தது.

எனக்கு எவ்வளவு துணிவும் வலுவும் உண்டு என்று பார்க்க நான் தனியாகவே தெற்கு பெல்ஜியத்திலுள்ள ஒரு காட்டுக்குச் சென்று அங்கு சில நாட்கள் தங்கினேன் அயர்லாந்தில் அந்நாட்டு மக்களின் வாழ்க்கையையும் விசுவாசத்தையும் அனுபவித்து அறிய அந்நாடு நெடுகிலும் சைக்கிளில் சுற்றினேன். இன்னொரு சமயம் இத்தாலியிலிருந்து வந்து நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் வேலையையும் மூன்று மாதங்களாக அவர்களோடு இருந்து நேரில் அறிந்தேன். அது மறக்க முடியாத அனுபவம். அந்தச் சுரங்கத் தொழிலாளர் சிலர் நான் குருப்பட்டம் பெற்ற நாளில் நேரில் வந்து என்னோடு மகிழ்ந்தார்கள்.

இன்னொரு சமயம் தந்தை குத்தூரியருடன் தேஜே மடத்தைப் போய்ப் பார்த்தேன். தந்தை அவர்கள் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டு இயக்கத்தைத் தோற்றுவித்தவர். குளுனியில் பழங்காலத்தில் இருந்த புகழ்பெற்ற ஆசீர்வாதப்பர் ஆசிரமத்தின் பாழடைந்த இடத்தில் அப்பொழுதுதான் இந்தத் தேஜே மடம் தொடங்கியிருந்தனர்.

கிறிஸ்தவ ஒருமைப்பாடு பற்றிய இந்த முதல் அனுபவம் அதே வகையான மற்றொரு அனுபவத்துக்கு வழி திறந்தது. இங்கிலாந்தில் நான் ஆங்கிளிக்கன் திருச்சபையின் விருந்தாளியாக சென்றிருந்தேன். அந்தத் திருச்சபையின் ஆராதனைக் கன்னியர் மடம் ஒன்றைப் போய்ப் பார்த்தேன். நற்கருணை ஆராதனையே அக்கன்னியர் வாழ்வின் மையமாகும். தொழுநோய் ஆசிரமத்தையும் சென்று பார்த்தேன். அது ஆசீர்வாதப்பர் மரபிலான புராட்டஸ்ட்டண்டு ஆசிரமமாகும். காலெம் குருமடத்தையும் சென்று கண்டேன். அங்குள்ள இறையியலாளர்களில் ஒருவர் பின்பு ஒருநாள் எனக்கு ஒரு கடிதம் எழுதினார் :

> திருப்பலிப் பூசைக்காக உங்களுக்கு அப்பம் அனுப்பியுள்ளேன், நாங்கள் கொடுக்கின்ற இதனைத் தாங்கள் எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒற்றுமையாக வேண்டும் என்ற கருத்துக்காகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நாம் ஒன்றாகச் சேர்ந்து நற்கருணை உட்கொள்ள முடியாமல் இருப்பினும் சில சமயம் இப்படிக் காணிக்கை கொடுப்பதில் ஒன்று சேர்வது முடியும், அது சரி எனத் தோன்றுகிறது.

1949 ஜுலை 7–ஆம் நாள் ஜி. ஹெர்பெர்ட் எனக்கு எழுதிய கடிதம் இது. கிறிஸ்தவ ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டிக் காட்டி உள்ளத்தைத் தொட்ட ஒன்று. பத்து நாள்கள் கழித்து என்னுடைய முதல் திருப்பலி பூசையில் நான் அந்த அப்பத்தை வசீகரம் செய்தேன்.

II. வரும் வழியில்

௨. வரும் வழியில்

புறப்பாடு

நான் குடுமடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது என் கனவெல்லாம் சீனாவுக்குப் போய்ப் பணியாற்ற வேண்டும் என்பதுதான். ஆனால் என் படிப்பு முடிவதற்குள் சீனா வெளிநாட்டாருக்குக் கதவடைத்துவிட்டது. எனக்கு இனிக் கடவுள் திருவுளம் யாதோ? அதை அறிய நான் காத்திருக்க வேண்டியதுதான். அவர் திருவுளம் இந்திய ஆயர் ஒருவர் மூலம் தெரியவந்தது. இந்திய நாட்டின் தென் கோடியில் இருக்கும் தமது மறைமாவட்டத்திற்கு சாம் குருமார் இருவரைத் தந்துதவுமாறு ஆயர் எழுதிக் கேட்டிருந்தார்.

இந்தியா எத்தனையோ பெரிய பெரிய ஞானிகள் கண்ட நாடாயிற்றே! அந்த நாட்டுக்குச் சென்று அங்கு ஏற்கெனவே பணிபுரியும் முதல் சாம் குரு தந்தை மோன்சனான் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரைப் போல் நானும் என் வாழ்க்கையை அர்ப்பணிப்பதா? அத்தகைய அழைப்பு எனக்கு உண்டென்று எனக்குத் தோன்றவில்லை. அதன் பின், கோட்டாறு ஆயரின் அழைப்பை ஏற்று அவருக்குக் கடிதம் எழுதினேன் - இந்தியாவில் திருச்சபையைக் கட்டி எழுப்பும் திருப்பணிக்கு உதவ நானும் வருகிறேன் என்று.

திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு சென்றோ அவர்கள் கையால் 1949 ஜூலை 17-ஆம் நாள் நான் கிறிஸ்துவின் குருத்துவத் திருநிலை பெற்றேன். அந்தத் திருச்சடங்கு தொடங்கப் போகும் சமயம், என் தந்தைவழிப்பாட்டி இப்பொழுதோ இன்னும் சற்று நேரமோ என்ற நிலைமையில்



Blue Print of My Chalice

இருப்பதாக என்னிடம் தெரிவித்தார்கள். என் பாட்டி கத்தோலிக்க மகளிர் கூட்டமைப்பின் தேசிய இயக்குநராக இருந்தவர்கள். இப்போது கடுமையான கீல் வாதத்தால் படுத்த படுக்கையாகி விட்டார்கள். நான் குருவாகத் திருநிலை பெறும் நாளைக் காண வேண்டும் என்பது ஒன்றே அவர்கள் வேண்டுதலெல்லாம். நான் திருநிலை பெற்று முடிந்த உடனே, என்னைப் பார்க்க வந்திருந்தவர்களை யெல்லாம் அருள்தந்தை லெப் அவர்களின் நண்பர் ஒருவரிடம் விட்டுவிட்டு, பாட்டியைப் பார்க்க விரைந்தேன். பார்த்ததும் என்னை அடையாளம் கண்டு கொண்டு புன்முறுவல் செய்தார்கள். அவர்களுக்குக் கடைசி நற்கருணை கொடுத்தேன். அதனை அவர்களால் விழுங்குவதே கடினமாக இருந்தது. பிறகு நான் என் கையால் அவர்கள் கையைப் பிடித்தேன். அவர்களால் பேச முடியவில்லை. ஆனால் முகம் மகிழ்ச்சியாலும் அமைதியாலும் மலர்ந்திருந்தது. பிடித்திருந்த என் கையைப் பல முறை அழுத்தினார். பின்னர் மெல்ல மெல்ல அந்தக் கை சாய்ந்து விலாப் பக்கத்தில் வீழ்ந்தது. நான் சிமியோனின் வேண்டுதலை மீண்டும் மீண்டும் மெல்லச் சொல்லலானேன்.

"ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியாகப் போகவிடும். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன." (லூக் உ: 29–31)

இந்தியாவுக்கும் இந்தியாவுக்குள்ளும் என் திருப்பயணம்

நாங்கள் ரோமில் தங்கியிருந்தபோது அங்குள்ள சுரங்கவழிக் கல்லறைகளைச் சென்று பார்த்தோம். அந்நகரில் நாங்கள் பார்த்தவற்றிலெல்லாம் அதுதான் எங்கள் மனத்தில்

My Chalice

நன்கு பதிந்திருக்கிறது. தங்கள் உயிரையும் விட அருமையானது கிறிஸ்து பெருமானின் அன்பே என்று கண்டுகொண்ட மக்களின் கல்லறைகள் அவை. துன்புறுத்தலுக்கு இலக்கான அந்த முதல் கிறிஸ்தவர்களைப் பற்றிய பசுமையான நினைவு எங்கள் உள்ளத்தைப் பெரிதும் உருக்கியது. ஆற்றல் மிக்க, புகழ் வாய்ந்த இன்றைய திருச்சபைக்கும் அன்றைய நிலைமைக்கும் எவ்வளவு வேறுபாடு! என் துணைக்கு வந்தவர் என்னிடமிருந்து விடைபெற்றுச் செல்ல, நான் டமாஸ்கசுக்கு விமானம் ஏறினேன். டமாஸ்கஸ் என்றதும் புனிதர் பவுல் அடிகளார் நினைவுக்கு வருவார். அவரது மனமாற்றம் மனம்திருந்தல் பற்றிய நினைவுகள் கொழிக்கும் நகரம் அது. புனித பூமியில், சாக்கடலை நோக்கிச் செல்லும் சாலை திடுமென இறங்கும் இடமும் மனத்தில் பதிந்தது. அங்குள்ள வெப்பமும் வெறிச்சோடிக் கிடந்த நிலமும் இன்னும் நன்றாக மனத்தில் தைத்தன. பாலஸ்தீன அகதிகளின் முகாம்கள் மத்திய கிழக்கு நாடுகள் எவ்வளவு சோகமாகப் பிளவுபட்டுக் கிடக்கின்றன என்பதற்கு ஓர் அடையாளமாக விளங்கின. மக்களிடையே அமைதியும் நல்லிணக்கமும் நிலவ இயேசு தோன்றியது மத்திய கிழக்கில்!

பெத்தலகேம் குகை, ஆண்டவரை அடக்கம் செய்த இடம் இவற்றைக் குறித்துப் பலவகைத் திருச்சபைகளுக் கிடையே தகராறுகள்: கருத்து வேற்றுமை சிலசமயம் கைகலப்பில் முடிவதும் உண்டு. கிறிஸ்துவின் ஆடையைக் கிழிக்கிறார்கள்: திருச்சபைகளுக்குள் உள்ள பிளவு இதுவேயாகும்: இது எவ்வளவு வேதனை என்பது விரைவில் விளங்கிற்று. புனிதத் தலங்களுக்குக் காப்பாளர்களாக

இருப்பவர்கள் பிரான்சிஸ்கு சபைத் துறவியர். இவர்கள் எனக்கு அந்தக் காலத்தில் கடவுள் பெயரால் மக்களைக் கொல்வதும் பொருள்களைக் கொள்ளையடிப்பதுமாகப் பகைமையையும் வன்முறையையும் வளர்த்த அவதூறான சிலுவைப் போர்களை நினைவூட்டினார்கள்... இந்தப் பகைமை, வன்முறையெல்லாம் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பின் பெயரால்! புனித பூமியில் நாம் காட்டுவது இதுதானா? கலங்கிப் போனேன். நம்பெருமான் கல்லறையில் நான் நற்கருணைத் திருவழிபாடு நடத்தியபொழுது "அத்வேனியாத் ரேஞும் தூஉம்" (உமது ராஜ்யம் வருக) என்று உரக்கக் கத்தினேன். புனிதத் தலங்களில் காணப்படும் அவதூறான பிளவினை நினைக்கும் பொழுதெல்லாம் இப்படித்தான் சத்தமாக வேண்டிவருகிறேன். இந்தியாவிலும் கிறிஸ்துவின் திருச்சபை பிளவுபட்டுத்தான் கிடக்கிறது என்று பின்னால் கண்டேன் – என்ன அவப்பேறு!

டமாஸ்கசிலிருந்து விமானத்தில் புது டில்லி வந்தேன். எனது புதிய மறைமாவட்டத்தில் போய்த் தங்குமுன் இந்திய நாட்டுப் புண்ணியத் தலங்கள் சிலவற்றைக் காண வேண்டும் என்று விரும்பினேன். புது டில்லி அழகான நகரம். இரு மருங்கும் நிழல் மரங்கள் நிற்கும் அகன்ற சாலைகள், சீராக வடிவமைக்கப்பட்ட இதற்கு நேர்மாறாக உள்ளது பழைய டில்லி. அங்கு மக்கள் நெருக்கம் மிகுதி வாழ்க்கையின் பல வகைகளையும் அங்கு காணலாம்.

காசி (வாரணாசி)யில் மேதகு ஜோ ஃபெர்னாண்டோ அவர்களின் விருந்தினராக இருந்தேன். இந்தியத் தூதுப் பணி சபையின் (ஐ.எம்.எஸ்.) நிறுவுனரான அவர்கள் தங்கள் சபையின் குருமடத்தில் தத்துவம் கற்பிக்க சாம் குருக்கள் இருவர் வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். நாங்கள்

புண்ணிய நதி கங்கையைக் கடந்து அக்கரையிலுள்ள மயானத்தைப் பார்க்கச் சென்றோம். அம்மயானத்துச் சாம்பலை இப் புண்ணிய நதியில் கரைப்பர். போதுமான விறகு வாங்கப் பணம் இல்லாத ஏழைகள் வெந்தும் வேகாமலும் இருக்கும் பிணத்தை அப்படியே ஆற்றில் தூக்கிப் போட்டு விடுவார்கள். அத்தகைய உடலங்கள் ஆற்றோடு மிதந்து செல்லக் காணலாம். நான் இனி இந்தியாவிலேயே கடைசி வரை இருக்கப் போகிறேன் என்று அறிந்த படகுக்காரர் கங்கை நீரைக் கையில் எடுத்து எனக்குக் குடிக்க நீட்டினார்... நான் இதை எதிர்பார்க்கவே இல்லை. அவருக்கு மனவருத்தம் விளைக்காவண்ணமே அதை நான் வேண்டாம் என்று விலக்கிவிட்டேன்... அன்று நான் அத்தகைய திருமுழுக்குக்குத் தகுதி பெறவில்லை.

ஆக்ராவில் தாஜ்மகாலின் காட்சி கண்ணுக்கும் உள்ளத்துக்கும் களிப்பூட்டிற்று. காதல் அங்கே பளிங்குக் கல்லிலே சாகா வரம் பெற்றிருக்கிறது. இந்தியப் பண்பாட்டில் முஸ்லிம் பண்பாடு இன்றியமையாத ஒரு பகுதியாகும். அது வேறு, தனி, ஒட்டாதாது என்ற பேச்சு அர்த்தமற்றது. இந்தியா வகைவகையான பண்பாடு கொழிக்கும் நாடு. அது இந்நாட்டுக்குச் செல்வம். சிக்ரி அரண்மனையைச் சென்று பார்த்தோம். தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் கைவிடப்பட்ட அரண்மனை அது. இந்நாட்டின் துயரமான பிரச்சினைகளில் தண்ணீர்ப் பற்றாக்குறையும் ஒன்றாகும். நாட்டின் சுற்றுச் சூழல் காடுகளை அழிப்பதால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகிறது.

ஆக்ராவிலிருந்து எனது திருப்பயணம் குளித்தலை நோக்கியது. வழியில் கல்கத்தாவில் சிறிது தங்கினேன்.

அங்கிருந்து சென்னை, திருச்சி வழியாகக் கடைசியில் சாந்திவனம் ஆசிரமம் அடைந்தேன்.

அங்கே என்னுடைய குரு—இந்தியா வந்த முதல் சாம் குரு – தந்தை மோன்சனான் அவர்களைக் கட்டித் தழுவினேன். என் திருப்பயணத்தின் உச்சக் கட்டம் இது. அவரது தவ முனிவர் தோற்றமும் சிரித்த முகமும் அப்படியே பசுமையாக நினைவில் நிற்கிறது. நாங்கள் அங்கு மாமரத் தோப்பினுள் மெதுவாக உலாவியவாறு நாள்தோறும் ஒரு மணிநேரம், இரண்டு மணிநேரங்கூட உரையாடுவோம். இடைக்கிடை குரங்குகள் சண்டையிடும். அதைத் தவிர வேறு இடைஞ்சல் இல்லை... மோன்சனான் தனது அழைப்பைச் சுருக்கமாக விவரித்தார். அவர் (பிரான்சில்) லியோன் மறைமாவட்டத்தில் குருவாக இருந்தவர். அப்போதே பல ஆண்டுகளாக இந்தியா அவர் மனத்தைக் கவர்ந்தது. அவர் நாற்பது வயது ஆனபோதும் தம் ஆயரை அணுகி, தாம் இந்தியா செல்ல வேண்டும், இந்திய மண்ணில் திருச்சபை வேரூன்றத் தாம் பணி புரிய வேண்டும், அதற்கு ஆயர் இசைவு தர வேண்டும் என வேண்டினார்.

அதன் பின் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு திருச்சிராப்பள்ளி ஆயர் தமது மறைமாவட்டத்துக்குப் பணி புரிய அவரை அழைக்கவே, 1939 மே 5ஆம் நாள் அவர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். 1940 முதல் 1949 வரை அவர் ஐந்து, ஆறு பங்குகளில் உதவிக் குருவாகவும் பங்குக் குருவாகவும் பணியாற்றினார். அப்பொழுதெல்லாம் அவர் தம் அழைப்பு நிறைவேறக் கடவுள் வழி காட்டுவார் என வேண்டிக்கொண்டு காத்திருந்தார். அதற்கான அறிகுறியைத் தந்தை லெகு அங்கு வந்ததும் கண்டார். அவர்

நினைத்திருந்த ஆசிரமத்தை நிறுவலானார். 1950 மார்ச்சு 21ஆம் நாள் சச்சிதானந்தா ஆசிரமம் (புனித திரித்துவத்தின் ஆசிரமம்) அதிகார பூர்வமாக நிறுவப்பெற்றது. அதே ஆண்டு அக்டோபர் 11ஆம் நாள் அங்குள்ள சிறிய சிற்றாலயம் மந்திரிக்கப் பெற்றது. இதன் அமைப்பு ஒரு குகை போன்று உள்ளது. கொத்திச் செதுக்கதாத கல்லால் அமைத்துள்ளனர். அலங்காரங்கள் ஒன்றும் இல்லை. முழுமுதற் பரம்பொருளின் முன் ஆன்மா முற்றிலும் பற்றற்று நிற்கும் நிலைக்கு இது ஒரு சின்னமாகும். இந்திய நாட்டில் திருச்சபையின் தூதுப் பணி என்ன என்பதைத் தந்தை மோன்சனான் எனக்கு விளக்கிச் சொன்னார்!

> இந்துக்கள்! நம்மை மூடி மறைத்திருக்கும் மாயையை விலக்குவோம், நாம் இல்லை என்பதை உணர்வோம் என்கிறார்கள். அதாவது துவைதத்தை அழிப்பது. அவர்களது கடைசித் துவைதம் ஏகம் என உறுதி கூறுவதாகும். அப்பொழுது எஞ்சுவது நினைக்கப்படும் நினைப்பு தன்னைத் தானே தொழுகின்ற கடவுள். கடவுள் எல்லாவற்றையும் கடந்து வேறாய் உள்ளவர், எல்லாவற்றிலும் உடனாகக் கலந்து இருப்பவர் – இந்த இரண்டையும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒன்றாய்க் கொள்வது எப்படி என்பது இந்து தர்மத்தின் சிக்கல், இச் சிக்கலை அது தீர்த்தது இல்லை. பக்தி மார்க்கம் (அன்பின வழி) ஞான மார்க்கம் (பேரறிவும் சிந்தைனையுமான வழி) இவ் இரண்டையும் சமனிலையில் கொள்ள அது தவறிவிட்டது. சிந்தனையின் நோக்கு முழுமையான ஒருமை. அன்பு என்றாலோ, அன்பு செய்பவர் மற்றும் அன்பு செய்யப் பெறுபவர் என்னும் வேறுபாடு வேண்டப்படுவதாகிறது.... கடவுள் தம்மைத் தாமே தருவதற்காகத் துன்பப்பட முடியும் என்பதை அவர்கள் காண்பதில்லை. சிக்கலைத் தீர்க்கத்

தேவையானது இந்து தர்மத்திற்குள் இல்லை. கிறிஸ்தவன்தான் இந்து தர்மத்தின் உள்ளுணர்விலிருந்து தொடங்கி, கடவுள் மூவொருமை என அவரே வெளிப்படுத்தியருளியுள்ள மறைமெய்ம்மையை வந்து எய்த முடியும்.

அந்த ஆசிரமத்தில் நான் இருந்த நாள்கள் அற்புதமானவை. கடைசியாக 1950 அக்டோபர் 3–ஆம் நாள் நான், புனித பிரான்சீசு சவேரியார் பணிபுரிந்த இடம் என்ற பெருமையாலும் இந்து மாக்கடல், அரபிக்டல், வங்காளவிரிகுடா ஆகிய மூன்று கடல்களும் ஒன்றாய்க் கலக்கும் நாட்டின் தென் முனையைத் தன்னகத்தே கொண்டுள்ள சிறப்பாலும் புகழ்பெற்று விளங்கும் கோட்டாறு மறைமாவட்டத்தைப் போய்ச் சேர்ந்தேன். எனது திருப்பயணம் நிறைவுற்றது.

சேவை செய்ய அழைப்பு

புதிதாகப் பள்ளிக்கூடம் போகும் ஒரு சிறுபிள்ளை போல இருந்து ஆனா ஆவன்னா படிக்க வேண்டும் எழுதிப் பழக வேண்டும் மனப்பாடம் பண்ண வேண்டும்... பிறகு மக்களுடன் பழகி அவர்கள் எப்படிப் பேசுகிறார்கள் எப்படிச் சிந்திக்கிறார்கள், எப்படி நடந்து கொள்கிறார்கள் என்றெல்லாம் அவர்களைப் பார்த்துப் படிக்க வேண்டும். படிப்பு, படிப்பு, ஒரே படிப்பு!

ஒரு புதிய நாகரிகத்துடன் முதல் தொடர்பு முதன் முதல் உண்டாகும் எண்ணங்கள் முக்கியமானவை. ஏனெனில் அவையே வாழ்நாள் முழுவதும் உள்ளுணர்வூட்டலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் ஆயர் அவர்கள் பல்வேறு பங்குகளுக்கு மேற்பார்வைக்காகவும் உறுதிபூசுதலுக்காகவும் செல்லும் பொழுது என்னையும் உடன் அழைத்துச் செல்வார்கள்.

கிறிஸ்து பிறப்பு விழாவுக்குத் தயார் செய்யும் முகமாக நான் சில வாக்கியங்களை மிகக் கவனமாகத் தமிழில் எழுதி வைத்துக் கொண்டு திருப்பலிப் பூசையில் அதனை வாசித்தேன். பூசை முடிந்ததும் சிலபேர்கள் வந்து என்னைப் பாராட்டினார்கள் – எவ்வளவு அழகாக ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்தேன் என்று! எனது தமிழை அப்படிச் சுவைத்திருக்கிறார்கள்! மறைமாவட்டத்துக்கு வந்து சில மாதங்கள் ஆகும் வரை ஆயர் இல்லத்திலேயே தங்கித் தமிழ் படித்தேன். ஒன்பது மாதங்கள் கழித்த பின் ஒரு பங்குக்கு உதவிக் குருவாக அனுப்பிவைக்கப்பெற்றேன். அது ஒரு பெரிய கன்னியர் மடமும் அநாதை விடுதியும் பள்ளிக்கூடமும் ஆக இப்படிப் பல நிறுவனங்கள் உள்ள முக்கியமான பங்கு. மக்களை அவரவர் வீடுகளுக்குச் சென்று விசாரிப்பது எப்படி, அருட்சாதனங்களை வழங்குவது எப்படி, திருமுழுக்கு பெற விரும்புகிறவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது எப்படி என்றெல்லாம் அங்கே நான் கற்றுக்கொண்டேன். அந்த நாள்கள் நான் நிரம்ப அனுபவம் பெற்ற நாள்கள். கிறிஸ்து பெருமானின் உடலாகும் மக்களோடு முதன்முதல் தொடர்பு கொண்ட நாள்கள் அவை.

ஓர் ஆண்டு சென்ற பின் என்னை மேற்கு மலைத் தொடரின் அடிவாரத்தில் மிகத் தொலைவிலுள்ள ஒரு பங்குக்குப் பங்குக் குருவாக ஏற்படுத்தினார்கள்.

எரேமியாவைப்போல மக்களிடமும் நாட்டினிடமும் அனுப்பப்பட்டவன் ஆனேன். என் வாழ்க்கையை அர்ப்பணித்து நான் ஏற்றுக் கொண்ட தூதுப்பணி, அது என்ன? கடவுளின் அரசு அனைவர்க்கும் பொது என்ற உண்மைக்கும், கிறிஸ்துவில் விளங்கிய கடவுளன்புக்கும் நான் சான்று

பகர்பவனாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மேற்கத்திய கிறிஸ்தவ சமுதாயம் என்னை இங்கு அனுப்பிவைத்தது.

முதற்கண் நான் என் மக்களை அறிந்துகொள்ள வேண்டும். மாதம்தோறும் ஏழைகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு பேச வேண்டும் என்று தீர்மானித்தேன். அதன்படியே பல ஆண்டுகள் நடந்துவந்துள்ளேன். ஏழைகள் என்றால் கிறிஸ்தவர்களாயினும் இந்துக்களாயினும் எல்லாரும்தான்... நான் எந்த வேற்றுமையும் பாராட்டுவதில்லை என்று பெயர் எடுத்தேன்.

அவர்களுக்கு என்ன பிரச்சினைகள், கஷ்டங்கள் என்று கேட்பேன். நிரம்பச் செவிமடுப்பேன், சிறிதே பேசுவேன். முதலில் அவர்கள் நான் பொருளுதவி செய்வேன் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நான் வீடு சென்று காணும்போது ஒன்றும் கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருந்தேன். எனவே அந்த முடிவைப் பிசகாமல் கடைப்பிடித்தேன். நமக்குச் சோற்றுக் கிறிஸ்தவர்கள் வேண்டாம். திருச்சபையில் சேர விரும்பியவர்களுக்கு என்ன வாக்குறுதி கொடுத்தோம்? அவர்கள் ஒரு சமுதாயத்தில் சேர்ந்து அதன் இன்பதுன்பங்களில் பங்கு கொள்வார்கள் என்ற உறுதிதான் தந்தோம்.

இப்படி நான் அங்கு இரண்டு ஆண்டுகள் இருந்தது ஒரு கடுமையான முன்பயிற்சியாகும். அதனால் நான் அடுத்த 20 ஆண்டுகள் பணிபுரிந்த இடத்துக்குப் போய் என் தூதுப்பணியை நிறைவேற்றத் தயாரானேன்.

III ஒருங்கிணைந்த அருட்பணி அணுகுமுறை



1. பரக்குன்னு ... எனது முதல் காதல்

நான் திருமலைக்கு வந்த நாள் முதல் ஒரு வழக்கம் உருவாகி நிலைபெற்றுவிட்டது. அதாவது இங்கு என்னைக் காண வருபவர்களை ஒரு திருப்பயணமாக அழைத்துச் சென்று நான் பரக்குன்னில் இருந்த 20 ஆண்டுகளில் கட்டிய கோவில்களை அவர்களுக்குக் காட்டுவதைத்தான் சொல்கிறேன். அந்தக் கோவில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வரலாறு உண்டு. ஒவ்வொரு கல்லும் கோவிலைக் கட்டிய மக்கள் சமுதாயத்தை எடுத்துச் சொல்லும். பரக்குன்னு, நல்லாயன்புரம், மேல்பாலை, இடைக்கோடு, தோமையார்புரம் ... இவை ஒவ்வொன்றுமே சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான ஓர் அகக்காட்சியை எடுத்துரைக்கும் விசுவாசத்தை அணுகும் முறை ஒன்றை வெளிப்படுத்தும்.

தந்தை வின்சென்று லெப் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் வாழ்க்கைப் பணியும் எனக்கு ஒரு முன்மாதிரியாய் விளங்கிற்று. அவர் இந்த (20ஆம்) நூற்றாண்டின் முன் பாதியில் சீனாவில் தூதுப் பணியாளராக இருந்தார். தூதுப் பணித் தளங்களுக்கு ஒரு புதிய பார்வையை அளித்தார். அவர் நல்லதையே எதிர்பார்க்கும் மனம் உடையவர். மக்களிடத்தில், அவர்களுடைய பண்பாட்டில், பழக்கவழக்கங்களில், நடையுடை பாவனைகளில், வாழ்க்கை முறையில் குற்றம் குறை காண்பதை விட்டுவிட்டு அவற்றில் நல்லவற்றை நாடும் நோக்குடையவர் அவர். இது அவருக்கு இருந்த அடிப்படைக் குணங்களில் ஒன்றாகும்.

மேனாட்டவர்கள் தங்களை மற்றெல்லாரையும் விட உயர்ந்தவர்களாக எண்ணிக்கொள்வது உண்டு அந்த மனக்கோளாறுக்கு அவர் இடம் கொடுக்கவே இல்லை. தூதுப்பணி பற்றிய அவர் கொள்கை தெளிவானது. தனித் தனி மக்கள் மட்டும் அல்ல, அவர்களது சமுதாயம் பண்பாடு எல்லாமே திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையினுள் ஒன்றிக்க வேண்டும். கிறிஸ்து இன்றும் வாழ்பவர். அவரிலே கொள்கின்ற கிறிஸ்தவ விசுவாசத்தை மேனாட்டு உடுப்பு உடுத்திக் காட்டலாகாது. மேனாட்டுத் தோற்றத்தில் வாழ்ந்துகாட்டக் கூடாது. அப்படிச் செய்வது அதனை அன்னிய மதம் என்று காட்டும். மாறாக, அது ரோமானியருடன் ரோமானியர் பண்புடனும், சீனருடன் சீனப் பண்புடனும் விளங்க வேண்டும். தலத் திருச்சபையை அந்தந்த மண்ணின் மைந்தர்களையே ஆயர்களாகவும் குருக்களாகவும் கொண்டதாக உருவாக்குவது என்றால் என்ன பொருள்? கிறிஸ்தவ சமுதாயத்தினுள் மறைந்த கிடக்கும் ஆற்றல்களை கண்டுகொண்டு அவற்றைப் பேணி வளர்க்க வேண்டும்: மக்களை அவர்களுடைய பொறுப்புகளை உணருமாறு தட்டி எழுப்ப வேண்டும். மண்ணில் மைந்தர்களால் ஆன தலத் திருச்சபையை உருவாக்குவது எனில் இதுவே பொருள். தந்தை லெப் அவர்களது இப்பார்வை இது இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவதுமாகும்.

இந்தப் பின்னனியில் நான் தந்தை லெப் அடிச்சுவட்டில் சீனா செல்ல என்னைத் தயார் செய்து கொண்டிருந்தேன் .... அதற்குப் பதில் இந்தியாவில் கோட்டாறு மறைமாவட்டத்தில் வந்து இறங்கினேன். நான் முன்பு சொன்னது போல, கோட்டாறு மறைமாவட்டத்துக்கு 1950



பரக்குன்னு ஆலய வெளித்தோற்றம்

அக்டோபர் 3 –ஆம் நாள் வந்து சேர்ந்து தமிழ் படிப்பதற்காக அங்கு ஆயர் இல்லத்திலே சில மாதங்கள் தங்கியிருந்தேன். 1951 மே மாதம் என்னை முளகுமூடு பங்குக் குருவுக்கு உதவியாளராக நியமித்தார்கள். 1952 ஜூன் மாதம் என்னைச் செறுவெல்லூருக்குப் பங்குக் குருவாக ஏற்படுத்தினார்கள். இந்த ஊர் கேரளத்து எல்லையில் மேற்கு மலைத்தொடரின் அடிவாரத்தில் இருக்கிறது. நான் அங்கே போகுமுன் ஆயர் அவர்கள் எனக்குக் கண்டிப்பான ஓர் உத்தரவு போட்டார். நான் செறுவெல்லூரில் இராத் தங்கக் கூடாது என்றும், கிளைப் பங்குகளில் ஒன்றான பரக்குன்னுவுக்கு இரவில் போய்விட வேண்டும் என்றும் அவர் இட்ட இந்தக் கண்டிப்பான கட்டளைக்குக் காரணம் வேறொன்றும் இல்லை. செறுவெல்லூர் முழுதும் மலேரியா மயம்.

கடற்கரைக்கு அடுத்து வளமான சமநிலம். அதில் தென்னை, நெல், பழமரங்கள் செழித்து வளர்ந்து நிறையப் பலன் கொடுகின்றன. இவ்வளமான சமநிலத்துக்கு அப்பால் குன்றுகளும் அடர்ந்த காடுகளுமாய் உள்ளது நிலம். அதில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை காட்டு மிருகங்களின் ஆட்சிதான். நான் இந்த இடத்துக்கு வந்த பின் நடந்த ஒரு நிகழ்ச்சி: குன்றிலிருந்து இறங்கி வந்த ஒரு கரடி ஒரு மனிதனை அப்படியே கட்டிப் பிடித்து அவன் தாடையை நொறுக்கிவிட்டது. நான் வந்து சேர்ந்த நாளிலும் பரக்குன்னு வெறும் காடாகத்தான் கிடந்தது. அங்குள்ள நிலம் திருவாங்கூர் மகாராஜாவுக்குச் சொந்தம். அவர் அதைத் தம் படைவீரர்களுக்குப் பரிசாகப் பங்கிட்டுக் கொடுத்திருந்தார். இவர்களில் பெரும்பாலோர் நாயர் வகுப்பினர். இவர்கள் தாழ்வாயிருந்த நன்செய் நிலத்தை ஒட்டி வீடுகள் கட்டிக் குடியிருந்தனர். நாடார் வகுப்பைச் சேர்ந்த மக்களை வரவழைத்து அங்குள்ள குன்றுகளில் குடிசைகள் கட்டிக் கொள்ளுமாறு செய்திருந்தனர். அங்கே எல்லா இடங்களிலும் பனைகள் வளர்கின்றன. பனை ஏழைகளின் மரம் எனப்படுகிறது. பனையிருலிந்து பதனீர் இறக்கலாம். அதில் சுண்ணாம்பு கலக்காவிட்டால் அது கள்ளாக மாறும், (இதனைப் பனை ஒயின் எனலாம்). பனைகளுக்கிடையே அவர்கள் மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்கிறார்கள். இக்கிழங்குதான் இவர்களுக்கு முக்கியமான உணவு. அதனால் அதை ஏழைகளின் அரிசி என்கிறார்கள். இப்படி உண்ணும் உணவின் குறையைப் போக்கச் சில சமயம் அவர்களுக்கு மீன் கிடைப்பதும் உண்டு.

பனை ஏறும் இவர்கள் கடும் உழைப்பாளிகள். மெல்ல மெல்ல இவர்கள் சிறு சிறு மனைகள் வாங்கி அவற்றில் சொந்தமாக வீடு கட்டிக் குடியிருக்கலானார்கள். இவர்கள்

எப்படி இங்கு வந்தார்கள் என்பது நான் இவர்களை நேரில் பார்த்துப் பழகியபோது தெரிந்தது. இவர்களில் பெரும்பபலோர் சமநிலத்தில் இருந்து வந்தவர்களே. சண்டை சச்சரவு, காவல் துறை வழக்கு, மணமுறிவு, இருதாரம், இவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது வெறுமனே மக்கள் தொகை நெருக்கம், இவர்கள் இங்கு வரக் காரணமாய் இருந்திருக்கிறது. இவர்களில் இந்துக்களே பெரும்பாலோர், கிறிஸ்தவர்கள் மிகச் சிலரே.

நான் எதற்காகப் பரக்குன்னுக்கு வந்திருக்கிறேன் என்று நாயர்களுக்கு ஓரே ஐயம். கொத்தடிமைகள் மீது தங்களுக்கு இருந்த பிடி என் வருகையால் போய் விடுமோ என்ற பயம் அவர்களுக்கு. ஏழை மக்கள்மீது தண்ட வழக்குகள் போட்டு அவர்களைத் தொல்லைப் படுத்தி வந்தார்கள். நாடார்கள் ஒன்றுபட்டு எதிர்த்துப் போராடினார்கள். வலிமை வாய்ந்தவரானார்கள். அவர்களுக்குள் இருந்த சண்டை சச்சரவுகளையும் தகராறுகளையும் அவர்களே தீர்த்துக் கொள்ள நான் உதவினேன்.

நான் தங்கியிருந்தது ஒரு சிறிய கட்டடம். அதில் இரண்டு அறைகள், ஒரு சமையல் கட்டு, ஒரு தாழ்வாரம் அவ்வளவே, இந்தத் தாழ்வாரத்தில்தான் 15 சிறுவர் சிறுமியரும் சில பெரியவர்களும் செபமாலை சொல்லியவாறே பூசை கண்டனர். இவர்களே என்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்கள், என்னுடைய மக்கள், நான் முதல் நடவடிக்கையாக எல்லாக் குடும்பங்களையும் அது எந்தச் சாதியார் எந்தச் சமயத்தார் வீடாக இருந்தாலும் - ஒன்றையும் விடாமல் நேரில் சென்று கண்டுவர வேண்டும்: அவ்வாறே மாதம் ஒரு முறை அவர்களை அவரவர் வீடுகளில் தவறாமல் சந்திக்க முயன்றேன்.

அப்பொழுது அவர்கள் கோவிலுக்கு வருகிறார்களா, சீர்செய்ய வேண்டிய தாறுமாறான திருமணங்கள் உண்டா, குழந்தைகளுக்குத் திருமுழுக்கு கொடுத்தாயிற்றா என்றெல்லாம் பேச்செடுக்கமாட்டேன். அவர்கள் தங்கள் பாடுகள், ஆவல்கள், அல்லல்கள், இன்பதுன்பங்கள் இவற்றைச் சொல்லட்டும் என்று விட்டு விடுவேன்.

அவர்கள் பிள்ளைகளில் மிகச் சிலரே பள்ளி சென்றார்கள். பள்ளிக்கூடம் ஒரு மைல் தொலைவில் இருந்தது. அதுதான் அவர்களுக்கு மிகவும் அருகில் இருந்த பள்ளிக்கூடம். பெரும்பாலான பிள்ளைகள் பள்ளி செல்ல முடியவில்லை. ஏன்? உடுத்த நல்ல துணி கிடையாது. புத்தகம் வாங்கப் பணம் கிடையாது. நாங்கள் ஒன்று கூடி ஒரு திட்டம் வகுத்தோம். அதன்படி நூற்பு நெசவு மையம் ஒன்றை உருவாக்கினோம்: அதிலே அவர்கள் நூல் நூற்றுத் தங்களுக்கு வேண்டிய துணிகளைத் தாங்களே நெய்து கொள்ள முடிந்தது. சிக்கனச் சேமிப்புத் திட்டம் ஒன்றையும் கொண்டு வந்தேன். மறு ஆண்டு பள்ளி செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடிற்று, அவர்கள் தாமே நெய்த துணியால் ஆன உடுப்பு அணிந்து சென்றனர். தாமே சேமித்த காசினால் வாங்கிய புத்தகங்களை எடுத்துச் சென்றனர்.

மக்கள் தங்களுக்குக் கோவில் வேண்டும் என்று கண்டு அதைக்கட்டும்படி என்னை நெருக்கினார்கள். ஏற்கெனவே வழிபாட்டுத் தலம் ஒன்று இருந்தால் அதற்கு ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் வேறு எந்தக் கோவிலும் கட்டக் கூடாது என்பது அன்றைய அரசுச்சட்டம் – மாதா கோவிலானாலும்சரி, இந்துக் கோவிலானாலும் சரி. நாயர்களின் நன்செய்

வயல்களுக்கு மத்தியில் ஒரு சிறு கோவில் இருந்தது. பரக்குன்றில் மாதா கோவில் கட்டுவதை அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். நல்ல வேளையாக 1954-இல் சட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது. நாங்கள் கோவில் கட்டுவதற்கான திட்டங்களைப் பார்க்கலானோம்.

இது "நம்முடைய கோவிலாக" இருக்க வேண்டும். எனவே திட்டம் வகுப்பது திட்டத்தைச் செயல்படுத்துவது எல்லாவற்றிலும் பங்கெடுக்கும்படி அனைவரையும் அழைத்தோம். கோவிலை எந்த இடத்தில் கட்டுவது? - குன்றின் உச்சியிலா? அல்லது அதன் சரிவிலா? - என்பது குறித்துக் கருத்து வேறுபாடு தோன்றிற்று. கோவில்கள் எல்லாம் மேடான இடத்தில்தான் கட்டப்பட்டிருந்தன என்று விவிலியத்தில் காண்கிறோம் என எடுத்துச் சொன்னேன். குன்றின் உச்சியில் கோவிலைக் கட்டுவதென்று எல்லாரும் ஒப்புக்கொண்டனர்.

எது எது முக்கியம், எது எது இரண்டாம் பட்சம் என்று எல்லாவற்றையும் விவரமாகக் கூடி ஆராய்ந்தோம். ஆம், நல்ல காற்றோட்டம் இருக்க வேண்டும், நிறைய வெளிச்சம் வேண்டும், எந்தப் பக்கத்தில் இருந்து பார்த்தாலும் பீடம் தெரிய வேண்டும். நமது கோவில் கட்டட அமைப்பு ஏதோ ஒரு வகையில் திராவிடக் கட்டடக் கலையுடன் தொடர்புடையதாய் விளங்க வேண்டுவது அவசியம் என்பது என் திண்ணமான கருத்து. மக்களுக்கு இது கண்டு கேட்டறியாத ஒரு புதுமை. இருந்தாலும் ஒப்புக்கொண்டனர். எல்லாப் பக்கங்களிலும் முகலாயச் சிற்பக் கலைப் பாணியில் பெரிய பின்னல் தட்டிச் சன்னல்களை அமைத்துக் காற்றோட்டத்துக்கு வசதி படைத்திடலாம்.

கோவிலின் (கவிகை மோடாகிய) விமானம் தெய்வீகப் பிரசன்னத்திற்கு ஓர் அடையாளமாகும், ஆதலால் பீடத்தை விமானத்திற்குக் கீழ் அதன் நடுவாக இருக்கும்படி அமைக்க வேண்டும். சில சமயங்களில் குரு மக்களைப் பார்த்தபடி திருப்பலி நிறைவேற்றும் வண்ணம் பீடம் இருக்க வேண்டும். இது இரண்டாம் வத்திக்கான் சங்கம் வருவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பாகும். தூண்களும் திராவிடச் சிற்பக்கலை அழகுடன், வளத்துக்கும் வாழ்வுக்கும் அடையாளமான வாழைப் பூக் குலையுடன் அமையும். கோவில் வாயிலில் திருமுழுக்குத் தொட்டியை நிறுவுவோம். அது நீரிலிருந்து கிளம்பி மலர்ந்த தாமரை வடிவில் இருக்கும். இப்படியெல்லாம் திட்டம் தீட்டப்பட்டு முடிவாயிற்று. கட்டி முடித்த பின்னர் இந்திய ஓவியர் ஜோதி சாஹி சிலுவைப்பாதை நிலைகளை வண்ண ஓவியங்களாகத் தீட்டித் தந்தார். பீடத்திற்குப் பின்புறம் சுவரில் ஒரு சிறு வழிசெய்து அப்பால் ஒரு சிறிய தூயகம்–மூலஸ்தானம் கட்டினோம்.

சுரூபங்கள் வைக்க இடம் ஏதும் வைக்கவில்லை. ஆனால் இயேசு பெருமானையும் அன்னையையும் காட்டும் (கிரேக்கத் திருச்சபைப் பாணியிலான) இரண்டு திருவுருவப் படங்களை மட்டும் வைக்க முடிவெடுத்தோம். தேவசகாயம் பிள்ளை வேதசாட்சியான ஆரல்வாய்மொழியில் கண்ட சிலுவையைப் போன்று ஒரு சிலுவை செய்து கோவிலின் உச்சியில் வைக்க வேண்டும். இவ்வாறெல்லாம் மக்களுடன் கலந்து பேசி முடிவெடுத்து முன்னேற்பாடு செய்து திட்டம் தயாரானதும் உடனே கட்டுமான வேலையில் இறங்கிட வேண்டும் என்று துடித்தோம். நாங்கள் எண்ணியிருந்த விவரங்களின்படி கோவிலின் படம் ஒன்று வரைந்து கொடுக்க

எங்கள் நண்பர், கோவளத்தைச் சேர்ந்தவர் திரு. வின்சென்ட் ஃபெர்னாண்டோவைக் கேட்டுக்கொண்டோம். அவர் வரைந்ததற்கு ஏற்ப திருவனந்தபுரத்துக் கட்டடக் கலைஞர் சிரியன் திருச்சபைக் கிறிஸ்தவர் ஒருவர் கோவில் அமைப்பு வரைபடம் தயாரித்துக் கொடுத்தார்.

எங்கள் மாவட்டத்தின் பெயர்பெற்ற காண்ட்ராக்டர் கோவிலைக் கட்ட ஒப்புக்கொண்டார். எங்கள் திட்டத்தின் பல கூறுகள், இந்து சமயத்திடமிருந்து வந்தவை ஆதலால் அவருக்கு அவை பிடிக்கவில்லை, என்றாலும் கட்டித் தர ஒப்புக்கொண்டார். தங்கள் சொந்த இந்தியப் பண்பாட்டிலிருந்து வேறுபடுத்தப்பட்டுள்ள கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் உள்ள மனநிலைதான் இது. இவர்கள் போலியான "கோதிக்" பாணியிலும் நவீன முப்பரிமாண அமைப்பிலுமே பழகிப்போனவர்கள்.

கோவிலைக் கட்டுவதற்கு ஆயரின் ஒப்புதலைப் பெறச் சென்றபோது அவர் சொன்னார்: தயங்காமல் கட்டுங்கள் அது பயனற்றுப் போனால், பரவாயில்லை. யாரும் பார்க்கப் போவதில்லை, எங்கோ ஒரு மூலையில் எட்டாத் தொலைவில்தானே இப்படிக் கட்டுகிறீர்கள்!

கோவிலைக் கட்டிக்கொண்டிருந்த சமயம் தந்தை மோன்சனான் வந்து பார்த்துவிட்டு "தோமுஸ் லூசிடா" – ஜோதி இல்லம் – என்று வியந்துபோனார்கள்! 1959–இல் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறன்று கோவிலை ஆயர் அவர்கள் மந்திரித்த சமயம் நன்றாக இருக்கிறது என்று பாராட்டினார்கள், பிறகு அவர்கள் தம்மைக் காண வருவோர் பலரை இங்கே கூட்டிக்கொண்டு வந்து கோவிலைக் காட்டியிருக்கிறார்கள்.

திட்டவரைவு தயாராகி அதற்கு ஒப்புதலும் பெற்றவுடனே வேலையைத் தொடங்கிவிட்டோம். இளைஞர்கள் கருங்கல் சல்லி, மணல் முதலியவற்றைக் கொண்டுவந்து குவித்தார்கள். பள்ளி மாணவ, மாணவியர் விடுமுறை நாள்களில் மற்ற மக்களுடன் சேர்ந்து முழுநேரமும் உழைத்தார்கள். அதற்குக் கிடைத்த கூலி அவர்கள் துணிமணி, புத்தகங்கள் வாங்குவதற்கும் பள்ளிக் கட்டணத்திற்கும் போமானதாயிற்று. எங்கள் கோவிலை எங்கள் கையாலே கட்டினோம் என்று எல்லேரும் பெருமைப்பட்டார்கள், அத்துடன் இளைஞர்கள் எங்கள் படிப்புச் செலவுக்கு நாங்களே உழைத்துச் சம்பாதித்தோம் என்று மகிழ்ந்தார்கள். கோவிலைக் கட்டி முடிக்க நிறையச் செலவு இழுத்தது. கட்டுமான வேலையின் முதல் கட்டம் முடிந்ததும் வேலையை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று – கையில் காசு இல்லை ஆதலால், மக்களுக்கோ தங்கள் கோவிலைக் கட்டுவதில் மிகுந்த உற்சாகம். எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

கடற்கரையிலுள்ள ஊர்கள் பலவும் பழைய கிறிஸ்தவ சமுதாயங்கள்தானே. அவர்களைப் போய்ப் பார்த்து, அவர்களுடைய தூதுப்பணிப் பொறுப்பைத் தட்டி எழுப்பினால் என்ன? இந்த யோசனை பற்றி ஆயரிடம் பேசினேன். அவருக்கு நம்பிக்கை இல்லை. ஆயினும் என் திட்டத்தை வாழ்த்தினார். கடற்கரையிலுள்ள எல்லாப் பங்குகளுக்கும் சென்றேன். அந்தந்தப் பங்குக் குரு என் வருகையை முன்னறிவித்து எதற்காக வருகிறேன் என்றும் மக்களுக்குத் தெரிவிப்பார். நான் மாலையில் போய் சேர்வேன் மறுநாள் பூசைக்குப் பிறகு வீடு வீடாய்ச் சென்று இந்தத் தூதுப்பணித் தளத்துக் கோவிலைக் கட்ட அவர்கள் உதவியைக் கேட்பேன், சில கிராமங்களில்

பொதுநிதியிலிருந்து கொடுக்க விரும்பினார்கள். மற்ற இடங்களில் மக்களைத் தனித்தனியே சந்தித்து அவர்களுடைய பாடுகளையும் துன்பதுயரங்களையும் கேட்டறிந்தேன். அவர்களுடைய விசுவாசத்தையும் துணிவையும் கண்டு வியந்தேன். பத்து, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு நான் அக்கிராமங்களுக்குச் செல்ல நேர்ந்தபோது அவர்களில் பலபேர் ஒரு தூதுப்பணிக் கோவில் கட்ட உதவி கேட்டுத் தங்கள் வீட்டுக்கு வந்த சாமி என்று என்னை அடையாளம் கண்டு கொண்டார்கள்.

கட்டிவந்த கோவிலை ஒட்டி ஒரு கிறிஸ்தவ சமுதாயமும் உருவாயிற்று, கத்தோலிக்க சேவாசங்கம், ரதா சபை (Sodality) மரியாயின் சேனை ஆகியவற்றை அமைத்தோம். வாரம் தோறும் விவிலியம் படிப்பதும் அது பற்றி ஆழ்ந்து சிந்திப்பதுமான வகுப்புகள், ஆண்டுதோறும் மூன்று நாள் தியானம். பனைப் பொருட்களை வைத்து நடக்கக் கூடிய பல வகைக் குடிசைத் தொழில்களைத் தொடங்கினோம், பலருக்கு வேலை கிடைத்தது.

இவ்வாறு உருவான பெரிய குடும்பத்தில் 20 ஆண்டுகள் நானும் ஒருவனாக இருந்து அவர்களுடைய பாடுகளிலும் இன்பதுன்பங்களிலும் பங்குகொண்டேன். பிரிய வேண்டிய நேரம் வந்தது. என்னை மேல்பாலைக்கு மாற்றினார்கள். அது பரக்குன்னிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊர். எனக்குப் பிரியா விடையாகப் பங்கு மக்கள் என் புதிய பங்குக்கு நடந்து வந்தனர். அந்த அனுபவம் பற்றி பின்னால் எழுதுகின்றேன்.

நவம்பர் 1983

௨. நல்லாயன்புரம் தந்த சவால்கள்

நல்லாயன்புரம் ! முன்பு கட்டாந்தரையாய்க் கிடந்த இடம் இன்று நல்ல ஆயனுடைய ஊர். எத்தனை தடைகள் எத்தனை தடைகள்! அத்தனையையும் தாண்டி ஆகிமிருக்கும் ஒரு புதிய படைப்பு நல்லாயன்புரம்.

நான் பரக்குன்னுக்கு வந்ததும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூன்று பூசை நிறைவேற்ற இசைவு பெற்றோம். முதல் பூசை காலை 6.30 மணிக்குப் பரக்குன்னில். இரண்டாம் பூசை மேல்பாலையில். மூன்றாம் பூசை மலையடி என்ற கிராமத்திலும் இடைக்கோடு என்னும் ஊரிலும் உள்ள தொடக்கப் பள்ளிகள் இரண்டில் ஏதாவது ஒன்றில். இந்த இரண்டு ஊர்களுக்கும் போய்ச் சேர்வதற்குப் பரக்குன்னிலிருந்து வடக்கே செல்லும் பாதையில் 4 கிலோமீட்டர் போனால் அது கிழக்கும் மேற்கும் பிரியும் சந்தி வரும். அச்சந்திக்கு அரை கிலோ மீட்டர் மேற்கே ஆதிதிராவிடர்க்கான தொடக்கப்பள்ளி இருக்கிறது, அதில் நாலாம் வகுப்பு வரை உள்ளது. சந்திக்குக் கிழக்கே போகும் சாலையில் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மற்றொரு ஆர்.சி. தொடக்கப்பள்ளி இருக்கிறது. இது நாடார் பிள்ளைகளுக்காக ஏற்பட்ட பள்ளிக்கூடம். மலையடி உண்மையிலேயே ஒரு குன்றின் அடியில்தான் உள்ளது.

இந்தப் பள்ளிக் கூடங்கள் இரண்டில் ஒன்றிலே தான் ஞாயிற்றுக் கிழமைகளில் மூன்றாவது பூசை நடைபெறும். பூசைக்கு வேண்டிய பொருட்களை ஒரு சூட்கேஸ் பெட்டியில்



நல்லபயன்புரம் ஆலய வெளித்தோற்றம்

நல்லபயன்புரம் ஆலய உள்தோற்றம்

வைத்துக் கொணர்வோம். இரண்டு பெஞ்களின்மேல் வேறு இரண்டு பெஞ்சுகளை வைத்துச் சேர்த்துக் கயிறு கொண்டு இறுக்கிக் கட்டிவிடுவோம். அதுதான் திருப்பலிப்பீடம். பூசைக்கு ஒரு முப்பது பேர் வருவர். மலையடி ஊர் மக்கள் மறு ஞாயிறன்று இடைக்கோட்டில் நடக்கும் பூசைக்கு வரமாட்டார்கள். அப்படியே இங்கு நடக்கும் பூசைக்கு இடைக்கோட்டு மக்கள் வாரார். தங்கள் பள்ளிக்கூடத்தில் பூசை இல்லாத ஞாயிற்றுக் கிழமையில் அடுத்த பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் பூசை காணலாமே. அந்த நினைப்பே அவர்களுக்குக் கிடையாது. இரண்டுக்கும் இடையிலுள்ள தொலைவு ஒன்றரை கிலோ மீட்டர்தான். எல்லாம் சாதி வழக்கு. தீண்டாத சாதி என்ற பயங்கரமான பிரச்சினை, இதுதான் என்னை நேர் எதிர் வந்து விழித்து நோக்கியது. நான் கிறிஸ்துவின் பக்கமா? அவருக்கு எதிர்ப் பக்கமா? இந்தச் சிக்கலிலிருந்து தப்பிக்க வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நான் செய்த முதல் நடவடிக்கை அரிசனர் உத்தரவு பெற்று அரசினர் பள்ளியில் ஐந்தாம் வகுப்பையும் ஏற்படுத்தியதாகும். அதனால் அப்பிள்ளைகளின் தொடக்கக் கல்வி நிறைவு பெற முடிந்தது. ஆனால் கோவில் அல்லது கோவில்கள் கட்ட வேண்டாமா? இந்தப் பிரச்சினைகள் பற்றி முதன்மைக் குருவிடம் (Vicar Forane) அடிக்கடி கலந்து பேசினேன். இந்த இரண்டு சாதியாரையும் ஒன்று சேர்க்கவே முடியாது. இரண்டு கோவிலகள் கட்ட வேண்டியதுதான் என்றார் அவர். அவர்களை ஒன்று சேர்ப்பதில் ஒரு வேளை நான் வெற்றி பெற்றாலும் எனக்குப் பின் வருபவர்களின் காலத்தில் அவர்கள் சேர்ந்திருக்க மாட்டார்கள் என்று அவர்

கருதினார். இந்தக் கருத்து எனக்கு உடன்பாடாகவில்லை. என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்தச் சமுதாயப் பிரச்சினை தீர ஒரு புதிய வழி பிறக்காதா என்று இறைவனை வேண்டினேன். அது வெறுமனே ஒரு சமுதாயப் பிரச்சினை மட்டும் அல்ல. கிறிஸ்துவின் சீடர்கள் அனைவரும் நற்செய்தி மதிப்பின்படி சகோதர சகோதரிகள். இதற்கு இச்சாதி பிளவு நேர்முரணுமாகும். இந்தச் சாதியப் பிரச்சினை தமிழ்நாட்டைப் பெரிதும் பாதித்துள்ளது. சில மாதா கோவில்களில் சாதிகளைப் பிரித்து வைக்க நடுவில் வேலி! சில கல்லறைத் தோட்டங்கள் ஒரு குறிப்பிட்ட சாதியாருக்கு மட்டும்! சில பங்குகள் தங்கள் சாதியைச் சேராத பிற குருக்களை ஏற்பதில்லை! இப்படி எத்தனையோ!...

இரண்டாவதாக நான் எடுத்த நடவடிக்கை என்ன வென்றால், ஞாயிற்றுக் கிழமைகளில் குரு எங்கே பூசை நிறைவேற்றுகிறாரோ அங்கே வந்து பூசை காணவேண்டும் என்று பிள்ளைகளை அழைத்தேன். ஒரு பள்ளிக்கூடத்தில் பூசை நடக்கும் சமயத்தில் மற்றொரு பள்ளிகூடத்தில் செபக்கூட்டம் இருக்காது. இவ்வாறு செய்தபின், ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே மரியாயின் சேனையைத் தொடங்கி வைத்தோம். மகளிர்க்கான மரியாயின் சேனைக்குத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்.

ஒன்றாய்க் கூடிச் செபிப்பது, சாதி சமய வேறுபாடு இன்றி எல்லா வீடுகளுக்கும் சென்று மக்களைச் சந்திப்பது, பங்குத் திருவிழாக் கொண்டாட்டத்தில் ஒன்றாய் அமர்ந்து உணவு அருந்துவது இவையெல்லாம் இளைஞர்களிடத்திலும் மக்களிடத்திலும் ஒரு புதிய உணர்வை ஊட்டியது.



ஓர் இந்தியக் கோயில்

[illegible]

இந்தப் பங்கைச் சேர்ந்த சில பையன்களுக்கு வீட்டில் இருந்து படிப்பதற்கு வசதி இல்லை. ஆதலால் அவர்கள் என்னோடு தங்கினர். அவர்களில் இருவர் அச்சமயம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கும் நிலையில் இருந்தனர். ஒருவன் நாடார் வகுப்பைச் சேர்ந்தவன். அடுத்தவன் ஆதிதிராவிட வகுப்பினன். இருவரும் மறைமாவட்டத்துக் குருமடத்தில் சேர்ந்து குருவாக விரும்பினர். இருவரும் அதற்குரிய நேர்முகத் தேர்வுக்குச் சென்றனர். இருவருமே தெரிந்தெடுக்கப்பெற்றனர். ஏனெனில் யாருக்கும் அவர்கள் என்ன சாதி என்பது தெரியாது. இருவரையும் நாடார்கள் என்றே மக்கள் நினைத்திருக்கக் கூடும். ஆனால் ஆதிதிராவிடப் பையன் பள்ளி இறுதித் தேர்வில் தேறாததால் ஓர் ஆண்டு காத்திருக்க வேண்டியதாயிற்று.

அவன் மீண்டும் குருமடத்தில் சேர்வதற்குரிய பேட்டிக்குச் சென்றபோது அவன் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவன் என்பது தெரியவந்தது, அவனைத் தெரிவு செய்யவில்லை. தேர்வில் வெற்றிபெறாதவன் என்று எனக்கு அது வியப்பாக இருந்தது, அதை நான் ஆயரிடம் சொன்னபோது, அவர் மறைமாவட்டத்தில் ஆதி திராவிடக் குருவைப் பங்குகள் ஏற்றுக்கொள்ள மாட்டார் ஆகையால் அவர் ஒரு பிரச்சினையாக இருப்பார் என்றார்... பையன் துறவறச் சபை ஒன்றில் சேரலாம் என்று ஆயர் யோசனை கூறினார். பையனும் அப்படியே செய்தான், மிக நன்றாக விளங்கினான். அவன் குருவாகத் திருநிலை பெற்ற பின் எங்கள் மறைமாவட்டக் கடற்கரைப் பங்கு ஒன்றில் உதவிக் குருவாக ஓராண்டு பணியாற்றினார். மிக நன்கு பணிபுரிந்தார், மக்களுக்குப் பிடித்தமானவராக விளங்கினார்.

கோவில் கட்ட வேண்டுமே என்ற கேள்வி எழுந்தது. மக்கள் இரண்டு கோவில்கள் கட்ட வேண்டும் என்றார்கள். நான் பதில் சொல்லவில்லை, ஆனால் எந்த மாதியான கோவில் கட்ட வேண்டும் என்று கேட்டேன். பரக்குன்னுக் கோவில் மாதிரியா? இல்லை. அப்படி வேண்டாம் என்றார்கள். நாம் கட்டப்போவது புது மாதிரியாக இருக்க வேண்டும், இந்த இடத்துத் தேவைக்கு ஏற்றபடி அமைய வேண்டும். தென்னிந்தியப் பண்பாட்டில் வாழ்கின்ற கிறிஸ்தவ சமுதாயத்தை எடுத்துக் காட்டுவதாக அது அமைய வேண்டும். ஒரு புது மாதிரியான, தனிச் சிறப்பான ஒன்றைப் படைக்கும் முயற்சி மெல்ல மெல்ல உருவாயிற்று. மக்களுக்கு இதில் ஆர்வம் பிறந்தது. என்ன, ஏது என்று தெரிந்து கொள்ள முனைந்தனர். கட்டும் கோவில் அவர்கள் கோவிலாக இருக்க வேண்டும் என்பது அனைவருக்கும் ஒப்ப முடிந்த முடிவாயிற்று. ஆனால் அதை எந்த இடத்தில் கட்டுவது?

கட்டப்போகும் கோவில் எங்கள் கற்பனையிலே நெடுநாளாக உருவெடுத்தது. பரக்குன்றில் கட்டிய கோவில் மரபு வழியான அமைப்பு உடையது். இந்தியக் கலையை எடுத்துக் காட்டக்கூடிய சிற்சில வேலைப்பாடுகளே அதில் அமைந்தன. மாதா கோவில் கட்டடத்துக்கு இந்துக் கோவில் வடிவ அமைப்பு உதவுமா என்று யோசித்தோம். கிறிஸ்தவக் கோவில் கூட்டு வழிபாட்டுக்கு உரியதாகும், ஆனால் இந்துக் கோவில் மக்கள் தனித்தனியே என்று வழிபடுவதற்கான இடமாயிற்றே?



நல்லாயன் கிறிஸ்து இந்தியப் பாணியில்

ஞானஸ்நான ஊற்று

மதுரை மீனாட்சியம்மன் கோவிலைப் போய்ப் பார்த்தோம். இம் மாபெரும் கோவில் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோவில்களின் அமைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். கோவிலின் கட்டட அமைப்பை ஆராய்ந்தோம்.

மூலஸ்தானம் கதவு சார்த்தப்பட்டிருந்தது, அங்கு வெளியேயிருந்து வெளிச்சம் புக முடியாது. ஒரு சிறு விளக்கு மட்டும் எப்பொழுதும் அங்கு எரிந்து கொண்டிருக்கிறது. பக்தர்கள் தங்கள் பாவங்களைக் களைந்து வைக்கின்ற பலி பீடம் உள்ள சிறிய திருவிடம் ஒன்று இருக்கிறது. பிறகு ஆயிரங்கால் மண்டபம். அது நாற்புறமும் திறந்த வெளியிடம். அது நாட்டியம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான இடம். பிறகு, கட்டட அமைப்பைச் சுற்றி நிரம்ப இடைவெளி விட்டு உயர்ந்து நிற்கும் மதில் வெளி உலகத்திலிருந்து கோவிலைப் பிரித்து வைக்கிறது. கடைசியாக கோபுரம் அமைந்த நுழைவாயில். கோபுரம் முதலில், பகைவர்கள் படையெடுத்து வருகிறார்களா என்று கண்காணிப்பதற்கும் அங்கிருந்து போரிடுவதற்கும் வசதியாகப் படை வீரர்களுக்காக உண்டான அமைப்பு. பின்னர் அதில் காவலர்கள், தெய்வங்கள் ஆகியயோரின் சிலைகள் இடம் பெற்றன.

இந்த அமைப்புதான் கூட்டு வழிபாட்டுக்கு ஏற்றதாகப் பட்டது. எங்கள் ஆராய்ச்சியின் முடிவு மனநிறைவு அளிக்கவே, எங்கள் கோவிலைக் கட்டுவதற்குரிய திட்டம் தீட்டலானோம். நுழை வாயிலுக்குமேல் 45 அடி உயரமாகக் கோபுரம் அமைய வேண்டும், படைவீரர்களோ, காவலர்களோ தேவை இல்லை. கோபுரம் எளியதோர் தோற்றம் உடையதாக இருக்கும்.

கடவுளிடம் அழைத்துச் செல்லுகின்ற சிலுவையை நோக்கிக் கைகளை உயர்த்தி வேண்டுகின்ற முறையை அதன் வடிவம் குறித்துக் காட்டும். அத்தகைய வடிவம் சரியாக அமைவது எப்படி என்று பல நாள் ஆராய்ந்தோம். கடைசியாக களிமண்ணால் மாதிரி வடிவம் செய்து பார்த்து, கோபுரத்துக்கும் தூண்களுக்கும் இன்னின்ன வடிவந்தான் சரி என்று கண்டுகொண்டோம்.

கோபுர வாசலின் இடது பக்கம் ஒரு சிறிய அறை இருக்கும். மூன்று படிகளில் இறங்கி அதனுள் செல்ல வேண்டும். இது ஆற்று நீரில் இறங்குவதற்கு அடையாளமாகும். திருமுழுக்கு நீரில் இறங்குவதற்கு அடையாளமாகும்–திருமுழுக்கு நீரில் இறங்கிக் குளித்துக் கடவுளோடு ஒப்புரவாகி ஒரு புதிய வாழ்வுக்கு எழுவதைக் காட்டுகின்ற அடையாளம். மற்றொரு ஒப்புரவு அருட்சாதனமாகிய பாவப் பொறுத்தலுக்கு அங்கே ஒரு சிறு திறப்பு இருக்கும். வாசலின் வலது பக்கம் திருவிடம் அமையும். குரு அங்கு நின்று, உள்ளே வரும் மக்களை வரவேற்றுப் பூசைக்குரிய வருகைப் பவனியைத் தொடங்குவார். வாசலின் நடுவில் விசுவாசிகளைத் தன் பாதுகாப்பில் வரவேற்கும் பாணியில் சிவப்புக் களிமண்ணால் ஆன இந்திய ஆயன் உருவம் இருக்கும்.

கோவிலின் முக்கியமான உட்பகுதியில் நுழைந்ததுமே அங்கு காணும் தோற்றம் அப்படியே நெஞ்சை அள்ளும். பளிச்சென்ற வெளிச்சம் கருக்கலென்ற நிழலும் மாறி மாறி விழுந்து கிடக்கும் அப்பகுதியின் சூழ்நிலை உள்ளத்தை உயர்த்தும். இறைவனை வேண்டவும் தெய்வானுபவத் தியானத்தில் அமர்ந்திருக்கவும் ஏற்றதோர் சூழ்நிலை

இதுவாகும். எங்கள் மண்டபம் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த கருமையான தூண்கள் தாங்கி நிற்கும் படியாக அகன்று விரிந்த இடமாக விளங்கும். கண்கள் முதலில் தூயகத்தை நோக்கும். பிறகு அப்படியே சுழன்று திரும்பி, மண்டபத்துக்கும் அதைச் சுற்றி (மதில்போல்) உயர்ந்த சுவருக்கும் இடையில் பச்சைப்பசேலென வளர்ந்துநிற்கும் செடிகளையும் வண்ணவண்ண மலர்களையும் காணும். முன்னே நோக்க, அரைவட்ட வடிவத்தில் அமைந்த கட்டுமான அமைப்பு அனைவரையும் அணுகிவந்து பீடத்தைச் சுற்றி இருக்குமாறு அழைக்கும். கருங்கல்லால் ஆன அப்பீடம் இருப்பது மூலஸ்தானம், இது கலையழகு மிக்கதோர் கதவுக்கு அப்பால் அமைந்திருக்கும். இந்த வழிபாட்டுத் தலத்தினுள் வரும் எவரும் அங்கு ஆடாது அசையாது வீற்றிருக்கும் பேரமைதியில் தம் உள்ளத்தைப் பறிகொடுப்பர். அங்கே ஒருவன் இருக்கிறான் என்ற உணர்வு மேலிடுவர். நல்ல ஆயன் மக்களின் மனத்தை மாற்றி அனைவரும் ஒரே மந்தையாக வாழுமாறு அவர்களை ஒன்றுகூட்டிட எங்களுக்குத் துணை செய்வாரா? இதுவே எங்கள் கனவு.

ஒன்றுக்கும் ஆகாமல் வீணாய்க் கிடந்த ஒரு சிறு நிலம் விலைக்கு வந்தது. அது இரண்டு பள்ளிக் கூடங்களுக்கும் இடையில் சமதூரத்தில் சாலையோரத்தில் இருந்தது. அந்த நிலத்தை நாங்கள் வாங்கினோம். வாங்கி அதில் ஓர் ஓலைப் புரை கட்டினோம். அதுதான் எங்களுக்குச் செபக்கூடமாக, திருப்பலி நிறைவேற்றும் கோவிலாக, மக்கள் கூட்டங்கள் கூடும் இடமாக, முப்பது பிள்ளைகளுக்குப் பனை நாரினால் பல்பொருள்கள் செய்யும் தொழிற்கூடமாக இவ்வாறு பலபடப் பயனாயிற்று. அடுத்து இரண்டு

பள்ளிக்கூடங்களிலும் பூசை செய்யும் வழக்கத்தை நிறுத்திவிட்டோம். வாரத்துக்கு ஒரு முறை இங்கு வந்து இறைவனைத் தொழுது கோவில் உருவாவதைக் கண்டு செல்லும்படி மக்களைக் கேட்டுக்கொண்டோம். நாடார் வகுப்பைச் சேர்ந்த ஆடவர் சிலர் மட்டும் வரவில்லை. மற்றப்படி எல்லாரும் வந்தார்கள். 1965 ஜனவரி 25–இல் கோவிலுக்கான அடிக்கல் மந்திரிக்கப்பட்டது. 1965 மே 24இல் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 1965 செப்டம்பர் 5 ஆம் நாள் ஆயர் அவர்கள் வந்து கோவிலை மந்திரித்து விட்டு, அதன் பிறகு வத்திக்கான் சங்கத்து இறுதி அமர்வில் கலந்துகொள்ளப் புறப்பட்டுச் சென்றார்கள். கோவில் வடிவமைப்பை முடிவு செய்யப் பன்னிரண்டு ஆண்டுகள். அதைக் கட்டி முடிக்க ஒன்பதே மாதங்கள்!

இரு சாதியாருக்கும் செபம் சொல்லி வழிநடத்தத் தனித் தனி உபதேசியார் இருந்தனர். பல சமயங்களில் அவர்கள் இருவரும் ஒரு சங்கடமும் இல்லாம்ல ஒன்றாசி வீடுதோறும் சென்று மக்களைச் சந்திப்பர். எனக்குப் பின் மூன்று பங்குக் குருக்கள் வந்து சென்றுள்ளனர். இன்று இந்த இடத்திலேயே தங்கியிருக்கும்படியான பங்குக்குரு ஒருவர் இருக்கிறார். இவர் இந்தியத் தூதுப் பணிச் சபையைச் (ஐ.எம்.எஸ்.) சேர்ந்தவர், காசியிலிருநது வந்திருக்கிறார். இவருக்கு இங்கே எந்தப் பிரச்சினையும் எழவில்லை.

நான் நல்லாயன்புரத்தில் இருந்த காலத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு அவர்களுடைய சமுதாய நிலைமையை உணர்த்திட என்னால் முடியவேயில்லை. இருந்த நிலைமையில் அப்படியே அமைந்திருந்தனர். நான் அங்கிருந்து சென்ற பிறகு, அவர்களிடையே ஒரு கூட்டுறவுப் பால்

பண்ணை உருவாகி நன்கு செழிப்புடன் நடந்து வருவது கண்டு மிக்க மகிழ்ச்சியாய் இருக்கிறேன். இளம் பெண்கள் பலர் மாவட்டத்தில் சமூகநல வளர்ச்சித் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

நாங்கள் கட்டிய இரண்டாவது கோவில் இது. இதனிலும் மேலான ஒன்றை எங்களால் செய்திருக்க முடியுமோ?

மே 1984

3. மேல் படிப்புக்கு ஏங்கிய மேல்பாலை

பாக்குளுக்கு அடுத்தபடி நான் தங்கிய மிகவும் முக்கியமான ஊர் மேல்பாலை. இது பாக்குன்னுக்கு வடக்கே மேற்கு மலைத் தொடரை நோக்கிச் செல்லும் வழியில் நான்கு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. இவ்வாறு நிலப்படத்தில் அந்த ஊர் உள்ள இடத்தைக் காட்டாலாம். ஆனால் அந்த இலக்குக்குப் போனால் ஊர் எங்கே என்று தேட வேண்டும்!

பத்து, பன்னிரண்டு சிறிய சிறிய வீடுகள் சாலையை ஒட்டி உள்ளதைத் தவிர வேறொன்றும் இல்லை. ஓர் அடி நிலம்கூட விடாமல் மரவள்ளிக் கிழங்கு பயிராகி மா, பலா, வாழை, அன்னாசி வளர்ந்து மற்றும் எங்கும் உள்ள பனை மரங்களுடன் காட்சியளிக்கும் வீடுகளை இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காணலாம்.

குடியிருப்போர் பெரும்பாலும் நாடார்கள். இவர்களுள் புராட்டஸ்டண்டு மக்கள் படிப்பிலும் பணத்திலும் முன்னேறி இருக்கிறார்கள். பலர் தங்கள் பிள்ளைகளை ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள நடுநிலைப் பள்ளிக்கும் உயர்நிலைப் பள்ளிக்கும் அனுப்புகிறார்கள், சிலர் பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மார்த்தாண்டத்தில் உள்ள கல்லூரிக்கு நடந்து சென்று படித்துவருகிறார்கள். தங்கள் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற ஆவல் எல்லாப் பெற்றோர்களிடமும் காணப்படுகிறது.



மேல்பாலை ஆலயம்



பத்மநாப புரம் அரண்மனை

பிரான்சிஸ்கு சபையின் சகோதரர்கள் சிலர் இங்கே ஒரு மண்குடிசையில் இருந்து கொண்டு இம் மக்களிடையே அவர்கள் ஒரு சமுதாயம் என்ற ஒற்றுமை உணர்வை உருவாக்கியிருந்தனர். பண்பாட்டுத் தனித்துவ உணர்வையும் ஊக்குவித்தனர். பையன்கள் அடிக்கடி கூடி ஆடியும் பாடியும் சிலம்பம் விளையாடினார்கள். அதில் அவர்கள் கைதேர்ந்திருந்தனர்... ஆனால் மிகச் செம்மையாக இருக்க வேண்டுமானால் பனை மரத்துக் கள்ளை ருசிபார்த்திக்க வேண்டுமாம்!... வேறு சிலர் திருவிழாக் காலங்களில் கிறிஸ்தவ நாடகங்கள் நடிப்பதில் சிறந்து விளங்கினர். யார் தலைவராக இருப்பது என்று போட்டி தலைதூக்கிக் கத்தோலிக்க மக்களிடையே பிளவு ஏற்பட்டிருந்தது, பிரான்சிஸ்கு சபை அருட்சகோதரர்கள் கடைசியாக அந்த இடத்தை விட்டுப் போனதற்கும் இதுவே காரணம். அவர்கள் இந்த ஊரில் தங்கிச் சென்றார்கள் என்பதற்கு அடையாளமாக இருப்பது ஒரு சிறிய மண் வீடுதான்.

அங்கு சென்ற நான் முதலில் அங்குள்ள நிலைமையை இரண்டு ஆண்டுகளாக ஆராய்ந்தேன், ஒவ்வொரு வீட்டுக்கும் தவறாமல் சென்று மக்களைக் கண்டு பேசினேன், மாதா சபை மறைந்து போனதை மறுபடி எழுப்பினேன். மக்கள் தங்கள் பிரச்சினைகளைச் சொல்லக் காது கொடுத்துக் கேட்டேன். தங்கள் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிப்பதற்கு வேண்டிய கல்வி வசதி இல்லை என்ற குறையை இந்துக்கள், புராட்டஸ்டண்டு மக்கள், ஓரளவுக்குக் கத்தோலிக்கர் ஆக எல்லாரும் தெரிவித்து வருத்தப்பட்டார்கள். நடுநிலைப் பள்ளி வேண்டும் என்று உணர்ந்தார்கள். அதை நான் தொடங்கிட வேண்டும் என்று நெருக்கினார்கள்.

பள்ளிக்கூடம் கட்டுவதற்குத் தேவைப்படும் கட்டுமானப் பொருள்கள் சிலவற்றைத் தாங்களே தர முடியும் என்றார்கள். கட்டடம் கட்டுவதற்கு ஓரளவு மானியம் தரமுடியும் என்று உள்ளாட்சி அதிகாரிகள் முன்வந்தார்கள். நான் பக்கத்து ஊர்களில் இருந்து குருக்களையும் ஆயர் அவர்களையும் கலந்து பேசினேன். ஆயர் பச்சைக் கொடி காட்டினார்.

இது நிகழ்ந்த காலத்தில் எங்கள் மறைமாவட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளதாயினும் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தைச் சேர்ந்ததாக இருந்தது, தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்ட வில்லை, எனவே அரசு அதிகாரிகளைப் போய்ப் பார்க்க 60 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள திருவனந்தபுரம் செல்ல வேண்டும். அரசுச் செயலரைக் கண்டுபேசினேன். அது பிரான்சின் காலனி ஆட்சியில் இருந்து பாண்டிச்சேரியை இந்தியா மீட்ட காலம், செயலர் "எங்கள் பற்கள் மென்மையானவை" என்றார், மேல்பாலையில் நடுநிலைப்



மேல்பாலை மேல்நிலைப்பள்ளி

பள்ளி வைக்க அனுமதி அளித்தார். இது 1956 ஜூன் மாதம் நடந்தது. திருச்சிராப்பள்ளியிலுள்ள புனித அன்னாம்மாள் சபை அருட்சகோதரிகள் மூவரை வரவழைத்து மண்வீட்டில் குடியிருக்கச் செய்திருந்தோம்.

அவர்களில் ஒருவர் தலைமையாசிரியராக இருப்பார். மற்ற இருவரும் தூதுப்பணியாளராய் இருந்து கிராமத்தை மக்களை அவரவர் வீடுகளில் சென்று காணும் எனது வேலையை மேற்கொள்வது என ஏற்பாடு ஆயிற்று. இந்த இருபது ஆண்டுகளில் அங்கு தொடங்கப்பட்ட கன்னியர் மடங்கள் நான்கில் இதுவே முதலாவது ஆகும்

கல்வி வேண்டும், எப்படிப்பட்ட கல்வி? எதற்காக கல்வி? என் மனத்தில் இருந்து வாட்டிய கேள்வி இதுவே. எங்கோ ஒரு மூலையில் இருக்கும் இந்த ஊரில் உயர்நிலைக்கல்விக்கு என்ன பொருள்? இந்த மாணவர்களின் எதிர்காலம் என்ன? மண்வெட்டியைத் தொடத்துணியாமல் இவர்கள் தங்கள் ஊரிலேயே தகுதியற்று ஒன்றுக்கும் உதவாமல் போய்விடுவார்களா?....

நாங்கள் பள்ளிக்கூடம் தொடங்கியபோது கட்டடம் ஒன்றும் இல்லை. வெறும்ஓலைப்புரை தான் இருந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள், பங்கு மக்கள் இவர்களைக் கொண்டுதான் கட்டடம் எழுப்பினோம். ஏழை மாணவர்களுக்கு அவர்களது உழைப்புக்காக ஓரளவு சன்மானம் கொடுத்தோம். பணம் இல்லை என்று எவரும் பள்ளிக்கு வராமல் நின்றுவிடக்கூடாது அல்லவா?... கையால் உழைக்க அவர்கள் பயிற்சியும் பெற்றார்கள்.... அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன்

இருந்தார்கள். வகுப்புகள் தொடங்குமுன் எல்லா மாணவர்களும் கூடும் கூட்டத்தில் அவர்களுக்குக் கூறப்படுவதெல்லாம் "ப்ரோ தேயோ எத் பாத்ரியோ" – தேவனுக்காக, தேசத்துக்காக -- என்ற குறிக்கோள் வாசகத்தை ஒட்டியதாகவே இருக்கும். பிரஸ்ஸல்சில் நான் படித்த புனித மேரி பள்ளியின் குறிக்கோளும் இதுவே.

தகுந்த தலைமையாசிரியர் கிடைப்பது பெரும்பாடாக இருந்தது. பள்ளிக்கூடத்தில் பையன்கள், பெண்கள் இருபாலரையும் சேர்த்தது தான் காரணம். திருச்சிராப்பள்ளி புனித அன்னம்மாள் சபையாரைக் கேட்டோம். அவர்கள் தலைமையாசிரியையாக ஒருவரைத் தந்து உதவினார்கள். ஆனால் பள்ளிக்கூடத்தில் உயர்நிலை வகுப்புகளைத் தொடங்கியதும் அவர்கள் தலைமையாசிரியர் பணிக்கு இனி யாரையும் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே பொது நிலையினர் ஒருவரைத் தலைமையாசிரியராகத் தெரிந்தெடுத்தோம். மறு ஆண்டு ஆயர் அவர்கள் தலைமையாசிரியர் பணி புரியக் குரு ஒருவரைத் தருவதாகச் சொன்னார்கள். இவ்வாறு வந்தவர் மிக திறமைசாலி, ஆயினும் கத்தோலிக்க மக்களை அவரால் சமாளிக்க முடியவில்லை. எனவே அவர் போய்விட்டார். மீண்டும் அருட்சகோதரி ஒருவரைத் தலைமையாசிரியராக அனுப்பி வைக்கும்படி திருச்சி அன்னம்மாள் சபையாரை வேண்டினேன், அதற்கு அவர்கள் இசைந்தார்கள். ஆசிரியர்களுக்குள் ஏற்பட்ட பிளவினால் உண்டான புண்கள் ஆறியபின்பு பொதுநிலையினர் ஒருவரைத் தலைமையாசிரியராக நியமிக்க முடிந்தது.

அழுத்தம் ஏற்றி உருவாக்கிய பச்சை வெட்டுச் செங்கல்களை வைத்துக் கன்னியருக்குரிய மடத்தைக் கட்டினோம். அவ்வகைச் செங்கள் உறுதியானதே என்பதைக் கட்டடம் சொல்கிறது.

எப்படிப்பட்ட கல்வி? எதற்காகக் கல்வி? என்ற கேள்வி என் மண்டையைக் குடைந்துகொண்டே இருந்தது. விடுமுறை நாள்களில் பள்ளிக்கட்டடம் சும்மாதான் கிடக்கும், எனவே அதை வேறு கல்வி முயற்சிகளுக்குப் பயன்படுத்தலாம். நடுநிலைப் பள்ளி தொடங்கப்பட்டதும் பெரியவர்கள் தங்களுக்குக் கல்வி வேண்டாமா என்றார்கள், எனவே, புனித வாரத்தை ஒட்டி மூன்று நாள் உள் தியானத்துக்கு ஏற்பாடு செய்தோம். சுமார் 50 பெண்களும், அடுத்தபடி 30 ஆண்களும் மூன்று நாட்களும் தங்கள் உணவுக்குக் காசு கொடுத்து இப்புதிய அனுபவத்தில் இன்புற்றார்கள். அதற்கு நாங்கள் அழைத்திருந்த அருட்தந்தையர் இந்த மறைமாவட்டத்தில் உள்ள குருக்களிலெல்லாம் மிகச்சிறந்த மறையுரையாளர்கள். இந்தத் தியனம் மக்களுடைய விசுவாச உணர்வை விழித்தெழச் செய்தது. இதற்குப் பிறகு திருச்சபை மறுமலர்ச்சி குறித்துக் கருத்தரங்குகள் நடத்தினோம்.

அது இரண்டாம் வத்திகான் சங்கம் நடந்து கொண்டிருந்த காலம். புனித இராயப்பர் பேராலயத்தில் நடந்த அத்திருச்சங்கத்தின் முதல் கூட்டத்தில் நான் அடைந்த என் சொந்த அனுபவத்தை மக்களுக்குத் தெரிவிக்க அக் கருத்தரங்குகள் வாய்ப்பாயின. சங்கத்துக்குச் சென்ற ஆயர் அவர்கள் தம்முடைய செயலராக வருமாறு என்னையும் அங்கு அழைத்துச் சென்றிருந்தார். என்னை இந்தியாவுக்கு அனுப்பி வைத்த தூதுப் பணிக் குழுவினரும் என்னை வந்து போகுமாறு அழைத்திருந்தனர். அப்பொழுது நான் கண்ட நிலைமை மிகவும் வருந்தத் தக்க நிலைமை, சங்கம் என்னென்ன தீர்மானங்கள் செய்ய வேண்டும் என்று வரைந்து அளிக்க ஆணைக்குழுக்கள் திருத்தந்தையின் ஆட்சிக்குழுவினால் ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருந்தன,

ஆனால் ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம் இவற்றைச் சேர்ந்த கர்தினால்மார் மூவர் இப்படி ஆட்சிக்குழுவினர் தங்கள் கருத்துக்களைச் சங்கத்தின்மேல் திணிப்பதை எதிர்த்தார்கள், ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களைச் சங்கத்தார்களே சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஆயர்கள் எல்லோரும் கூடியிருந்த அப்பெரு மன்றத்தில் ஓரே அமைதி! மன்றத்தை அதிரவைத்த அமைதி! ஆயர்களிடையே தூய ஆவி செயலாற்றினார், 23ஆம் அருளப்பர் அம்மூவரும் கேட்டபடி நடக்க இசைவு அளித்தார், இரண்டாம் வத்திக்கான் சங்கம் அப்பொழுதே வெற்றி பெற்றுவிட்டது எனலாம்.

செறுவெல்லூருக்குத் தனியே ஒரு பங்குக் குரு நியமிக்கப்பட்டுவிட்டதால், மேல்பாலையைப் பரக்குன்னிலிருந்து பிரித்துச் செறுவெல்லூருடன் இணைத்தார்கள். மேல்பாலையில் கோவில் கட்டுவதற்கு உரிய திட்டம் வகுக்க நான் பங்குக் குருவுக்கு உதவி செய்தேன். கன்னியாகுமரி மாவட்டம் இரு வேறு பண்பாடுகள் சேரும் இடத்தில் இருக்கிறது, ஒன்று மலையாளப் பண்பாடு, மற்றது திராவிடப் பண்பாடு. இரண்டிலும் கட்டடக் கலையில் வேற்றுமை தெரிகிறது. திராவிட முறை முக்கியமாகக் கல்லில் கலைவண்ணம் காண்கிறது. மலையாள முறை மரவேலைப்பாட்டில் முதன்மை பெற்று விளங்குகிறது. மாவட்டத் தலைநகர் நாகர்கோயிலுக்குச் சிறிது தொலைவில் பத்மநாபபுரம் என்ற ஊரில் திருவாங்கூர் மன்னர்களின் அரண்மனை ஒன்று பலபேர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது.

இந்த அரண்மனையின் அழகெல்லாம் அதன் கூரையின் வடிவில்தான் உள்ளது. கூரையின் விளம்பு மேலே தூக்கிய

இடைக்கோடு ஆலயம்

படி காணப்படும் இந்த நுட்பம் சீனாவிலன் கட்டடக கலையை நினைவூட்டும். அவர்கள் கூடாரங்களில் வாழ்ந்த காலத்தில் இந்த அமைப்பு தோன்றியிருக்க வேண்டும், அது அப்படியே கட்டடக் கலையிலும் நிலைபெற்றுவிட்டது. நமது கோவிலில் காற்றோட்டத்துக்காகப் பெரிய திறந்த புழைகள் உள்ளன. திருமுழுக்குத் தொட்டியும் திருவிடமும் வாசலில் உள்ளன. பீடம் இருக்கும் மூலஸ்தானம் அரைவட்ட வடிவமாக அமைந்துள்ளது, மக்கள் அணுகி வந்து பீடத்தைச் சூழ்ந்திருக்கும்படி வரவேற்கும் வடிவமைப்பு இது. திருத் தூயகம் ஓர் இரும்புச் சட்டக் கதவுக்கு அப்பால் உள்ளது. இந்த அமைப்பு கடவுள் எவ்வளவு அருகில் இருக்கிறார் என்பதையும் அதேசமயம் அவர் எல்லாவற்றையும் கடந்து

அப்பால் இருப்பவர் என்பதையும் ஒருசேர எடுத்துக்காட்டுவதாகும். ஆண்டுதோறும் பெருகி வரும் பள்ளிக்கட்டடங்களோடு இக்கோவில் வடிவமைப்பு நன்கு ஒத்துப் போகிறது. பள்ளிக்கூடத்தில் இப்பொழுது 2000 மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்கள் எங்கேயிருந்து வருகிறார்கள்? எதற்காக வருகிறார்கள்? தங்கள் பிள்ளைகள் நல்ல கல்வி பெறவேண்டும் என்ற ஆசை மிகமிக ஏழையாயுள்ளவர்களையும் பித்துப்போல பிடித்திருக்கிறது. அப்பிள்ளைகளும் மேல்பாலை மேல்நிலைப் பள்ளியில் அத்தகைய கல்வி பெறுகிறார்கள்.

மேல்பாலைக்கும் பரக்குன்னுக்கும் இடையே இன்னொரு சிறிய கோவிலும் கட்டினேன். இந்தக் கோவில் மிகவும் எளிய தோற்றம் உடையது என்பதைத் தவிர அதன் தனிச் சிறப்பு வேறு ஒன்றும் இல்லை. மூங்கில் அளித் தட்டியைத் தவிரச் சன்னல் ஒன்றுமே கிடையாது மூலஸ்தானத்தை அரை வட்ட வடிவமான சுவர் மறைத்துள்ளது. மூலஸ்தானத்து நடுவே தாமரை மலர்மேல் அமர்ந்திருக்கும் பாணியில் சதுர வடிவமான பீடம் உள்ளது.

அத் திருப்பலிப் பீடத்துக்கு மேலே சுவரில் மிக்க உயரத்தில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பலவண்ண ஓவியம் மாட்சிமையுடன் விளங்கக் காணலாம். அது எப்படி அமைந்தது என்பது ஒரு சுவையான கதை. நான் அடிக்கடி சாந்திவனம் ஆசிரமத்துக்குப் போய்வருவது உண்டு, அப்படிப் போகும்போது அங்கே இளைஞர் ஒருவரைக் கண்டேன், இவர் பரக்குன்னுக்கு வந்து என்னுடன் சிறிது காலம் தங்கினார். அவர் ஓர் ஓவியக் கலைஞர், பெயர் ஜோதி சாஹி. வண்ண வண்ணக் கண்ணாடி, பீங்கான் துண்டுகள் கொண்டு

அவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஓவியம் படைக்க முடியுமா என்று நான் ஒரு நாள் அவருக்குச் சவால் விட்டேன்.

அந்த அறைகூவலை ஏற்ற அவர் பளிங்குப் பீங்கான் தொழிற்சாலை ஒன்றைப் போய்ப் பார்த்துவிட்டு, ஒரு கோணிப்பை நிறையப் பளிச்சென்று மின்னும் பல வண்ண உடைந்த கோப்பைகளும் தட்டுகளும் கொண்டுவந்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உருவத்தை இந்தியர் வடிவில் சுவரில் அவர் வரைபடமாக எழுதினார். மெல்ல மெல்லச் சுவரில் சிமிட்டியைக் கீறிப் பீங்கான் துண்டுகளைப் பதித்தார். அவர் வேலையை முடித்ததும், கண்களை நம்ப முடிய வில்லை, அழகான உருவம் சூரிய வெளிச்சத்தில் உயிர்த்துடிப்புடன் விளங்கக் கண்டேன்.

பிறகு ஜோதி சாஹி சிலுவைப் பாதையின் 15 நிலைகளையும் இந்தியச் சூழலுடன் வண்ண ஓவியங்களாகத் தீட்டித் தந்தார்... இப்பொழுது அவர் பெயர் பெற்ற ஒருவராகி விட்டார்.

1985 ஜூன்

4. பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

பரக்குன்னு பனைஏறுவோரின் அரசு. பனைமரம் எந்தக் காட்டிலும் வளரும். அதற்குக் கவனிப்போ, உரமோ, தண்ணீரோ வேண்டாம். தென்னைக்கு வளமான நிலம் வேண்டும், உரம் வேண்டும், தண்ணீர் வேண்டும். அதனோடு ஒப்பிடுகையில் பனை உண்மையாகவே ஏழைகளின் மரம்தான். பனை பல வகையில் பயனாகிறது.

முதல் 15 ஆண்டுகளுக்கு அதிலிருந்து கிடைக்கும் நார் பல வகையான தூரிகைகள் செய்யப் பெரிதும் உதவுகிறது. பிறகு ஐம்பது, அறுபது ஆண்டுகள் வரை அதன் பாளையிலிருந்து சுரக்கும் சாறு பகல் வெப்பத்தில் நொதித்து கள் ஆகிறது. பனை ஓலையைக் கொண்டு தடுக்குகள், கூடைகள் செய்கிறார்கள், இந்த மரம் ஏழைகளின் செல்வம். என்னுடைய மக்கள் வாழ்க்கையே இந்தப் பனை மரத்தை வைத்துத்தான். அவர்கள் வாழ்க்கை அல்லல் நிறைந்த வாழ்க்கை, அடிமைகள் வாழக்கை. பனைஏறுவோர் அத்தனை பேர்களும் நாடார்கள். பனையும் நிலமும் நாயாகளின் உடைமை. நிலம் அவர்களுக்குத் திருவாங்கூர் மன்னர் கொடுத்தது. பனைஏறுவோர் பனைக்குச் சொந்தக்காரருக்கு ஒரு நாள், தமக்கு ஒரு நாள் என்ற கணக்கில் பனை ஏற வேண்டும். எனவே கவனிப்பார் தேவையின்றித் தானாக வளர்ந்து நிற்கும் பனையிலிருந்த இவர்களது உழைப்பினால் கிடைக்கும் பயனில் பாதி நிலத்தின் சொந்தக்காரருக்குப் போகிறது. இம்முறை வரம் என்றழைக்கப்படுகிறது.

பனைஏற்றக் காலம் ஆகஸ்ட் மாதம் தொடங்கும். அதற்குமுன் சிறது பணம் சேர்த்து வைத்துக்கொள்ளக் கூடியவர் பாட்டத்துக்குப் பனைஏறும் முறையைக் கைக்கொள்லாம். இது வாரத்துக்கு ஏறுவதைவிட லாபமாகும். ஒரு மரத்துக்கு இவ்வளவு என்று பாட்டப் பணம் கட்ட வேண்டும். பனஞ்சாறு, ஓலை எல்லாவற்றையும் ஆண்டு முழுவதும் பனை ஏறுபவரே சொந்தமாக வைத்துக்கொள்ளலாம். இந்த இரண்டு முறைகள் தவிரவும் ஒற்றி (ஒத்தி) என்று இன்னொரு முறையும் உண்டு. இதன்படி, பனைஏறுபவரிடமிருந்து நிலச் சொந்தக்காரர் ஒரு தொகையைக் கடனாகப் பெற்றுக்கொண்டு கடனை ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் அடைத்து விடுவதாக அடைமானப் பத்திரம் எழுதிக்கொடுப்பார். கடன் கொடுத்தவர் பனையை அவரிடமிருந்து ஒற்றிக்கு எடுத்தவராவார். கடனுக்கு ஈடாக இருப்பது பனை, வட்டியாக வருவது பனஞ்சாறு. இவ்வாறு பனைகளை ஒற்றிக்கு எடுக்கக் கூடியவர்கள் மிகச் சிலரே. ஏனெனில் அதற்கு நிறையப் பணம் தேவைப்படும்.

ஒருவர் ஒரு நாளைக்கு இரு முறை இருபது, முப்பது பனைகள் ஏறி இறங்குவார். அவர் மனைவி மரத்தடியில் போய்ப் பனஞ்சாற்றை எடுத்து வருவார். பின்னர் அதைக் காய்ச்சி அதிலிருந்து 85% நீரை அகற்ற, அது கருப்புக்கட்டியாக மாறும். காய்ச்சுவதற்கு வேண்டிய விறகுச் சுள்ளிகளைப் பிள்ளைகள் காட்டுக்குப் போய்ப் பொறுக்கிக் கொண்டு வந்து கொடுப்பர். இதுதான் பனைஏறுவோர் குடும்பத்தின் அடிமைத் தொழில். இப்படி ஆறுமாதம் ஆன பின் அவர்கள் மலைக்கு மேற்குப் பக்கம் குடிபெயர்ந்து அங்கேயும் ஆறுமாதத்துக்கு இதே அடிமைத் தொழில்



முன்னேற்றப் பாதையில் பனைமரத் தொழிலாளர்கள்



கருப்புகட்டி தயாரிக்கும் பெண்

செய்வர். மழைக்காலத்தில் கருப்புக்கட்டியை அப்படியே எளிதில் வைத்திருக்க முடியாது ஆகவே, கடன் கொடுத்தவர்கள் அல்லது வியாபாரிகள் வைக்கும் விலைக்கு விற்றுவிட வேண்டும். சுருங்கச் சொன்னால், நாளைக்கு நன்றாக இருக்கலாம் என்று கனவு கண்டுகொண்டு மெய்வருந்திப் பாடுபடும் வாழ்க்கை இது. பனைஏறுவோரில் இந்துக்கள், புராட்டஸ்டாண்டுகள், கத்தோலிக்கர் ஆக மூன்று சமயத்தவரும் உளர்.

இவர்கள்தாம் என் மக்கள், இவர்களுடைய பிரச்சினைகள் என்னுடைய பிரச்சினைகள். ஆனால் என்ன செய்ய? நோக்கு... சீர்தூக்கு... செயல்படு... பனை ஏறுவோருடன் நான் நாள் தவறாமல் பழகியதால் ஒரு செய்தி கேள்விப்பட்டேன் ஒரு காலத்தில் காந்திஜி இந்தப் பனை மரத்தை ஏழைகளின் மிகப் பெரிய பகை என்று சபித்தாராம். கள் ஏழைகளின் சாராயம், கைக்கும் வாயக்கும் எட்டாதபடி, அவர்களுக்கும் கிட்டும் அற்பப் பணமும் இந்தக் குடியிலே பாழாகிறது.

ஆகவே நாட்டில் எங்கேயும் பனையே இல்லாதபடி அனைத்துப் பனைமரங்களையும் அழித்து ஒழித்துவிடுவது என்று அவர் ஓர் இயக்கம் தொடங்கினார். பிறகுதான் அவர், பனை ஏழைகளின் செல்வமாகவும் இருக்கிறது என்று கண்டார், ஏனெனில் பனஞ்சாற்றை நொதிக்க விடுவதற்குப் பதில் காய்ச்சித் தாதுப் பொருள் நிறைந்த வெல்லமாக்கலாம் என்பதை அறிந்தார். வீணாய்க் கிடக்கும் நிலத்திலே வளர்ந்து நிற்கும் கோடிக்கணக்கான பனைகள் வெல்லம் தரக்கூடியவை ஆதலால், கரும்பு பயிராகும் வயல்களை நெல் வயல்களாக்கி விடலாம். இவ்வாறு உணர்ந்து அறிந்து காந்திஜி பனைமரத்திற்கு நண்பர் ஆனார். காந்திஜி கதர் மற்றும்

கிராமக் கைத்தொழில் ஆணையத்தை நிறுவியபொழுது பனைவெல்லத் தொழில் அந்த ஆணையயத்தின் கிராமப்புறப் பணிகளில் முக்கியமான ஒன்றாக விளங்கியது.

1952–53 வாக்கில் எனக்கு இந்த அமைப்புடன் தொடர்பு ஏற்பட்டது. மக்களுக்கு எடுத்துச் சொல்லிய பிறகு நாங்கள் பரக்குன்னில் பனங்கருப்பட்டி பனைவெல்லம் கூட்டுறவுச் சங்கம் தொடங்க முடிவு செய்தோம், உண்மையாகவே பனை ஏறுவோர் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மற்றவர்களில் ஒத்து வரக்கூடியவர்கள் மொத்த உறுப்பினர் தொகையில் 5% க்குள் சேர்த்துக் கொள்ளப்படலாம். சங்கத்தின் (ஆட்சிக்) குழுவில் ஏழு உறுப்பினர்கள் இருப்பர், இவர்களில் இருவர் இத்தகைய வெளி உறுப்பினர்களாக இருக்கலாம். ஒரு மாபெரும் துணிச்சலான காரியத்தில் இவ்வாறு இறங்கினோம். இதற்காக எத்தனையோ நாள்கள் மாலை வேளையில் மக்களுடன் பேசி, சிந்தித்து, கனவுக் கோட்டைகள் கட்டி, திட்டங்கள் தீட்டினோம், எதற்காக? பனை ஏறுவோர் இந்த அடிமைப் பிழைப்பிலிருந்து விடுபட்டு ஒரு நல்ல வாழ்க்கை வாழ்வது எப்படி என்று காண்பதற்குத்தான்.

குருக்களில் எங்களுக்கு நண்பர்களாகவும், ஆலோசகர்களாகவும் இருந்தவர்களுக்கு எங்கள் கருத்து இசைந்ததாக இல்லை. நீங்கள் செய்வது வீண் வேலை இந்த மக்கள் மனத்தை மாற்றவே முடியாது, அவர்கள் ஒரு நாளும் ஒழுங்கான கத்தோலிக்கர் ஆக மாட்டார்கள், குடிகாரராய், எழுத்தறிவற்றவராய் இருக்கவே பிறந்தவர்கள், அருமையான உங்கள் நேரத்தை இவர்களோடு வீணாக்காதீர்கள், இப்படித்தான் சொன்னார்கள். நான் கேட்கவில்லை, என்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை என்னால் கைகழுவி விட முடியாது.

எங்கள் திட்டத்தை எதிர்த்த வேறுசிலர் இருந்தார்கள். அவர்கள் ஆபத்தானவர்கள். இவர்கள் யார் எனில் மக்களிடையே இயல்பாகவே தலைவர்களாக விளங்கியவர்கள். இவர்கள் எங்கள் மூன்று ஊர்களிலுமே - குக்கிராமங்கள் பல சேர்ந்து மூன்று ஊர்களாக இருந்தன, சுறுசுறுப்பா யிருந்தார்கள். இவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், பனை ஏறுவோருக்கு ஏதாவது இக்கட்டு என்றால் இவர்களிடம் தான் செல்வார்கள். கூட்டுறவுச் சங்கம் தங்கள் செல்வாக்குக்குப் பேரிடி என்று அவர்கள் எண்ணினார்கள். என்னைப் பற்றி இல்லாத பொல்லாதன பேசி அவற்றை மக்களிடையே பரவ விட்டார்கள். இவர்கள் கூறும் கருத்துக்களைச் செவி கொடுத்துக் கேட்க வேண்டும், ஆனால் அவற்றுக்கு இசைந்துவிட்டதாகக் காட்டிக்கொள்ளக் கூடாது - இதுவே என் கொள்கை.

இந்தக் தலைவர்களில் ஒருவரைச் சங்கத்து வெளி உறுப்பினராக்த தேர்ந்தெடுக்கும் படியும் ஆட்சிக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கும்படியும் கூட நான் பனைஏறும் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டேன். அத்தலைவர்கள் இது தங்களுக்கு வந்த வாழ்வா சாவா என்ற போராட்டமாகக் கருதினார்கள், எப்படியெல்லாம் மக்களைப் பிளவுபடுத்த முடியுமோ அப்படியெல்லாம் முயன்றார்கள், உருவானதை எப்படியும் உருக்குலைத்திட நின்றார்கள். தம் எதிரிகளைச் சதையில் தைத்த முள் என்று நோக்கிய புனிதர் பவுல் அடிகளையே நான் பின்பற்றினேன், அது என்னைத் தாழ்மையும் விவேகம் உள்ளவனாக வைத்தது.

ஊர்த் தலைமை இரண்டுபட்டிருந்தினால், கூட்டுறவுச் சங்கத்து ஆட்சிக் குழுவுக்கு நான் தலைவராக இருக்க

வேண்டும் என்று பனைஏறுவோர் வற்புறுத்தினார்கள். கூட்டுறவின் ஒற்றுமைக்கு அது அடையாளமாக விளங்கும் என்றார்கள். எல்லாரும் ஒருமனமாகத் தேர்ந்தெடுப்பதானால் அதனை ஏற்றுக்கொள்கிறேன் என்ற நிபந்தனையுடன் நான் ஒப்புக்கொண்டேன். 1954–இல் பனைவெல்லக் கூட்டுறவு இணையத்தின் உறுப்பினன் ஆனேன். பின்னால் கன்னியாகுமரி மாவட்டப் பனைவெல்ல இணையம் தொடங்கப்பட்டபோது அதன் துணைத் தலைவராக என்னை நியமனம் செய்தார்கள்.

பனைஏறுவோரின் உழைப்பு எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காக, கூட்டுறவுச் சங்கத்தின் தொடக்கத்தில் முதல் பத்து ஆண்டுகளில் பல முயற்சிகள் மேற்கொண்டோம். பனையில் ஏறுவதற்கு அலுமினியம் ஏணி ஒன்றைப் பயன்படுத்தலானோம், ஒரு பனை உச்சியிலிருந்து மற்றொரு பனைக்குப் போகப் பனைகளை இணைத்துக் கட்டிய கயிற்றுப் பாலங்கள் அமைத்தோம்.

விறகு அடுப்புக்குப் பதில் சூரியன் வெப்பத்தால் இயங்கும் வெயில் அடுப்பை முதன் முறையாகப் பயன்படுத்திப் பார்த்தோம். ஆனால் பனைஏற்றக் காலத்தில் வானம் மிகவும் மேக மூட்டமாய் இருந்தால் அது பயன்தரவில்லை, எல்லாரும் மொத்தமாய்ப் பதனீரைக் கொண்டுவந்து ஒரேயிடத்தில் காய்ச்சும் பழக்கத்தைக் கொண்டுவந்தோம், பலவகையான இனிப்புப் பண்டங்கள், பானம், மிட்டாய்கள், பிஸ்கோத்து.... சுத்தப்படுத்தப்பட்ட சர்க்கரை, இப்படிப் பலப் பல பொருள்களைப் பதனீரிலிருந்து உற்பத்தி செய்தோம். மும்பையிலிருந்து இயந்திர சாதனங்களை வர வழைத்துச் சர்க்கரை தயாரிக்கும் தொழிற்கூடம் அமைத்தோம். இதையே பின்னால் பிரான்சுலிருந்து வரவழைத்த தளவாடங்களைக் கொண்டு

இன்னும் செம்மையாக்கினோம். இவற்றைப் பொருத்திக்காட்ட வெளிநாட்டுத் தொழில் நுட்பர்கள் வந்தனர். இந்த இயந்திர சாதனம் இலேசான எரிபொருள் எண்ணெயால் இயங்குவது ஆதலால், பெட்ரோல் நெருக்கடி வந்து விலை ஏறியதும் எங்கள் சர்க்கரை ஆலை இயங்க முடியாமல் போயிற்று. எரிபொருளின் தட்டுப்பாடும் அதன் விலையேற்றமும் இதற்குக் காரணம்.

பனை ஏறுவோர் பனைகளை ஒற்றிக்கு எடுக்கும் முயற்சியைப் பெரிய அளவில் ஏற்பாடு செய்து வெற்றி கண்டோம். கதர் கிராமத்தொழில்ஆணையம் ரூ. 20,000 கடன் கொடுத்து உதவியது. பின்னால் மிசரியோர் (ஜெர்மனி நிறுவனம்) ரூ. 1,00,000 கடன் வழங்கியது. ஏராளமான பனைகள் ஒற்றி பிடிக்கப்பட்டன, பனை ஏறுவோர் ஒரு நாள் பதனீரை அவரவர் வீடுகளுக்குக் கொண்டு போய்க் கொள்ளலாம், மறுநாள் பதனீரைச் சங்கத்தின் தொழிற்கூடத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் ஏற்பாடு செய்தோம். சங்கம் சம்பாதித்த லாபம் உறுப்பினர்களுக்கு ஊக்கத் தொகையாகப் பகிர்ந்தளிக்கப் பட்டது.

அடுத்தபடியாக, பனைநார்த் தொழிலுக்கென ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்தோம். அது சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய ஒரு செய்தி ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் குளச்சல் ஊரைச் சுற்றி வாழும் ஏழை மக்கள் பனை நாரை நிறையச் சேர்த்து வைத்து சுத்தப்படுத்திப் பளபளப்பாக்கிக் கொடுப்பர் அது பிறகு தொழிற்சாலையில் சாயம் ஏற்றப் பட்டு மேலை நாடுகள் பலவற்றுக்கு ஏற்றுமதியாகும். இது இப்போது கூட்டுறவு இயக்கத்தின் வழியாக ஏற்றுமதியாகத் தொடங்கியது முதன் முதல் பரக்குன்னிலிருந்துதான்.

பின்னால் அந்த பிரிட்டிஷ் கம்பெனியை மாநிலப் பனைவெல்ல இணையம் வாங்கிக் கொண்டது:

பனை நார் தொழிலைத் தமிழ் நாட்டில்பெருபாலான கூட்டுறவுச் சங்கங்கள் மேற் கொண்டன. புயல் வீசும்நாள் விரைவிலேயே வரவிருந்தது. கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் குட்டி அதிகாரிகள் சிலர் பரக்குன்னுச் சங்கம் இவ்வளவு முக்கியமாக வளர்ந்து வருவதைப் பார்த்து பொறாமைப்பட்டார்கள். நாங்கள் எங்கள் உற்பத்திப் பொருட்களை நாங்களே விரும்பியபடி விற்றுவந்தோம்: இந்தச் சுதந்திரத்தைக்கண்டு அவர்கள் சினமுற்றார்கள். ஒழுங்கீனங்கள் நடந்திருப்பதாக வழக்குத் தொடுத்தார்கள்: நாங்கள் எதிர்த்தோம்: புகார்களை விலக்கிக் கொணடார்கள்- இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்திற்குள்ள பெரும் குறை இது.

கன்னியாகுமரி மாவட்டத்துக்கான மாவட்டப் பனைவவல்ல இணையத்துக்கு அரசாங்கம் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட வாரியம் ஒன்றை நியமித்தது - அதன் தலைவர் காங்கிஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர். தகுதி பார்த்துத் துனைத் தலைவராக என்னை நியமனம் செய்தார்கள் - குழு உறுப்பினர்களை அடிப்படைக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிந்தெடுத்தன. தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் பனை ஏறும் மக்களின வாக்குகள் தங்கள் பக்கம் இருக்க வேண்டும் என்பதற்காக. கூட்டுறவு இயக்கத்தின் தலைவர் பதவி தனக்குத்தான் இருக்க வேண்டும் என்று அது விரும்பியது - மாவட்ட

இணையத்தைக் கலைத்துவிட்டு வாரியத்துத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீது காரியங்கள் தாறுமாறாக நடந்திருப்பதாக வழக்குப் போடப்பட்டது - எவ்வளவு நார் வீணாயிற்று என்பது சரிவரக் கணக்கிடப்படவிலலை. அடிப்படைச் சங்கங்களுக்குக் கொடுத்த கடன்கள் திருப்பி வாங்கப்படவில்லை. இப்படிப் பல புகார்கள்.

என்னென்ன குற்றசசாட்டுகள் சுமத்த முடியுமோ அத்தனையும் தலைவர் மேலும் வாரியத்தின் மேலும் சுமத்தப்பட்டன- இவற்றுக்குப் பதில் சொல்வதிலேயே நேரமும் ஆற்றலும் போயின - கடைசியில் அவர்கள் குற்றச்சாட்டுகள் ஒன்றும் செல்லுபடியாகவில்லை - கூட்டுறவு இயக்கம் படும் பாடு இது -பின்னர் திருமலையில் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் தொடங்கும்படி நாங்கள் கிராமக் கைத்தொழில் இலாகாவைக் கேட்டபோது உதவி இயக்குநர் அது வேண்டாம் என்று என்னைத் தடுக்கப் பார்த்தார். பரக்குன்னில் நான் பட்ட அனுபவம் போதாதா என்று நினைவுறுத்தினார் - கூட்டுறவு இயக்கத்தை அரசியல்வாதிகளின் பிடியிலிருந்து காப்பாற்ற நான் மீண்டும் போராடத் தயார் என்று அவரிடம் அழுத்திச் சொல்ல வேண்டியவனானேன்.

நான் 1972ல் பரக்குன்னை விட்டாயிற்று. எனினும் இன்றும் பரக்குன்னு பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் நடந்துவருகிறது - பங்குக் குருவே தங்கள் சங்கத்தின் கௌரவத் தலைவராக இருந்து தங்கள் ஒற்றுமையின் சின்னமாக விளங்க வேண்டும் என்ற வழக்கத்தை அவர்கள் இன்னும் விடாப்பிடியாய்க் காப்பாற்றி வருகிறார்கள் -

கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்குவதற்கு நான் செலவிட்ட நேரமும் ஆற்றலும் வீண் போகவில்லை - பனைஏறுவோர் அதற்காகப் பட்ட பாடுகள் அவர்களை வளர்த்துள்ளன - பனைஏறும் தொழில் மறைந்து வருகிறது- சும்மா கிடந்த நிலங்கள் நெல்வயல்களாகத் திருத்தப்படுகின்றன. பனைகள் வீட்டுக் கூரைக் கம்புகளுக்காக வெட்டப் படுகின்றன - பனைஏறுவோரின் பிள்ளைகள் பள்ளி செல்கின்றனர் - அவர்கள் பனைஏற மாட்டார்கள் - பனை ஏறும் தொழிலுக்கு இனி எதிர்காலம் இல்லை - பனைஏறும் கடைசித் தலைமுறை இதுனோடு சரி-

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருச்சபைகளின் சமுதாய பொருளாதாரத் திட்டங்களின் பயன் பற்றி 1971இல் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. கே எஸ் எஸ் எஸ் இன் 1072ஆம் ஆண்டு அறிக்கை கூறுவது இது:

பாரம்பறிய முறையான நாட்டுப்புறத் தொழில்களைக் கிராம அளவில் நியாயமான முறையில் ஒழுங்குபடுத்துவதற்குப் பரக்குன்னுத் திட்டங்கள் ஒரு முன்மாதிரியாகும்- இத்திட்டங்களினால் கிராமவாசிகளின் பொருளாதார நிலை கணிசமாக உயர்ந்திருக்கிறது- அதையும்விட முக்கியம் சமுதாய அமைப்புகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்- அம்மாறுதல் என்ன? புதிய தலைமை, வழிவழியாக வரும் குடும்ப அமைப்பில் மாறுதல்கள், பெண்கள் நிலையில் மாறுதல், சில சமுதாயத் தீமைகள் மறைந்தன எடுத்துக்காட்டாக வட்டிக்குக் கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரர்கள் அப்பொழுது இல்லை-

1983 டிசம்பர்

5. கோட்டாறு சமூக சேவா சங்கம்

ஒரு கலக்கு கலக்கிவிட்டுத்தான் உருவாயிற்று கே.எஸ்.எஸ்.எஸ். என்னும் கோட்டாறு சமூக சேவை சங்கம் – பனைகளை ஒற்றிக்கு எடுத்தவர்கள் அவற்றை விலைக்கு வாங்கிச் சொந்தமாக்கிக்கொள்ள மிசெரியோர் நிறுவனம் ஒரு இலட்சம் ரூபாய் கடனாகத் தர முன் வந்தது – ஆனால் ஒரு நிபந்தனை:

அக் கடனுக்கு உத்தரவாதமாக ஒரு சட்டபூர்வமான நிறுவனம் வேண்டும். ஆயரும் அக்கடனுக்குப் பிணையமாகப் பொறுப்பேற்க வேண்டும் – இதை நான் ஆயரிடம் சொன்னபோது வயதான அவர் கலங்கிப்போனார் – என் வாழ்நாளிலே நான் ஒருவரிடமும் கடன் வாங்கியதில்லை (அவர் இயேசு சபையைச் சேர்ந்தவர்) – பனை ஏறுவோருக்காகும் கடனுக்கு நான் உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறீர்களே என்று திகைத்தார். – நிலைமையை அவருக்கு விளக்கினேன் – ஒற்றிக்கு எடுத்த பனைகளே கடன் முழுமைக்கும் ஈடான சொத்தாக இருக்கும். மேலும், மறைமாவட்டத்தில் சமுதாயப் பணிகளைத் திட்டமிட்டு நடத்துவதற்குத் தேவையான நிறுவனம் ஒன்றை உருவாக்கிப் பதிவு செய்துகொள்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும் என்றேன். பரக்குன்னில் மட்டுமல்ல. மறைமாவட்டம் நெடுகிலுமே சமுதாயம் வளர்ச்சி பெற வேண்டும் என்ற கோரிக்கை மறைமாவட்டக் குருக்களிடையே வலுத்திருந்த நேரம் அது. சமுதாய அருட்பணிகளில் ஏற்பட்ட இந்த ஆர்வம் பத்து ஆண்டுகளாகப் பரக்குன்னில் நடந்த பணிகளின் விளைவு ஆகும்.

இது போன்ற சமூக சேவைக்காகத் திருவனந்தபுரம் மறைமாவட்டம் அப்பொழுது தான் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன் துணை விதிகளைப் பார்த்து அதைப் போல் நாமும் ஒரு சமூக சேவா சங்கம் நிறுவலாம் - இவ்வாறு அமையும் கே.எஸ்.எஸ்.எஸ். நிறுவனத்துக்கு ஆயர் அறங்காவலராகவும், மறைமாவட்டப் பொருளர் செயலராகவும், மறைமாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த குருக்கள் ஐவர் வாரிய உறுப்பினர்களாகவும், வேறு 25 குருக்கள் சங்கத்தின் பொது உறுப்பினர்களாகவும் இருப்பர் - முழுக்க முழுக்கக் குருக்களின் அமைப்புத்தான். ஆனால் இது தொடக்கமேயாகும்.

இவ்வாறு கே.எஸ்.எஸ்.எஸ். வழியாகப் பரக்குன்னிலும் மறைமாவட்டத்திலும் ஒரு நல்ல முயற்சி காலூன்றுவதற்கு எல்லாம் சரியாகக் கூடிவந்திருப்பதாகத் தோன்றிய சமயம் பார்த்து பெல்ஜியத்திலிருந்து எனக்கு ஒரு செய்தி வந்தது - சாம் சபைக்குப் புதிய தலைவரையும் அவருக்கு உதவும் ஆலோசனை மன்றத்தாரையும் தேர்ந்தெடுக்கப் போவதாகவும், அதற்கான பொதுக்குழுக் கூட்டத்திற்கு என்னை ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் செய்தி - இரண்டாம் வத்திக்கான் சங்கமும் அப்பொழுதான் தொடக்கம்... சாம் வேலைக்காக என்னை பெல்ஜியத்திலேயே நிறுத்தி வைத்துக்கொள்வார்களோ என்று எண்ணிக் கவலைப்பட்டேன் - இதைப் பற்றி ஆயருடன் கலந்து பேசினேன் - மிஞ்சிப்போனால் திருச்சபைச் சட்டப்படி என்னைக் கோட்டாறு மறைமாவட்டக் குருவாகச் சேர்த்து வைத்திடலாம் என்ற என் யோசனையை அவர் ஏற்றுக்கொண்டார்.



காய்ந்த நிலத்தில் பனை மரங்கள்
நீருள்ள இடத்தில் வயல்வெளிகள்

பாரம்பரிய உழவுமுறை

1950இல் இந்தியாவுக்கு வந்தேன். இப்போது 12 ஆண்டுகளுக்குப் பின் பெல்ஜியத்துக்குக் கப்பல் ஏறுகிறேன்... கப்பல் பயணத்தின் அந்தப் பதினெட்டு நாள்களும் நீண்ட காலமாகத் தோன்றிற்று - என் பெற்றோரையும் என்தம்பி மற்றும் தமக்கையர் தங்கைமார் அவர்களுடைய புதிய குடும்பத்தினர் யாவரையும் பார்க்க இன்னும் 18 நாள் காத்திருக்க வேண்டுமே என்ற கவலை. பிரஸ்ஸல்ஸில் அவர்கள் தெற்கு ரயிலடியில் என்வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்... இன்பமான நாள்கள் - அவர்களை மீண்டும் பார்க்கப் போவதில்லை என்ற வருத்தத்துடன் அவர்களை விட்டு இந்தியா வந்திருந்தேன். இப்போது மீண்டும் அவர்களோடு இருக்கிறேன் -

என் நெஞ்சு நிரம்பத்திட்டங்கள்: சர்க்கரை ஆலைகளைப் போய்ப் பார்த்தேன். பரக்குன்னில் எங்கள் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு உதவக்கூடிய வேளாண் பொருள்தார வல்லுநர் ஒருவர் கிடைப்பாரா என்று தேடினேன். சாம் பொதுக்குழுக் கூட்டம் நன்கு நடந்து முடிந்தது. நானும் ஒரு வழியாய்த் தப்பித்தேன்.

வத்திக்கான் சங்கம் தொடங்கியபோது நான் எங்கள் ஆயரைச் சென்றுகண்டேன் - ஆயர்களின் சொந்தச் செயலர்கள் சங்கக் கூட்டத்தில் வந்து அமரலாம். ஆணைக் குழுக்களின் தலைவர்கள் புதிய ஆணைக் குழுக்கள் வேண்டுமென்று பேசிய கூட்டத்தில் நான் இருந்தேன் - அவர்கள் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது - அடுத்த சில நாள்கள் கூட்டங்களும் சொற்பொழிவுகளும் ஆதரவு திரட்டும் முயற்சிகளுமாக இருந்தன. ஒரு புத்துயிர் தோன்றக் கண்டேன். அதுதான் அச்சங்கத்தை மெய்யாகவே அது

உள்ளவாறு ஆக்கியது – பின்னர் சில நாள் சென்றதும் நான் விமானம் மூலம் இந்தியாவுக்கு, கோட்டாறு மறைமாவட்டத்துக்கு, பரக்குன்னுப் பங்குக்கு, கோட்டாறு சமூக சேவா சங்கத்துக்கு வந்து சேர்ந்தேன்.

1963 பிப்ரவரி மாதம் கே.எஸ்.எஸ்.எஸ். பதிவு செய்யப்பட்டது. அது மெல்ல உயிர் பெற்றது – பரக்குன்னுத் திட்டங்கள் மேலும் விரிவாக்கப்பட்டன – பல்வேறு பங்குகளில் சிறு சிறு திட்டங்கள் தொடங்கப்பட்டன – சி.ஆர்.எஸ். எனப்படும் கத்தோலிக்க துயர்துடைப்புப் பணி நிறுவனம் வேலைக்கு உணவு என்று சில திட்டங்களைக் கூறியபோது தான் மெய்யாகவே உயிர் வந்தது – சி.ஆர்.எஸ். அதுவரை ஏழைகளுக்குக் கோதுமையும் பால்மாவும் வழங்கும் ஏற்பாடாகவே இருந்து வந்தது – இப்போது கிராம மேம்பாட்டுக்கான ஒரு முழு நாள் உழைப்புக்கு ஈடாக ஒரு குடும்பத்துக்கு ஒரு நாளுக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தருவதாக அது முன் வந்தது.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கே.எஸ்.எஸ்.எஸ். பல பங்குகளில் சாலை அமைத்தல். கிணறு வெட்டல். குளங்களைத் தூர் எடுத்து ஆழமாக்குதல் முதலிய பல வேலைகளுக்கு ஏற்பாடு செய்தது. வேலைக்கு உணவு என்ற இத்திட்டத்தின் கீழ் மாவட்டம் நெடுகிலுமாக நாள்தோறும் ஆயிரம் தொழிலாளிகளுக்கு மேல் வேலை செய்தார்கள் – தவறுகள். ஊழல்கள் நுழையாதபடி கே.எஸ்.எஸ்.எஸ். பணியாளர்கள் கண்டிப்பாகக் கண்காணித்து வந்தனர்.

இதே திட்டத்தை இன்னும் பெரிதாகத் தொடங்கி நடத்தலாம் என்றும், அதற்குத் தேவையான உணவுப் பொருட்களுடன் பண உதவியும் யுஎஸ்ஏஐடி என்ற நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் என்றும் சிஆர்எஸ் கூறியது. ஆனால், எங்கள் திட்டம் ஒரு படி முன்னேறிற்று– அதற்கு வேண்டிய முன் திட்டம் ஒன்றை முன்வைக்கும்படி கே.எஸ்.எஸ்.எஸ் கேட்டுக்கொள்ளப்பட்டது – மாவட்டத்தின் மிகவும் வறுமைப்பட்ட பகுதியில் விளைவது மரவள்ளிக் கிழங்கு. இது ஆண்டுக்கு ஒரு போகம் தான் வரும். இதற்குப் பதிலாக பாசன வசதி உள்ள நெல் வயலாக இருந்தால் இரண்டு போகம் நெல் விளையும். பாசனக் கால்வாய் ஏற்கெனவே அரசாங்கத்தால் வெட்டப்பட்டு இருக்கிறது – நாம் செய்ய வேண்டியதெல்லாம், நிலத்தைச் சமமாக ஒப்புரவு செய்து கால்வாயிலிருந்து கிளை வாய்க்கால்களை அமைத்துக் கொள்வதுதான்.

இந்தக் கிளை வாய்க்கால்கள் தனியார் நிலங்களுக்கு ஊடாகச் செல்லும். இந்தத் திட்டத்துக்கு நாங்கள் தெரிந்தெடுத்தத் தாலுகா சிறுசிறு நிலங்கள் வைத்திருக்கும் விவசாயிகள் நிறையப் பேர் வாழும் பகுதி- இவர்களிலும் முக்கால்வாசிப் பேர்களுக்கு உள்ள பயிர்செய்யக்கூடிய நிலம் அரை ஹெக்டேருக்கும் குறைவு - இந்தப் பற்றாக்குறை விவசாயிகளுக்காகத்தான் எங்கள் பாசனக்கால்வாய்த் திட்டம்- நிரத்தை ஒப்புரவு செய்யவும் வாய்க்கால் வெட்டவும் நாள்தோறும் ஏறக்குறைய ஆயிரம் தொழிலாளிகள் வேலை செய்தார்கள் - இருக்கின்ற தங்கள் சிறிய நிலத்திற்குள் வாய்க்கால் வெட்ட விவசாயிகள் இணங்க வேண்டுமே.

அதற்காக அவர்களுக்கு அதன் நன்மையை எடுத்துச் சொல்லி முன்னேறுவதற்கான உணர்வூட்டி ஊக்குவிப்பதற்குப் பத்து மேற்பார்வையாளர்களை அமர்த்தியிருந்தோம் - திட்டம் நிறைவேறப் பத்து ஆண்டுகள் ஆயிற்று. தாலுகாவின் பல்வேறு பகுதிகளிலுமாக 3000 ஏக்கர் நிலம் ஒப்புரவு செய்யப்பட்டு சுமார் 33 கிலோமீட்டர் அளவுக்கு வாய்க்கால்கள் வெட்டப்பட்டது. இந்த முயற்சியின் பயனாகத் தோன்றியவையே விவசாயிகள் சங்கங்களும், வேறு பல கிராம முன்னேற்ற அமைப்புகளும் - நிலமற்ற தொழிலாளிகளுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதம் - ஏனெனில் இவர்களுக்கு நாள்தோறும் வேலை கிடைத்ததில் அதனால் பெற்ற ஊதியத்தைக் கொண்டு சிறிது நிலம் வாங்கவோ. வீடு கட்டிக்கொள்ளவோ முடிந்தது. இதற்கு அவர்கள் 200 நாள் வேலை வாய்ப்புப் பெற்றனர்- வேலைக்கு உணவு என்ற திட்டத்தினால் கிடைத்த வாய்ப்பு-

தனி வீடுகள் கட்டுவதற்காக மட்டும் யுஎஸ்ஏஐடி உதவ முன்வரவில்லை. வீணாய்க் கிடக்கும் நிலத்தை மீட்டுக்

குடியிருப்பு வசதி செய்யவும் நிதி உதவி செய்ய அது தயாராயிருந்தது – அச்சமயத்தில் நாங்கள் முட்டம் மீன்வள வளர்ச்சித்திட்டத்தில் மும்முரமாக இருந்தோம்– வீடு ஒன்றுக்குக் கட்டுமானப் பொருட்களுக்காக ஆயிரம் ரூபாயும். 400 ஆள் நாள்களுக்காகும் உணவுப் பொருட்களும் தேவை என்று கணக்கிட்டு நில மீட்சித் திட்டம் ஒன்றை வகுத்து யுஎஸ்ஏஐடி உதவியைக் கேட்டோம் – மீனவர் குடும்பங்கள் இந்தப் புதிய குடியிருப்புக்குப் போய்க் குடியேறுவர் என்பது திட்டம். முட்டம் கிராமத்தில் அங்குள்ள பங்கின் சம்மதத்துடன் ஒரு பெரிய நிலப்பரப்பை 50 ஆண்டுக் குத்தகையாக எடுத்தோம்.

ஆனால் நிலத்தை மீட்டு வைத்து வளர்த்த தென்னைகள் காய்க்கத் தொடங்கியதும் ஆசை மேலிட்டுவிட்டது. மக்கள் தங்கள் நிலத்தை மீண்டும் தங்களுக்குக் கொடுத்துவிடும்படி வற்புறுத்தினர். ஐம்பது ஆண்டு ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது– கடல் அரிப்பினால் வீடிழந்த குடும்பங்களுக்கு மறுவாழ்வுக்கு வசதி செய்து கொடுப்பது எங்கள் அடுத்த திட்டம்– நான்கு கிராமங்களில் மீனவர் குடும்பங்களுக்காக நூறு வீடுகள் கட்டினோம். இரும்பும். சிமெண்டும் கொண்டு 54 அடிதளத் தோணிகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது எங்கள் அடுத்த முயற்சி. இதுவும் யு எஸ் ஏ ஐ டி உதவியுடன்தான்– ஆனால் அது கைகூடவில்லை. விட்டுவிட்டோம்.

சுருங்கச் சொன்னால் கே எஸ் எஸ் முதலிலிருந்தே மககளையே குறிக்கோளாக வைத்து இயங்கியது. பள்ளிக் கூடம், கன்னியர் மடம் முதலிய அமைப்புகள் அதன் கவனத்தில் கடைசி இடமே பெற்றன – இவ்வாறு நடப்பதற்கு

33 கி.மீ. நீளத்தில் வெட்டப்படும் கால்வாய்

மிக ஆழமான கால்வாய்

வழிகாட்டி உள்ளுணர்வூட்டியது காந்திஜியின் வளர்ச்சிப் பணிகளாகும்:

அவருடைய திட்டங்கள் கிராமத்தை மையமாகக் கொள்பவை – எல்லாருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் குடிசைத் தொழில்களையும் கிராமக் கைத்தொழில் களையும் ஊக்குவிப்பவை. எங்கள் முயற்சிக்குப் பரக்குன்னு ஓர் எடுத்துக்காட்டு. பனை ஓலை. பனைநார். பதனீர். பனை வெல்லம். பனைநார் கொண்டு தூரிகை செய்தல் இப்படி எல்லாமே பனையை வைத்தே எங்கள் பரக்குன்னுத் திட்டங்கள் அமைந்தன – வேறு சில கிராமங்களில் பாசன வசதி. வாய்க்கால் வெட்டுதல். நிலத்தை ஒப்புரவு செய்தல். புதுவகைக் கலப்பைகளைப் பயன்படுத்திப் பார்த்தல். உரங்களை வழங்குதல். விவசாயிகளை (இவர்களில் நூற்றுக்கு 85 பேர் மிகச்சிறிய நிலம் உள்ளவர்கள்) ஒரு சங்கமாகச் சேர்த்தல் ஆகியவற்றையே முதன்மையாகக் கொண்டோம் – பெண்களுக்குரிய திட்டங்களும் பெண்களையே முதன்மையாகக் கொண்டு நடைபெற்றன.

மகளிர் மன்றங்கள் அமைத்தோம். அதற்கு அவர்களைக் கொண்டுவருவதற்கு வழியாக இருந்தது சுகாதார முயற்சி. மீனவர்கள் சங்கம் அமைப்பற்கு வழியாக உதவியது வட்டிக்கு சடன் கொடுப்பவர்களிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் அவர்களை விடுவிக்கும் திட்டமாகும் – மக்கள் தங்கள் வறுமை நிலைமையையும் அதன் காரணங்களையும் உணர்ந்து கொள்வதற்கான முயற்சிகள் மெல்ல மெல்ல முதன்மை பெற்றன: கருத்தரங்குகளும் ஆய்வரங்குகளும் வரவர முக்கியமாக இடம் பெற்றன– கே எஸ் எஸ் எஸ் எப்படி இருக்க வேண்டும்? மக்கள் தாங்களே

பொறுப்புள்ளவர்களாகித் தலைமை ஏற்று நடத்தும் நிறுவனமாக இருக்க வேண்டுமா? இல்லை. எல்லா அதிகாரமும் அதன் மைய நிர்வாகக் குழுவிடமே இருக்க வேண்டுமா? இந்த இழுபறி கே.எஸ்.எஸ்.எஸ். நிறுவனத்திற்குள் ஓயாது இருந்தது.

கிராமத்தில், மாவட்டத்தில், மாநிலத்தில். நாட்டில் . சமுதாய அமைப்பு எப்படி இருக்கிறது என்று அலசி ஆய்ந்து பார்த்ததில் மக்கள் யாவரும் நேர்மையான ஒருங்கிணைந்த வளர்ச்சி காண்பதற்குத் தடையாக இருக்கின்ற அந்த அமைப்புகளைக் கண்டோம்.

கே எஸ் எஸ் எஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்த நான் 1981இல் இப்பதவியின் பொறுப்புகளை இனி என்னால் நிறைவேற்ற இயலாது என்று உணர்ந்தேன்- அப் பதவியிலிருந்து என்னை விடுவிக்கும்படி ஆயர் அவர்களைக் கேட்டேன். இரண்டு ஆண்டுகளுக்கு அப்புறம் அவர் இசைந்தார் - புதிய செயல்துறை இயக்குநர் நியமிக்கப்பட்டார்.

கே எஸ் எஸ் எஸ் ஒரு துணிச்சலான முயற்சி. மிக்க பயன் அளித்த முயற்சி. முடியுமா என்று தோன்றிய முயற்சி மீண்டும் இம்முயற்சியை முதலிலிருந்து தொடங்க நேர்ந்தால் சில காரியங்களை வேறு விதமாகச் செய்திருப்போம். தவறுகள் மூலம்தானே படித்துக் கொள்கிறோம்: அவை நம்முடைய தவறுகளாக இருக்கலாம். மற்றவர்களுடைய தவறுகளாக இருக்கலாம்- ஆனால் அவை படிப்பிக்கின்றன- நீரில் விழுந்துதானே நீந்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.

1984 ஆகஸ்ட்

௬. அருட்பணி மற்றும் வளர்ச்சிப் பணிகளில் மகளிர் ஈடுபாடு

ஐந்து பெண்களும் இரண்டு பையன்களும் ஆக ஏழு பிள்ளைகள் உள்ள பெரிய குடும்பத்தில் வளர்ந்தவன் நான் – இதற்காக என் பெற்றோர்க்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். நான் மூன்றாவது பிள்ளை. முதல் பையன். சுற்றுச்சூழப் பெண்கள். அவர்களுடைய பாசமும் அறிவேன், அவர்களுடைய முறைப்பாடுகளையும் அறிவேன் – என் அக்காமார் இரண்டு பேரும் எப்படி ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக்கொள்வார்கள்,

முறையிடுவார்கள் என்பது எனக்கு இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. நான் நீச்சல் குளத்துக்கோ, சாரணர் முகாமுக்கோ வெளியே போகும் போதெல்லாம் என் அக்காமார் இருவரும் என் பெற்றோருடன் சண்டைக்குப் போவார்கள் – நன்றாக நினைவிருக்கிறது. நான் மட்டும் வெளியே போகலாமாம், அவர்கள் பெண்பிள்ளைகள் அம்மாவுக்கு ஒத்தாசையாக வீட்டில் இருக்க வேண்டுமாம். இது அவர்கள் முறையீடு. அப்போதே எனக்கு இந்த மகளிர் விடுதலைப் பிரச்சினை அறிமுகமாகிவிட்டது.!

1951–52ல் முளகுமூட்டில் இருந்தபோதுதான் எனக்கு இந்தியப் பெண்பிள்ளைகளுடனும் தாய்மார்களுடனும் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வூர் ஒரு கிளைப் பங்கு அங்கு நான் குருவாகப் பணியாற்றினேன். அங்கு ஐ.சி.எம். அருட்சகோதரிகள் நடத்தும் மிக முக்கியமான நிறுவனம்

ஒன்று உள்ளது. அதில் அனாதைகளையும் சமுதாயத்தால் கழித்து ஒதுக்கப்பட்ட குழந்தைளையும் வைத்துக் காப்பாற்றுகிறார்கள். அவர்களுடன் திருப்பலிப் பூசை நிறைவேற்றும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். அழகாகப் பாடினார்கள். 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட பெண்பிள்ளைகளுக்கு வாரம் தோறும் மறைக்கல்வி கற்பிக்கவும் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். என் தங்கைமார் இருவர் வயதும் கிட்டதட்ட இவர்கள் வயதுதான். இவர்களுக்கு நான் நண்பனானேன், இவர்களை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அங்கு நான் இருந்த சில மாதங்களின் பயனாகப் பத்துக் கட்டளைகள் பற்றிய கண்காட்சி ஒன்று நடத்தினோம். அது பெரும் வெற்றி. நாம் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவின் வழியே கடவுளோடு உறவு கொள்கிறோம் என்பதை இக் கண்காட்சி விளக்கிற்று.

இந்தப் பெண்பிள்ளைகளும் தாய்மாரும் ஒரு மாபெரும் ஆற்றலின் ஊற்றாக விளங்கக் கண்டேன். அவர்களிடமிருந்து எவ்வளவு ஒத்துழைப்பு பெற முடியுமோ அவ்வளவும் பெறமுயன்றேன். அவர்களைப் பலகுழுக்களாக வகுத்து அமைத்தோம். ஞாயிற்றுக் கிழமைகளில் பக்கத்து ஊர்களுக்குச் சென்று மறைக்கல்வி கற்பிக்க அவர்கள் மனமுவந்து ஒப்புக்கொண்டார்கள். வயதில் மூத்த மகளிர் வெவ்வேறு பங்குகளுக்குக் குழுக்களாகச் சென்று மூன்று, நான்கு வாரம் அங்கேயே தங்கியிருந்து மக்களைத் திருமுழுக்குக்கும் உறுதிப்பூசுதலுக்கும் தயார் செய்ய முன்வந்தனர்.

நான் முளகுமூட்டை விட்டு என் முதல் பங்காகிய பரக்குன்னுக்குப் போன பிறகும் அவர்களைத் தவறாது வந்து கண்டு செல்வேன். அப்பொது எனது அருட்பணி பற்றியும் கோவில் கட்டுவதில் உண்டான சிக்கல்கள் பற்றியும் அவர்களிடம் பேசுவேன். கோவில் கட்டி முடிந்து அதன் அர்ச்சிப்பு விழாவுக்கு முளகுமூட்டிலிருந்து நாற்பது பெண்கள் பதினைந்து கிலோ மீட்டர் தொலையும் நடந்தே பரக்குன்னுக்கு வந்தார்கள். அன்று மாலை அவர்கள் ஒரு நாடகமும் நடத்திக் காட்டினார்கள். இப்படியெல்லாம் இப்பெண்பிள்ளைகளை இயக்கி வைத்த சக்தி எது என்பது பின்னால் தெரிய வந்தது. அச்சக்தி லீவ் என்னும் பெயருடைய அருட்சகோதரி.

கிராமங்களில் மக்களை அவரவர் வீடுகளில் சென்று கண்டு பேசுவது மட்டும் அன்றி, கவனிப்பாரற்று விடப்பட்டிருந்த சிறுவர் சிறுமியர்களை ஒன்றுகூட்டவும் தொடங்கினேன். பையன்கள் விரைவில் தங்கள் தகப்பான்மார்களுடன் வேலைக்குப் போய்விட்டார்கள். எட்டு வயதுக்கும் பன்னிரண்டு வயதுக்கும் உட்பட்ட இருபது,



பெல்ஜியத்தில் விடுமுறையின் போது சகோதரி லீவ் அவர்களுடன் தந்தை ஜேம்ஸ்

முப்பது பெண்பிள்ளைகள் மட்டும் இருந்தனர். இவர்களை விட வயதில் பெரிய பெண்பிள்ளைகளை வீட்டை விட்டு வெளியே போக விடும் வழக்கம் இல்லை. ஆதலால் அவர்கள் வீட்டில் இருந்து கொண்டனர். ஆயினும் அவர்களுள் வறுமை மிக்க குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் விடியற்காலையே கிராமத்திலிருந்து 15 கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கும் காட்டுக்கு விறகு பொறுக்கி வரப் புறப்பட்டு விடுவார்கள்.

அச் சமயத்தில் காந்திஜியின் திட்டம் ஒன்று என்னைப் பெரிதும் கவர்ந்தது. நாட்டின் அரசியல் விடுதலைக்காக நாடு நெடுகிலும் கிராம ராஜ்ய அமைப்பை உருவாக்குவது என்ற திட்டம் அது. நாட்டின் கிராமங்கள் தமக்குத் தேவையானதைத் தாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும், ஆங்கிலேயர்களின் உற்பத்திப் பொருட்களை நம்பி வாழலாகாது

என்று காந்திஜி வகுத்த அத்திட்டத்தின் குறிக்கோள் அரசியல் விடுதலையாகும். இன்று சுதந்திர இந்தியாவின் குறிக்கோள் பொருளாதார விடுதலையாக இருக்க வேண்டும். ஆதலால் மக்கள் தங்கள் கிராமங்களைச் சுயாட்சி ஊர்களாக்குவதற்கு – அதாவது தமக்கு வேண்டியவற்றைத் தாமே உற்பத்தி செய்து கொண்டு வாழும் சுதந்திரம் உடைய ஊர்கள் ஆக்குவதற்கு – நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். மக்களைப் பேணிவளர்க்கும் ஒரு குரு என்ற முறையில் இது என் பணியாகும். இதனை நாங்கள் முதலில் இளம் பெண்களை வைத்துத் தொடங்க முடிந்தது. இவர்கள்தாம் மக்கள் யாவரிலும் உடனடியாகக் கிடைப்பவர்கள், மிக எளிதில் கேட்டுச் செயல் புரிபவர்கள்.

இவர்கள் நிலைமை உண்மையாகவே மிகவும் மோசமாக இருந்தது. இவர்களில் சற்று வசதி உள்ளவர்கள் எல்லாரும் இரண்டு கிலோமீட்டார் தொலைவில் உள்ள பள்ளிக்கூடத்துக்குப் போய் வந்தார்கள், மற்றவர்கள் விறகு பொறுக்கப் போனார்கள். மற்றும் சிலர் கோவிலுக்கு உடுத்திக்கொண்டு வருவதற்கு ஒரு சுத்தமான துணிகூட இல்லாதவர்கள். இவர்களுக்கு உடுத்த ஆடைகள் கொடுத்தால் என்ன என்பது ஒரு பெரிய சோதனையாக வந்தது.. ஆனால் முதலிலிருந்தே அந்த மனநிலை நமக்கு வேண்டவே வேண்டாம் என்று தள்ளிவிட்டேன். அது குறித்து மகிழ் வேண்டும். ஏனெனில் அதுதான் நான் இந்த இளம்பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கக் கூடிய முதல் முயற்சியைத் தொடங்க வைத்தது.

தென்னங்கிடுகுகளால் வேய்ந்த குடிசை கட்டினோம். கிசான் சர்க்கா பயிற்சி–உற்பத்தி நிலையத்தைத்

தொடங்கினோம். விடுதலை இயக்கத்திற்கு காந்திஜி தந்த முதல் சின்னம் இதுவே. பரக்குன்னிலும் இதுவே மகளிர் விடுதலைக்கு உரிய முதல் சின்னம் ஆயிற்று. இங்கு அவர்கள் நூற்ற நூல்களைக் கொடுத்துப் பதிலுக்குத் துணி வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் ஒரு தையல் இயந்திரம் வாங்கித் தங்களுக்குத் தேவையான உடைகளை தாங்களே தைத்துக் கொண்டார்கள். இவ்உடைகளை உடுத்திக்கொண்டு அவர்கள் ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்கு வந்து பூசை காண முடிந்தது. இவ்வாறாக அடி எடுத்து வைத்தோம். பிறகு பத்துத் தறிகள் நிறுவினோம். அவற்றைக் கொண்டு நெய்த துணிகள் ஊர் மக்களுக்கு மட்டுமன்றி குருசுமலை, திருமலை ஆசிரமம் இவற்றின் துறவிகளுக்கும் உதவிற்று.

பின்னால் மாதர் சங்கம் ஏற்படுத்தினோம், இதனைப் பரக்குன்னு பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையாகப் பதிவு செய்தோம். அது முதல் அது தொடர்ந்து நடந்து வருகிறது. செடிகள் வைத்து வளர்த்தல், குழந்தைகள் கற்பகம், தையல், பனைநார்த் தொழில் முதலிய வேறு பல சமூகநல வாரியத்தின் மானிய உதவியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சில பெண்பிள்ளைகள் பள்ளிப் படிப்பை இடையிலே நிறுத்திவிட்டிருந்தார்கள். இப்பொழுது உள்ளூர் அஞ்சல் நிலையத்தில் அவர்கள் பணம் சேர்த்து வைத்திருந்ததால், அதைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தாங்களே வாங்கிக்கொள்ளலாம். ஆகவே மீண்டும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பைத் தொடரும்படி ஊக்கமூட்டினோம். இப்படி ஓர் அரைடஜன் பேர்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் பள்ளிக்கூடம் போகாமல்

இருந்துவிட்டு இப்போது மீண்டும் படிக்கத் தொடங்கினார்கள். இவர்களில் சிலர் உயர்நிலைக் கல்வி இறுதி வகுப்பு வரை படித்தார்கள். சிலர் ஆசிரியர் பயிற்சிக்கும் சென்றார்கள்.

புத்தங்களுக்கும் பள்ளிக் கட்டணத்துக்கும் பள்ளிச் சீருடைக்கும் பணம் சேர்க்கும்படி விடுமுறைக் காலத்தில் மாணவர்களுக்கு உதவ வேண்டியிருந்தது. கோவில், பள்ளிக்கூடக் கட்டிடம், சமூக மையம் ஆகியவற்றைக் கட்டுவதற்குத் தேவைப்படும் மணல், கல் முதலியவற்றைக் கொண்டு வருதல் போன்ற உடலுழைப்புக்கான வாய்ப்புகளை மாணவ, மாணவியருக்கு வழங்குவதற்காகச் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்தோம்.

அவர்கள் மெய்வருந்த உழைத்தார்கள். எனினும் பாட்டுப் பயிற்சிக்கும் விவிலியப் படிப்புக்கும் சிறிது நேரம் ஒதுக்கியிருந்தோம். புதன்கிழமை மாலை நடந்த விவிலிய வகுப்புகள் இன்னும் பசுமையாய் என் நினைவில் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டை ஆதிஆகமம் முதல் படித்தோம், விளக்கினோம். கடவுளின் அந்த வார்த்தை இந்தக் காலத்தில் நமக்கு என்ன உணர்த்துகிறது என்று காண முயன்றோம்.

விவிலியப் படிப்பும், வேலையுமாக நடந்த இடையறாத பயிற்சி மக்கள் வாழ்க்கையில் பயன் விளைத்தது. இதற்குக் கொச்சுப்பிள்ளையின் குடும்பம் ஒரு சான்றாகும். கொச்சுப்பிள்ளைக்கு மூன்று பெண்மக்கள். இம் மூன்று பெண்பிள்ளைகளும் விவிலிய வகுப்புக்குத் தவறாமல் வந்தார்கள் அங்கு கற்றதைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க விரும்பினார்கள்.

கொச்சுப்பிள்ளை பனைஏறுபவர். கள் இறக்குவோர் எல்லோரையும் போல அவரும் பனை உச்சியில் கள்ளைக் குடிப்பார். வீட்டுக்கு வரும்போது நன்றாகக் குடித்திருப்பார். ஒவ்வொரு நாளும் இரவில் அற்பக் காரியங்களுக்காகத் தம் மனைவியை அடிஅடி என்று அடிப்பார் பிள்ளைகள் தங்கள் தாயாரைக் காப்பாற்ற முடியாமல் போடும் கூச்சலும் கதறலும் எங்கள் காதில் விழும். நான் வசித்த சிறிய பங்கு இல்லத்தில் இருந்தபடி இந்த அன்றாடப் பாட்டைக் கேட்கலாம்.

ஒரு நாள் மாலை இதை இனி என்னால் தாங்க முடியாது என்றாகிவிட்டது. நான் அவர்கள் வீட்டுக்குப் போய் அவரை வெளியே வரும்படி கூப்பிட்டேன். அவரை அச்சுறுத்தி, அவரது நெற்றியில் கைவைத்துத் தள்ளினேன். அவர் கீழே விழுந்துவிட்டார். தன் நினைவு அற்றவர் ஆனார் என்றே தோன்றிற்று. பாசாங்கா? அல்லது நான் தள்ளியதால் மெய்யாகவே அடிபட்டுவிட்டதா? தெரியவில்லை. நாட்டு மருத்துவரை வரவழைத்தேன். அவர் காட்டமான சில வாசனைப் பொடிகளை எடுத்து அவர் முகரும்படி செய்தார். அதனால் கொச்சுப்பிள்ளைக்குத் தும்மல் வந்தது. எழுந்தார் அவர் அமைதியாக உறங்கட்டும் என்று விட்டுவிட்டு வந்தேன்.

மறுநாள் காலையில் அவர் வெறி தெளிந்தவராய் பங்குக் குருவின் இல்லத்துள் வந்தார் –கையில் விரித்த கத்தியுடன்! என்ன செய்தி என்றேன். மறுமொழியாகக் கொச்சுப்பிள்ளை நேற்று நீர் என்னை அடித்தீர் என்றார். ஆம், நீர் உம் மனைவி, மக்களைப் போட்டு அடித்தீர்,

அதனால் தான், நீர் அவர்களை அடிப்பதை நிறுத்தாவிட்டால் திரும்பவும் இப்படியே செய்வேன் என்றேன். அவருக்கு என் பதில் திடுக்கென்று இருந்தது. பேசாமல் போய்விட்டார். அன்று முதல் அவர் தம் மனைவியை அடிப்பதை விட்டார்.

அவருடைய பெண்மக்கள் விவிலிய வகுப்பில் படித்த ஒரு பாடம் சிலைகளுக்குப் படைத்த இறைச்சி தன் இறைச்சித் தன்மையை இழந்துவிடுவதில்லை என்பது. செத்துப் போனவர்களுடைய ஆவிகளுடனும் பேய்களுடனும் பேசக் கூடிய ஊடகமானவர் என்று கொச்சுப்பிள்ளை அந்த வட்டாரத்தில் பெயர் எடுத்திருந்தார். வழக்கமாகக் குடிபோதையில் இருந்ததால் அவரை ஆவிகள் எளிதில் ஆட்டிப்படைக்க வசதியாய்ப் போயிற்று. கோழிகளைப் பேய்களுக்குப் பலியிட அவரிடம் பலர் கொண்டுவந்து கொடுப்பார்கள். அவர் ஆடும் ஆட்டம் ஆவிகளை அழைக்க இடும் கூக்குரல் இரவில் அவர் வீட்டில் உள்ளவர்களைத் தூங்கவிடா.

ஒரு நாள் அவருடைய மகள் மூவரும் என்ன செய்தார்கள் என்றால், பலியிடுவதற்காக இருந்த கோழியை பிடித்துக் கொண்டு போய்ச் சமைத்து நன்றாகச் சாப்பிட்டு விட்டார்கள். தம் மக்கள் இப்படியும் செய்வர்கள் என்று கொச்சுப்பிள்ளைக்கு ஒரே ஆச்சரியம்! அன்று முதல் அவர் ஆட்டமும் நின்றது. ஆவிகளுடன் பேசுவதும் நின்றது.

இன்னொரு நாள், அவருடைய கடைசி மகள் முத்துலட்சுமி விவிலிய வகுப்பில் சாம்சன் கதையைக் கேட்டவள், அன்றிரவு வீட்டில் தகப்பானார்

உறங்கிக் கொண்டிருந்தபோது கத்தரிக்கோலை எடுத்து அவருடைய நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியைக் கத்தரித்து விட்டாள். கொச்சுப்பிள்ளை விழித்து எழுந்தபோது தமது தலை முடி போயிற்றே என்று பெரிதும் வருத்தப்பட்டார். ஆயினும் விரைவில் அதை மறந்துவிட்டு மிகவும் சாந்தமானார்.

விவிலியத்தின் செய்தி ஒரு குடும்பத்தின் பிள்ளைகள் மனத்தில் எவ்வாறு பதிந்து பலனளித்துள்ளது என்பதற்குச் சான்றாக இன்னும் பல நிகழ்ச்சிகள் உண்டு. இந்தப் பையன்களிலும் பெண்களிலும் பலர் துறவற அழைப்பு பெற்றனர். கடவுள் நம் கையைப் பிடித்து வழிநடத்துகிறார், நாம் அவர் கையில் இருக்கிறோம் என்பதை நாங்கள் மெய்யாக உணர்ந்தோம். இவ்வாறு ஒன்றிரண்டு அல்ல, பல ஆண்டுகளாகக் கண்ட அந்த அனுபவம் மறக்க முடியாதது.

பங்கின் பணிகளில் பெண்கள் இல்லாத குறை தென்பட்டது. அருட்சகோதரிகளை அழைத்தால் தங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் வேலை இருந்ததால் தான் முடியும் என்று சொல்லிவிடுவார்கள். அதுவே தங்கள் வாழ்க்கைச் செலவுக்கு ஈடாகும் என்று இப்படி நிபந்தனை விதிப்பார்கள். அந்தக் காலத்தில் பரக்குன்னில் பள்ளிக்கூடம் இல்லை. மூன்று அருட்சகோதரிகளை அனுப்பிவைக்குமாறு திருச்சிராப்பள்ளி புனிதர் அன்னம்மாள் சபைத் தலைவியரை வேண்டினேன். ஒருவர் நெசவு அல்லது தையல் கற்றுக் கொடுக்கலாம். அவர்கள் எனக்குச் சமையலும் செய்யலாம். ஆகும் செலவைப் பகிர்ந்துகொள்ளலாம். நான் இப்படி எடுத்துச் சொல்லி வேண்டிக் கொண்டதன் பேரில் அவர்கள் என் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இப்படி இங்கு வந்து தங்கும் சகோதரிகள் தாய் மடத்துக்குப் பங்குப் பணம் அனுப்ப வேண்டியதில்லை என்றும் விதிவிலக்கு ஏற்றார்கள். பள்ளிக்கூடம் செல்லும் அருட்சகோதரிகள் மக்களிடம் செல்லும் அருட்சகோதரிகள் ஆயினர், அற்புதமான பணி புரிந்தார்கள். நாங்கள் ஒரு குடும்பமாக இருந்தோம். நான் இருந்துவந்த பங்கு இல்லத்தை அருட்சகோதரிகளுக்குக் கொடுத்துவிட்டுக் கோவிலில் கட்டியும் கட்டாமலும் இருந்த சக்கிறீஸ்து அறையில் அடைக்கலம் புகுந்தேன். அந்தக் கன்னியர் சமைக்கும் உணவை இந்த அறைக்குப் பையன் ஒருவன் சில வேளைகளில் இருவர் கொண்டுவருவர். இப்பையன்கள் இல்லாபோது சிரித்த முகத்தோடு ஒரு சிறுமி கொண்டுவருவாள், தட்டுகளைக் கழுவி வைத்துவிட்டுச் செல்வாள். பங்கின் எல்லாப் பிரச்சினைகளையும் இந்த அருட்சகோதரிகள் மூவரோடும் ஆராய்வோம், அவற்றை எப்படித் தீர்க்கலாம் என்று முடிவெடுப்போம். நாங்கள் ஒரு குழுவாக இயங்கினோம்.

பனைநார் கிழித்தல் தூரிகை செய்தல், பனை வெல்லம் காய்ச்சுதல், பதனீர் பதப்படுத்தல், மிட்டாய்கள் செய்தல் பிஸ்கோத்து செய்தல் முதலிய எல்லாத் தொழில்களிலும் பெண் பிள்ளைகள் தொடர்ந்து தேர்ச்சி பெற்றார்கள். பின்னால் ஆறு கதிர்கள் உள்ள அம்பர்ச் சர்க்காவை நிறுவினோம்.

ஜூலை 1984

7. சமூக நல வளர்ச்சித் திட்டத்தில் மகளிர் மேம்பாடு

முட்டத்தில் மீன்வளத் திட்டத்தைத் தொடங்கிய பின்பு கடற்கரைக் கிராமங்களில் வாழும் மகளிரின் இரங்கத் தக்க நிலைமையை மும்முரமாகக் கருத்திற்கொண்டோம். மீன் பிடிக்க நைலான் வலையைப் பயன்படுத்துவது என்று திட்டமிட்டபோது ஒரு நல்ல வழி பிறந்தது. பருத்தி நூலால் மீன்பிடி வலை பின்னிக் கொடுப்பது மகளிரின் வேலையாய் இருந்துவந்தது. அதற்கு அவர்களுக்குக் கிடைப்பது ஒரு சேலை. அவ்வளவே. சரியான கூலி எதுவும் கிடையாது. மகளிரின் உழைப்பு காலம் காலமாகச் சுரண்டப்படுவதற்கு இஃது ஒரு சான்று. மகளிரின் உழைப்பை மதிக்க வேண்டும், குறைந்தபட்சக் கூலியாவது கொடுக்க வேண்டும் என்று மீனவர்களுடன் வாதாடுவதற்கு முட்டத்துத் திட்டம் ஒரு வாய்ப்பாயிற்று. கன்னியாகுமரி கன்னியர் இல்லத்தில் லீவ் என்று ஓர் அருட்சகோதரி. அவர்களது பொறுமையே பொறுமை! அவரது விடாப்பிடியான முயற்சியின் பயனாய் எங்கள் பேச்சை மீனவர்கள் சரி என்று ஒத்துக்கொண்டனர்.

விசைப்படகில் சென்று மீன்பிடிக்கும் திட்டத்தை நடத்திப்பார்ப்பதற்கு 1968-ல் இந்திய-பெல்ஜிய மீன்வளத்திட்டத்துடன் ஒத்துழைக்கத் தொடங்கினோம். அத்திட்டத்துக்கு நைலான் வலைகள் தேவைப்பட்டன. அது நல்லதோர் தொடக்கம் ஆயிற்று. பெண்கள் நைலான் வலைகளைப் பின்னிக் கொடுத்து முதன்முறையாகக்

கூலியும் பெற்றார்கள். நிலைமை மாறுதல் கண்டது. மகளிரின் உழைப்பு உரிய மதிப்பு பெற்றது.

மகளிர் தாம் செய்யும் வேலைக்கு ஊதியம் பெற அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை மீனவர்களுக்கு நினைவுறுத்த நாங்கள் பட்ட பாடு பெரும்பாடு, வழிவழியாகச் செய்துவரும் மீன்பிடி தொழிலில் மகளிரும் பயனுள்ள பங்காளிகள் என்பதை அவர்களுக்கு உணர்த்தினோம். பின்னிக் கொடுக்கின்ற வலைக்குத் தவறாமல் பணம் தந்திட வேண்டும் என்ற திட்டம் நடைமுறைக்கு வந்து பின், சேமிப்புத் திட்டம் ஒன்றையும் கல்வி ஏற்பாடு ஒன்றையும் கொண்டுவந்தோம்.

1970 முதல் அருட்சகோதரி லீவ் திண்டுக்கல்லில் உள்ள புனிதர் வளனார் மருத்துவமனையில் பணி புரிய வேண்டியவர் ஆனார். ஆயினும் சில மாதங்கள் சென்ற பின், அவர் இங்கு கடற்கரை ஊர்களில் வாழும் மகளிருக்குக் கல்வியறிவு புகட்ட வாய்ப்பு இருப்பதைக் கண்டார். அதனால் கன்னியாகுமரி சமூக சேவாசங்கத்தின் (கேஎஸ்.எஸ்.எஸ்.) மகளிர் பிரிவில் பணி செய்ய முன்வந்தார். அவரது யோசனை முழுமனத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது நிகழ்ந்தது 1971-ல்.

கன்னியாகுமரி மையத்தில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு முட்டத்திலும் கடியபட்டினத்திலும் நைலான் வரை பின்னுவதற்கு இரண்டு மையங்கள் ஏற்பாடாயின. ஆகவே மூன்று இடங்களிலுமாக விரைவில் ஏறக்குறைய 500 மகளிரும் பெண்பிள்ளைகளும் ஒழுங்காகக் கூலி பெறும் வகையில் நைலான் வலை பின்னும் தொழிலில்

ஈடுபடலாயினர், அருட்சகோதரி தங்கள் கிராமங்களுக்கும் வந்து உதவி செய்ய வேண்டும் என்று பல ஊர் மகளிர் அவரை நெருக்கவே, அவர் ஊர் ஊராகச் சென்று அவர்களுக்கு ஆவன செய்லானார். ஆனால் பேருந்துக்காகக் காத்திருந்து பயணம் செய்ய வேண்டும், பல மணி நேரம் இவ்வாறு பயணத்திலேயே கழிந்தது. 12 ஆண்டுகளுக்கு முன் பேருந்து ஒழுங்காக நேரத்துக்கு வருவதில்லை, ஆகையால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண அவருக்கு ஓர் இருசக்கர வண்டி (மோப்பெட்) வாங்கினோம்.

இவ்வாறாக நைலான் வலை பின்னும் தொழில் விரைவில் கடற்கரைப் பகுதியில் பதின்மூன்று ஊர்களுக்குப் பரவி ஆயிரத்து இருநூற்றுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளும் மகளிரும் மீனவர் ஒப்புக்கொண்ட கூலிக்கு நைலான் வலைகளை உற்பத்தி செய்யலாயினர்.

மகளிருக்காக இவ்வாறு மேற்கொண்ட ஈடுபாடு, கடற்கரையில் மீனவர்கள் தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கையில் அவர்களுடன் மணிக் கணக்காக உட்கார்ந்திருக்க வைத்தது. பெண்கள் பின்னித் தருகின்ற வலைக்குக் கூலி கொடுப்பது முதற்கண் அவர்களது உழைப்பை உழைப்பாக ஒப்புக்கொள்வதாகும், பெண்ணும் மனிதப் பிறவி. குடும்பத்தில் ஒருவர். மகள், மனைவி, தாய் என்ற முறையில் அவர்களுக்கு உரிய மரியாதையை வழங்குவதுமாகும். இதனை மீனவர்கள் உணர்ந்து ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு மிக்க பொறுமையுடன் அவர்களுடன் இருந்து பேசி நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று. மாவட்டத்தின் வடக்குப்

பகுதி ஊர்களில் இதை அவர்கள் உணர்ந்து ஏற்றுக்கொள்வதற்கு மிக மிக நீண்ட காலம் பிடித்தது.

இதற்கிடையில் அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று மக்களை அவரவர் வீடுகளில் கண்டு பேசியதான் பயனாக, ஓர் உண்மை தெளிவாகத் தெரியவந்தது. தாய்மார்களுக்கம் பிள்ளைகளுக்கும் உடல் நலக் குறைவு வராதபடி முன்னெச்சிரிக்கையாக அவர்களது சுகாதாரத்தைப் பேணி வளர்ப்பது உடனடியாகக் கவனிக்க வேண்டிய மிகக் கடுமையான ஒரு தேவை என்பதும், தாய்மார்களிடையே பயனுள்ள பணி ஏதேனும் உருவாக வேண்டுமாயின் உடல் சுத்தம், துப்புரவு, சத்துணவு, குழந்தை நலம், வரவு செலவு திட்டமிடல், குடும்பத்திலும் கிராமத்திலும் மகளிர்க்குரிய பணி முதலியவை பற்றி அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதுதான் இன்றியமையாத முதற் படி என்பதும் இவ்வாறு புலனாயிற்று.

1971 டிசம்பர் முதல் மருத்துவ நிறுவனங்களின் பணியாளர்களைக் கூட்டி வைத்துக் கலந்து பேசலானோம். அத்துடன் படித்துவிட்டு கிராமங்களிலே வேலையில்லாமல் இருக்கும் பெண்பிள்ளைகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தோம். அதாவது சத்துணவு, சுகாதாரம் பற்றிய அடிப்படைக் கல்விக்கான குறுகிய காலப் பயிற்சி பெறலாம் என்றும் அப்போது அவர்கள் வார இறுதி நாள்களில் கிராமங்களுக்குச் சென்று அதற்கான புள்ளி விவர ஆய்வுக் கணக்கு எடுக்க வேண்டும் என்றும், இதனை அவர்கள் ஒரு தொண்டாகக் கருதிச் செய்ய வேண்டும் என்றும் கேட்டோம். இவ்வாறு தொடங்கியது தான் சமூகநல வளர்ச்சித் திட்டம் (சி.எச்.டி.பி.).

1972 ஏப்ரல் மாதத்திற்குள் சி.ஆர்.எஸ். நிறுவனத்தின் சத்துணவுத் திட்டத்தின்படி முதன்முறையாக ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான மருத்துவ விடுதிகள் உருவாயின. இவை பெரும்பாலும் கடற்கரை ஊர்களிலே அமைந்தன. நடமாடும் நலக்குழுக்கள் மூலம் இவை நடைபெற்றன. ஒருவரது வளர்ச்சியை நிர்ணயிக்கக் கூடியது ஐந்து வயது வரையுள்ள சிறுபிள்ளைப் பருவமேயாகும். அந்தச் சிறார்களின் உடல் வளர்ச்சியைக் கவனிப்பதே இத்திட்டத்தின் கண்ணும் கருத்துமாய் இருந்தது. நோய்த் தடுப்பு மருந்து கொடுத்தாலும் அக்குழந்தைகளுக்கு ஏற்ற சத்துணவு தேவை என்பதும் சிறப்பாக வலியுறுத்தப்பட்டன. நடமாடும் நலக்குழுக்கள் வார இறுதி நாள்களில் தாங்கள் பெற்ற குறுகிய காலப் பயிற்சியினால், அந்த அந்த ஊர்களில் உள்ள தாய்மார்களுக்கு இந்தச் சுகாதார கல்வியறிவைப் புகட்ட முடிந்தது.

கிராம நலப்பணியாளர்கள் வழியாக நாட்டுப்புறம் எங்கும் மக்களுடைய உடல் நலத்தைப் பேண முடியும் என்பதை இந்தியாவில் வேறு பல அனுபவங்களும் சுட்டிக்காட்டிவிட்டாதாலும், படித்த இளம் பெண்கள் எத்தனையோ பேர் தங்கள் மக்களுக்கு இவ்வாறு பணி புரியக் கிடைப்பார்கள் என்று கண்டதானாலும் சுகாதாரப் பணியாளர்கள் தங்கிப் படிக்கக்கூடிய ஐந்து மாதப் பயிற்சி ஒன்றை சிஎச்.டி.பி. 1973இல் தொடங்கிற்று. இது படிப்படியாக வளர்ந்து 1975–க்குள் ஏ.என்.எம். என்னும் துணைச் செவிலியர் தாய்மை மருத்துவர் பாடத் திட்டத்தின்படி நலவழிகாட்டிகளுக்கான பயிற்சியாக உயர்ந்தது. நாளிதுவரை 292 பேர்கள் நலப்

பணியாளர்களாகப் பயிற்சி பெற்றுள்ளனர், இவர்களில் 186 பேர்கள் மேற்கொண்டும் பயிற்சி பெற்றுச் நலவழிகாட்டிகள் ஆகியுள்ளனர்.

நோய்களை வருமுன் காத்துத் தடுத்திட முடியும் என்பதை மகளிர் வரவர நன்கு கண்டுகொண்டார்கள். அவ்வகையில் தாங்கள் ஏதாவது உருப்படியாகச் செய்தல் வேண்டும் என்று ஊக்கம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே 1974இல் ஊர்ப்பொது நலனுக்கான ஒரு சிறுசேமிப்புத் திட்டம் தொடங்கப் பெற்றது. (அதுதான் 25 காசுத் திட்டம் என்பது) இவ்வாறு சிறிதாகச் சேர்த்த பணம் சிறிது காலத்திற்குள் ஒரு பெரும் தொகையாகப் பெருகிற்று. அதைக் கொண்டு மகளிர் தங்களுக்கு எது எது மிகவும் அவசியம் என்று கருதினார்களோ அது அதற்குச் செலவழித்தானர், பொதுக் கிணறுகளைத் தூர் எடுத்தல், அவற்றைப் பழுது பார்த்தல், வடிகால்கள், தனியார் கழிப்பறைகள், சமூக நலக் கூடங்கள் முதலியன இவ்வாறு கவனிக்கப்பட்டன. இப் பணிகளை ஊக்குவிக்க உதவித் தொகைகளும் வழங்கினோம்.

அந்தந்த இடத்து மக்கள் இவ்வாறு ஈடுபட ஈடுபட நோய்த் தடுப்புக்கும் சுகாதாரக் கல்வியறிவுக்கும் வேண்டிய பணிகள் அங்கங்கே இடைவிடாமல் நடந்து வருவது அவசியம் என்று தெரியத் தெரிய, ஊர்தோறும் சென்று இயங்கும் பணிக்குழு முறை படிப்படியாக மாறுதல் அடைந்து வளர்ந்தது. 1976–க்குள் பல கிராமங்களுக்கு ஒன்றாக ஒவ்வொரு தொகுதிக்கும் அத் தொகுதியிலேயே தங்கியிருநது பணியாற்றும் ஒரு சுகாதாரப் பணிக்குழு உருவாயிற்று. 1978–க்குள் இத்திட்டம் எல்லாக் கிராமங்களுக்கும் விரிவாக்கப்பட்டது.

கிராமத்திலேயே தங்கி இருந்து அன்றாடம் மக்களுடைய அனுபவங்களை அறிய வந்ததால் சுகாதாரக் கவனிப்பு என்பது அதனோடு தொடர்புடைய எல்லாப் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு நடக்கத தொடங்கிற்று. இருக்கும் அமைப்பு முறைமையில் சுரண்டலுக்கும் வறுமைக்கும் என்ன காரணம் என்பது தொளிவாகப் புலப்படலாயிற்று. சமுதாயத்தைத் தட்டி எழுப்பி நீதியையும் உரிமைகளையும் கேட்டுப் போராடும்படி மக்களை ஒன்று திரட்டும் முயற்சிகள் ஊருவாயின. குடிதண்ணீர் வசதி, பொது சுகாதாரத் துறையிடமிருந்து தடுப்பு ஊசி மருந்துகள் கோருவது முதலிய முயற்சிகளில் மகளிர் முன்வந்து விடாமுயற்சியுடன் ஈடுபட்டனர். சுகாதாரமே முன்பொல் முக்கிய கவனமாக இருந்துவந்தாலும் 1979–80க்குள் சமுதாய ஒருங்கிணைப்பு அதற்கான வழிமுறையாக விளங்கத் தொடங்கிற்று.

ஆகவே–

- உள்ளூர்வாசிகளை ஈடுபாடு கொள்ளும்படி செய்வதற்கும் ஜனநாயக முறைகளை வளர்ப்பதற்கும் அந்தந்த இடத்து மகளிர் ஒன்று சேர்வதற்கான சங்கங்களை உருவாக்க வேண்டியதாயிற்று.
- அந்தந்த இடத்தில் நடக்க வேண்டிய முயற்சிகள் படிப்படியாக மகளிருடைய நேரடிப் பொறுப்பாக அமைய, வேண்டியதாயிற்று.
- பொதுப் போக்குவரத்து வசதி, தெரு விளக்குகள் முதலிய பொதுவான காரியங்களைப் படிப்படியாக மேற்கொள்ள முடிந்தது.
- கல்வியறிவூட்டும் வழிமுறை உடனடிப் பிரச்சினைகளைக்

கவனித்து ஆவன செய்யும் போக்கிலிருந்து படிப்படியாக மாறி, சமுதாயம் எப்படி இயங்குகிறது என்று உணர்ந்து கொள்வதையும் வறுமைக்கும் அடக்குமுறைக்கும் உள்ள காரணங்களை அலசி ஆராய்வதையம் முதன்மையாகக் கொள்ள வேண்டியதாயிற்று.

- சமுதாய ஒருங்கமைப்பு என்பது நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகளுடன் சேர்ந்து தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒன்றாகும். அந்தந்த இடத்து மகளிர் சங்கங்கள் உருவானது இந்தச் சமுதாய ஒருங்கமைப்பின் முதற்படி. இது ஏன், எப்படி என்று பெண்களுக்கு விளங்க வைப்பது உண்மையிலேயே கடினமாகத்தான் இருந்தது. இவ்வகையில் சில இடங்கள் மற்ற இடங்களை விட எளிதாக இருந்தால், அவை முன் மாதிரிகளாக உதவின.

மகளிர் மன்றங்கள்

மகளிர் மன்றம் கிராமத்துப் பெண்கள் அனைவரும் சேர்ந்த சங்கமாகும். அது தான் பணிகளில் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறு கிராமத்தின் பெண்கள் அனைவரையும் அழைக்கிறது. அதன் நிர்வாகத் குழு அதன் உறுப்பினகளாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதன் பணிகள் அத்தனைக்கும் இந்தக் குழுவே பொறுப்பாகும். சி.எச்.டி.பி சமூக அமைப்பாளர் [illegible]தவியின் கரணமாகவே இந்த நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினர் ஆவார். இவர் சி.எச்.டி.பி கிராமங்களில் தான் மேற்கொள்ளும் சுகாதாரத் திட்டங்களை அந்தந்த இடத்து மகளிர் மன்றத்தின் வழியாகவே செயல்படுத்துகிறார். இவ்வாறு கிராமங்களில் தங்கிருந்து பணி புரிவதற்கு சி.எச்.டி.பி.யின் பயிற்சிபெற்ற பணியாளர்களை

நியமிப்பதும் அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதும் மகளிர் மன்றமேயாகும். அந்தப் பணிக் குழுவில் காலியிடம் ஏற்படுமானால் அதனை நிரப்பப் பயிற்சி பெற்று வருமாறு யாரைப் பரிந்துரைப்பது என்பதும் மகளிர் மன்றத்தின் பொறுப்பேயாகும்.

அந்தந்தக் கிராமத்தின் தேவைகளுக்கும் வாய்ப்புகளுக்கும் தக்கபடி அங்குள்ள மகளிர் மன்றம் பல்வேறு நடவடிக்கைகளை திட்டம் செய்து நடத்திவைக்கிறது. அது சேமிப்புத் திட்டமாக இருக்கலாம். இத்திட்டதின்படி உறுப்பினர்கள் தாங்கள் சேமிக்கும் பணத்தை வங்கிகளிலோ அஞ்சல் அலுவலகங்களிலோ தங்கள் பேரில் சேர்த்து வைக்கின்றனர். அல்லது அது துப்புரவுத் திட்டமாக இருக்கலாம். இதன்படி அந்தந்தக் குடும்பம் தனக்கு வேண்டிய நீரடைப்புக் கழிப்பறையைத் தானே கட்டிக்கொள்ளும்போது கழிப்பறைக் கோப்பையை மன்றம் வழங்குகிறது. சமுதாய வாழ்க்கை, உள்ளூர் விவகாரங்கள் பிரச்சினைகள் இவை பற்றிக் கூட்டங்கள், கருத்தரங்குள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்வதும் மகளிர் மன்றமேயாகும், தையல் வகுப்புகள், முறைசாராக் கல்வி முதலியனவும் மகளிர் மன்றத்தின் செயற்பாடுகளே.... உணவுப் பங்கீடு, குடிதண்ணீர் வசதி, போதிய போக்குவரத்து வசதி முதலியவற்றுக்கு மட்டுமல்லாமல் குடிப்பழக்கம், மனைவியை அடிக்கும் வழக்கம், வரதட்சனைக் கொடுமை முதலிய தீய சமூகப் பழக்க வழக்கங்களை எதிர்த்துப் போராடுதல் போன்ற பொதுக் காரியங்களுக்கும் மகளிர் மன்றம் நடவடிக்கை எடுக்கிறது.

சமுதாய மாற்றத்துக்கு சமுதாய நலம் என்பதுதான் சி.எச்.டி.பி-யின் குறிக்கோள். ஊரில் வாழும்

ஒவ்வொருவருடைய உடல்நலமும் மனநலமும் சமூகநலமும் தொடர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒரு சவால். மக்களே உணர்ந்து பொறுப்பேற்று முன்வந்து செயலாற்றினால் தான் சமுதாயம் நலம் பெற்று நல்லபடி வளரும். மக்கள் ஒவ்வொருவரும் முழுநலம் உடைய மனிதப்பிறவியாக வளர்ச்சி பெறுவதற்கு சமுதாய சுகாதாரப் பணியாளர்கள் மக்களுக்கு ஊக்கமூட்டி உணர்வு கொளுத்தி அவர்களுடன் சேர்ந்து உழைக்கிறார்கள். இவ்வாறு முழுநல வளர்ச்சி பெறும் தலைமுறையினர் தாமும் சமுதாய மாற்றத்துக்கு உழைப்பர்.

ஜனவரி 1984

8. மீன் தொழில் வளர்ச்சியா? மீனவர் வளர்ச்சியா?

1963இல் பரக்குன்றில் பனைவெல்லம் ஆலை ஒன்றை உருவாக்க பெல்ஜியத்திலிருந்து தொழில்நுட்பாளர் ஒருவர் உதவி கிடைத்தது. பரக்குன்றில் மட்டுமன்றிக் கடற்கரை ஊர்கள் எல்லாவற்றிற்கும் வளர்ச்சித் திட்டம் ஒன்று வேண்டும் என்று பங்குக் குருக்களும் மக்களும் கேட்டுக்கொண்டிருந்த காலம் அது. ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் ஆங்காங்கு சிறு சிறு கூட்டம் கூட்டமாகக் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர், இப்படிக் குடிசைகளில் வாழும் மீனவர்களின் வளர்ச்சிக்கு முக்கியமாகத் திட்டம் வேண்டும் என்றனர். பெல்ஜியத்திலிருந்து வந்திருந்தவர்க்கு நீச்சலும் நீரில் குதித்தலும் மிகமிகப் பிடித்தம். கட்டுமரங்களில் இயந்திரங்களை வைத்து மீன் பிடிக்கச் செல்லலாமே, அதனால் மீன்பிடி தொழில் வளர்ச்சி அடையுமே என்று நாங்கள் கனவு கண்டோம். விசைப் படகுக்குப் பதில் விசைப் கட்டுமரம் என்பது இடைப்பட்ட தொழில்நுட்பம்தான்.

பெல்ஜியத் தொழில்நுட்பாளர் ஒரு பழைய வெளிப்பொருத்து இயந்திரத்தையும் ஒரு ரப்பர் படகையும் பாண்டிச்சேரியில் உள்ள ஒருவரிடமிருந்து வாங்கி வந்தார். இவற்றை எடுத்துக் கொண்டு நாங்கள் கடற்கரை நெடுக ஊர் ஊராய்ச் செல்வோம், சென்ற இடத்தில் ரப்பர் படகைக் காற்றடைத்து உருவாக்கி, அதில் வெளிப்பொருத்து இயந்திரத்தைப் பொருத்தி அந்த 10 குதிரைத் திறன் இயந்திரத்தின் விசையினால் இயங்கும் படகில் ஏறி அங்குள்ள

கட்டுமரங்களுக்கிடையே வேகமாகச் சுழன்று வருவோம், கட்டுமரத்தை இப்படகில் கட்டி ஓட்டிக் காட்டுவோம் – பாருங்கள் விசை இயந்திரத்தின் பலனை என்று. அது மீனவர்களின் கவனத்தை ஈர்த்தது. இத்தகைய இயந்திரங்கள் கிடைக்குமா என்று வினவத் தொடங்கினார்கள். மெல்ல மெல்ல அவர்களுக்கு இதில் ஆர்வத்தை ஊட்டிவிட்டோம். வெளிப்புற விசை இயந்திரம் பொருத்திக்கொண்டு மீன் பிடிக்கச் செல்ல வேண்டும் என்று ஆவல் கொண்டனர்.

எனவே, 100 வெளிப்பொருத்து விசை இயந்திரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்தோம், அவற்றுக்கு வேண்டிய தொழிற்கூடம் ஒன்றை முட்டத்தில் உருவாக்குவது என்றும் திட்டம் தீட்டினோம். முட்டத்துக் கடற்கரையில் அதனை நிறுவ ஆஸ்திரியாவின் காரித்தஸ் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. பெல்ஜிய தொழில்நுட்பாளர் வானளாவிய திட்டங்கள் வைத்திருந்தார். ஐ.நா,வின் உணவு வேளாண்மைக் கழகம் (குயுழு) பெல்ஜியத்தில் புதிதாகத் தொடங்கப்பெற்றிருந்த பசி விடுதலை இயக்கம், மற்றும் இந்திய அரசு இவற்றோடு அவர் தொடர்பு கொண்டு இந்திய–பெல்ஜிய மீன்பிடி திட்டம் என்ற ஒரு பெரிய திட்டத்தைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்தார். திட்டத்தை நடத்தும் இயக்குநர் ஒருவர். மீன்படி தொழிலில் வல்லவர் ஒருவர், வெளிப்பொருத்து விசை இயந்திரத் தொழில்நுட்பாளர் ஒருவர் ஆக வல்லுநர் மூவர் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டனர்.

மீனவர்களுக்கு நைலான் வலைகளை அறிமுகம் செய்ய வேண்டும். அலுவலர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும்; வெளிப்பொருத்து விசை



இயந்திரங்களைப் பயன்படுத்தப் பயிற்சி அளிப்பதற்கும் அவற்றைப் பழுது படாமல் பேணி வருவதற்கும் உரிய கட்டடங்கள் கட்டியாக வேண்டும். இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கியபோது எல்லாம் தங்களுக்கு இலவசம் என்றுதான் மீனவர்கள் நினைத்தார்கள். ஆனால் இந்திய அரசின் சுங்கத்துறை இயந்திரங்களின் விலையில் நூற்றுக்கு 60 பங்கு தீர்வை விதித்துவிட்டது. இந்தத் தொகையை மீனவர்கள் சிறிது சிறிதாகப் பல தவணைகளில் கட்டித் தீர்க்கலாம் என்றாயிற்று.

திட்டம் காலாவதி ஆகுமுன் பெல்ஜியத்திலிருந்து நூறு வெளிப்பொருத்து விசை இயந்திரங்கள் விமானம் மூலம் வந்து இறங்கின. பெட்ரோல் வாங்கிக் கட்டுப்படி ஆகாது என்று, பெட்ரோல்–மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரங்களையே வாங்கினோம். அவற்றுள் மிகக் குறைந்த விசைத் திறன் உள்ள இயந்திரம்கூட 18 குதிரைத் திறன் கொண்டதாகும், இதுவே இங்கு மீனவர்களின் தேவைக்கு மிகமிக அதிகம். அவர்களுக்குப் பயிற்சி அளித்தோம், முதல் ஆண்டு நிறைய இறால் பிடித்தோம்,

ஆனால் வேலை பார்க்கும் வெளிநாட்டவர்களால் மீனவர்களின் மனம் வேறுபட்டுப் போயிற்று. அவர்களும் மீனவர்களும் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்க வேண்டியது பற்றியும், சமுதாய நிலைமையைப் புரிந்து கொள்வது பற்றியும் தெரிவிக்க வேணடியதைத் தெரிவித்து மீனவர்களைப் போதிய அளவு தயாரிக்காதது ஒரு குறை. அது மட்டுமன்று கடலோர கிராமச் சூழலில் அவ்வெளிநாட்டவரின் உயர்ந்த வாழ்க்கை நிலை திட்டத்தைப் பெரிதும் சீரழத்துவிட்டது.

முரண்பாடு மூண்டுவிட்டது. திட்டத்தின் மேலாளர் எ.ஃப்.ஏ.ஓ. நிறுவனத்தில் சேரத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். பெல்ஜிய நாட்டவராகிய இவருக்குப் பதிலாக மும்பை வழக்கறிஞர் ஒருவரைத் திட்டத்துக்குப் பொறுப்பான பெல்ஜிய நாட்டு நிறுவனம் நியமித்தது. ஆகவே முட்டத்தில் எங்களுக்கு இரண்டு மேலாளர்கள்! நிலைமை முற்றிப் போயிற்று. பெல்ஜிய நிறுவனத்துக்கும் இந்திய அரசுக்குமிடையே சண்டை! என்னவென்றால், நமது நாட்டுக்குள் பெல்ஜிய நிறுவனம் தலையிடுகிதே என்று இந்திய அரசுக்குக் கோபம்.

திட்டத்தை நடத்தி வைக்க இந்தியர் ஒருவரே இருக்க வேண்டும் என்பது பெல்ஜிய நிறுவனத்தின் வாதம். இந்திய அரசோ பெல்ஜியர் ஒருவரே மேலாளராக இருக்க வேண்டும் என்றது! இவை இரண்டுக்கும் இடையில் மாட்டிக்கொண்ட கே.எஸ்.எஸ்.எஸ்.-க்கு இரண்டு சார்பையும் திருப்திப்படுத்த முடியாத இரண்டுங் கெட்டான் நிலைமை. இதிலே இந்திய அரசுக்கு என்மேல் ஐயப்பாடு. இவர்தான் எல்லாவற்றையும் குழப்புகிறாரோ என்ற எண்ணம் அரசுக்கு.

நான் இந்தியவில் தங்கியிருக்க வழங்கிய அனுமதியை விலக்கிக்கொள்ளப் போவதாக அரசினர் அச்சுறுத்தினர். நிலைமை தாங்க முடியாத வேதனையாயிற்று. இரவில், என் தலை வெடித்து விடும் போல் இருந்தது, விழித்தெழுந்தேன். தூக்கம் வரவில்லை, சில நாள்களில் கடும் காய்ச்சல் வந்துவிட்டது. காதரீன் பூத் மருத்துவமனையில் சேர்த்தார்கள். மண்டை இரண்டாக வெடித்துவிடுவது போன்று தெரிந்தது. எனக்கு வந்திருப்பது வைரஸ் காய்ச்சல் என்றும், அது என் மூளையின் கீழ்ப் பகுதியைத் தாக்கியிருக்கிறது என்றும் சந்தேகப்பட்டார்கள். அப்பொழுதுதான் எனது பார்க்கின்சன்

நோய் தொடங்கியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்நோய் மெல்லவே வளர்ந்து வரவர நன்கு தெரியலாயிற்று.

இந்த முட்டும் மோதலும் தந்தை பியர் என்பவர் மூலமாக முடிவுக்கு வந்தது. பிரான்சிலிருந்து வந்த அவர் என்னுடன் டில்லிக்கு வந்தார். விவகாரம் அங்கே பின்வருமாறு முடிவுற்றது. அதவாது, திட்டமேலாளரைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பை கே.எஸ்.எஸ்.எஸ். நிறுவனத்திடம் விட்டுவிடுவது. யாரைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதற்குத் தமிழ்நாடு அரசின் மீன்வளத்துறை சில பெயர்களைக் குறிப்பிட்டுக் கொடுக்கும். அவர்களில் ஒருவரை கே.எஸ்.எஸ்.எஸ். தெரிந்தெடுக்கும் என்று முடிவாயிற்று. காப்டன் ∴பெர்னாண்டோ இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டார். பெல்ஜிய மன்னர் பெங்களூருக்கு வருகை தருவதற்குள் எல்லாம் சரியாயிற்று. காப்டன் ∴பெர்னாண்டோவின் மேலாண்மையில் திட்டம் வலுவிழந்து ஓர் அரசாங்க வேலை போல் ஆயிற்று.

திட்டம் வெளிப்பொருத்து விசை இயந்திரங்களில் ஆர்வம் கொண்டதுடன் கரையிறங்கும் படகுகள் பற்றியும் கவனம் செலுத்தியது. அலையோடு மிதந்து வரக் கூடிய பிளைவுட் படகுகளை எ.∴ப். எ. ஓ. நிறுவனம் எடுத்துக் காட்டிற்று. இப் படகு மிகவும் வனப்பான வடிவில் அமைந்திருந்தது. பிரெஞ்சு நாட்டு செனட் சபை உறுப்பினர் கிளேரோ தம்முடைய டோரிஸ் படகுகளைக் கொடுக்க முன்வந்தார். இலங்கையிலிருந்து இரண்டு கண்ணாடி இழைப் படகுகள் இறக்குமதி செய்யப்பட்டன. கட்டுமரங்களைக் கடலில் இழுத்துக் கொண்டுபோய் வெட்ஜ் வங்கியில் விடுவதற்குரிய தாய்க் கப்பல் ஒன்றும் யோசனையில் இருந்தது. இக்கப்பலைக் கான்கீரீட்டினால் உருவாக்கக் கூடிய புதிய தொழில்நுட்பம் கருத்தில் இருந்தது.



கே.எஸ்.எஸ்.எஸ். புள்ளி விவரக் கணக்கு எடுத்து வெளியிட்ட அறிக்கை (5-71) திட்டத்தின் முதல் குறிக்கோள் நிறைவேறிவிட்டதைக் காட்டுகிறது. கட்டுமரங்களை இயந்திர விசை உடையனவாகச் செய்ததால் மீன்பிடிப்பு கூடியிருந்தது. இவ்வகையில் திட்டம் மெய்யாகவே வெற்றிதான். படகுகளின் உடற்பகுதியை வெவ்வேறு வடிவத்தில் அமைத்துப் பார்க்கவும் முயன்றோம். எ.ஃப்.ஏ.ஓ.-வின் பிளைவுட்டில் ஆன கரையிறங்கு அலைமிதப்புப் படகு இவ்வாறு பரிசோதனைக்கு உள்ளாயிற்று. மற்றும், கண்ணாடி இழை உடற்பகுதி,

ஃபிரெஞ்சு டோரிஸ், தட்டையான அடிப் பகுதி என பல வடிவங்களைக் கையாண்டு பார்த்தோம். ஆயினும், மீனவர்களின் பொருளாதாரம் உயர்ந்ததே ஒழிய அவர்களுடைய மனப்பாங்கு மாறவே இல்லை. கிடைத்த பணத்தை உடனே செலவழித்து விடுவார்கள். வாங்கிய கடனை அடைப்பதும் இல்லை. மேலும், இயந்திர உதவி வந்ததால் உழைப்பு நேரம் குறைந்து. இயந்திர விசையில் சென்றவர்கள் அது இல்லாதவர்களுக்குப் பிறகே கரையை விட்டுக் கடலில் சென்றனர். ஆனால் இருவரும் மீன் பிடிக்கும் இடத்தை ஒரேநேரத்தில் அடைந்தனர். மீன் பிடித்துத் திரும்பும் பொழுது இயந்திர விசை உடையவர்கள் முந்திக் கரை சேர்ந்தனர். ஆகையல் மீன் ஏலம் போகும் முதற்கட்டத்தில் விற்றனர். அந்த முதற்கட்டத்தில்தான் விலை தூக்கலாக இருக்கும்.

முட்டம் மீன்வள வளர்ச்சித் திட்டம் கண்ட உண்மை என்னவென்றால், வழக்கமாக மீனவர்களுக்கு நிறைய மீன் கிடைத்ததென்றால் அதை விற்று அவர்கள் பெற்ற பணம் அனைத்தையும் உணவு, குடி, முதலியவற்றிற்குச் செலவழிப்பார்கள் என்பதும், கையில் காசு இருக்கும் வரை

திரும்பக் கடலுக்குப் போக மாட்டார்கள் என்பதும் ஆகும். இங்கே நாங்கள் ஒரு சிக்கலை சந்தித்தோம். புதிய உற்பத்திக்கான மேல் வரம்பும், அதை எட்டுவதற்கான வழிமுறைகளும் திட்டத்தினால் மீனவர்கள் கையில் வந்து விழுந்தன. அவை அவர்கள்மேல் திணிக்கப்பட்டவை. ஆனால் அந்த உற்பத்தி அளவைகளோடு கூடவே பழைய கலாச்சார முறைகளும் சமுதாய அமைப்புகளும் அப்படியே நிலவின.

கடற்கரைக் கிராமங்களில் வட்டிக்குக் கடன் கொடுக்கும் வட்டித் தொழிலர்கள் முன்போலவே அதிகாரம் செலுத்தினார்கள். மீனவர்கள் உண்மையில் இருவகையான அதிகாரிகளுக்கிடையே சிக்கிக் கொண்டார்கள். இரண்டு அதிகாரங்களுக்கு நடுவே தங்களை வைத்திடும் நிலையில் அவர்கள் இருந்தார்கள். தங்களை அறியாமலே அவர்கள் இவ்வாறு நடந்து வந்தார்கள்.

மீனவர்கள் தங்கள் நிலைமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தானே திட்டத்தின் நோக்கம். ஏன் அதை அவர்கள் தங்கள் நோக்கமாகக் கொண்டு நடக்கவில்லை? காரணங்கள் பல. வழிவழியாக வந்த கலாச்சாரத்தின் அழுத்தம் ஒன்று. மக்கள் மீது வெளியார் நிறுவனம் ஒன்று நோக்கங்களைத் திணிக்கும்போது–அந்நோக்கங்கள் மக்களுடைய எண்ணம், கவலைகளை எடுத்துக் காட்டுவனவாக இல்லாதபோது–அந்நோக்கங்கள் மக்களுடைய ஆவல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவையாக இருக்கும் போது, மக்களுடைய மனம் எளிதில் மாறுவது இல்லை.

இரண்டாவது திட்டம் வந்துவிட்டதால் இருக்கின்ற சமுதாய அமைப்புகள் மாறிவிடுவதில்லை. சமுதாயத்தை இயக்குகின்ற சக்திகளுக்கிடையே வழிவழியாக இருந்துவரும் உறவுகளை முறிப்பது என்று மீனவர்களே முனையும் பொழுதுதான் அவை முறிபடும். வளர்ச்சி என்பதை வெறுமனே பொருளாதார வளர்ச்சி என்ற குறுகிய வட்டத்துக்குள் பார்த்தால் போதாது. தனி மனிதரை அவருடைய பண்பாடு, சமுதாய நிலை முதலிய எல்லாவற்றோடும் சேர்த்து முழுமையாக நோக்கி அதன்படி அவருடைய பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிட்டு மேம்படுத்த வேண்டும். இல்லாவிடில் அரைகுறையாகிவிடும். வேலை வசதியை மேம்படுத்திக் கொடுத்தால் போதாது. மக்கள் ஒரு சமுதாய சக்தியாக வளர வேண்டும். அவர்களிடமிருந்தே தலைவர்கள் புதிதாய்த் தோன்ற வேண்டும்.

மூன்றாவது, திட்டமிடுவதிலேயே குறை. எந்தத் திட்டத்திலும் முடிவு எடுக்கும் வேலையில் தொழிலாளரை ஈடுபடுத்துவதில்லை. யாருடைய நிலைமையை மேம்படுத்த விரும்புகிறீர்களோ, யாருக்காக இத்திட்டம் தீட்டுகிறீர்களோ, அவர்களை ஈடுபடுத்தாமல் உங்களுக்குள் பேசி முடிவு செய்து வைக்கிறீகர்கள். மக்களே தங்கள் மேம்பாடு தங்கள் கையில்தான் உள்ளது என்று பொறுப்பேற்க விரும்பாமல் இருக்கும் வரை வளர்ச்சி என்று பேசுவதில் பொருளில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுடன் முதலில் கொண்ட தொடர்பு வெற்றி காணவில்லை. அணுகுமுறை சரியாய் இல்லாததே காரணம். எனவே, மீன்பிடி தொழிலை வளர்த்தல் என்பதை விட்டு பரம்பரை மீன்தொழிலாளர்களின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது தேவை என்றாயிற்று.

இலங்கையைச் சேர்ந்த அருள்திரு. ஜோ ஃபெர்னாண்டோ முன்பு முட்டத்துக்கு வந்திருந்தபோது, என்னை நீர்க்கொழும்புக்கு வந்து அங்குள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைப் பார்க்கும்படி அழைத்திருந்தார். 1973–இல் நான் இந்தியாவுக்குத் திரும்பி வரும் வழியில் இலங்கையில் நீர்க்கொழும்புக்குச் சென்றேன். அங்கு மீனவ இளைஞர்கள் எப்படி ஒன்றுக் கூடிச் செயலாற்றுகிறார்கள் என்பதை ஆராய்ந்தேன், அவர்கள் என் மனத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். நல்ல வீடுகளில் குடியிருக்கிறார்கள். அதையெல்லாம் பார்த்த பிறகுதான் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர் இளைஞர் சங்கங்களை உருவாக்க வேண்டும் என்ற உள்ளுணர்வு எனக்கு உண்டாயிற்று.

முதன் முதலாக 1974–ல் மணக்குடி, குறும்பனை, இனயம் ஆகிய ஊர்களில் மீனவர் சங்கங்கள் ஏற்பட்டன. சங்கத்தினர் கடலில் சென்று மீன்பிடிக்கும் இளைஞர்கள். அவர்கள் தாங்கள் பிடித்துக் கொணரும் மீன்களைச் சங்கத்தின் வழியே விற்பது என்றும். பிடிபாட்டுப் பணத்தில் ஒருபங்கைச் சேமிப்பது என்றும் ஒப்புக் கொண்டனர். அவர்கள் தங்கள் முன்னேற்றத்துக்கு வேண்டிய கல்வியறிவு பெறும் நீண்ட கால முயற்சி இவ்வாறு தொடங்கியது.

இத்தகைய சங்கங்கள் தங்களுக்கு எவ்வளவு ஆபத்து என்பதை வியாபாரிககளும் வட்டிக்காரர்களும் தெளிவாக உணர்ந்தார்கள். அவர்கள் இனி மீனவர்களைச் சுரண்டி வாழக் கூடிய வாய்ப்பு குறைந்துவிடும். அவர்கள் ஒன்றுகூடி ஆயரை அணுகி, அவர் இந்தச் சங்கங்களைக் கலைக்காவிட்டால் திருச்சபைக்கு இனிமேல் ஒன்றும்

கொடுக்க மாட்டோம் என்றார்கள். அந்தக் கோரிக்கைக்கு ஆயர் இணங்கவில்லை. சங்கம் அமைக்கும் முயற்சி பிழைத்தது மட்டும் அல்ல, வளர்ந்து பரவியது. பதினைந்து கிராமங்களுக்குமேல் இச்சங்கங்கள் பரவின. வலைகளும் கண்ணாடி இழைப் படகுகளும் இச்சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அவற்றைப் பற்றி அவர்களுக்குச் சரிவர உணர்த்தப் படவில்லை. அவை அவர்கள் மேல் சுமத்தப்பட்டவையாய் இருந்ததால் இம்முயற்சி தோல்வி கண்டது. உண்மையான வளர்ச்சி மக்களிடமிருந்தே வரும். மக்கள் அறிந்து தெரிந்து தம்மால் முடிந்த வேகத்திலேயே முன்னேற வேண்டும். அவர்களை அதற்குமேல் விரைந்து முன்னேறும்படி நெருக்கி விரட்டுவோமானால் அவர்கள் திட்டத்தின் குறிக்கோளை அடைய மாட்டார்கள்.

இப்பொழுது சங்கங்கள் தங்கள் மீன்பிடிபாட்டை ஏலத்துக்கு விட்டு விற்கும் வேலையில் நன்கு செயல்படக் கற்றுக்கொண்டுவிட்டன. இறால்களைக் கம்பெனிகளுக்கு விற்கவும். சரியாகச் கணக்கு வைக்கவும் செய்த சில முயற்சிகளும் வெற்றி கண்டுள்ளன. சங்கங்களைத் தனித்தனியே பதிவு செய்து அவை அனைத்தையும் ஒரு மாவட்டக் கூட்டமைப்பாக அமைக்கவும் வேண்டிய நேரம் வந்துவிட்டது.

13,79 எண்ணிட்ட அறிக்கை கூறுவது இது:

முதலாவது மீனவர் இளைஞர் சங்கம் ·1974–இல் மணக்குடியில் நிறுவப்பட்டது. முதற்படியாக வியாபாரிகள் மீனவர் சங்க உறுப்பினர்களிடமிருந்து மீன் வாங்க மறுத்தனர்.

மோதல் தொடங்கிவிட்டது என்று மீனவர்கள் கண்டுகொண்டனர். இது அவர்களுக்கு ஏமாற்றமே. எனினும் அவர்கள் ஒருங்கு சேர்ந்து தங்கள் மீன்களை உள்நாட்டுக்ககுள் பல ஊர்களில் விற்க ஏற்பாடு செய்தார்கள். ஆனால் வியாபாரிகள் அவர்களுடைய மீன் விலை போகாதபடி செய்துவிட்டார்கள். இது எதிபார்த்ததுதான். இதனால் முதல் நாளில் சங்கத்துக்கு ரூ.600– இழப்பு: இரண்டாம் நாள் ரூ.300– இழப்பு. ஆனால் அதற்கு அடுத்த நாள் லாபம் கிடைத்தது.

இப்பொழுது வியாபாரிகளுக்குப் பயம் வந்துவிட்டது, தங்களுக்கு வியாபார வாய்ப்பு இல்லாமல் போய்விடுமே என்று. எனவே வேறொரு உத்தியைக் கையாளத் தொடங்கினார்கள். அதன்படி அவர்களே சங்கத்திடமிருந்து மீன் வாங்கலானார்கள். ஆனால் வேண்டுமென்றே, பணம் கொடுக்க நாள் கடத்தினார்கள். அதனால் நிலைமை முன்னிலும் மோசமாயிற்று. ஆத்திரம் வந்தது. மீனவர்கள் தங்களால் என்ன செய்ய முடியும் என்று ஏங்கினர். பின்னர் முதன் முறையாக அவர்களே முடிவு செயதார்கள். எல்லாருமாகச் சேர்ந்து வியாபாரி ஒருவர் வீட்டுக்குப் போய்த்தங்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கேட்பது என்று. அவ்வியாபாரியின் பண்டகசாலையில் நிறையக் கருவாடு இருந்தது. தங்களுக்கு வர வேண்டிய பணம் வந்தாலொழிய அந்த மீனை ஏற்றிக் கொண்டு லாரி வெளியே போகவிடமாட்டோம் என்று மீனவர்கள் கூறினார்கள். அந்தத் தந்திரம் பலித்தது. இப்போராட்டத்தால் மீனவர்களிடையே ஒரு புதிய ஒற்றுமை உண்டாயிற்று.

விசைப்படகுகளும் பாரம்பரிய மீனவர்களின் போராட்டமும்

நிலைமையை ஆராய்ந்து 13–1979 எண்ணிட்ட அறிக்கை கூறுவதாவது:

சிறு சிறு கண்ணிகள் உள்ள பெரிய இழுவலைகள் மீனோ இராலோ எதுவாயினும் கண்படி பிடித்துவிடுவதால், மீனவர்களுக்குச் செத்த மீன்களும் சொத்தை மீன்களும் கிடைத்தன. இவர்கள் பிடிக்கக் கூடிய மீன்வளம் குறைந்தது. ஒவ்வொரு மீன்பிடி நிலங்கள் முழுவதையும் இந்த இழுவலைப் படகுகள் ஒன்று விடாமல் துளாவி விடடன. இப்படகுகளும் வரவர அதிகமாயினர். ஆகவே, மீன் பிடிக்கப் புதுப் புது இடங்களைத் தேட வேண்டியதாயிற்று.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இழுவலை விசைப்படகுக்காரர்களுக்கும் பாரம்பரிய முறையில் மீன் பிடிப்போருக்கும் 1971–லேயே போராட்டம் மூண்டுவிட்டது. பாரம்பரிய முறையில் மீனபிடிப்பவர்கள் அணி திரண்டு குளச்சலுக்குச் சென்று பெரும் விசைப்படகு மீனவர்களின் வீடுகளுக்குத் தீவைத்துக் கொளுத்தினார்கள். அதைப் பார்த்த பிறகு அரசினர் கடலில் மிதவைகளை இட்டுக் கட்டுமரக்காரர்களுக்கும் விசைப்படகுகாரர்களுக்கும் தனியே எல்லை வகுத்துக் கொடுத்தனர். ஆனால் இந்த மாவட்டத்தில் எந்த விசைப்படகும் மீன் பிடிக்கக் கூடாது என்பதுதான் நடைமுறைச் சட்டமாக இருந்தது. அதை மீறி மீன் பிடித்தால், பிடித்த மீன்களைக் கொண்டு வந்து கரை இறங்கியதும் அவ்வளவையும் கிராம மக்கள் கைப்பற்றிக் கொள்வார்கள்.



அருகில் எங்கேயும் துறைமுகம் இல்லாததால் விசைப்படகு மீனவர்கள் இம்மாவட்டத்தை விட்டு ஒதுங்கிவிட்டார்கள். இவர்கள் எல்லோரும் இப்பொழுது கிழக்குக் கடற்கரையிலும் மேற்குக் கடற்கரையிலும் செயலாற்றுகிறார்கள். அண்மையில் பாரம்பரிய முறையில் மீன்பிடிப்பபோர் நடத்திய போராட்டங்களுக்கு இவர்களுடைய தொழில்முறை காரணமாகும்.

இறால் மீன்வளத்தை மட்டும் பெருக்கியதனால், பொருளாதாரத்தில் ஒரு பெரிய நெருக்கடி ஆழமாக வேரூன்றியிருக்கிறது. இதைத் தீர்க்கும் வழி இன்னும் புலப்படவில்லை.... மீன் பிடிக்கக் கூடிய இடங்களில் அளவுக்கு மிஞ்சி மீன் பிடிப்பதை நிறுத்தி மீன் வளத்தைப் பேணுவதற்கு வேறு நடவடிக்கைகள் தேவை. மீன் பிடிப்போரின் பொருளாதாரத்தை மூன்று வகையாகப் பிரித்து ஆராயலாம்.

பாரம்பரிய வகை: கட்டுமரம், வள்ளம், வளிவலைப்படகு போன்றவற்றைச் சொந்தமாக வைத்துக் கொண்டு மீன் படிப்போர் இவ்வகையினர். இவர்கள் தொழிலும் குடும்பத் தொழில், சில வேளைகளில் மற்றவர்களையும் தம்முடன் மீன்பிடிக்க உதவியாக அழைத்துச் செல்வர், பிடித்த மீனில் அவர்களுக்கு இவ்வளவு பங்கு என்று பேசிக்கொண்டு இவ்வாறு செய்வர். பொதுவாக இவ்வகைத் தொழிலில் உற்பத்தியும் சிறிதே, சுற்றுச் சூழல் மாசு படுவதும் சிறிதே, மீனவளம் குறைவதும் சிறிதே.

நவீன வகை: இதற்கு அதிய முதல் தேவை, விசைப்படகு. சுருக்கு இழுவலை ஆகியவற்றுக்குச் செலவு அதிகமாகும். இப்படி மிகுதியாக முதலீடு செய்து

மீன்பிடிப்பவர்கள் உடனடியாக மிகுந்த ஆதாயம் தேடுவதிலே கண்ணாயிருப்பார்கள். கடலில் கொஞ்சம் விட்டு வைக்காதபடி அனைத்தையும் அள்ளிக்கொண்டு வருவார்கள். இது தனி முதலாளித்துவ முறை! இதனால் கடலில் மீன்வளம் விரைவில் அற்றுப்போகும்.

அதி நவீன வகை: இறால் ஏற்றுமதியில் தனிச் சிறப்பாக ஈடுபடும் பெரிய பெரிய கம்பெனிகள் இவ்வகையாகும். இதற்கு இவை கோடிக் கணக்கான முதலீடு செய்கின்றன. இவை ஆழ்கடலில்தான் மீன்பிடிக்க வேண்டும் என்பது கொள்கை. ஆனால் அவை கடற்கரைப் பக்கமும் மீன்பிடிக்கின்றன.

பாரம்பரிய முறையான மீன்பிடி தொழிலுக்கும் நவீன மீன்பிடி தொழிலுக்கும் உள்ள போராட்டம் என்ன?

இடத்துக்குப் போராட்டம்: மீன்பிடி தொழிலில் பெரும்பாலோர் பரம்பரை முறைப்படி மீன்பிடிப்பவர்களே. ஆனால் கடலில் இவர்கள் செல்லக் கூடிய இடம் சுருங்கிவிட்டது. அவர்கள் பிழைப்புக்குத் தேவையான இடம் இவர்களுக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

மீனுக்குப் போராட்டம்: ஈவு இரக்கமின்றிக் கடலில் உள்ள மீன்களையெல்லாம் பிடிப்பதென்று ஆகிவிட்டால், கடலில் மீன்வளமான பகுதிகளெல்லாம் கடல் பாலைவனங்களாக மாறிவிடும். என்ன செய்ய வேண்டும்?

1. மீனவர்கள் தாங்கள் வாழும் சமுதாயம் எப்படிப்பட்டது, அதனை ஆட்டி வைக்கும் சக்திகள் யாவை, அவை எப்படி செயல்படுகின்றன இப்பொழுது அவர்களுக்கு வந்திருக்கும் ஆபத்து என்ன என்பதையெல்லாம் உணர வேண்டும். அவர்களுக்குப் பரம்பரையாகப் பழக்கமாகியுள்ள பிழைப்பிலிருந்து அவர்களை ஒதுக்கி சில முதலாளித்துவப் பெரும் வியாபாரிகள் மளமளவென்று பெருத்த லாபம் தேடிக்கொண்டு உள்ள மீன் வளம் அனைத்தையும் சுரண்டித் தீர்த்த பின் உடனே வேறிடம் பார்த்தும் போய்விடுவார்கள் இதையும் இந்தக் கட்டத்தில் மீனவர்கள் உணருமாறு செய்ய வேண்டும். ஒருங்குகூடி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிந்தது. மீனவர்கள் நிலைமையை நன்கு உணர்ந்துவிட்டால், புது வகையான கூட்டுஅமைப்புகள் தோன்றும். விழிப்பான பயனுள்ள செயல்கள் பிறக்கும்.

மீனவர்கள் இனியும் தன்பாட்டைத் தான் பார்க்கும் தனிப் போக்கினராய் இருத்தல் அவர்களுக்கு நன்மை ஆகாது, அவர்கள் கிணற்றுத் தவளை போல் குறுகிய வட்டத்துக்குள்ளே சுழலும் சிந்தனை உள்ளவர்களாய் இருப்பதும் இனி நடவாது. கன்னியாகுமரி மாவட்டத்து மீனவர்கள் நன்கு நிலைமையைப் புரிந்துகொண்டு முன்னேறுவதற்கு இரண்டு தடைகள் உள்ளன. அவர்கள் தொழிலுக்காக நெடுந்தொலைவு வெளியூர் சென்று வரக்கூடியவர்கள் ஆகியிருப்பது ஒன்று. அதன் காரணமாக, பழைய சமுதாயப் பழக்க வழக்கங்கள் சிதைந்துபோவது இன்னொரு பிரச்சினை. ஆயினும் புதிய இயக்கம் உடனடியாகத் தேவை.

2. பாரம்பரை முறைப்படி மீன்பிடிக்கும் தொழிலுக்குப் போதிய இடம் இருக்கவும், கரையை ஒட்டிய கடற் பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து மீன்வளத்தையும் துப்புரவாகத் தூர்த்துத் துடைத்துவிடாதபடி காக்கவும், அப்பகுதி மாசு படாதபடி பேணவும் தக்க சட்டங்களை இயற்ற வேண்டும். அவை இயற்றப்படுவதற்கும் இயற்றிய சட்டங்கள் கடைப்பிடிக்கப் படுவதற்கும் மீனவர் சங்கங்கள் ஆவன செய்ய வேண்டும். இதுவே அவற்றின் முக்கிய கவனமாக இருக்க வேண்டும்.

3. மீனவர்களின் தொழில்நுட்பமும் முன்னேற வேண்டும். மீன் பிடிக்க உதவும் பல்வேறு முறைகளைத் திரும்பவும் உருவாக்கிட வேண்டும், அவை கடல் சூழ்நிலை மாசுபடாமல் இருந்துவரத் தக்க வகையில் உருவாகிட வேண்டும். கடலுக்குள் கண்டத் திடலின் எல்லை வரை சென்று மீன்பிடிக்க ஏற்ற வெவ்வேறு தொழில்நுட்பங்களை ஆராய்ந்து காண வேண்டும், வெவ்வேறு காலங்களுக்கு ஏற்ற நுட்பங்களாக அவை அடையவேண்டும்... சமூக அமைப்பிலும் மாறுதல் ஏற்பட்டால் ஒழியத் தொழில்நுட்ப முன்னேற்றத்தல் அதிகம் பயனில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்து மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு!

இம் மாவட்டத்து மீனவர் சங்கங்கள் 1983–இல் புதியதோர் நடவடிக்கை எடுத்தன. அதன்படி உருவானதே அவை ஒருங்கு இணைந்த கன்னியாகுமரி மாவட்ட மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு மாவட்டத்தில் அன்று 16 சங்கங்கள்



இயங்கிவந்தன. அவை ஒன்றுக்கு ஒன்று ஊக்கம் ஊட்டுவனவாக இருந்து ஒன்று சேர்ந்து உழைத்துத் தங்கள் போராட்டங்களில் தோளோடு தோள் கொத்து நிற்க வேண்டும் என்று முயன்றதன் பயனாக 1983 நவம்பரில் இந்தக் கூட்டமைப்பு உருவாயிற்று. மீனவர்கள் ஒருவர்க்கு ஒருவர் உதவியாய் இருக்க வேண்டும். பிடித்த மீன்களைக் கூட்டாக விற்பனை செய்ய வேண்டும். வேண்டிய கருவிகளையும் கூட்டாக வாங்கி வழங்கிட வேண்டும். ஒவ்வொரு மீனவரும் தாம் பிடிக்கும் மீன்பாட்டில் 1.5 விழுக்காடு (நூற்றுக்கு 0.5 பங்கு) பணத்தை முதுமை நிதிக்குக் கொடுக்க வேண்டும். கடலில் மீனவர்க்கு விபத்து நேரிட்டால் உதவுவதற்கு ஒவ்வொரு மீனவரிடமிருந்தும் மாதம் ஒரு ரூபாய் வசூலித்து விபத்து நிதி சேர்த்து வைக்க வேண்டும்.

மற்றும் கல்வி நிதி ஏற்படுத்த வேண்டும் என இவ்வாறு பலவாறு மீனவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இநதச் சங்கங்களின் கூட்டமைப்பு உருவாயிற்று. மாவட்டத்தில் வாயில்லாப் பூச்சிகளாயிருக்கும் மீனவர்களுக்காக இக்கூட்டமைப்பு குரல் கொடுக்கும் நோக்கம் கொண்டதாகும். இக் கூட்டமைப்பைத் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்புடன்) சேர்க்கவும் 1985இல் நடவடிக்கை எடுக்கப்படும். அப்பொழுது திருவனந்தபுரம், கொல்லம், கன்னியாகுமரி மாவட்டக் கூட்டமைப்புகள் மூன்றும் ஒன்று சேர்ந்தவை ஆகும்.

முட்டத்தில் படகு கட்டும் மையம்

முட்டத்தில் மீன்வளத் திட்டம் தொடங்கிய போது வெளிப்பொருத்து இயந்திரங்களைச் சீராக வைத்திருப்பதற்கு

வேண்டிய வசதிகளுடன் கூடிய தொழிற்கூடம் ஒன்றையும் ஏற்படுத்தினோம். மீனவர்கள் தேவைப்படும்போது வாங்கிக்கொள்வதற்காக இயந்திரத்துக்கு உரிய உதிரிப் பாகங்களும் அங்கு வைத்திருந்தோம்." தந்தை பியர் ஜிலே ஓர் பொறியியலாளர். அவர் கே.இஎஸ்.எஸ்.எஸ். நிறுவனத்துக்குப் பணி செய்து உதவ முன்வந்ததும், கண்ணாடி இழைப் படகுகள் கட்டுவதற்குரிய பயிற்சி மையம் ஒன்றை ஏற்படுத்தினோம். வலிவலையுடன் செல்லும் 24 அடி நீளப் படகுகளுக்கும் வேறு 32 அடி நீளப் படகுகளுக்கும் கண்ணாடி இழை வார்க்க அச்சுக்களைத் தயாரித்து வைத்தோம். இரண்டு 32 அடிப் படகுகள் செய்யப் பட்டன. இவை கட்டுமரங்களைப் புதிய மீன்வள எல்லைக்குக் கட்டி இழுத்துச் செல்வதற்காகும். நான்கு வலிவலைப் படகுகள் மீனவர் சங்கங்களுக்குத் தாயரித்துக் கொடுக்கப்பட்டன. ஆனால் இவை பயன்தரவில்லை.

படகு கட்டப் பயிற்சி அளிக்கும் இந்த மையத்தைப் படகு கட்டும் உற்பத்தி மையமாக மாற்றி அமைத்தோம். கட்டுமரத்துக்கும் வள்ளத்துக்கும் மாற்றாகப் புதிய படகுகளைச் செய்து கொடுப்பதற்குத் தகுந்த தொழில்நுட்பம் காண்பதற்காக இந்த ஏற்பாடு.

இந்தியா நெடுகிலும் மீனவர்களின் நிலைமை மோசமாகி வருகிறது. மீனவர்களுக்குத் துயர் துடைப்பு உதவி செய்வது, கடல் அரிப்பைத் தடுக்கச் சுவர் எழுப்புவது, வீடு கட்டிக் கொடுப்பது, சாலை அமைப்பது, போக்குவரத்து வசதி செய்து தருவது முதலிய திட்டங்களால் அரசு மீனவர்களின் கவனத்தைத் திருப்ப முயன்று கொண்டிருக்கிறது. ஆனால் இழுவலை விசைப் படகுகளால் ஆயிரம் ஆயிலம் மீனவர்களுக்கு மீன் பிடிக்கக் கூடிய இடங்கள்

இல்லாமல் போகின்றனவே. இந்த உண்மை நிலைமையைக் கவனிக்க அரசினர்க்குத் துணிவு கிடையாது. மீனவர்கள் இந்த நிலைமையை உணரத் தொடங்கிவிட்டார்கள், அதனால் ஒன்று சேர்ந்துப் போராட முற்படுகிறார்கள்.

மீனவர்கள் தனியாக நின்றால் அவர்கள் நோக்கம் நிறைவேறாது. பாட்டாளிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள், ஆதி திராவிடர்கள் முதலிய ஒதுக்கப்பட்ட மக்களோடு சேர்ந்து பாடுபடவேண்டும் என்பதை அவர்கள் மெல்ல மெல்லக் கண்டுகொண்டுவருகிறார்கள். காலத்தின் குறிகளில் இது ஒன்றாகும். வாயில்லாப் பூச்சிகளான இம் மக்கிளின் கூக்குரலைத் திருச்சபை புரிந்துகொள்ள வேண்டும் என்று வேண்டுகிறோம்... காலம் கடக்கு முன் புரிந்து கொள்ள வேண்டும். காலம் வந்தாயிற்று, விண்ணரசு நெருங்கிவிட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்.

நவம்பர் 1983

௯. திருமலை மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

நாகர்கோவிலுக்கு ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருமலை என்னும் குன்று. அதன் அடிவாரத்தில் தேசிய நெடுஞ்சாலையின் ஓரமாகச் சிறிது தொலைவுக்குப் பல குடிசைகளைக் காணலாம். அவை பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலாளர்களின் குடிசைகள். இடையிடையே ஓட்டு வீடுகளையும் காணலாம். சாலையின் மறுபக்கம் வரிசையாகப் பல நல்ல வீடுகள் உள்ளன. இவற்றுக்குப் பின்னால் ஓலைக்கூரை வேய்ந்து குடிசைகள் பல இருப்பதைப் பார்த்தோம். அது தலை முறை தலைமுறையாக மண்பாண்டத் தொழில் செய்யும் மக்கள் வாழும் குடிசைப் பகுதி. இவர்களுடைய தொழில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். சிந்து நதியை ஒட்டி ஒரு வளமான நாகரிகம் இருந்தது. மண்ணால் பாண்டங்கள் வனையும் கலை எவ்வளவு முக்கியமானது என்பதை மொகஞ்சதாரோ, ரப்பா அகழ்வாய்வுகள் புலப்படுத்தியுள்ளன. பானைகளைச் சுடும் சூளை, இரண்டு கற்களின் மேல் சுழலும் சக்கரம், களிமண் பானைகளின் வரன்முறையான வடிவம் இவை எல்லாம் சுங்காங்கடையில் மண்பாண்டத் தொழிலாளர் கிராமத்தில் இன்றும் காணக் கிடைக்கின்றன.

மண்பாண்டத் தொழிலாளருக்குப் பானையை வைத்துத்தான் பிழைப்பு. அவர் அந்தக் களிமண் பானைகளுக்கு உயிர் கொடுக்கத்தன் உயிரைக் கொடுத்து உழைக்கிறார். இதில் அவர் குடும்பமே ஒத்துழைக்கிறது. அருகில் உள்ள

காய்ந்து போன குட்டைகளிலிருந்து களிமண்ணை வெட்டி எடுத்துத் தலைச் சுமையாகக் கொண்டு வருகிறார்கள். களியில் கலப்பதற்கு வேண்டிய மணலும் பானைகளைப் பளபளவென ஆக்குவதற்கு உதவும் சிவப்புக் களிமண்ணும் மாட்டு வண்டியில் வந்து சேரும். களிமண்ணில் இவற்றைச் சேர்த்துக் காலால் மிதித்து மிதித்து ஒன்றுபோல் கலப்பார்கள். இப்பொழுது இம்மண்ணை எந்த வடிவத்திலும் வனைந்திடலாம். தொட்டால் ஒட்டும் இக்களிமண்ணைத் தொழிலாளர் ஒரு கல்லின் மேல் சுழலும் சக்கரத்தில் வைக்கிறார். உயிரற்ற சடப் பொருளாகிய இக் களிமண்ணிலிருந்து புதியதொரு பொருள் படைக்கப்படுகிறது உயிருள்ள பொருள் போல அது எவ்வளவு அழகாக விளங்குகின்றது! சில நொடிப் பொழுதில் அடிப் பாகம் இல்லாத இந்தப் பானை சக்கரத்திலிருந்து அப்படியே வெட்டி எடுக்கப்பட்டு ஒரு குழந்தை கையில் கொடுக்கப்படுகிறது. குழந்தை அதைக் கொண்டுபோய் நிழலில் காய வைக்கிறது. தொழிலாளர் இப்படி ஒரே மூச்சாக இரண்டு மணி நேரம் வட்டுச் சுழற்றிப் பானைகள் வனைந்தபின் களைத்துப் போய், பக்கத்திலுள்ள தேநீர்க் கடைக்கு எழுந்து செல்கிறார்.

இவர் தேனீர் அருந்தி இளைப்பாற, இவர் மனைவி தன் வேலையை மேற்கொள்கிறார். வனைந்த பானை உலர்ந்து போகுமுன் அதைத் தட்டிக் கொட்டிச் சரி செய்ய வேண்டும். ஒரு கை பானைக்குள்ளே தட்டையான கல் ஒன்றைப் பிடித்திருக்க, மறு கையால் மரக் கொட்டாப்புளியால் பானையின் வெளிபுறத்தைத் தட்டிக் கொட்டிப் பானையின் அடிப் பாகம் முற்றும் அடைபடும்படி செய்வது இப் பெண்மணியின் வேலை. நேரம் ஓடுகிறது பானைகள் விரைவில் உலர்ந்து போகக்



பொருளாதார பிரச்சனை

கூடாதே என்று அவர் தன் பழைய புடவையால் அவற்றை மூடி வைக்கிறார். களிமண் உலர்ந்து போகுமுன் பானைகளைத் தட்டிக் கொட்டி முழுமையாக்கா விட்டால் கணவரிடம் இவருக்குத் தட்டலும் கொட்டலும் கிடைக்கும். சமையல் செய்ய நேரம் கிடையாது, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள நேரம் கிடையாது. குடிசையைத் தூர்த்துப் பெருக்க நேரம் கிடையாது. பானைதான் அரசாட்சி, குடும்பத்தார் அனைவம் அதற்குக் கொத்தடிமைகள்!

வேலை இன்னும் முடியவில்லை. வனைந்து முடிந்தபானைகள் உலர வேண்டும். குடிசை நிரம்ப பானைகள் தாம். கால் நீட்டிப் படுத்துறங்க இடம் கிடையாது. மழை பெய்தாலோ சொல்ல வேண்டாம் – ஒரே சேறும் சகதியும்தான் காண்போர் நெஞ்சத்தை உருக்கும். கிராமத்தில் ஒரு சூளை. அதில் யார் பனைகளைச் சுட்டெடுப்பது என்று குடும்பம் ஒவ்வொன்றும் அதனதன் முறை வரும் வரை காத்திருக்க வேண்டும். அவ்வளவு காலம் காத்திருக்க முடியாமல், பச்சைக் களிமண் பானைகளைக் குறைந்த விலைக்கு வியாபாரிகளிடம் விற்றுவிடுகிறார்கள். கைக்கு வரும் காசு கடன் அடைக்கவே சரியாயிருக்கும். அடுத்தபடி பானைகள் வனைவதற்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்காசு மீண்டும் கடன் வாங்க வேண்டும்.

பிள்ளைகள் பள்ளிக்கூடம் பார்ப்பதில்லை. பெற்றோர்களுக்கு உதவி செய்கிறர்கள். விரைவில் இவர்களும் அந்தத் தொழிலைக் கற்றுக் கொள்கிறார்கள். பச்சைக் களிமண் பானையைத் தட்டிக் கொட்டி அடிப்பாகத்தை அடைக்கத் தெரியாத பெண்ணுக்குத் திருமணம் ஆகும் வாய்ப்பு மிக மிகக் குறைவாகும். இந்த அடிமை நிலையிலிருந்து விடுபட விதி அவர்களுக்கு வழி வைக்கவில்லை!



ஆனால் உண்மையில் வழி இருக்கத்தான் செய்கிறது. அது நெடுநாளைய வழி. அவர்கள் தங்களுக்குள் உறவாடி ஒன்றுசேர்ந்து உழைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் அதுவே வழி. அதற்கு அவர்களைக் கூட்டிச் சேர்த்து ஒன்றுபடுத்த வேண்டும். இங்கே குன்றின் அடிவாரத்தில் வாழும் துறவியரும், மருத்துவ விடுதி வைத்து உதவ முறையாக வந்து போகும் சமுதாய சுகாதாரப் பணியாளர்களும் சேர்ந்து முதன் முதல் இங்குள்ள மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு அந்த வழியைத் திறந்து வைக்க ஓர் ஏற்பாடு செய்தார்கள். தொழிலாளர்கள் சிறு சேமிப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கிப் பங்கு மூலதனமாக நூறு ரூபாய் சேர்த்தார்கள். வியாபாரிகளிடமும் வட்டிக் கடைக்காரர்களிடமும் அவர்கள் வாங்கியிருந்த கடன்களை அடைக்க வங்கிக் கடன்கள் பெறப்பட்டன. இதற்கு இரண்டு, மூன்று ஆண்டுகள் பிடித்தது. கடைசியாக, அவர்கள் மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமாக ஒன்றுபட்டு உழைக்க ஒப்புக் கொண்டார்கள். அதன்படி பின்வரும் ஏற்பாடு செய்யப்பட்டது.

வேலைக்கான கொட்டில்களையும் சூளையையும் கேஎஸ்எஸ்எஸ் கட்டிக் கொடுக்கும், கருவிகளையும் வாங்கிக் கொடுக்கும். தொழிலாளர்கள் ஏழு, ஏழு பேர்கள் கொண்ட பல குழுக்களாகச் சேர்ந்து கொள்வார்கள், அவரவர்க்கு என்னென்ன பொறுப்பு என்பதும் பிரித்துக் கொடுக்கப்பட்டும். அதாவது ஆண்கள் இருவர் களிமண்ணைத் தயார் செய்து, பானைகளை வனைய வேண்டியது, இளைஞன் ஒருவன் சக்கரத்திலிருந்து பானைகளை எடுத்துச் சென்று நான்கு பெண்களிடம் கொடுக்க வேண்டியது. அவர்கள் அவற்றைத் தட்டிக் கொட்டி முழுமையாக்க வேண்டியது.



குழுக்கள் முறை வைத்துச் சூளையைப் பயன்படுத்திக் கொள்ளும். பொதுவாக ஒரு குழு மாதத்துக்கு ஒரு முறை அதில் தன் பாண்டங்களை வைத்துச் சுட்டெடுக்கும். விரைந்து தொழில் செய்வார்களானால் அதற்கும் குறைந்த காலத்திலேயே சூளையைப் பயன்படுத்த முடியும். முதல் தரமான பானைகளைச் சங்கமே விலைக்கு வாங்கிக் கொள்ளும். மற்றப் பானைகளைத் தொழிலாளர்களே விற்றுக் கொள்வார்கள். சங்கத்தின் நிர்வாகச் செலவுகளுக்குத் தொழிலாளர்களிடமிருந்து சிறு பணிக் கட்டணம் பிரிக்கப்படும்.

பல ஆண்டுகளாகக் கடன் கடன் என்று காலம் கழித்து வந்த அவர்கள் இப்பொழுது தங்கள் கூலியில் நூற்றுக்குப் பத்தைச் சேமித்து வைக்கிறார்கள். இது மூலதனப் பங்காகிய ரூ.100 சேர உதவுகிறது. தேவைப்படும் போது வங்கிக் கடனை அடைக்கவும் பயன்படுகிறது. இதற்கு முன்பெல்லாம் அவர்கள் முன்பணம் கேட்டு வாங்குவதே வழக்கம், அன்றாடச் செலவுக்கும் விறகு வாங்குதற்கும், துணி வாங்குவதற்கும் மருந்துச் செலவுக்கும் எல்லாவற்றுக்கும் முன்பணம்தான் வாங்கிவந்தார்கள்.

தோற்றம்:-

மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்துக்கு முதன் முதலாக உறுப்பினர்கள் சேர்ந்தது 1976 ஜூலை மாதம் ஆகும். அதன் சமுதாய மையத்தில் ஐந்து குடும்பங்கள் வேலை செய்யலாயின. இம் முதல்முயற்சி நல்ல வரவேற்பு பெற்றது. இவர்களுடைய பாரம்பரைத் தொழிலுக்கு வேண்டிய வேலை வசதிகளைச் செய்து கொடுக்க ஒரு தொழிற்கூடம் கட்ட வேண்டும். அதற்கு வசதியான இடம் எங்கே கிடைக்கும் என்று தேடினோம். சாலை ஓரமாக சர்வே நம்பர் 809-1 உள்ள 66 சென்டு நிலம் ஒன்றில் ஒரு குட்டை இருந்தது. நெல்வயல்களை அடுத்து இருந்த

இந்த நிலமும் குன்றோடு சேர்ந்து மறைமாவட்டத்துக்குச் சொந்தம் என்பதைக் கண்டு பிடித்தோம். அதை ஒரு சிறிய குளம் என்று மாற்றி நெல்வயல் உரிமையாளர்களின் நெருக்குதலுக்கு இணங்கக் கிராம அதிகாரியர் அநநிலத்தைப் புறம்போக்கு என்றுகுறித்து வைத்திருந்தார்கள். பேராசை பிடித்த நிலச் சுவான்தார்கள் விழித்துக் கொள்வதற்கு முன் நிலத்தை வசப்படுத்தி அதில் ஒரு கொட்டிலும் கட்டிப் புழக்கத்துக்கும் கொண்டு வந்துவிட்டோம். தென் பக்கத்து வயல் 1.18 ஏக்கர் அதையும் மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்துக்காகக் கே.எஸ்.எஸ்.எஸ் பெயரில் 28–10–1981 அன்று வாங்கிக் கொண்டோம்.

அறிக்கை :-

1982 நவம்பர் 6–ஆம் நாள் சங்கம் பொன்மலை திருமலை மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம் என்று அதிகாரபூர்வமாகக் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்கள் ஆணையத்தின் கீழ்ப்பதிவு செய்யப் பெற்றது. நிலமும் கட்டடங்களும் சங்கத்துக்கு மாதம் ரூ.200– வாடகைக்குக் கொடுக்கப்பட்டன.

தகுந்த தொழில்நுட்பத்தைக் கயைாண்டால் குடிசைத் தொழில்களை எவ்வளவோ மேம்படுத்தலாம். எனவே சூளையைத் திருத்தி அமைத்தோம். பானை வனைவதற்குக்கு களிமண்ணை வைத்துக் கையால் சுற்றும் சக்கரங்களுக்கு மாற்றாக மின்விசையால் இயங்கும் பலவகைச் சக்கரங்களைக் கொடுத்தோம். கிக் சக்கரம் என்னும் புதிய தொரு சக்கரம் அறிமுகம் செய்யப்பட்டது. அமெரிக்க அருட்சகோதரி மைக்கல் ஓ.எஸ்.பி. அவர்கள் தான் இவ்வகையான சக்கரத்தை முதன் முதல் கொண்டுவந்தார். அவர் இங்கு ஆறு மாதம் இருந்து உதவி புரியவும் முன்வந்தார். அவர் இங்கு இருந்த அந்த

ஆறு மாத காலத்திற்குள் ஒரு பெரிய பண்பாட்டு மாற்றத்தைக கொண்டுவந்துவிட்டார். அவர் கொண்டுவந்து காட்டிய கிக் சக்கரத்தில் மண்பாண்டம் வனைவதற்கு அவர் பெண்களுக்குக் கற்றுக் கொணடத்துவிட்டார். மகளிருக்கு இதனால் ஒரு விடுதலை உணர்வும் பெரு மகிழ்ச்சியும் பிறந்தது. ஏன்? இப்பொழுது தாங்களும் ஆண்களைப் போலத் தொழில் செய்ய முடியும் என்று ஆனதால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள பண்பாட்டு உறவு ஒரு புத்துருப் பெற்று உயர்ந்தது. வேலை ஒழுங்குகளில் உள் நடைமுறை காரணமாக அவர்கள் இப்பானை வனைவதைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவில்லை. ஆயினும் அவர்கள் மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தங்களுக்குரிய பொறுப்பான பணிகளை ஏற்றுத் தொடர்ந்து செயலாற்றினர்.

கர்ப்பவதிகளைக் கவனித்தல், தொற்றுநோய்த் தடுப்பு மருந்து கொடுத்தல், சத்துணவு, கல்வி, உடல்நலம் காத்தல், துணை உணவு முதலிய பணிகள் மூலம் குடும்பம் என்பது ஒரு புதிய மனித மாண்பு உடையதாயிற்று.

சமுதாய அமைப்பாளர் ஒருவர் கிராமத்தில் தாய் தகப்பன்மார்களைக் கண்டு பேசி அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்புவது எவ்வளவு நன்மையாகும் என்று அவர்களுக்கு உணர்த்துகிறார். பள்ளி செல்லும் பருவத்ததைத் தாண்டியவர்களுக்கு தனியாக எழுத்தறிவு புகட்டப்படுகிறது. இதனால் இவர்கள் வங்கியில் கடன் வாங்குவதற்கு உரிய பத்திரங்களில் கையெழுத்திடவும், தங்களுக்கு வர வேண்டிய கூலியைக் கணக்குப் பார்த்துக் கொள்ளவும், வாங்கும் பொருட்களின் செலவைக் கணக்கிடவும் படித்துக் கொள்கிறார்கள். குடியிருக்க நல்ல வீடுகள் கட்டிக்

கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளின் கட்டுமானத்ததுக்கு ஆன செலவை அவர்கள் சிறுகச் சிறுகத்தவணை முறையில் கட்டித் தீர்ப்பார்கள்.

1978 ஜூலை 25–ஆம் நாள் மறக்க முடியாத ஒரு நன்னாள்.. அன்றுதான் அவர்கள் தங்கள் புதிய வீடுகளில் குடிபுகுந்த பொன்னாள்... விரைவில் எங்கும் வீடுகளைச் சுற்றிக் காய்கறித் தோட்டம் போட்டனர், மரங்கள் வைத்து வளர்க்கின்றனர், மரவள்ளிக் கிழங்கு பயிராகின்றது. புதியவீடு இருக்கும் மனை சிறிதுதான் என்றாலும் அங்கே வெள்ளாடுகளும், ஏன் பசுமாடுகள் கூட வைத்துப் பேணப்படுகின்றன. ஏழைகளின் கண்கள் ஒளி வீசத் தொடங்கியுள்ளன. கண்ணியமான குடும்ப வாழ்க்கை உருவாகும் வாய்ப்பு உண்டாகியுள்ளது. வருங்காலம் சிறந்து வளங்கும் என்ற நம்பிக்கை மலர்ந்துள்ளது.

மண்பாண்டத் தொழிலாளாகள் ஒரு புதிய வாழ்க்கை முறை கண்டுள்ளார்கள். விழுந்து எழுந்துதான் குழந்தை நடக்கப் படிக்கிறது. விழுகின்ற ஒவ்வொரு தடவையும் ஒரு புதிய அனுபவம் உண்டாகிறது. அதனால் தன்னம்பிக்கை கூடுகிறது. இத்தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கைச் சூழலுக்கு மிகமிகப் பொருத்தமான ஒரு வழியைக் கண்டு கொள்வதற்குப் பல்வேறு முயற்சிகள் உதவியுள்ளன.

இந்தக் கடைசிச் சில ஆண்டுகளாக மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களின் பாடுகளில் கலந்துகொண்டு உழைத்தது கடினமாகத்தான் இருந்தது. அதனால் என்ன? அவர்கள் ஒன்றுபட்டு உழைக்கும் புது வழி ஒன்றைக் கண்டு வருகிறார்கள். மகளிரின் வேலையைப் பாராட்டப் படித்துவருகிறார்கள். அவர்களுக்கு நல்ல கூலியும்

வழங்குகிறார்கள். இன்னும் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. குடிப் பழக்கம், தவறான தலைவர்கள், பள்ளிப் படிப்பில் நாட்டம் இன்மை, அவர்கள் தொழிலின் எதிர்காலம் பற்றிய கண்ணோட்டம் இல்லாமை முதலிய சிக்கல்கள் இருந்தும் அவர்கள் முன்னேறப் பழகிவிட்டனர். சமுதாயத் தலைவர்களின் துணை கொண்டு அவர்கள் சிறப்பான எதிர்காலம் காண்பர் என நம்பலாம்.

ஆகஸ்ட். 1985

10. திருமலை ஆசிரம சமூக மையம் வரலாற்றுப் பின்னணி

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் உள்ளுணர்வைப் பின்பற்றி அதன் தீர்மானங்களைச் செயலாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 1969–இல் பெங்களூரில் நடைபெற்ற அனைத்திந்தியக் கருத்தரங்கு இந்தியத் திருச்சபையின் மறுமலர்ச்சிக்கான இயக்கம் ஒன்றைத் துவக்கி வைத்தது. அந்தக் கருத்தரங்குக்கு முன்னேற்பாடாக மறைமாவட்டக் கருத்தரங்குகள் நடைபெற்றன. இக்கருத்தரங்குகளில் பொது நிலையினர் முதல் ஆயர்வரை இறைமக்கள் அனைவருடைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இவை பல தீர்மானங்களை நிறைவேற்றிப் பல திட்டங்களை வகுத்து அனைத்து இந்தியக் கருத்தரங்குக்கு எடுத்து அறித்தன. இத் தீர்மானங்கள், திட்டங்கள் பெரும் பான்மையும் எழுதிய தாளைவிட்டு எழுந்திருக்கவில்லை. சென்ற 20 ஆண்டுகளாக இந்தியத் திருச்சபையில் நடந்த கருத்தரங்குகளுக்கும் நிறைவேறிய தீர்மானங்களுக்கும் கணக்கில்லை. அவை செயல் வடிவம் பெற்றதுதான் இல்லை.

கிறிஸ்தவ ஒன்றிப்பு, ஒருமைப்பாடு, தெய்வானுபவத் தியாமம், ஏழைகளுக்குப் பணிவிடை இவற்றை முதன்மையாக்க கொண்ட ஆன்மீக மறுமலச்சி மையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பது எங்கள் மறைமாவட்டத்தின் கருத்தரங்கு நிறைவேற்றிய தீர்மானங்களில் ஒன்றாகும்.

வத்திக்கான் சங்கம் முடிந்தவாக்கில் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்கான உண்மையான இயக்கம் ஒன்று தோன்றிற்று. இதில் எங்கள் மறைமாவட்டம் முன்னணியில் நின்றது. எல்லாக் கிறிஸ்தவத் திருச்சபைகளின் குருமார்களையும் கூட்டுவித்து இறையியல் மறையியல் பொருள்கள் பற்றிக் கலந்துரையாடும் பண்போடு தவறாமல் பல மாநாடுகள் நடத்தினோம். கோட்டாறு சமூக சேவைச் சங்கம் (கே.எஸ்.எஸ்.எஸ்) உணவு உற்பத்திக்கும் சமுதாய நல்வாழ்வுக்குமான கிறிஸ்தவ ஒற்றுமைச் சங்கம் என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கிப் பதிவு செய்தது. அதில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள எல்லாக் கிறிஸ்தவத் திருச்சபைகளும் இடம் பெற்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் வறண்டு கிடக்கும் பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு உதவும் துரப்பணக் கருவி ஒன்றை ஆப்ரோ என்ற கிறிஸ்தவ ஒருமைப்பட்டுத் தொண்டு நிறுவனம் கொடுத்துவ முன் வந்தது. நடுத்தர விவசாயிகளுக்கு இரு ஒரு மெய்யான உதவியாகும், ஆனால் ஏழைகளுக்குப் பயனில்லை.

இந்தக் கிறிஸ்தவ ஒற்றுமைச் சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்தவத் திருச்சபைகள் செய்யும் சமுதாய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு நடத்தவும் ஏற்பாடு செய்தது. அருட்திரு ஹூத்தார் அவர்களின் திறமை மிக்கத் தலைமையில் ஆய்வு நடந்தது. ஆய்வின் விவரங்கள் 1972-இல் வெளியிடப்பட்டன. அதன் துணையால் கேஎஸ்எஸ்எஸ் தனது பணியை நன்கு சீர்தூக்கிப் பார்த்து தேவையான மாறுதல்களைச் செய்துகொள்ள முடிந்தது.

அப்பொழுது கங்காங்கடையில் உள்ள ஒரு சிறு குன்று விலைக்கு வந்தது. தேசிய நெடுஞ்சாலை ஓரமாக அழகாக அமைந்திருந்த அக் குன்று நாகர்கோவிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது. ஆகவே அதை ஒரு நியாயமான விலைக்கு வாங்க மறைமாவட்டம் முடிவு செய்தது. 20-12-1969 அன்று கிரயப் பத்திரம் பதிவாயிற்று. இவ்வாறு 123.5 ஏக்கர் நிலம் கைக்கு வந்தது. மலையடிவாரத்தில் இருந்த ஆதி திராவிடக் கிராமமும் இந்த எல்லைக்குள்ளேதான்.

இடம் பயிர் செய்வதற்கு ஏற்றதா என்று ஆராய்ந்து பார்க்கும் பொறுப்பு கேஎஸ்எஸ்எஸ் நிறுவனத்திடம் விடப்பட்டது. குன்றினைச் சுற்றி அதன் அடிவாரத்தை ஒட்டி ஒரு சாலை அமைத்தார்கள். பிச்சிப்பூத் தோட்டம் போட்டார்கள். அங்கு காடாக வளரும் தைலம் புல்லிலிருந்து புல் தைலம் வடித்து எடுத்தார்கள். சில இடங்களில் கிணறு வெட்டப்பட்டது. ஆனால் பயனில்லை. குன்றின் அடிவாரத்தில் இருந்த சிறிய தென்னந் தோப்பு பருவ மழை தவறாது பெய்யாமையால் பட்டுப் போயிற்று.

குருசுமலை ஆசிரமத்தின் கிளை ஒன்று அமைக்கும்படி தந்தை ஃபிரான்சிஸ் ஆச்சாரியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. துறவி ஒருவர், அருட்சகோதரர் ஒருவர் ஆக இருவர் வந்து நிலத்தில் இருந்த நெற்களஞ்சித்தை ஆசிரமம் ஆக்கித் தங்கினார்கள். என் கனவுகளில் ஒன்று இவ்வாறு நனவு ஆயிற்று.

கடந்த இருபது ஆண்டுகளாக, நான் மேய்ப்புப்பணி என்ற வகையில் மக்களின் முழுமையான மனித வளர்ச்சிக்காக உழைத்து வந்துள்ளேன். முழுமுதல் பரம் பொருளைத் தேடும் ஓர் உலகம் இன்றும் வாழும் கிறிஸ்துவை சந்தித்து அதனால்



ஒரு பண்பாட்டு இணைப்பு ஏற்பட வேண்டும் என்று முயன்று வந்துள்ளேன். இந்தியாவில் திருச்சபை அதன் அன்புப் பணிகளாலும், கல்வி புகட்டுவதில் காட்டும் கட்டுப்பாட்டினாலும், பல பேர்களையும் ஒன்று திரட்டிச் செயலாற்றும் திறமையினாலுமே பலருக்குத் தெரியவந்திருக்கிறது,

ஆனால் ரிஷிகள், முனி புங்கவர்கள் ஆகியோருக்கு உரிய அழைப்புக்கு உரிய விடை அதனிடத்தில் நாலு பேருக்குத் தெரியுமாறு சொல்கக் கூடிய வகையில் ஏதும் இல்லையே என்று நான் வேதனைப்பட்டேன். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில முயற்சிகளே தோன்றியிருந்தன. அவற்றுள் ஒன்றுதான் எனக்கு மிகவும் பிடித்தமான சாந்திவனம் ஆசிரமம், இதனை இந்தியா வந்த முதல் சாம் குரு தந்தை மொன்சானான் அவர்கள் ஃபிரெஞ்சு ஆசீர்வாதப்பர் சபைக் குருவான தந்தை லெசூ அவர்களுடன் சேர்ந்து தொடங்கியிருந்தார்.

தெற்கு பெல்ஜியத்தில் ஃபோர்கெக் லெஸ் சிமாய் என்னும் இடத்தில் இருந்த ட்ராப்பிஸ்ட் ஆசிரமத்தைச் சேர்ந்த துறவி ஃபிரான்சிஸ் (ஆச்சாரியா) அவர்களுடன் தந்தை மொன்சனான் தொடர்புகொள்ள நான் உதவியாய் இருந்தேன். தந்தை ஃபிரான்சிஸ் தந்தை மொன்சானானுடன் சிறிது காலம் தங்கியிருந்தார், புகுநிலைத் துறவறத்தாருக்குப் பயிற்சியளிப்பாவராக விளங்கினார், அவர் மூலம் தமிழ்நாட்டில் இந்த ஆசிரம வாழ்க்கைக்குப் பலரும் வருவார்கள் என்று அவர் பெரிதும் நம்பினார். ஆனால் தவமுயற்சி நிறைந்த இந்தத் தெய்வானுபவத் தியான ஆசிரம வாழ்க்கைக்குத் தமிழ்க் கிறிஸ்தவ சமுதாயம் தயாராக இல்லை என்று தந்தை ஃ பிரானசிஸ் விரைவில் கண்டுகொண்டார். ஆதலால் அவர் சாந்திவனத்தை விட்டு, ஒரு நிலமும் ஓர் ஆயரும் தேவ

அழைப்புகளும் தேடிக் கேரளத்தை அடைந்தார்.... அவர் வேண்டியதெல்லாம் அவருக்கு விரைந்து கிடைத்தன. மலங்கரா ரீதி ஆயர் ஒருவரும், வானுயர் மலையடுக்குகளில் குருசுமலை என்ற இடத்தல் நிலமும், தேவ அழைப்புக்கு இசைவுதரும் இளைஞர் பலர் வரக்கூடிய வாய்ப்பும் அங்கு அவர் கண்டார்.

குருசுமலை ஆசிரமத்திலிருந்து துறவியர் இருவர் இங்கு வந்தனர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, காந்தி ஆசிரமப் பண்புடன் ஏழைகளுக்குப் பணி செய்யவும் அவர்கள் வந்தார்கள். சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்கள் ஆதி திராவிடர்கள். பெரும்பாலும் நிலமற்ற தொழிலாளர்கள். நிலத்தை வாரத்துக்குப் பயிர்செய்யும் சிறு குடியானவர்கள், மற்றும் வழிவழியாக வரும் மண்பாண்டத்தொழில் செய்வோர், இவர்கள் வாழ்க்கை நிலைமை படுமோசம். அது மனித மாண்புக்கு ஏற்றதே அல்ல. இத்தகைய மக்களுடன் உறவாட வழி செய்தவர்கள் அந்த இரு சந்நியாசிகள்தாம். சிறந்த நல்ல சூளை ஒன்றை அமைத்து அவர்களுக்கு இவர்கள் கைகொடுத்தார்கள். அவர்கள் கிராமத்தில் முதன் முதலாக ஒரு வீட்டுக்குக் கடைக்கால் எடுத்தவர்களும் இவர்களே. ஆனால் அந்த வீட்டைக் கட்டி முடிக்க முடியவில்லை, காரணம் நிலத்துச் சொந்தக்காரர்களின் எதிர்ப்பு, அவர்கள் நாயர் குடும்பத்தினர் சிலர்.. இது முதல் முயற்சி.

அடுத்தபடியாக 1972–இல் நோய்த் தடுப்புக்கான சுகாதார மையம் ஒன்றைத் தொடங்கினோம், ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பணி இது. சத்துணவு, சுத்தம், குழந்தை நலம் முதலியவை பற்றித் தாய்மார்களுக்கு இங்கு அறிவுறுத்தப்பட்டது. இம் மையம் ஆசிரமத்தின் ஓர் அறையில் இருந்து செயல்பட்டது. சுகாதாரப் பணியாளர்கள் தவறாமல் வீடுகள் சந்திக்கச் சென்றனர். சந்நியாசிகள் ஒரு புறம் சுகாதாரப்

பணியாளர்கள் ஒரு புறமுமாக இவ்வாறு மூன்று, நான்கு ஆண்டுகள் மக்களோடு கொண்ட உறவினால் அவர்களுக்கும் மக்களுக்கிமிடையே ஒருவர்க்கொருவர் நம்பிக்கை மலர்ந்தது.

இதற்கிடையில் என்னுடைய உடல் நலம் படிப்படியாகக் குன்றியவாறு இருந்தது∴ 1973 இல் மேலும் மோசமானதால் நான் பங்குப் பணிகளையும் பார்த்துக்கொண்டு மாவட்டத்தின் சமுதாயப் பணிகளிலும் ஈடுபட இயலாதவனானேன். ஆயரை அணுகி என்னைப் பங்குப் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கும்படி கேட்டேன். இதைப் பற்றி நாங்கள் பேசிய சமயம் நாங்கள் ஐரோப்பாவில் இருந்தோம். நான் ஆயருடைய இல்லத்தில் தங்க விருப்பமா? அல்லது மீன்வளத் திட்டம் நடைபெற்றுவந்த முட்டத்தில் இருக்க விருப்பமா? என்று ஆயர் கேட்டார். நான் திருமலையில் சந்நியாசிகளுடன் தங்கி அவர்களைப் போல் இருக்க விரும்புவதாகக் கூறினே். சுங்கங்கடைப் பொற்றைக்கு நாங்கள் சூட்டிய பெயர்தான் திருமலை என்பது. எனது பதில் ஆயருக்கு வியப்பாக இருந்தது, ஆயினும் சரி என்றார்.

1974 சனவரியில் ஆசிரமத்தாருடன் சேர்ந்தேன். மாவட்டத்தில் நடக்கும் சமுதாய மேம்பாட்டு முயற்சிகளிலும் ஈடுபட்டுக்கொண்டு ஆசிரம வாழ்க்கை வாழ்ந்து வரலானேன். ஒரு பழைய கோழிக் கூடுதான் எனது அறை. மிகவும் குனித்துதான் உள்ளே போக வேண்டும். ஆனால் எனக்கு மிக்க மகிழ்ச்சி. எனக்கு வந்த நோய்க்காகவும் ஆண்டவரின் அன்புக்காகவும் அவருக்கு நன்றி பாராட்டினேன். எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றியவர்களின் உண்மை நிலைமை என்னிடத்தில் மீண்டும் ஒரு முறை நனவு ஆமிற்று... நான் சந்நியாச நிலைக்கு வந்துவிட்டதாக எண்ணினேன். அது எல்லவவற்றையும் முற்றும் நீத்த பற்று

அற்ற நிலை, சாதி வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலை, ஏன், சமய வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட நிலை, எவ்வகையான வேறுபாடுகளுக்கும் அப்பால் கடவுளைக் காணும் நிலை.

அடுத்த படியாக, இன்னும் அதிகமாக மௌனமும் தெய்வானுபவத் தியானமும் தேவை என்று சந்நியாசிகள் உணர்ந்ததும், குன்றின் பின்புறம் ஒதுக்கமான ஓர் இடத்தில் நான்கு சிறிய தவச்சாலைகளைக் கட்டினார்கள். அங்கே அனைவரும் கூடி வரக் கூடிய மண்டபம் ஒன்றும், ஒரு சிறு மன்றாட்டுக் கூடமும் கட்டினார்கள். 1974 நவம்பரில் இந்தக் துறவற ஆசிரமம் சந்நியாசிகள் தங்குவதற்குத் தயாராயிற்று. பழைய ஆசிரமம் ஒரு சமுதாய மையமாக மாறிற்று. மண்பாண்டத் தொழில் செய்யும் குடும்பங்கள் சில இருந்தன அல்லவா? அவர்களுக்கு நெடுஞ்சாலையை ஒட்டி நல்லதோர் இடம் கிடைக்கும்வரை இங்கே இந்தப் பழைய ஆசிரமத்திலே தற்காலிகமாகத் தொழிற்கூடம் அமைந்தது. கிராமத்துப் பெண்களுக்கும் இளமகளிர்க்கும் வேலை வாய்ப்பு வழங்குவதற்காகக் கைவினை மையம் ஒன்றும் அங்கு உருவாயிற்று. இந்தக் கைவினை மையமே பின்னர் சர்வோதய சங்கத்தின் மேற்பார்வையில் நூற்பு – நெசவு மையம் ஆயிற்று. தாய்மார்கள் வயலில் வேலை செய்யும் போது, விறகு பொறுக்கவும் புல் பறிக்கவும் குன்றுகளுக்குப் போயிருக்கும் போதும் அவர்களுடைய குழந்தைகளை வைத்துக் கவனிப்பதற்குக் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் மழலையர் பள்ளி ஒன்றும் தொடங்கப்பட்டன. 1975 முடிவதற்குள் சமூகநல வளர்ச்சித் திட்டத்து அலுவலகமும் சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி மையமும் திருமலைக்கு வந்தன.

இப்படித் தெய்வானுபவத் தியானத்தில் ஈடுபடும் சந்நியாசிகளும் சமூகப் பணிகளில் மூழ்கியிருப்போரும் ஒரே இடத்தில் சேர்ந்து வாழ்வது துறவியருக்கும் மனநிறைவு தரவில்லை எங்களுக்கும் மனநிறைவு அளிக்கவில்லை. இது குறித்து நெடுநாள் ஆழ்ந்து சிந்தித்தோம். இறைவன் திருவுளம் யாது என உணர்ந்துகொள்ளச் செபித்தோம். அதன் பின்னர் முடிவு எடுத்து சந்நியாச ஆசிரமத்துக்கும் சமுதாய மையத்துக்கும் இடையில் திறந்த நிலை ஆசிரமம் ஒன்றை நிறுவினோம். இது 1976 இறுதியில் ஆசீரமவாசிகளையும் நண்பர்கள் மற்றும் காண வருவோரையும் வரவேற்கத் தயாரானது. இது ஒரு புதிய குழும வாழ்க்கை. இப் பரிசோதனை முயற்சியில் சேர்வதற்கு, ஆசிரமத்து எளிய வாழ்க்கை முறையையும் ஏழைகளோடு பாடுபடும் தீவிர முயற்சியையும் ஒன்றாயிணைக்க விரும்புவோர் வரவேற்கப்பெற்றனர்.

திறந்த நிலை ஆசிரமத்து ஆன்மீகம்

ஆசிரமத்தின் சூழ்நிலை அமைதி குடிகொண்ட ஒன்று, அங்கு மௌனமும் இறைவனை வேண்டும் மனமும் கொலுவீற்றிருக்கும். இதனால் முழுமுதற் பரம்பொருளைத் தேடுவது தீவிரமான ஆன்மீகத் தேட்டம் ஆகிறது. இத்தகைய ஆன்மீகத் தேட்டம் இல்லாவிடில் சமுதாயப் பணிகளில் ஈடுபடுவது பயனற்றதாகும். ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், கரும மார்க்கம் என்ற ஆன்மீக வழிகள் மூன்றிற்கும் ஆசிரமம் துணைசெய்கிறது. அவரவர் உள்ளுணர்வுக்கு ஏற்ப இம் மூன்றில் ஏதேனும் ஒன்று அதிக அழுத்தம் பெறும். ஞானம், பக்தி, செயல் ஆகிய இம் மூன்றையும் ஆசிரம வாழ்க்கையில் ஒன்றிணைக்க வேண்டும் என்பதை ஜோதி சாஹி நன்றாகச் சொல்லயிருக்கிறார்.

கிறிஸ்தவத் தெய்வானுபவத் தியானி ஒருவர், ஆணாயினும் பெண்ணாயினும், உண்மையாகவே இறைமகனின் ஊனுருஏற்பில் பங்கு கொள்ள வேண்டுமானால் அவர் சமுதாயம் இருக்கின்ற நிலைமையையும் அதனை மாற்றி நன்னிலைக்குக் கொணர வேண்டிய தேவையையும் ஒருபோதும் புறக்கணிக்க முடியாது. அதே சமயம், கடவுளோடு ஆழ்ந்து ஒன்றித்திருக்க வேண்டுமென்ற உள்ளார்ந்த அகக் காட்சியும் ஒருமுனைப்பான நாட்டமும் இல்லாவிடில் மக்களுக்கு விடுதலை அளிப்பதாகச் செய்யும் முயற்சி உண்மையில் அவ்வகை முயற்சி ஆகாது. சுருங்கக் கூறின் தெய்வானுபவத் தியானம் இன்றி உண்மையன செயல் இல்லை. மக்கள் பணியே எல்லாம் என்ற வாழ்க்கை அமைப்பு போதுமானது அல்ல என்று படுகிறது. ஆதலால் தன்னுணர்வை உயர்த்துவதையே குறிக்கோளாக கொண்டதோர் ஆசிரமமே பொருத்தமானதாகும். மக்களுக்கு வழிகாட்டும் தலைவர்கள் இத்தகைய ஆசிரமத்துக்கு வந்து தாங்கள் கண்கூடாகக் காண்கின்ற உண்மை நிலைமையைச் குறித்து ஆழ்ந்து சிந்திக்கவும் சிந்தித்து மன்றாட்டினாலும் தியானத்தினாலும் ஆழமான அகக்காட்சியும் நம்பிக்கையும் பெற்றுத் தங்கள் சமூதாய மேம்பாட்டுச் செயல்களைத் தொடர முடியும்.

இந்த ஆசிரம ஆன்மீகத்தின் இன்றியமையாத கூறுகளைச் சுருங்கக் கூறின், அவை இவை:

இந்திய மரபுப்படியும், இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்பவும் எளிமையன வாழ்க்கை முறை கடைப்பிடித்தல்.

இயேசுவைப் பின்பற்றி இறைவனை வேண்டுவதிலும் இருப்பதைப் பகிர்ந்து கொள்வதிலும் ஒன்றிணைந்தவர்களாய்

வாழும் அமைப்பைக் கட்டி எழுப்ப வேண்டும். மக்கட் பணி செய்ய வேண்டும்–என்ற நோக்கமே முதன்மையன குறிக்கோளாக உ ள்ளவர்களின் குழுமம் அமைதல்.

வேண்டுதல்:

மௌனமாக இருந்து சிந்தித்தலும் வேண்டுதலும்
அர்த்தமுள்ள இறைவழிபாடு
இறைவார்த்தையைப் பகிர்ந்தளித்தல், அப்பம் பிட்குதல்.

பகிர்ந்து கொள்ளல்:

திருத்தூதர் பணி 2:42–47, 4:32–36.

ஆதிக் கிறிஸ்தவர்கள் தமக்குள்ளதை ஆழ்ந்த ஆர்வத்தோடு மற்றவர்களுடன் பகுத்துண்டு வாழும் பற்றுறுதியுள்ள சமுதாயங்களாக இயல்பாகவே உருமாறினர். இந்த அழைப்பு எமக்கும் உண்டு. இந்த அழைப்பு நாங்கள் இன்றைய நாட்டுப்புற இந்தியச் சூழ்நிலையில் ஏற்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். இச்சூழ்நிலை ஆதிக் கிறிஸ்தவர்களின் சூழ்நிலைக்குப் பெரிதும் வேறுபட்ட ஒன்று. இயேசுவின் இந்த அழைப்புக்கு நாங்கள் எங்கள் குழும வாழ்க்கையின் மூலம் எவ்வாறு இணங்கி நடக்க முடியும் எனில்–

- ஒளிவு மறைவற்ற திறந்தமனம்
- கலந்துரையாடல்
- ஒருவர் ஒருவர் சிறப்புக்களைப் பாராட்டல், குற்றங்குறைகளைத் திருத்தல்.

- கொண்டாட்டங்களைச் சேர்ந்து நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தல்
- இளயோர் – முதுயோர்
- பெண்கள் – ஆண்கள்
- உடல்நலம் உள்ளவர்கள் – உடல்நலம் குன்றியவர்கள்
- ஏழைகளுக்குப் பணி வாழ்வின் வெவ்வேறு ஈடுபாட்டிலுள்ளவர்கள்
- என ஒன்றுக் கொன்று முரண்பட்டு விளங்கும் இவையெல்லாம் ஒன்றுக்கு ஒன்று அரண்செய்யுமாறு வாழ்தல்.
- ஒருவரை ஒருவர் மதித்தல், பாராட்டுதல்
- வாரம்தோறும் ஒன்று கூடிக் கடந்த வாழ்க்கையை ஆய்ந்து பார்த்தல்

ஆகிய இவற்றின் வழியாக என்க.

பணிவிடை :

குழுமத்துக்குள் : விருந்தோம்பல் – எளிமையான வாழ்க்கையில் அனைவரும் பங்குகொள்ளல்.

குழுமத்துக்கு *வெளியே* : (தன் பணி, தன் பாடு என்று இல்லாமல்) ஒருவர் ஒருவருடைய பணிகள், ஈடுபாடு, பொறுப்பு ஆகியவற்றில் அக்கறை கொண்டு ஒருவர் ஒருவர் பணிகளை ஆதரிப்பது, ஒருவர் ஒருவரைப் பற்றி அக்கறை கொண்டு வாழ்வது.

எம். அமலதாஸ் இ.ச. எழுதியுள்ள Ashram and Social Justice என்ற நூலில் நாம் வாசிப்பது இது:

> சுதந்திரம், சமத்துவம், பகிர்ந்துகொள்ளல், தோழமை ஆகியவை குடிகொண்ட ஒரு குழுமத்தை உருவாக்குவதே சமூக நீதிக்காகப் பாடுபடும் எல்லா இயக்கங்களுடைய இலட்சியமாகும். மேற்கூறிய நோக்கங்களே வாழ்க்கை முறையாக அமைகின்ற ஒரு சிறு குழுவை உருவாக்கிப் பார்ப்பது அந்த சமூகநீதி இலட்சியம் கைவரக் கூடியதே என்று நமக்கும் பிறர்க்கும் உணர்த்தக்கூடிய ஒரு வழியாகும். அதற்கு ஏற்ற சூழல் ஆசிரமம். ஆசிரம வாழ்க்கை எளிமையையும் தன்னலமற்ற தன்மையையும் தோழமையையும் வலியுறுத்துகிறது. அது நாம் வேண்டுமென்று செயற்கையாக ஏற்படுத்திக்கொள்ளும் தேவைகளைக் குறைப்பது. எனவே ஆசிரம வாழ்க்கை நாம் கூறிய இலட்சிய சமூகத்தை உருவாக்கப் பெரிதும் துணை புரியும்.

தூய ஆவிக்கும் ஒருவர் ஒருவர்க்கும் நம் உள்ளம் திறப்பதாக!

டிசம்பர் 1983

11. வளர்ச்சியா? விடுதலையா?

வளர்ச்சி என்பது 1960–ஆம் ஆண்டுக்குப் பிறகு எல்லோரும் பாராட்டிக் கொண்டாடும் ஒரு கருத்து. ஆனால் எந்த மாதிரி வளர்ச்சி? யாருக்கு வளர்ச்சி? எதற்காக வளர்ச்சி? இஃதெல்லாம் பற்பல வட்டாரங்களில் விவாதத்துக்கு உள்ளாகியிருக்கிறது, இன்னும் விவாதிக்கப்படுகிறது. முதலில், நாடுகளை வளர்ச்சி அடைந்த நாடுகள் என்றும் வளர்ச்சி குறைந்த நாடுகள் என்றும் பிரித்தார்கள். பின்னர் அது சரி இல்லை என்று கண்டார்கள், ஏனென்றால், எல்லா நாடுகளுமே வளர்ந்தவண்ணந்தான் இருக்க வேண்டும், இல்லாவிடில் தேக்க நிலை வந்துவிடும். அழிந்தும் போகலாம் என்பதை உணர்ந்தார்கள்.

வளர்ச்சிக்கு ஏற்ப நாடுகளை எப்படி வகைப் படுத்துவது? நாட்டின் மொத்த உற்பத்தியைக் கணக்கிட்டு அதனை நாட்டு மக்கள் தொகையால் வகுக்க ஆளுக்கு இவ்வளவு என்று வருமே, அதைக் கொண்டு வகைப்படுத்துவதா? பெட்ரோல், நிலக்கரி போன்று செலவழித்துத் தீர்ந்து போகக் கூடிய இயற்கை வளங்களால் கிடைக்கும் இயந்திர சக்தியை நாட்டு மக்கள் தொகையால் வகுத்துப் பார்த்து அதற்குத் தக்கபடி நாடுகளின் வளர்ச்சியைக் கணக்கிடுவதா? பள்ளிவிவரக் கணக்கு கறிக்குதவாது.

எடுத்துக்காட்டாக, ஒருவர் உணவில் ஒரு முழுக் கோழி, அவர் பக்கத்து வீட்டுக்காரர் முழுப் பட்டினி என்று இருந்தல் புள்ளி விவரக் கணக்குப்படி இவ்விருவருக்கும் ஆளுக்கு அரைக்கோழி சாப்பிடக் கிடைக்கிறது என்றாகும்! மூன்றாம்

உலக நாடுகள் என்பவை முதல் உலக நாடுகளாம் மேற்கத்திய நாடுகள் காட்டும் வளர்ச்சி முறையின் கவர்ச்சிக்கு உட்பட்டு ஆலைமயமாக்கத்தைத் துரிதப்படுத்துகின்றன. இவ்வளர்ச்சிமுறை செயற்கையான தேவைகளை உருவாக்கி மக்களை மென்மேலும் நுகர் கலாச்சாரத்துக்கு அடிமையாக்குகின்றது. முரட்டுப் பிடிவாதப் போட்டாப் போட்டி போட்டுக்கொண்டு மென்மேலும் லாபத்தைப் பெருக்க வழிதேடிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறெல்லாம் செய்வதால் வர்க்கப் போராட்டம் தீராத போராட்டமாக நிலைத்துவிடுகிறது. இம் மாதிரி வளர்ச்சிதான் நமக்கு வேண்டுமா? இருப்பவர்க்கும் இல்லாதவர்க்கும் இடையே ஏற்றத்தாழ்வு வளர்ந்துகொண்டே போகக் கூடிய இந்த வளர்ச்சி தேவைதானா? முதலாளித்துவம், மற்றும் அரசுடைமை சோஷலிசம் ஆகிய இரண்டும் வளர்ச்சிக்கான உத்திகளாக மேற்கத்திய நாடுகள் கண்டவையாகும், அவை இரண்டுமே படுதோல்வி என்பது கண்கூடாகிவிட்டது. அவ்வகை வளர்ச்சியால் மக்களுக்கு இன்பம் இல்லை, புதிய முரண்பாடுகளும் மோல்களும் புதிய பிரச்சினைகளுமே தோன்றுகின்றன. அது புதியதோர் காலனி ஆதிக்கத்தை உருவாக்க முனைகிறது. பெருவாரியான மக்களின் வளர்ச்சியைப் புறக்கணித்துவிட்டு, மனிதரின் சமூக, பண்பாட்டு, ஆன்மீக நலன்களுக்கு உரிய மதிப்பு அளிக்காமல் வெறுமனே செல்வதைப் பெருக்குவதும் பொருள்களையும் பல்வேறு பணிகளையும் நிறையக் கிடைக்குமாறு செய்வுதும் உண்மையான வளர்ச்சி ஆகாது என்று இரண்டாம் அருள் சின்னப்பர் சமுதாய அமைப்பு பற்றிய தமது திருமுகத்தில் கூறுகிறார்.

மேலே கூறிய வளர்ச்சி வகை தவறானது என்று

தள்ளிவிடுகிறோம் என்றால் வளர்ச்சி காண்பதற்கான புதுவழி ஒன்றைப் படைக்கும் முகமாக நாம் வேறு எதைக் காட்டுவது?

முதற்கண், வளர்ச்சி என்பது சுயவளர்ச்சியாக இருக்க வேண்டும்: மக்களுக்காக வளர்ச்சி என்பார்களே அது அல்ல, மக்களால் உருவாகும் வளர்ச்சி, மக்களோடு சேர்ந்து உருவாகும் வளர்ச்சி அதுதான் தேவை. மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளைக் கண்டுபிடிக்கும்படி அவர்களுக்கு உதவு. அந்தத் தேவைகளை நிறைவு செய்ய அவர்கள் ஒன்றுபட்டுப் பாடுபடுவதற்குரிய வழியை அவர்கள் கண்டு கொள்ளவும் அவர்களுக்குக் கைகொடு. இரண்டாம் அருள் சின்னப்பர் கூறுகிறார். சமுதாயப் பணியில் மும்முரமாக ஈடுபடுவோர் செய்ய வேண்டுவது என்னவெனில் சமுதாயத்தில் சங்கம் முதலிய அமைப்புகளுக்குப் புறம்பாக நலிவுற்றுக் கிடக்கும் மக்களுக்கு உணர்வூட்டுவதாகும், இதன் பொருட்டு அம்மக்களே கண்டுகொண்டுள்ள தேவைகளுக்காக அந்தந்த இடங்களில் போராடும்படி அவர்களை ஒன்று திரட்ட வேண்டும், இவ்வாறு மக்களின் சுயவளர்ச்சியை வலியுறுத்த முடியும்.

வளர்ச்சி நீதியைக் குறிக்கோளாகக் கொண்ட வளர்ச்சியாக இருக்க வேண்டும். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தம் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள உரிமை உண்டு. பொருள் வசதி படைக்க வேண்டும் என்னும் பேராசை அல்ல நாம் வேண்டுவது. ஒரு புதிய பண்போடு அமையும் வாழ்வே நாம் தேடுகிறோம். அத்தகைய வாழ்வு ஏற்படும்பொழுது நீதியும் அமைதியும், தோழமையும் அடுத்தவர்களைப் பற்றிய அக்கறையும் நிலவும். அது அனைவருக்குமே இன்பம் தரும். இதற்கு முதன்மையாய் வேண்டப்படுவது யாது எனில், அடிப்படை மனித உரிமைகள்

மதிக்கப்படவேண்டும். அவை அனைவருக்கும் கிடைக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே. அவை என்னென்ன? உயிர்வாழும் உரிமை, உணவு உறையுள் உடை ஆகியவற்றுக்கு உரிமை, உடல் நலம் கல்வி வேலை இவற்றுக்கு உரிமை- இவை மட்டும் அன்றி, பேச்சுஉரிமை, சமய உரிமை நாட்டு அரசியலில் கலந்து கொள்ளும் உரிமை ஆகிய இவையும் சமுதாய அமைப்பில் இருக்க வேண்டும்.

உலகம் பிழைத்திருப்பதாற்கான ஒரு வளர்ச்சியும் தேவைப்படுகிறது. அணு ஆயுதங்களினாலும் சுற்றுச் சூழ்நிலை பாழாவதாலும் உலகமே அழந்துபோக்க கூடிய நிலையில் மக்களுக்கெல்லாம் அடிப்படை உரிமைகள் இருக்கும்படி செய்து வைத்துத்தான் என்ன பயன்? வளர்ந்துவரும் நாடுகள் தங்கள் வருவாயில் நூற்றுக்கு 25 பங்கை – சில நாடுகள் 40 விழுக்காடுவரை இராணுவத் தளவாடங்கள் வாங்கவே செலவிடுகின்றன என்பது வியப்பாயிருக்கிறது. ஆகையால், காலம் கடந்து விடுமுன் அணுஆயுதங்களையும் அழித்திட வேண்டும் – இதற்காக மக்களை ஒன்று திரட்டுவதுதான் இந்த நிலைமையில் வளர்ச்சியாகும். வளரும் நாடுகள் மேன்மேலும் கடன்பட்டுக்கொண்டே இருப்பதற்கு முக்கியமான ஒரு காரணம் படைக்கலங்களை வாங்கிப் பெருக்குவதேயாகும்.

இயற்கை வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவது நம்மை அழித்தொழிக்கக் கூடிய மற்றோர் ஆபத்தாகும். நிலைமை எவ்வளவு மோசம் என்றால் நம்பமாட்டீர்கள், ஆனால் உண்மை, இப்பொழுது போகிற போக்கை உடனடியாக மாற்றாவிட்டால் இயற்கையும் மனிதகுலமுமே முற்றிலும் அழிந்துபோய்விடக் கூடிய அபாயம் வந்தாயிற்று.

இறுதியாக, விடுதலைக்கான வளர்ச்சி என்பது ஒன்று, விடுதலை எனில் எவற்றிலிருந்து விடுதலை? மக்களின் தனித் தனிப் பாவ நிலையிலிருந்தும் சமுதாயத்தின் ஒட்டு மொத்த பாவ நிலையிலிருந்தும் விடுதலை. எல்லா வகையான அநீதிக்கும் சுரண்டலுக்கும் ஊழலுக்கும் அடிப்படையாய் இருப்பது நான் நான் நான் என்னும் நமது தன்னலத் தனிப்போக்கு.

நம் முன்னோர்கள் நமக்கு வெவ்வேறு வகையான சமூக அமைப்புகளை ஏற்படுத்திச் சென்றுள்ளனர், ஆணாதிக்கமுறை, நிலபிரபுத்துவமுறை, ஆலைத் தொழில் முதலாளித்துவமுறை, அரசுடைமை சோஷலிசமுறை, இராணுவ ஆட்சிமுறை என்று பலப் பல சமூக அமைப்புகள். இந்த முறைகள் எல்லாம் தன்னலத்திலும் சுரண்டலிலும் பிறந்தவை, இவை மறைய வேண்டும், மறைந்து நீதியும் சமத்துவமும் தோழமையும் அமைதியும் விளங்கும் சமுதாய அமைப்பு தோன்ற வேண்டும். இது ஒரு புரட்சி. பெருவாரியான மக்கள் தாங்கள் இருக்கும் நிலையை அநீதியானது என்பதை உணர்ந்து தம்மவர்களின் தலைமையில் தங்களைத் தியாகம் செய்ய முன்வரும்போதுதான் இப்புரட்சியான புதிய அமைப்பு தோன்ற முடியும். அம்மக்கள் தலைவர்கள் அவர்களை விடுதலைப் பயணப் பாலை நிலம் வழியாகவே இட்டுச் செல்வார்கள், கடவுள் தங்களுடன் இருக்கிறார், தங்களுடன் சேர்ந்து போராடுகிறார், தங்கள் கையைப் பிடித்து வழிநடத்துகிறார் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் அந்த விடுதலைப் பயணத்தில் தலைமை தாங்கி நடப்பார்கள்.

இது நான் கண்ட வளர்ச்சி அனுபவம். இந்த இலட்சியம் எனது வாழ்க்கையில் நனவாக வேண்டும் என்றே என் உடனுழியர்களோடு சேர்ந்து முயன்றுவந்துள்ளேன். என் ஆயர்,

நண்பர்கள், மற்றும் பல பேர்களுடைய ஆதரவும் நம்பிக்கையும் எனக்குத் துணைநின்றன. நான் தனியாக ஒன்றும் செய்ய முடியாது என்பதை நான் நன்கு அறிவேன், கடவுளோடு சேர்ந்து நான் சிறிது செய்யலாம், ஆனால் கடவுளோடும் மக்களோடும் சேர்ந்து நான் நிறையச் செய்ய முடியும்.

எங்கள் முந்தைய கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பற்றிச் சில சொல்ல வேண்டும். அவர் தமது மறைமவாட்டத்துக் குருக்களோடு ஒன்றாயிருந்து உழைக்குமாறு சாம் (SAM) குருக்கள் இருவரைத் தந்துதவும்படி கேட்டது ஒரு பெரியகாரியம். அதற்கு மிக்க துணிச்சல் வேண்டும். அவரது அழைப்பின் பயனாக நான் இங்கு வந்து கோட்டாறு மறைமாவட்டத்தை எனதாகக் கொண்டு கடவுளரசுக்காக உழைக்க முடிந்தது.

அந்த ஆயர் மற்றும் ஒரு துணிச்சலான காரியத்தையும் செய்தார். திராவிட முறைச் சிற்ப வேலைப்பாடு அமையும் படி புதிய கோவில்களைச் கட்ட வேண்டும் என்று நான் அவரிடம் சொன்னபோது அவர் என் திட்டத்தைக் குருக்களின் பேரவையில் எடுத்துரைக்கும்படி கூறினார். கடைசியில் என் திட்டத்தை ஏற்றுக்கொண்டார். அதற்கு அவர்கள் சொன்ன நியாமம்: – இது சரிவராவிட்டால் பரவாயில்லை, யாரும் பார்க்கப்போவதில்லை, ஏனென்றால் இக்கோவில்கள் எங்கோ ஒரு மூலையில் எட்டாத் தொலைவில் கட்டப்படுகின்றன – என்பதாகும். ஆனால் கோவில்கள் கட்டி முடிக்கப்பட்ட பிறகு அவற்றைக் காணத் திருத்தந்தையின் துணைத் தூதர் என்ன, ஆயர்கள் என்ன என்று எத்தனையோ பெரியவர்களைக் கொண்டு வந்து காட்டிப் பெரிதும் மகிழ்ந்தார் அவர்!.

உள்ளூர்க் கைத்தொழில்கள் வளர்ச்சி காண்பதற்கு ஏற்ற புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதற்காக வெளிநாட்டுத் தொழில்நுட்ப வல்லுனர்களை வரவழைத்தோம், ஆனால் அதற்கு உள்ளூர் மக்களைத் தயார் செய்யாதது குறையாயிற்று. வெளிநாட்டுப் பணியாளர்களுக்கும் தங்கள் தொழில்நுட்பத்தில் இருந்த ஆர்வம் தவிர வேறு ஆர்வம் இல்லை. அவர்கள் உள்ளத்தில் இருந்து அவர்களை உந்தியது அவர்களது தொழில்நுட்ப உத்தியே தவிர வேறில்லை. உதவி செய்வோர், உதவி பெறுவோர் என்ற இவ்விரு சாராரிடை ஏற்படும் தொடர்பின் வேண்டாத விளைவுகள் காரணமாக, நினைத்த நோக்கம் நிறைவேறாமல் போனது உண்டு, கசப்பான இத்தகைய அனுபவங்களிலிருந்த படித்துக்கொள்ள வேண்டியவர்கள் ஆனோம்.

பொறியியலாளர், கண்ணாடி இழை நிபுணர், படகு கட்டுபவர், விவிலிய நேயர், இவ்வளவும் சேர்ந்த ஒரு குருவானவரை நான் சந்தித்து இங்கு வந்து உதவுமாறு அவரை அழைத்ததும்தான் பொருந்திய புதிய ஏற்ற தொழில்நுட்பம் உருவாவதற்கான சூழ்நிலை வந்தது. அவருடைய உள்ளம் மனித நேயம் நிறைந்த உள்ளம். அவர் ஏழைகள் பால் அன்பு உள்ளவர். அவர் 1973 முதல் எங்கள் குழுவில் இருந்து ஏழை மக்களுடன் இணைந்து பாடுபட விரும்பினார். அவர் இவ்வாறு 14 ஆண்டுகள் உழைத்தார். முழுமையான வளர்ச்சி என்றால் என்ன என்பதை அவர் பணி எடுத்துக் காட்டிற்று. பொருந்திய புதிய தொழில் நுட்பத்தை நாட்டுப்புற ஏழை மக்களுக்கு எடுத்துக் காட்டி அறிமுகம் செய்துவைக்க இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து அவர் அவர்களை

அந்தப் பணியில், ஈடுபாடு உள்ளவர்கள் ஆக்கினார். மீனவர்களிடம் அவருக்கு உள்ள நேயத்தால் அவர் இங்கு மட்டுமன்றி உலகம் எங்கும் உள்ள பாரம்பரிய மீன்பிடி தொழிலாளர்களுடன் சேர்ந்து தொடர்ந்து போராடுவது என்று முடிவு செய்தார். இவருடைய அணுகுமுறையினால் மக்கள் மனநிலையிலும் மாற்றம் வந்தது. எல்லாம் சும்மா கிடைக்க வேண்டும் என்று இருந்தவர்கள் இப்பொழுது பேரம் பேச முன்வந்தார்கள், இன்னது செய்தால் இன்னது பெறலாம் என்று அறிந்து முயற்சி செய்யலானார்கள். தங்கள் கட்டுமரங்களை விட்டுவிட்டுப் புதிய பிளைவுட் படகுகளை விரும்பினார்கள். வங்கிகளிலிருந்து கடன் வாங்கினார்கள். புதிய படகுகளுக்குப் பதிவு செய்து முன்பணம் கட்டினார்கள். கேட்ட படகு கிடைப்பதற்கு மூன்று மாதம் காத்திருந்தார்கள். இத் தொழில் முன்னேற்றத்தில் மீனவர்கள் மெய்யாகவே பங்காளிகள் ஆனார்கள். முட்டத்தில் நிறுவிய படகு கட்டும் மையம் மீனவர்களுக்கு உதவவே நடைபெறுகிறது, இதுவரை அது 500 படகுகள் கட்டித் தந்துள்ளது. ஒருவரை ஒருவர் திறனறிந்து பாராட்டும் பண்பும் ஒத்துழைப்பும் மலர்ந்து மீனவர்க்கும் அவருக்கு உதவுவோருக்குமிடையே நல்ல உறவு ஏற்பட்டுள்ளது. கிடைக்கும் இலாபம் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப் படுகிறது.

இறுதியாகச் சொல்வதானால், தங்களுக்கு எத்தகைய வளர்ச்சி வேண்டும் என்பதை மக்கள் - ஏழை மக்களே - முடிவு செய்துகொள்ள வேண்டும். இல்லாத தேவைகளை வேண்டுமென்று உருவாக்கிக்கொள்வது அல்ல, உண்மையாகவே உள்ள தேவைகளை நிறைவு செய்வதில்தான்

மக்களுக்கு மெய்யான இன்பமும் தோழமையும் உண்டாகும். மக்களுக்கு என்னென்ன மெய்யாகவே தேவையாய் இருக்கின்றன என்று கண்டுபிடிப்பதற்கு நாளாகும். அதற்குப் பொறுமை வேண்டும் இருக்கின்ற நிலைமையைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். உண்மையான வளர்ச்சி சமுதாயத்தின் தனி மனிதரின் தேவைகளை நிறைவு செய்வது அல்ல. ஆயினும் கடைசியாகப் பார்த்தால் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருமே அதனால் நன்மை அடைவர். பனை ஏறுவோர் சங்கம், பாசனக் கால்வாய்த் திட்டம், மீனவர் சங்கங்கள் இவை எல்லாம் மக்களின் உண்மையான தேவைகளை உணர்ந்து உருவானவை. சமூகநல வளர்ச்சித் திட்டமும் இதே முறையில் வந்ததேயாகும்.

மக்களை நேசிப்பது, ஒவ்வொருவிடமும் தனித்தனி அன்பு செலுத்துவது - இதுதான் வளர்ச்சி என்பதன் உண்மையான ஆன்மீகம் ஆகும். ஏழைகளின் உதவியால் நான் இந்த உண்மையைக் கண்டுகொண்டேன். பல வேளைகளில் தோல்வியே கண்டிருந்தாலும், வருங்காலம் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை அறிகுறிகள் தென்படுகின்றன. ஆதலால் தொடர்ந்து போராடத் துணிவு பிறக்கிறது.

ஜனவரி 1989

IV. உளனுடனெருக்கும் ஆன்மீகம்

Chapelle ... onale en style ind... con... Jacques TOMBEUR à THIRUMAL...

1. தந்தை வின்சென்ட் லெ அவர்களின் மறைத்தூது ஆன்மீகம்

என்னுடைய மறைத்தூது அழைப்பிற்கு முக்கிய காரணமாக இருந்தவர் இந்நூற்றாண்டின் துவக்கத்தில் சீனாவுக்கு மறைத்தூதுவராகச் சென்ற தந்தை வின்சென்ட் லெப் அவர்களாகும். அவருடைய வார்த்தைகளில்தான் என்றில்லாமல் அவருடைய அமைதியிலும் மனநிலையும் அவர் ஓர் இறைவாக்கினர். திருச்சபையின் மறைத்தூதுப் பணிக்கு அவர் ஒரு புதிய பார்வையைத் தந்தார். மறைத்தூது என்றாலே காலனி ஆதிக்கத்துக்கு துணைநின்று திருச்சபையை ஒரு வெளிநாட்டு இறக்குமதிப் பொருளாக்கிய அக்காலகட்டத்தில் சீனத் திருச்சபையோடு - அதன் குருக்கள், சீன ஆயர்கள், அதன் மக்களோடு - உறுதியாக நின்றவர் லெப். திருச்சபையில் இனவாதத்தில் எல்லா சின்னங்களுக்கெதிராகவும் மேலைநாட்டின் ஆதிக்கத்தின் எல்லா சின்னங்களுக்கெதிராகவும் அவர் போர்க்கொடி காட்டினார்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சார்ந்த ஆயர் கிளேவர் பண்பாட்டு மயமாதலை திருச்சபை தன் ஆன்மாவைத் தேடிச்செல்வதாகும் என் விளக்கினார். சீனத்திருச்சபை சீனாவின் உடை, கலாச்சாரம், மொழி, கட்டிடக்கலை அனைத்தையும் தனதாக்கிக் கொண்டு சீனமயமாக வேண்டும். பண்பாட்டுமயமாதல் என்ற வார்த்தை வழக்கில் வருவதற்கு முன்னரே திருச்சபை அதை வாழ்ந்து காட்டவேண்டும் என் லெப் விரும்பினார்.



சீனாவில் லெப் வாழ்ந்த முதல் ஆண்டுகளில் தான் உடுத்த சிறந்த உடை அறிவுஜீவிகளான மண்டாரின்களின் உடையே என எண்ணினார். ஏழைகளுக்காக வாழும் திருச்சபை பற்றிய தவறான எண்ணத்தை இது உருவாக்கிவிடும் என்பதை விரைவில் உணர்ந்து சாமானிய மக்களின் சாதாரண உடைய அணிய ஆரம்பித்தார். அவருடைய அணுகுமுறை தம் மக்கள் மீது சார்புகொண்ட என்றுமே முடிவுறா இன்மகிழ் நலமிக்க ஒருவரின் உண்மையான அன்பின் அணுகுமுறையாக இருந்தது. பத்திரிகையின் முக்கியத்துவத்தை உணர்ந்த அவர் பொதுநிலையினரின் துணையுடன் கத்தோலிக்க நாளேடு ஒன்றை நிறுவி திருச்சபையின் எல்லா பிரச்சினைகளையும் சுதந்திரமாக ஆய்வு செய்யவும் விவாதிக்கவும் வழிவகுத்தார்.

லெப் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் அமைதியாகப் போராடிய அனைத்தையும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் திருச்சபை அதிகாரப்பூர்வமாக தனதாக்கிப் பறைசாற்றியது. சங்கத்தின் மறைஅறிவுப்புப் பணி பற்றிய மடலில் அது இவ்வாறு குறிப்பிடுகிறது:

- எல்லா மக்களுக்கும் நாடுகளுக்கும் தன்னையே முழுமையாக பிரசன்னமாக்கி உலக மீட்பின் அருளடையாளக இருக்கும் பொருட்டு திருச்சபை எல்லா நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது (எண்5)
- பயணம் செய்யும் திருச்சபை தன் இயல்பிலே மறைத்தூதுப் பணியைப் பெற்றுள்ளது (எண் 6). கிறிஸ்துவில் இன்னும் விசுவாசம் கொள்ளாத மக்கள் குழுக்கள் மத்தியில் திருச்சபையை வேரூன்றச் செய்வது அதன் பணி (எண் 10).

- கிறிஸ்து ஊனுடல் எடுத்து குறிப்பிட்ட சமூக கலாச்சாரச் சூழமைவுகளுடன் தன்னையே இணைத்துக் கொண்டதுபோல் திருச்சபையும் மேற்சொன்ன எல்லா மனித குழுக்களோடும் ஓர் அங்கமாகத் தன்னையே இணைத்துக் கொள்ளவேண்டும் (எண் 11).

- அவர்களுடைய நாட்டு மரபுகளையும் சமய மரபுகளையும் நன்கறிந்திருக்க வேண்டும். இம்மரபுகளில் மறைந்திருக்கும் வார்த்தையானவரின் வித்துக்களை மகிழ்ச்சியோடும் வணக்கத்தோடும் கண்டுபிடிக்க வேண்டும். அத்தோடு வள்ளலாம் இறைவன் மக்களினங்களுக்கு எத்தகு செல்வங்களை அளித்துள்ளார் என்பதை அறிந்து அச்செல்வங்களை நற்செய்தியின் ஒளியில் ஒளிர்விக்க வேண்டும் (எண் 11).

- மறைத்தூதுவர்கள் உலகில் இறைபிரசன்னத்தின் அடையாளமாக சமூகங்களைக் கட்டியெழுப்புவார்கள். தனது நாட்டின் பண்பாட்டுச் செல்வங்களைப் பெற்றுள்ள விசுவாசிகளின் இச்சமூகங்கள் மக்களிடையே ஆழமாக வேரூன்றியிருக்க வேண்டும் (எண் 15).

- அவர்களுடைய வழிபாட்டு முறைகள் தங்கள் நாட்டுக் கலாச்சார மரபுகளில் வேரூன்றி இருத்தல் வேண்டும்.

தந்தை லெப் இம்மதிப்பீடுகளை ஏற்கனவே தனது மறைத்தூது ஆன்மீகத்தில் ஒருங்கிணைத்திருந்தார். அவர் தனது காலத்துக்கு 50 ஆண்டுகள் முந்தியிருந்தார். எனவே அதற்கான விலையையும் அவர் கொடுக்கவேண்டியதாயிற்று. தன் உடனுழைப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் அவரைப் புரிந்து கொள்ளவில்லை. அரசியல் அதிகாரமும் திருச்சபையும்

ஒன்றையொன்று மோதும்போது அரசில் ஏதோ தவறு இருக்கிறது என்றும் அரசும் திருச்சபையும் ஒன்றாக அமைதியாக இருக்கிறதென்றால் திருச்சபையில் ஏதோ கோளாறு இருக்கிறது என்றும் லெப் அவர்கள் புரிந்து வைத்திருந்தார். ஏனெனில் எல்லாவகை தேசிய பாதுகாப்புக் கோட்பாடுகளுக்கெதிராக மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது திருச்சபையின் கடமை ஆகும்.

சீன மக்களோடு இணைந்து காலனி ஆதிக்க அரசை எதிர்த்து நின்றதால் வின்சென்ட் லெப் ஐரோப்பாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார். மிகுந்த மனத்துயரோடு ஐரோப்பாவிற்குத் திரும்பிய லெப் கல்விக்காக ஐரோப்பா வந்திருந்த எண்ணற்ற சீன மாணவர்களுக்குப் பணிபுரிய ஆரம்பித்தார். சீனாவின் எதிர்கால அறிவுஜீவிகளை உருவாக்கும் இப்பணியில் தன்னை முழுமையாகக் கையளித்தார். நாம் மகிழ்சியோடு துன்பப்பட கற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவர் அவ்வப்போது சொல்கின்ற வார்த்தைகள்.

நான்கு நூற்றாண்டுகளுக்குமுன் 1565–ல் முதல் சீன ஆயர் திருநிலைப்படுத்தப் பட்டார். இரண்டாவது சீன ஆயரின் மோதிரத்தை முத்தி செய்யும் வாய்ப்பு தனக்குக் கிடைக்க வேண்டுமென்று அவர் ஜெபித்தார், எழுதினார், இரந்து வேண்டினார். அவரது ஜெபம் கேட்கப்பட்டது. உரோமை நகரில் ஒருவரல்லர், ஆறு சீன ஆயர்கள் திருத்தந்தையால் திருநிலைப்படுத்தப்பட்டதைக் காணும் பேறுபெற்றார். சீன ஆயர்கள் வின்சென்ட் லெப் அவர்களை அணுகி சீன ஆயர்களுக்குக் கீழ் பணிபுரிய விழையும் மறைமாவட்டக் குருக்களைக் கண்டுபிடிக்குமாறு வேண்டினர். அவர்கள்

வேறு எந்த துறவற மேலதிகாரிகளையும் சார்ந்திராமல் முழுமையாக ஆயர்களின்கீழ் பணிபுரிவார்கள். இவ்வழைப்பின் விளைவாகத்தான் சாம் (SAM) என்றழைக்கப்டும் மறைத்தூதுப்பணியின் துணையாளர்கள் சங்கம் பிறந்தது.

மறைமாவட்டக் குருக்களுக்கென்றும் துறவறக் குருக்களுக்கென்றும் தனித்தனி ஆன்மீகங்கள் இருக்க முடியுமா? லெப்பின் கருத்துப்படி ஒரேயொரு ஆன்மீகம் அல்லது ஒரேயொரு திட்டம்தான் இருக்கமுடியும். அதுதான் நற்செய்தி. இருப்பினும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அழைப்பும் தனிப்பட்ட குறைபாடுகளும் உள்ளன. மறைத்தூது அழைப்பை ஏற்பவர் தன் சொந்த கலாச்சார சிந்தனை முறைகளிலிருந்து முழுமையாக விடுபடவேண்டியிருக்கிறது. இதுவே கிறிஸ்துவின் அனுபவமும்கூட. தன்னையே முழுமையாக வெறுமையாக்கும் அனுபவம்.

> அவர் தன்னையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு மனிதரானார். அவர் சாவை ஏற்குமளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்குமளவுக்குக் கீழ்படிபவரானார். (பிலிப். 2,6)

புதிய கலாச்சாரம், மொழி, மரபுகள் இவற்றில் வெளிப்படும் புதிய விசுவாச வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும் மறைத்தூதுவருக்கு இது மிகவும் பொருந்தும். சீன ஆயர்களுடன் பணிபுரியச் செல்லும் ஒவ்வொரு சாம் உறுப்பினரிலும் இத்தகுதி விளங்க வேண்டுமென்று தந்தை லெப் வலியுறுத்தினார். இப்பற்றற்ற நிலை ஏழ்மையில் அன்பு எங்கும் எதிலும் எப்பொழுதும் சிறந்தவற்றைே பிறர்க்கு வழங்கும் பண்புகளில் துலங்குகிறது.

எல்லாவற்றையும் துறந்து இயேசுவைப் பின்செல்ல அழைக்கும் நற்செய்தியின் அடிப்படையில் அமையும் ஆன்மீகத்தில் தோய்ந்த மறைத்தூதுவர் அழைப்பு முழுமையான பற்றற்ற நிலையைக் கோருகிறது.

புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட ஆயர்களுள் ஒருவருடன் சீனா சென்றிருந்த தந்தை லெப்பிடம் சாமின் முதல் தலைவர் சாம் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பயிற்சித்திட்டம் ஒன்று கொடுக்குமாறு எழுதிக் கேட்டிருந்தார். அங்கூ என்னுமிடத்திலிருந்து தந்தை லெப் 1930-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26-ஆம் தேதி வந்த பதில் இது:

திருத்தூது நாடுகளில் பணிபுரிய அழைப்பு பெற்றவர்களின் முழுநிறைவுக்கென எந்தவித சிறப்புத்திட்டமும் இல்லை. இதுதான் திட்டம்:

தந்தை நிறைவுள்ளவராக இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராக இருங்கள் என்னும் இயேசுவின் வார்த்தைகளை நிஜமாக்குவதே அதுவும் இப்பொழுதே செய்வதே சாம் உறுப்பினர்களின் ஆன்மீகம்.

நடைமுறையில் இது எளிதானதே. மிகவும் எளிதானதென்று கூற இயலாது. ஆனால் இது குழப்பமானதல்ல. முதல் நிலை முழுமையான பிரிநிலை. கடவுளைத் தவிர மற்றனைத்திலிருந்தும் பிரிந்து நிற்பது. அவரது சீடனாவதற்கு இதுவே உள்ளார்ந்த அடிப்படை நிபந்தனை. திட்டத்தின் இம்முதல் பகுதியை நிறைவேற்றுவதற்காக எங்கும் எப்பொழுதும் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதை நான் வலியுறுத்துகிறேன்.



இது புரிந்துவிட்டதென்றால், இரண்டாவது நிலைக்குச் செல்லமுடியும். இரண்டாவது நிலை: நான் உங்களை அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யவேண்டுமென்பதே எனது கட்டளை. இது ஒரு தொடர் அழைப்பு. உங்களுக்கு உண்மையான அன்பு இருந்தால் கிறிஸ்துவில் முழுக்கொடையாகிய உங்கள் வாழ்வை சீனா சகோதார சகோதரிகள் வழியாக நீங்கள் வாழ்வீர்கள். உள்நாட்டுக் குருக்களுக்குப் பணியாளர்களாக வாழும் இத்தனி அழைப்பில் நீங்கள் உங்கள் முழுமறுதலிப்பை அடைவீர்கள்.

மூன்றாவது நிலை: புனித பவுல் சொல்வது போல் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இதுதான் முந்தைய இரு நிலைகளையும் நீங்கள் நிறைவேற்ற உதவும். இதுவே இயேசுவின் முதல் போதனை: மலைப்பொழிவு.... நீங்கள் பேறுபெற்றவர்கள்.... நீங்கள் புனிதர்களாக வேண்டுமென்று கடவுள் எதிர்பார்க்கிறார். இவ்வாறு நற்செய்தியை நாம் இவ்வாறு சுருக்கிக்கூறலாம்:

முழுமையன பற்றற்ற நிலை

நேர்மையான அன்பு

என்றுமே அகமகிழ்வு

(ஒப்பம்)

வின்செண்ட் லெப்

தந்தை லெக்லெர்க் எழுதிய தந்தை லெப்பின் வாழ்க்கை வரலாற்றில் இவ்வாறு எழுதுகிறார்:

நிறைவான மறைத்தூதுக்குரிய அன்புக்கும் ஐரோப்பிய உயர்நிலை எண்ணத்தை முற்றிலும் விட்டொழிக்கும் தாழ்ச்சிக்கும் இடையே கூட்டணி அமைப்பதே சாம் உறுப்பினர்களின் அழைப்பாகும்.

சாமின் கொள்கைப் பட்டயம் இவ்வாறு கூறுகிறது:

திருச்சபை பல்வேறு இனங்களுக்கிடையே பாகுபாடு காட்டாவண்ணம் இருக்கும் பொருட்டு மறைத்தூதுப் பணியின் அடிமட்ட உதவியாளர்களாகவே வாழும் எங்கள் எடுத்துக்காட்டு வாழ்வினால் ஆண்டவருக்குப் பணிபுரியும் எங்கள் அடிப்படை ஆவலை மறைத்தூதின் துணையாளர்களாகிய நாங்கள் இதனால் உறுதிசெய்கிறோம். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் கடவுளின் மகனும் எங்கள் சகோதரருமான இயேசுவின் மிக உண்மையான கற்பனைகளிலிருந்து ஆரம்பித்து புனித பவுல் மற்றும் எங்கள் நிறுவுனர் தந்தை லெப் அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி ஆண்டவர் எங்கெல்லாம் பணிக்கென அழைக்கிறாரோ அங்கெல்லாம் உள்ள ஒவ்வொரு தனிமனிதனையும் மற்றும் மக்களின் அல்லது தலத்திருச்சபைகளின் மரபுகள், வழக்குகள், மொழிகள், கலாச்சாரங்கள், வழிபாடுகள் அனைத்திற்கும் வரம்பற்ற மதிப்பளிப்போம் என அறிக்கையிடுகிறோம்.

சாம் உறுப்பினர்களின் துறவு முழுமையானதாகவும் அன்பு உண்மையானதாகவும் மகிழ்ச்சி தொடர்கதையாகவும் இருக்க வேண்டுமென்று தந்தை லெப் கேட்டுக்கொண்டார். இப்படிப்பட்ட அன்புச்சூழலில்தான் தலத்திருச்சபைகளும் அவற்றின் வழிபாடு, மொழி, மரபுகள், வழக்குகள் அனைத்தும்



[illegible]

தங்களுடையவை ஆகும். தலத்திருச்சபைக்காக எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி கலப்பற்ற நம்பிக்கையிலும் அர்ப்பணத்திலும் அவர்களுடைய வாழ்வு சரணாகதியாகின்றன.
தந்தை லெப்பின் வழியில் சாம் உறுப்பினர் என்னும் என் அழைப்பு வாழ்வை கோட்டாறு மறைமாவட்டத்தில் கடந்த 35 ஆண்டுகளாக நான் வாழ முயற்சித்துள்ளேன்.

ஆண்டவர் என்னை கரம்பற்றி வழிநடத்தியுள்ளார். மறைத்தூதுப்பணி வாழ்வை நான் தேடியபோது முதலில் சீனாவிற்குச் செல்லத்தான் அழைக்கப்பட்டேன். ஆனால் அங்கு நிலவிய அரசியல் சூழ்நிலை என்னை அங்கு நுழையவிடாமல் தடுத்தது. நான் ஜெபித்தேன். கடவுளிடமிருந்து ஓர் அடையாளத்துக்காகக் காத்திருந்தேன். என்னுடைய குருத்துவ திருநிலைப்பாடு வேகமாக நெருங்கி வந்தது. ஆனால் இன்னும் எந்த அடையாளமும் தென்படவில்லை. ஒருநாள் என் தலைமை அருட்பணியாளர் என்னை அழைத்து அவரது குழப்பத்தைத் தெரிவித்தார்.

அவருக்கு இரு வழிகள் தென்பட்டன. முதல் வழி குருத்துவப் பயிற்சியளிப்பதற்கென என்னை அங்கேயே வைத்தருத்தல். இரண்டாவது வழி இரு சாம் உறுப்பினர்களின் உதவியை நாடிய இரண்டாவது இந்திய ஆயரிடம் அனுப்புவது. எனக்கு மட்டற்ற ஆச்சரியம்! நான் இந்தியாவைப்பற்றி எண்ணிப்பார்த்ததே இல்லை. இந்தியாவில் ஏற்கனவே தந்தை மோன்சனன் என்று ஒரு சாம் உறுப்பினர் இருந்தார். அவர் இந்திய ரிஷிகளின் மாமரபுக்கேற்ப சாந்திவனத்தில் அண்மையில்தான் ஓர் இந்திய ஆசிரமத்தை திரித்துவ இறைவன் பெயரில் நிறுவியிருந்தார். ஆனால் கற்றறிந்த பிராமணர்களுக்குப் பணிபுரிவதைவிட ஏழைகளுக்கே

பணிபுரியவதே என்னுடைய இலட்சியமாக இருந்தது. தியானத்திற்கெனவும் ஜெபத்திற்கெனவும் சிறிதுகாலம் தேவையெனக் கூறினேன். என்னைக் கரம் பற்றி வழிநடத்திய கடவுளின் அழைப்பை என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது. என்னுடைய குருத்துவப் பணிவாழ்வில் நான் சந்தித்த எவரையும் என்னால் மறக்க இயலாது. நான் அவர்களுக்கு என்ன கொடுத்தேனோ தெரியவில்லை. ஆனால் நூறுமடங்கு பெற்றுக்கொண்டேன் என்பது கடவுளுக்குத் தெரியும். நற்செய்தியின் மனநிலையாகிய தந்தை லெப்பின் மனநிலைக்கு நான் பிரமாணிக்கமாக இருக்கவேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

செப்டம்பர் 1986

௯. கடவுளரசும் சமூக நிஜங்களும்

நான் ஒரு நடுத்தர வர்க்கத்தில் பிறந்தவன். பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடைப்பட்ட ஒரு வர்க்க உணர்வோடு வளர்ந்தவன். இந்நடுத்தர வர்க்கத்தின் குணாதியங்கள் என்னில் காணப்பட்ட கடின உழைப்பு மற்றும் போட்டி உணர்விற்கான மனநிலைகளில் வெளிப்பட்டன. நான் பிறந்து வளர்ந்த முதலாளித்துவ அமைப்புமுறை கேள்விக்குள்ளாக்கப் படவில்லை. மாறாக, அது பெரிதும் மதிக்கப்பட்டதுளூ அதுவே இயல்பானதாகவும் கருதப்பட்டது. எங்களுக்குத் தெரிந்த ஓரே மாற்றுவழி நாத்திக கம்யூனிசம் தான். அது பொருள் - உலகு மையமானதாகவும் மத உணர்வுகளுக்கு எதிரானதாகவும் காட்டப்பட்டது.

பிற கலாச்சாரங்களையும் சமூக சூழல்களையும் நேர்கொண்டு அவற்றுள் வாழவும் புதைக்கப்படவும் வாழும் கிறிஸ்துவோடு ஏற்படும் தொடர்பில் அவற்றை மெல்லென உருமாற்றுவதற்கும் விடுக்கப்படும் அழைப்பாகவே நான் என் நற்செய்தி அறிவிப்புப் பணியைக் காண்கிறேன். இது பிலிப்பியருக்கு எழுதப்பட்ட மடலில் (2, 6-11) குறிப்பிடப்பட்டுள்ள கிறிஸ்துவின் வெறுமையாதலின் அடிப்டையில் எழுந்த ஓர் உணர்வு. அவர் கடவுளுக்கு இணையாக இருக்கும் நிலையை பிடித்துக்கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகக் கருதவில்லை. மாறாக அவர் தன்னையே வெறுமையாக்கினார்....... மனிதரைப் போலானார்.... இந்த ஏழைகளுக்கான சார்பு என்னைப் பொறுத்தவரையில் பெரும் பாதிப்புக்குள்ளாயிருந்த தொழிலாளர்கள், குறிப்பாக சுரங்கத்

தொழிலாளர்களின் (பெரும்பாலும் இவர்கள் தங்கள் தாய்நாட்டை விட்டு வேலைதேடி வந்து பெல்ஜியம் நாட்டிற்கு செல்வம் சேர்த்த இத்தாலி நாட்டவர்கள்) வாழ்வில் பங்கேற்க வேண்டுமென்ற என் ஆவலில் வெளிப்பட்டது. நான் திருத்தொண்டர் பட்டம் பெற்றபின் மூன்று மாதங்கள் சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்வில் பங்கெடுக்கச் சென்றேன். நான் இந்தியாவிற்கு வந்தபின் இங்குள்ள மிகவும் புறக்கணிக்கப்பட்ட பனையேற்றுத் தொழிலாளர்கள் மற்றும் கட்டுமர மீனவர்களின் வாழ்வில் பங்கேற்றேன்.

1970–ஆம் ஆண்டு நடைபெற்ற குமரி மாவட்ட கிறிஸ்தவ சபைகளின் சமூகப்பணிகள் பற்றிய ஆய்வின் போது சமுதாய அமைப்பு மாற்றத்திற்கான எந்த அறிகுறியும் நமது சமுதாய அணுகுறையில் காணப்படவில்லை என தந்தை ஹூத்தார் சுட்டிக்காட்டினார். அவருடைய கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் பனையேற்றுத் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் அவர்களுக்கு ஒரு புதிய சமூக அந்தஸ்தைக் கொடுத்திருந்தது. மேலும் ஆண்டிற்கு ஒருபோக மரவள்ளிக் கிழங்கு சாகுபடியில் மட்டுமே பிழைத்து வந்த சிறு விவசாயிகள் கால்வாய் பாசனத் திட்டத்தின் மூலம் இருபோக நெல் விளைவிக்க முடிந்தது. ஆனால் இந்த ஆய்வு நான் இதுவரைக் கண்டுகொள்ளாத ஒரு புதிய எதார்த்தத்தைக் கண்டுகொள்ள உதவியது. கடவுளரசு இச்சமுதாயத்தின் அநீத அமைப்புகளை மாற்றி உலகில் நற்செய்தி மதிப்பீகளில் அமைந்த ஒரு சமுதாயத்தைக் கொண்டு வரவேண்டும். இதைத்தான் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையும் 1984–இல் நாக்பூரில் நடைபெற்ற தங்கள்

கூட்டடத்தில் கண்டுபிடித்தாகத் தெரிகிறது. நற்செய்தி மதிப்பீடுகளின்படி கட்டியெழுப்பப்படும் சமூக அமைப்பிலே கடவுளின் அரசு வெளிப்படவேண்டும்.

1970–ஆம் ஆண்டு ஆய்வுக்குப்பின் சிந்திப்பதில், வாசிப்பதில், மற்றும் பலருக்குச் செவிமடுப்பதில் நேரத்தைச் செலவிட்டேன். நாம் வாழும் சமூக அமைப்பு நற்செய்தி மதிப்பீடுகளுக்கு வெகு தொலைவிலிருந்ததை நான் மெல்ல உணரத் தொடங்கினேன். கடவுளின் அரசு நற்செய்தி மதிப்பீடுகளுக்கொத்த ஒரு அமைப்பிலும் கருத்தியலிலும் வாழப்படவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு மாபெரும் கண்டுபிடிப்பு. இறைவாக்கினர்களையும் விவிலியத்தையும் இப்புதிய கண்ணோட்டத்தில் படிப்பது எனக்கொரு புரட்சிகர அனுபவமாக இருந்தது.

மனித சமூகத்தில் கடவுளின் அரசு அன்றாடம் நிஜமாகும் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்குத் தேவையான மதிப்பீடுகளைக் கண்டுபிடிப்பது என் தேடலாக அமைந்தது. இதனால் இன்றைய சமுதாயத்தின் எதிர் மதிப்பீடுகளைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. சமுதாயத்தின் பரிணாமத்தைப் புரிந்து கொள்ளவும் அதைப்பற்றிய நிலைப்பாடு எடுக்கவும் உதவும் சமூகப்பகுப்பாய்வுக் கருவிகளைப் பயன்படுத்தி இன்றைய சமூக அமைப்பை கற்க வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்திற்று. நிலவிவரும் இருமுக்கிய கருத்தியல்களான முதலாளித்துவம் மற்றும் பொதுவுடமை பற்றிய ஒப்பீட்டுக் கல்வியில் இறங்க நான் முயற்சிக்கவில்லை. ஏனெனில் ஒன்றில் எல்லா நற் குணங்களையும் மற்றதில் எல்லா



குறைபாடுகளையும் காணும் சோதனை நமக்கு ஏற்படலாம்.

நான் முதலாளித்துவ அமைப்பில் உள்ளஅது கட்டுப்பாடற்ற முதலாளித்துவம், அரசு முதலாளித்துவம், ஏகாதிபத்திய முதலாளித்துவம் என எவ்வகையைச் சார்ந்ததாக இருந்தாலும் அதில் உள்ள எதிர் மதிப்பீடுகளைக் கண்டுபிடித்து அவற்றை நற்செய்தி மதிப்பீடுகளோடு ஒப்பிட விரும்பினேன்.

முதலாளித்துவ அமைப்பின் மையமதிப்பீடு முதலீடு அல்லது மூலதனம் ஆகும். அடிப்படையில் இது மூலப்பொருட்கள் உற்பத்திக் கருவிகளைப் பயன்படுத்தும் மனித உழைப்பினால் உருமாற்றம் பெற்று நுகர்பொருளாக்கப்பட்டு சந்தையில் இலாபத்திற்காக விற்கப்படுவதன் விளைவாக எழுகிறது.

வேறு கருத்தியல்கள் மனித உழைப்பை மையமதிப்பீடாகப் பார்க்கின்றன. நற்செய்தி முழுமனிதனை மையமாகக் காட்டுகிறது: மனித முழுமையே இறை மகிமை.

மூலதனம் மற்றும் உழைப்பின் நோக்கம் இலாபத்தை ஈட்டுவது, அதுவும் மிக அதிக இலாபத்தை ஈட்டுவது ஆகும். மனிதன் இலாபத்தின் பணியில் உற்பத்தியின் கருவியாக மாறுகிறான். இந்த இலாபம் மனித உழைப்பினால் உற்பத்தியாகும் உபரி மதிப்பீட்டில் உருவாகி உற்பத்திக் கருவிகளின் உரிமையாளனால் அபகரிக்கப்படுகிறது. இந்த இலாபத்திற்கான தேடல் மனித செயல்களின் இறுதி நோக்கமாக இருக்கமுடியாது. இலாபத்திற்காக மட்டுமே நுகர்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது மனிதாபிமானமற்ற செயல். உற்பத்தி மனித தேவையை நோக்கி வழிநடத்தப்பட வேண்டும். இலாபம்

உற்பத்தியாளரைச் சென்றடைந்து எல்லோராலும் பகிரப்பட வேண்டும். முதல் கிறிஸ்தவ சமூகத்தில் தங்கள் உடைமைகளையெல்லாம் விற்று தங்களுக்குள் பொதுப்பொருளாகக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவருடைய தேவைக்கேற்ப அது பகிர்ந்தளிக்கப்பட்டது. (தி.ப.2:45) உற்பத்தியில் விளையும் இலாபம் மக்கள் சமூகத்தைச் சென்று சேரவேண்டும். உற்பத்தியின் இலாபம் உற்பத்திக் கருவிகளின் உரிமையாளனின் பேராசைக்காக சேர்த்து வைக்கப் படாமல் உழைப்பாளர்களின் தேவையின் அடிப்படையில் அவர்களால் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். இது சமூக நீதி. இந்நீதியின் அரசை சமுதாயம் இவ்வுலகில் காண வேண்டுமென கிறிஸ்து விரும்புகிறார்.

முதலாளித்துவ கருத்தியல் அதிக இலாபத்தை அடைவதற்கான எல்லா வழிமுறை களையும் தேடுகிறது. மனித உழைப்பு விலைபோகும் சந்தைப்பொருளாக மாறுகிறது. பாலியல், பெண்மை, குடும்பம், சமயம் இவற்றை விலைபொருட்களாக்கி செயற்கையான தேவைகளை உருவாக்கி பித்துப்பிடித்த நுகர்கலாச்சாரத்தை இஃது உருவாக்குகிறது. ஒருவனின் மதிப்பு அவனிடம் உள்ள உடைமையின் மதிப்பே என ஆகும் அளவுக்கு என்னிடம் இருப்பவையே நான் என்ற மனநிலையை உருவாக்குகிறது.

மனித உழைப்பு அந்நியப்படுத்தப்பட முடியாது. ஏனெனில் மனித உழைப்பு படைக்கும் இறைவனின் செயலை பிரதிபலிக்கிறது.

முதலாளித்துவ அமைப்பு என்பது உற்பத்திக் கருவிகளும் நிலங்களும் தனியார் உடைமையாவதின் அடிப்படையில்

அமைந்தது. உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்திக் கருவிகள் பிரிக்கப்படுவதனால் சமுதாயத்தில் வர்க்கப்பிரிவு உருவாகிறது. இதன் மறுக்கமுடியா விளைவாக இவ்வர்க்கப் பார்வை வர்க்கப் போராட்டத்தில் வந்து முடிகிறது. வர்க்கப் போராட்டம் சமூக அமைப்பின் உள்ளார்ந்த அம்சமாக மாறிவிடுகிறது.

முதலாளித்துவ உற்பத்திமுறையின் இயல்பான ஒரு பின்விளைவாக உழைக்கும் சக்திகள் ஒருங்கிணைந்து ஏழ்மை, ஒடுக்குமுறை, அடிமைத்தனம், தரம்தாழ்தல், சுரண்டல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இதன் அடுத்த நிலை என்ன என்பதை நாம் முன்னுணர முடியும்: அபகரிக்கப்பட்டவர்கள் அபகரிப்பவர்களாக மாறுவது.

உற்பத்திக் கருவிகள் உள்ளிட்ட உடைமைகளைத் தனியார் வைத்திருக்க அடிப்படையில் ஓர் உரிமை இருப்பினும் இவ்வுரிமை பொருட்களின் பொதுப்பயன்பாட்டிற்குக் கட்டுப் பட்டதாக இருக்கவேண்டும். சுரண்டலிலிருந்து மனித உழைப்புப் பாதுகாக்கப்பட உற்பத்திக் கருவிகள் பொதுவுடமையாக்கப்படுவது அவசியமாகிறது. உற்பத்தியாளர்கள் முழு உற்பத்தி முறையிலும் செவ்வனே பங்கேற்க அழைக்கப்பட வேண்டும்.

முதலாளித்துவ அமைப்பு மற்றும் கருத்தியலின் பல தீய விளைவுகளில் ஒன்று குரல் வளையை நெரிக்கும் போட்டிமுறை ஆகும். வலிமையானவனும் தகுதியானவனுமே பிழைப்பான் என்பது விலங்குகள் வாழும் காட்டுவிதி. நற்செய்தி மதிப்பீடுகளான தோழமையுணர்வுக்கும் பகிர்தலுக்கும் நாம் வெகு தொலைவில் நிற்கிறோம்! மனிதன் மனிதனுக்கு ஓநாயாக வாழ்கிறான். வாழ்வதற்கான இப்போராட்டத்தில் எல்லா வழிகளும்

சரியானவையே. இதனால் வீணடிக்கப்படும் நேரங்களும் ஆற்றல்களும்..... முறுக்கேறிய நிலைகளும் அச்ச உணர்வுகளும்..... எதிர்பாரா எதிரிகளுக்காக எந்நேரமும் விழித்திருக்க வேண்டிய கட்டடாயங்கள்.....! இப்போட்டிமனம் நமக்கு மிகவும் சிறு வயதிலிருந்தே வகுப்பில் போட்டி, தேர்வுகளில் போட்டி, தேர்ச்சி வரிசையில் போட்டி என நம் கல்வி அமைப்பினால் கற்றுத் தரப்படுகிறது.

தோழமையுணர்வும் பகிர்தலும் மழலைப் பருவத்திலிருந்தே மறுக்கப்படுகின்றன. போட்டி மனம் என்னும் எதிர்மதிப்பீடு தங்கள் சமூக வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே இவர்களின் மனங்களில் முன்னோக்கி வீசப்படுகிறது.

செல்வம் ஒரு சிலரின் கரங்களில் குவிவதும் உலகில் வறுமையின் வளர்ச்சியும் முதலாளித்துவ கருத்தியலின் இன்னொரு வெளிப்பாடு. இஃது ஒவ்வொரு மனிதனின் தேவைகளின் அடிப்படையில் செல்வம் நீதியான முறையில் பகிரப்படவேண்டும் என்ற அடிப்படை உரிமைக்கு எதிரானது. பகிர்தலே புதிய சமுதாய அமைப்பில் வளரவேண்டிய நற்செய்தியின் அழைப்புளு கடவுளின் அரசின் கருப்பொருள்.

முதலாளித்துவ அமைப்பில் ஆற்றல் – அதிகாரம் ஒருசிலர் கரங்களில் குவிந்துகிடக்கிறது. உண்மையான மக்களாட்சி தீர்மானிக்கும் ஆற்றல் மக்களிடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறது. நற்செய்தியும் ஆற்றல் அல்லது அதிகாரம் என்பது அடக்கி ஆளுதல் அல்லளு மாறாக, பணிவிடைசெய்தல் என நினைவூட்டுகிறது.

முதலாளித்துவத்தின் பிழைப்பிற்கான போராட்டம் ஏகபோக உரிமைகளையும் பன்னாட்டு வணிக

வரும் சில பின்விளைவுகள். இந்நிலை மனிதாபிமானமற்ற வாழ்வுக்கு எதிரான சமுதாயப் புரட்சிக்குத்தான் வழிவகுக்கும்.

சுருங்கக்கூறின், செல்வம், மதிப்பு, பெருமை, அந்தஸ்து இவற்றுக்கான பித்துப்பிடித்த இத்தேடலுக்கு மாற்றாக ஒரேஒரு பதில்தான் இருக்கமுடியும்: அது மனிதசமூகப்பணியில் ஏழைகளின் விடுதலைக்காக கிறிஸ்து அறிவித்த நீதியின் அரசு. எல்லாஉயிர்களும் வாழ அழைக்கப்படும், தோழமையுணர்வும் பகிர்தலும் நிஜமாகும் ஓர் அரசை இயேசு இவ்வுலகில் நிறுவினார்.

இஃது ஓர் அற்புதமான கனவா? இது மனித இயல்பையும் அதன் தீமைகளையும் இல்லாமை ஆக்கிவிடுமா? மனித இயல்புக்கு மடமையெனத் தோன்றுவது இறைவனுக்கு ஞானம் என விசுவாசம் எடுத்தியம்பும். இவ்வுண்மையான மனித விடுதலையே நற்செய்தியின் அழைப்பு. இப்பணிக்காக ஒருவர் தன் வாழ்வை அர்ப்பணமாக்குவது தகுதியே.

மார்ச்சு, 1984

3. முழுமனித சமூகங்களை நோக்கி

திருத்தந்தை 23ஆம் அருளப்பர் ஏழைகளின் திருச்சபையில் மறுமலர்ச்சி ஒன்று தேவை எனவும் அதற்கென திருச்சங்கம் ஒன்று கூடவேண்டும் என்றும் அறிவித்தார். அந்நேரத்தில் பாரம்பரிய திருச்சபையில் இஃது எத்தகைய ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் என யாருமே ஊகிக்கவில்லை. ஏழைகளுக்கான திருச்சபை என்று கூறாமல் ஏழைகளின் திருச்சபை என்றே திருத்தந்தை கூறினார். ஏழைகளிடம் கரிசனை காட்டும் திருச்சபை மட்டுமல்ல, ஏழைகள் பக்கமே சார்ந்து நிற்கும் திருச்சபை.

இலத்தீன் அமெரிக்க திருச்சபைகள் தளர்ச்சியின் அடிமட்டத்தைத் தொட்டுவிட்டிருந்தன. குருக்களின் கடுமையான பற்றாக்குறை, பக்தி வழிபாட்டுக் குருட்டாட்டங்கள், புற்றீசல்கள் போல் பலுகிவரும் சிறுசிறு கிறிஸ்தவசபைகள்.... உண்மையான விசுவாசம் மாயமாகிப் போய்விட்டது போலொரு தோற்றம். இச்சூழ்நிலையில் சீர்திருத்த சபையினர் இதற்கெல்லாம் பதில்மொழியாக ஆவியின் அருங்கொடை (பெந்தேகோஸ்தே) இயக்கத்தில் மறுமலர்ச்சி கண்டனர். ஆவியில் மறுபிறப்படைவதன் அடையாளமான பரவசப்பேச்சு மற்றும் ஆவியின் கொடைகளை அவர்கள் வலியுறுத்தினார்கள். பல கத்தோலிக்க சபைகளும் இவ்வியக்கங்களில் ஒரு புதுவாழ்வைக் கண்டன. மறுமலர்ச்சியின் இன்னொரு வடிவமாக மரியாயின் சேனை உருவெடுத்தது. இது உலகை மறந்துவிட்டு செபவாழ்வை அதிகம் வலியுறுத்தியது. இப்படி எல்லா

இயக்கங்களும் உலகை மாற்றும் பொறுப்பை கடவுளிடமே ஒப்படைக்க விரும்பின.

இன்னொரு பக்கம் வெகுஜன நபர்கள் திருச்சபையில் தோன்றி ஏழைகளுக்கான ஓர் இயக்கத்தை முன்னெடுக்கத் தங்களையே அர்ப்பணித்தனர். ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் ஏழைகள், நோயாளிகள் மற்றும் சாகும் தருவாயிலிருப்போரைப் பராமரிப்பது போன்ற செயல்களில்தான் கவனம் செலுத்தினார்களே தவிர வறுமையின் அடிப்படைக் காரணிகளை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை.

சமுதாயத்தின் அடிமட்டத்தில் ஆவியானவர் அசைவாடிக்கொண்டிருந்த இந்நேரத்தில் இறையியலார்கள் இம்மறுமலர்ச்சியின் இறையியல் விளைவுகளைப்பற்றி சிந்திக்கத் தலைப்பட்டனர். இறையியலை அதன் சாரமற்றத்தன்மையிலிருந்து விடுவிக்க விடுதலை இறையியல் தோன்றியது.

இவ்விறையியல் சமுதாய அடிமட்டங்களில் ஆரம்பித்து வறுமையின் காரணிகளைப் பற்றி சிந்திக்கிறது. ஏழைகளோடு தோழமை கொண்டு அநீதி, வறுமை, ஒடுக்குமுறைகளுக் கெதிரான அவர்களது விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்க திருச்சபை அழைக்கப் படுகிறது. விடுதலையின் சின்னமாகவும் கருவியாகவும் திருச்சபை மாற வேண்டும். ஏழைகளே திருச்சபையாக மாறி முழுத்திருச்சபையும் உண்மையிலே ஓர் ஏழைத் திருச்சபையாக, ஏழைகளின் திருச்சபையாக மாறட்டும்.

ஏழைகளை விடுவிப்பவர் கிறிஸ்து. அவர் அன்பின், நீதியின், விடுதலையின், பணி வாழ்வின், உண்மையின் அரசாகிய கடவுளின் அரசைப் போதித்தார். அன்பு, நீதி

இவைதான் இவ்வரசின் வருகையை முன்னோக்கி அழைத்துவரும் ஆற்றல் பெற்றவை. அன்றாடம் நடைபெறும் திருநூலின் மீதான சிந்தனைப்பகிர்வுகள் சமூகத்தின் செயலாக்கத்தோடு இணைந்ததாக அமைய வேண்டும். இத்தகைய செயலாக்க சிந்தனைகள்தான் அவர்கள் வாழ்வை மாற்றமுடியும்ஃ அவர்களுக்குள் வலிமையான இணைப்புகளை உருவாக்கி ஒருவரையொருவர் தாங்கமுடியும்.

இவ்வாறு திருநூல் பகுதிகளின் மீதான சிந்தனைப்பகிர்வுகள் மூலம் மக்கள் தங்கள் வாழ்வின் நிஜங்களை, அவற்றின் காரணிகள், ஒடுக்குமுறை மற்றும் அநீதியின் வடிவங்கள் இவற்றைப் புரிந்து விழித்தெழச் செய்யவேண்டும்.

அவர்களுடைய முதல் அணுகுமுறை திருநூலைத் தொடர்ந்து வாசித்து இன்று அவர்களிடம் பேசும் கடவுளுக்கு செவிமடுத்தல் ஆகும். நற்செய்தி ஒரு போராட்டம் என்கிறார் ஒருவர். கிறிஸ்துவை நான் தேடினேன் ஆனால் கிறிஸ்துவை நான் காணவில்லை. என்னை நான் தேடினேன்ஃ ஆனால் என்னை நான் காணவில்லை. என் அயலானைத் தேடினேன் என் அயலானைக் கண்டேன்ஃ அவனில் என்னைக் கண்டேன் என் கிறிஸ்துவைக் கண்டேன் என்கிறார் வேறொருவர். இதுவே பங்கேற்பு வழி வரும் மீட்பும் விடுதலையும். தேவைகளைப் புரிந்துகொள்ளவும், போராட்டத்தில் பங்கேற்கவும் முதலில் நாம் அழுகுரலுக்கு செவிமடுக்க வேண்டும்.

அடுத்து வருவது பாடல்கள், வீதிநாடகங்கள் போன்ற முறைசாரா யுக்திகள் வழி வெகுஜனக் கல்வி.

தொடர்ந்து மக்கள் அமைப்புகள் இயக்கங்கள். இவையே மாற்றங்கள் சாத்தியம் என்ற நம்பிக்கையை மக்களுக்கு அளித்து வெகுஜன செயலாக்கத்திற்கு மக்களைத் தயாரிக்கின்றன.

கனடா நாட்டில் மடோனா இல்ல அருட்பணி என்பது கத்தரீன் டிஹியூக் டோரத்தி என்பவரால் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் ஏழைகளுக்கு பொருள் உதவிகள் செய்வது மட்டுமல்லாது சமூக நீதியைக் கொணர்வதும் இதன் நோக்கம். இதன் கொள்கை அறிவிப்பை நாம் சற்று சிந்திப்பது நல்லது. இந்திய சூழ்நிலையில் அமெரிக்காவில் நீக்ரோ என்பதற்குப் பதிலாக இந்தியாவில் தலித் மக்கள் என்று வாசித்து பொருள் கொள்ளலாம்.

- அமெரிக்காவில் ஒரு நீக்ரோ கிறிஸ்தவ விரோத, ஜனநாயக விரோத பிரிவினைச் சட்டங்களுக்கு உட்படுத்தப்படும் காலம் முடியும் வரை நம் பணி ஓயாது.

- அமெரிக்காவில் ஒரு நீக்ரோ ஒதுக்குப்புற சேரிகளில்தான் வாழவேண்டும் என்ற காலம் முடியும் வரை நம் பணி ஓயாது.

- தான் கறுப்பன் என்பதற்காக ஒரு நீக்ரோவுக்கு மருத்துவமனையில் படுக்கைவசதி மறுக்கப்படும் காலம் முடியும் வரை (பொதுக்கிணற்றில் தண்ணீர் இறைக்கும் உரிமை மறுக்கப்படும் காலம் முடியும் வரை) நம் பணி ஓயாது.

- தான் கறுப்பன் என்பதற்காக ஒரு நீக்ரோவுக்கு பங்கு மற்றும் பொதுப்பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில், கல்லூரிகளில் அனுமதி மறுக்கப்படும் காலம் முடியும் வரை நம் பணி ஓயாது.

- தான் கறுப்பன் என்பதற்காக ஒரு நீக்ரோவுக்கு அமெரிக்காவில் வேலைவாய்ப்பு மறுக்கப்படும் காலம் முடியும் வரை நம் பணி ஓயாது.
- அமெரிக்காவில் ஒரு நீக்ரோ கிறிஸ்துவில் நம் சகோதரியாக, சகோதரனாக, வானகத் தந்தையின் பிள்ளையாக மதிக்கப்பட்டு அவளுடைய அவனுடைய மனித மாண்பும் ஜனநாயக உரிமைகளும் காக்கப்படும் நாள் விடியும் வரை நம் பணி ஓயாது.

உயிர்ப்புப் பெருவிழா, 1991

4. நான் ஒரு குரு இயேசுவின் சீடன்

குருத்துவத்தைப்பற்றி நூல் ஒன்று எழுதுவதோ அல்லது குருவாக இருப்பது என்றால் என்ன என்று ஓர் இறையியல் கட்டுரை எழுதுவதோ எனது நோக்கம் அல்ல. குருக்களின் வாழ்வுமுறை அல்லது அவர்களது பயிற்சி பற்றி விமர்சிக்கவோ அல்லது தீர்ப்பிடவோ நான் விழையவில்லை. நான் எவ்வாறு ஒரு குருவாக, இயேசுவின் சீடனாக வாழ முயற்சித்திருக்கிறேன் என்பதை பகிர்ந்து கொள்ளவே நான் விரும்புகிறேன்.

நான் ஒரு குரு என்றால் அதற்கு ஒரே காரணம் இயேசு ஒரு குரு என்பதுதான்ஞ நான் ஒரு குரு என்பது இயேசு ஒரு குரு என்பதிலிருந்து பிரிக்கமுடியாது. ஆனால் அவர் ஆலயக்குரு அல்லர். இயேசு ஒரு குரு என்றால் அதற்கு என்ன பொருள்? நான் வரலாற்று இயேசுவுக்குத் திரும்பிச்சென்று அவருடைய வார்த்தைகள், செய்கைகள், செயல்கள் இவற்றிலிருந்து இது அவருக்கு என்ன பொருளைக் கொடுத்தது என்று புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

இயேசு ஒரு வழிபாட்டுக் குரு அல்லர். இயேசுவின் காலத்து லேவியக் குருக்களோடு அவர் வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்வேற்றுமை தெள்ளெனத் தெரியும். அக்காலத்தில் குருத்துவப்பணி ஒரு குறிப்பிட்ட மரபினருக்கு வாழையடி வாழையாக ஒதுக்கப்பட்ட பணி. அம்மரபினருக்கென்று தனிப்பட்ட உடைகள் இருந்தன. அவர்கள் வாழ்வு எருசலெம் ஆலயத்தையே வலம் வந்தது. சடங்குகளை நிறைவேற்றுவதும் இரத்தப் பலிகள் ஒப்புக்

கொடுப்பதும் இவர்களின் முக்கிய பணி. (விழாக்காலத்தின் முக்கிய ஒரு நாளில் மட்டுமே ஏழாயிரம் செம்மறி ஆடுகள் பலிகொடுக்கப்பட்டன. அங்கு வழிந்தோடும் குருதிப்புனலைப் பார்க்கவேண்டுமே!). தலைமைக் குருவின் சமய மற்றும் அரசியல் அதிகாரம் கேள்விக்கு அப்பாற்பட்டது. ஒரு நல்ல யூதனைப்போல இயேசுவும் விழாநாட்களில் ஆலயத்திற்குச் சென்றார். ஆனால் அவ்வாலயம் இடிக்கப்படும் என்றும் அதன் குருத்துவம் ஒழிக்கப்படும் என்றும் உண்மையான கடவுளை ஆவியிலும் உண்மையிலுமே வழிபடவேண்டும் என்றும் அறிவித்தார். கடவுள் இரத்தப் பலிகளை விரும்பவில்லை எனவும் தூய உள்ளத்தோடு ஏழைகளுக்கு பணிசெய்வதையே விரும்புகிறார் எனவும் முழக்கமிட்டார். இறைவாக்கினர்கள் வழியாக இத்தகைய பலியையே கடவுள் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கடவுளோடு ஒரு வழிபாட்டு உறவையே திருவருட்சாதனங்கள் வழியாக திருச்சபை வலியுறுத்தி வந்திருப்பதாக நான் உணர்கிறேன். நற்கருணை வெறும் வழிபாட்டுச் சடங்கு அல்ல. அதன் வழிபாட்டு அம்சத்தை முன்னிலைப் படுத்துவது தவறானதும் ஆபத்தானதுமாகும்.

ஒரு குருத்துவப் பரம்பரையின் பிரசன்னமும் ஆலயப்பலிகளுக்குக் கொடுக்கப்பட்ட அளவுக்கதிக முக்கியத்துவமும் மக்கள் மனதில் புனிதம் புனிதமற்றது என்று பிரித்துப் பார்க்கத் தூண்டியது. கடவுளுக்கு அர்ச்சனையானது புனிதமானது என்றும் சதாரண மனிதர்கள் அதைத் தொடவோ நிறைவேற்றவோ கூடாது என்ற நிலை உருவாகியது. பின்னர், கிரேக்க நாட்டு பிளேட்டோவின் தத்துவ இயல் ஆன்மா, உடல் என்ற பாகுபாட்டை அறிமுகப்படுத்தி இப்பிரிவினையை இன்னும்

அதிகமாக்கி நியாயப்படுத்தியது. இதன் தாக்கத்தினால் திருச்சபையும் புனிதம்–புனிதமற்றது என்ற பிரிவினையை பெரிதுபடுத்தியது. இதன் பின்விளைவுகள் பல. கடவுளுக்கு அர்ச்சனையான எதுவும் புனிதமானதுஞு எனவே அது பாவநாட்டமுள்ள உலகிலிருந்து பிரித்து வைக்கப்பட வேண்டியது. குரு கடவுளுக்கென்று அர்ச்சனையானவர். எனவே அவருக்கென்று தனிஇடம், தனிப்பயிற்சி, தனிஉடைஞு திருக்கிண்ணம், அப்பம், திருவுடைகள் போன்ற புனித பொருட்கள்ஞு ஆலயம், கல்லறைத் தோட்டம் என புனித இடங்கள்ஞு புனித மொழி..... உயர் மதிற்சுவர்கள், இரும்புத்திரைகள்!

திருச்சபையின் வாழ்வுமுறை இப்பிரிவினையை பிரதிபலித்தது. உலகம் பாவமானது என்ற ஜான்சனின் கோட்பாடுகள் இதற்கு முந்திய கிறிஸ்தவ தலைமுறையினரை பெரிதும் பாதித்தன. மக்கள் நீண்ட தயாரிப்புக்குப்பின் ஆண்டுக்கு ஒருமுறைதான் திருவிருந்துக்கு அனுமதிக்கப்பட்டார்கள். திருமணமானவர்கள் திருவிருந்து உட்கொள்ளும் முந்திய இரவில் மணவுறவு கொள்ளமுடியவில்லை. ஜான்சனிய அனுகுமுறைகளும் மனநிலைகளும் நீண்ட காலத்துக்கு மக்களின் மனசாட்சியைக் குழப்பிக்கொண்டே இருந்தன.

இயேசு தூய்மையின் உயர்நிலையை எட்டிப்பிடிக்க விரும்பிய ஒரு மதவாதி அல்லர். சட்டங்களை நுணுக்கமாக அனுசரித்து கடவுளோடு ஒன்றிணைய விரும்பிய கும்ரான் பகுதிகளில் வாழ்ந்த மணத்துறவுபூண்ட துறவிகளின் வரிசையிலும் இயேசு இடம் பெறவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களைப் போலவும் அவர் இல்லை. மோசஸ்

கொடுத்தாகக் கூறப்படும் சட்டங்கள் அத்தனையையும் கடைபிடிப்பது என்பது சாமானிய மக்களுக்கு சாத்தியமாகப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் புனித உச்சியை தங்களால் அடையமுடியும் என்று அவர்கள் நம்பவில்லை. இயேசு ஒரு பரிசேயராக இல்லாமல் ஏழைகளோடு நின்றார். ஏழைகள் பாவிகள் பொருட்டு சட்டத்தை உவப்போடு உடைத்தார். தனிச்சட்டங்கள் ஒழுங்குகள் கொண்ட தனிமதம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அவர் நினைத்ததே இல்லை. ஆனால் சட்டத்தை உடைத்துவிடுவோமோ என்று நாளும் அஞ்சிமடிந்த மக்கள் மத்தியிலே உயிர்த்துடிப்பையும் மகிழ்சியையும் கொண்டு வரவேண்டுமென்று விரும்பினார்.

இயேசு ஓர் இறையியல் வல்லுநர் அல்லர். சட்டங்களையும் புனித நூலையும் கற்றுத் தேர்ந்த சட்டவல்லுனர்களில் ஒருவராக அவர் இருக்கவில்லை. அவர் இறையியலார் பேசும் மொழியில் பேசவில்லை. மாறாக விவசாயிகள், மீனவர்கள், ஆட்டிடையர்கள் போன்ற சாமானிய மக்களின் மொழிகளில் பேசினார். அவருக்கு எழுத வாசிக்கத் தெரியும்�ளூ ஆனால் ஒரு கடிதம்கூட அவர் எழுதவில்லை. சொல்லப்பட்டிருப்பதெல்லாம் ஒருநாள் மணலில் ஏதோ விரலால் எழுதிக்கொண்டிருந்தார் என்பது மட்டும்தான்.

இயேசு ஓர் அரசர் அல்லர். கூடியிருந்த மக்கள் அவரை மன்னராக்கி உரோமையருக்கு எதிரா கலகம் செய்ய விரும்பியபோது இயேசு திட்டவட்டமாக மறுத்துவிட்டார். இஸ்ராயேல் மக்களுக்கு மன்னர் ஒருவரேளூ அவர் கடவுள் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட விரும்பினார். உரோமையர்களைப் போல தங்கள் குதிரைகளையும் போர் வீரர்களையும் பராமரிக்க வரிவசூலிக்கும் உலக அரசர்கள் மக்களை அடிமைப் படுத்துகிறார்கள். தாவீதின் மரபிலே

மன்னனாக இயேசு மறுத்துவிட்டதை திருச்சபை மறந்துவிட்டது. இந்நூற்றாண்டின் துவக்கத்தில் கிறிஸ்தவத் தொழிலாளர்கள் தொழிலாளரான இயேசுவின் திருவிழா வேண்டும் என்று கோரிய போது திருச்சபை அவர்களுக்கு தொழிலாளரான புனித சூசையப்பரின் விழாவை ஏற்படுத்திக் கொடுத்தது. இயேசுவுக்கோ அரசர் பட்டமளித்து கிறிஸ்து அரசர் விழாவை ஏற்படுத்தியது. அன்றே தொழிலாளர்களை திருச்சபை இழந்துவிட்டது!

இயேசு ஒரு மனிதன். ஒரு சாதாரண பொதுநிலை மனிதன். கடவுள் உலகைப் படைத்தபோது அதை நல்லதெனக் கண்டார். பின் ஆணையும் பெண்ணையும் படைத்த போது மிகவும் நல்லதெனக்கண்டார். எந்த அளவுக்கென்றால் மனிதர் மத்தியில் தன் கூடாரத்தை அமைக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்து மரியா என்ற ஒரு பாலஸ்தீன யூத இளநங்கைக்கு மகனாகப் பிறந்தார். அவரில் இறைமையும் மனிதமும் பிரிக்கமுடியாதவாறு தீர்க்கமாக ஒன்றையொன்று எதிர்கொண்டன. அவருடைய பிறப்பிலே அவர் இணைப்பாளராக, பாலமாக, என்றைக்கும் குருவாக மாறினார். இறைவனும் மனிதனும் இணைந்து சந்திக்கும் ஒரு மனிதராக அவர் மாறினார். அவரைப் பின்தொடரவும் அவர் முகத்தில் இறை முகத்தைக் காணவும் அவர் மக்களை அழைத்தார். அவர் ஊனுடல் எடுத்த அந்நேரம் முதல் பிளவுபட்ட உலகம் ஒன்றாகியது. இனி மனிதம் இறைமை, இயற்கை இயற்கைக்கு மேற்பட்டது, புனிதம் புனிதமற்றது, மனித வரலாறு மீட்பின் வரலாறு என்ற வேறுபாடுகளுக்கெல்லாம் இடம் இல்லை. எல்லாம் அவரில் புதிப்பிக்கப்படுகிறது. இதைத்தான் கீழைத்திருச்சபை, கிறிஸ்து தனதாக்கிய எல்லாமே மீட்கப்பட்டன என அழகாகக்

குறிப்பிடுகிறது. முழுமனிதமும், அதன் நாகரீகங்கள், கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், அதன் உடல், உள்ளம், குடும்பம், சமுதாயம் எல்லாமே மீட்கப்பட்டன. திருச்சபை பிற நாகரீகங்கள், கலாச்சாரங்கள், மதங்கள் மீதுள்ள தன் அணுகுமுறையில் ஏன் நம்பிக்கை வைத்திருக்கிறது என்பது இதனால் விளங்குகிறது. பண்பாட்டு மயமாவதில் அனைத்துமே கிறிஸ்துவில் ஏற்கப்படவேண்டும்.

உலகை சபிக்கவோ அல்லது அழிக்கவோ இயேசு வரவில்லை. மாறாக அதை மீட்கவே வந்தார். அவருடைய பிரசன்னத்தினால் மனிதம் உருமாற்றம் அடைகிறது. அதன் உடல் மற்றும் ஆன்மா, தசை மற்றும் இதயம், உணர்வுகள் மற்றும் ஆசைகள், சுருக்கமாக, அன்பு செய்யவும் துன்பங்களை ஏற்கவும் அதற்குள்ள ஆற்றல் எல்லாமே அவரில் மாற்றம் பெறுகின்றன. கீழைத்திருச்சபையின் மிகப்பெரிய விழா கடவுள் தம்மை உலகுக்கு வெளிப்படுத்திய ஆண்டவருடைய திருக்காட்சி விழா. ஆனால் இலத்தீன் திருச்சபையின் மிகப்பெரிய விழா கடவுள் தரும் மீட்பும் விடுதலையும் வெளிப்படும் ஆண்டவருடைய உயிப்புப் பெருவிழா.

கடவுள் மனிதத்தை உருமாற்றி புனிதப்படுத்தி அதை தெய்வீகமாக மாற்றியுள்ளார். இதுவே திருச்சபையில் தொடரும் கிறிஸ்துவின் பணி. அதாவது ஒவ்வொரு மனிதனும் அவன் கலாச்சாரம், சமூகம், சமயம் மனிதம் முழுமையுமே முழுமை அடைய ஏற்கப்பட்டு கடவுளிடம் மீண்டும் கொண்டு வரும் பணி இது.

இந்தியாவிற்கு செல்ல நான் பெற்ற அழைப்பின் இறையியல் அடிப்படையும் இதுதான். ஏழைமக்களோடு என்னையே

இணைத்துக் கொள்ளவும் அவர்களுடைய வாழ்வில் பங்குகொண்டு அவர்களோடு ஒருவராகி கிறிஸ்து அவர்கள் மத்தியில் பிரசன்னமாகும் வண்ணம் கிறிஸ்துவின் பொதுக்குருத்துவத்தை வாழ்வதே என் நோக்கம். படைப்பு அனைத்துமே கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு புதுப்படைப்பாக மாறவேண்டும்.

இந்நேரத்தில் நான் ஒரு கேள்வியை எழுப்பலாம். இயேசுவே நீர் யார்? நீர் ஒரு வழிபாட்டுக்குரு அல்லர்ளு ஒரு துறவி அல்லர்ளு இறையியல் வல்லுனர் அல்லர்ளு மன்னர் அல்லர். நீர் ஒரு மனிதர்ளு முழுமையான மனிதர்: விசுவாச-ஜெப மனிதர்ளு இறைவாக்கு மனிதர்ளு துன்புறும் ஊழியன் ஆயன் தன் மந்தையை பராமரிக்கும் குரு!

இயேசுவே நீர் யார்? இயேசுவே, நீர் கூறவில்லையென்றால் உமது வாழ்வின் ஆழத்தை, தந்தையோடுள்ள உம் உறவை, உம் விசுவாசத்தின் பொருளை, உமது சோதனைகளை, இறுதியாக உமது அன்பின் மறைபொருளை என்னால் புரிந்துகொள்ள முடியாது.

நீர் ஒரு விசுவாச மனிதர். இயேசுவே உமது விசுவாசத்தை நான் புரிந்துகொள்ள உதவியருளும். என் விசுவாசம் உம்மைப்பற்றியும் தந்தைமீது உமக்குள்ள உறவையும் புரிந்து கொள்ளுமளவுக்கு வலுவற்றது. எம் விசுவாசம் முழுமையடையுமாறு (எபி. 12:12) எம்மை வழிநடத்தும். உமது தந்தை உமக்களித்த பணியை நீர் செய்து முடித்தீர். பல ஆண்டுகள் நீர் நாசரேத்தில் வாழ்ந்தபின் உமது சகோதரர் அருளப்பர் மனந்திரும்புதலின் திருமுழுக்கு அளிப்பதைக் கேள்விப்பட்டு நீர் சென்று அருளப்பரிடம்

திருமுழுக்குப் பெற வேண்டினீர். ஏன் நீர்கூட உம் சீடர்களோடு திருமுழுக்கு அளிக்கத் தொடங்கி அருளப்பரின் சிறந்த சீடர்களை உம்பக்கம் இழுத்துக்கொண்டீர். (அரு. 3:22, 4:1–2) ஆனால் திருமுழுக்கு அளித்துக் கொண்டிருப்பது உமது பணி அல்ல என்று விரைவில் உணர்ந்து பின் எல்லாவகை வேற்றுமைகளையும் பிரிவினைகளையும் தகர்த்தெறியும் கடவுளின் அரசைப் போதிக்கத் தொடங்கினீர். கடவுளரசின் வருகையை பல அடையாளங்கள் மூலம் குறிப்பாக ஏழைகள், பாவிகள், நோயாளிகள் மீது உமக்கிருந்த தனிப்பட்ட அக்கறையின் மூலம் காட்டினீர். மக்கள் கூட்டம் உம்மைப் பின்தொடர்ந்தது. நீர் அவர்களுக்கு நம்பிக்கையையும் இருப்பதைப் பகிர்தலையும் கற்றுக்கொடுத்தீர்.

கடவுளின் மக்களை நீர் ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தில் ஒன்றிணைத்து அதை உம் சீடர்களிடம் ஒப்படைத்தீர். சங்கிலி போல் தொடர வேண்டிய இவ்வியக்கத்தில் என்னை ஒரு கண்ணியாக நான் பார்க்கிறேன். மக்கள்மேல் நீர் அதிக அன்பும் அக்கறையும் கொண்டிருந்த போதும் நீர் ஏமாற்றமடைந்தீர். ஏனெனில் அவர்கள் உம்மை அரசனாக்கி உரோமையர்களை பாலஸ்தீனத்திலிருந்து துரத்தியடிக்க விரும்பினார்கள். மேலும் செல்வமும் அதிகாரமும் நிறைந்தவர்கள் உம்மைக் கொல்லத் தேடினார்கள். உமது நேரம் இன்னும் வராததால் நீர் மக்கள் கூட்டத்தைத் தவிர்த்துவிட்டு உம் திருத்தூதர்களைப் பயிற்றுவிப்பதில் கவனம் செலுத்தினீர். தவிர்க்கமுடியா எதார்த்தமாகிய உமது துயரங்களையும் சாவையும் ஏற்றுக்கொள்ள உம் சீடர்களைத் தயாரிக்கும் வேதனையான பணி உமக்கிருந்தது. துன்புறும் ஊழியன் என உம்மைப்பற்றி இறைவாக்கினர் இசையாஸ் ஏற்கனவே முன்னறிவித்திருந்தார்.

இங்குகூட உமது சீடர்களோடு என்னையும் இணைத்துக் கொண்டு உடலிலும் உள்ளத்திலும் துன்பப்படும் அனைவருடைய வேதனைகளிலும் கலந்துகொண்டு துன்பத்தின் பொருளைக் காண முற்பட்டேன். மனுக்குலத்தின் மீதுள்ள உமது அன்பினால் சாவையும் துன்பத்தையும் பகிர்ந்து கொண்டீர். இதுவே சாவிற்கும் துன்பத்திற்கும் நீர் தந்த பதில். ஏழைகளின் ஊழியனாக மாறி அதிலே அமைதியும் நிறைவும் கண்டு தன்னையே வெறுமையாக்கும் வழியை நீர் எனக்குக் கற்பித்தீர். ஆனால் உமது செய்தி இதற்கு அப்பாலும் செல்கிறது. சாவைக்கடந்து நீர் இப்போது எங்களில் எங்கள் மத்தியில் உயிரோடிருக்கிறீர்ளூ கடவுளரசு நிஜமாகும் புதியபூமியின் நம்பிக்கையைக் கொணர்ந்து எங்களில் நீர் பிரசன்னமாகி இருக்கிறீர்.

உயிர்த்த இயேசுவே உமது பெயரால் கூடியிருக்கும் விசுவாச சமூகத்தில் நீர்தாமே உயிர்வாழ்கிறீர். அவர்களை ஒன்றுகூட்டுவது குருக்களாகிய எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளுள் ஒன்று. அவர்களை ஒன்றுகூட்டி அப்பத்தைப் பிட்டு பகிர்ந்து கொள்வது எங்களுக்கு ஆனந்தம். இப்பணியில் நான் நிறைவுகண்டுள்ளேன்.

இயேசுவே நீர் ஒரு செபமனிதர். ஒவ்வொரு நல்ல யூதனிடமும் எதிர்பார்க்கப்பட்டதுபோல் நீர் செபவாழ்வில் பிரமாணிக்கமாக இருந்தீர். கடவுளை அப்பா என்றழைக்க உம் சீடர்களுக்குக் கற்பித்தீர். அப்பா, உமது அரசு வருக என்று நீர் செபித்தபோது உமக்கும் தந்தைக்குமுள்ள உறவு வெளிப்பட்டது. இச்செபம் எங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தியது.

இயேசுவே நீர் எமக்கு நற்கருணையைத் தந்தீர். மனுக்குலத்தின்மீது நீர் கொண்ட அன்பின் எண்ணற்ற அடையாளங்களுள் மிகச்சிறப்பான ஒன்றாக இந்நிகழ்வை அளித்தீர். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றுகூறி உம் திருத்தூதர்களின் பாதங்களைக் கழுவி அவர்களோடு உணவு பகிர்ந்து கொண்டீர். இதில் ஒன்று அருட்சாதனமாகியபோது மற்றது ஏன் ஆண்டிற்கொருமுறை வந்துபோகும் ஒன்றாக மறைந்துவிட்டது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பணிவாழ்வு, நன்றிப்பலி இரண்டுமே என் நினைவாகச் செய்யுங்களெனப் பணிக்கப்பட்டதுதான். ஒன்றுடன் மற்றது. ஒன்றில் மற்றது. ஜான் கிறிசோஸ்தம் சரியாகச் சொல்லியிருக்கிறார்:

கிறிஸ்துவின் உடலுக்கு நீங்கள் மதிப்பளிக்க விரும்புகிறீர்களா? அவர் அடையின்றி இருக்கும் போது அவரைப் பழிக்காதீர். பட்டு ஆடைகளால் அவருக்கு மரியாதை செலுத்திவிட்டு வெளியில் ஆடையின்றி குளிரில் நடுங்கும் அவரைப் புறக்கணிக்காதீர்கள். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றவரே

நான் பசியாயிருந்தேன் நீங்கள் எனக்கு உணவளிக்கவில்லை என்று சொன்னவர். கிறிஸ்து பட்டினியால் வாடும்போது அவரது பீடத்தை தங்கக் கிண்ணங்களால் அழகு செய்வதால் என்ன பயன்? நீங்கள் தங்கக் கிண்ணம் செய்கிறீர்கள். ஆனால் அவருக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுக்க மறுக்கிறீர்கள். அயலானுக்கு உதவிசெய்பவர் ஒரு குருத்துவப் பணியாற்றுகிறார். கிறிஸ்துவின் பீடத்தைக் காண விரும்புகிறீர்களா? அவர் பீடம் தெருவெங்கும் காணக் கிடக்கிறது. எந்நேரமும் நற்கருணைக் கொண்டாட்டம் நடத்தலாம்.

கிறிஸ்துவின் இவ்விரு செயல்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிளவுதான் நற்கருணைமீது இளைஞர்களுக்கு ஆர்வம் குன்றிப்போனதற்குக் காரணமாக இருக்கலாம்! இவ்விரு செயல்களில் ஒன்று பெரும்பாலான நேரங்களில் வாழ்வின் நிஜங்களோடு எவ்விதத் தொடர்புமற்ற வெறும் சடங்காகவும் மற்றது ஆண்டுக்கொருமுறை வந்துபோவதாகவும் மாறிப்போய்விட்டது.

இதை என் நினைவாகச் செய்யுங்கள். இஃது உமது கோரிக்கை. நீர் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொன்னதை நினைக்கும் போது இஃது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும் என்பது புரிகிறது. இது நடந்து முடிந்த ஒரு நிகழ்ச்சியை நினைவுபடுத்திப் பார்ப்பது மட்டுமல்ல, எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு உடலும் உள்ளமும் நொறுங்குண்டவராய், நிர்வாணமாக்கப்பட்டு சிலுவையிலறையுண்ட பின் மீண்டும் திரும்பிவந்து நம்முடன் வாழும் இயேசுவுடன் நாம் நடத்தும் ஆனந்தக் கொண்டாட்டமும் ஆகும். சாவிலிருந்து வாழ்விற்குக் கடந்து வந்ததை நாம் கொண்டாடுகிறோம். அக்கொண்டாட்டத்தின் மதிப்பை சீடர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. அவர்கள் வாழ்வை மாற்றப்போகும் ஏதோ ஒன்று நடக்கப்போகிறது என்று யூகித்துக் கொண்டிருந்தனர். ஒரு புதிய உலகமே பிறந்து கொண்டிருந்தது என்று அந்நேரத்தின் முழு அர்த்தத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. உயிர்ப்பு என்பது தங்கள் கண்முன்னே நடந்தேறப்போகும் ஒருநிகழ்ச்சி என்பதையோ அதுதான் கொண்டாடவிருக்கம் புதுவாழ்வு என்றோ அவர்களால் கற்பனை செய்துகூட பார்க்க இயலவில்லை. பிறகு இதுவரை யாரும் கேட்டிராத ஆனால்

உண்மையான அந்நிகழ்வு புதிய சமூகத்தை உலுக்கும் அந்நிகழ்வு நடந்தது. இறந்தவர் உயிர்பெற்று வந்துள்ளார், நம்மிடையே வாழ்கிறார், நற்கருணையிலே பிரசன்னமாகியுள்ளார். உயிர்ப்பின் நம்பிக்கை இல்லையெனில் கிறிஸ்தவ விசுவாசமே இல்லை, நற்கருணையே இல்லை.

பாஸ்கா உணவு இஸ்ராயேல் மக்களுக்கு ஒரு புனிதமான உணவு. இதன்மூலம்தான் கடவுள் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததை நினைவுகூர்ந்தார்கள். இந்நிகழ்ச்சி மூலம் இஸ்ராயேல் மக்களைக் கடவுள் தம் மக்களாக்கிக் கொண்டார். இஃது ஒரு விடுதலையின் உணவுளு ஓர் உடன்படிக்கையின் உணவு. இது நிசான் மாதத்தின் 14ஆம் நாள் நன்றியின் நினைவாகக் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. ஆனால் நற்கருணையில் இதைவிட அதிகம் உள்ளது. பாஸ்கா உணவு ஆண்டிற்கொரு முறையே கொண்டாடப்பட்டது. ஆனால் ஆதித்திருச்சபையில் மக்கள் ஒன்ற கூடியபோதெல்லாம் நற்கருணை அவர்கள் வீடுகளில் கொண்டாடப்பட்டது. யூதர்களின் பாஸ்கா விழாவில் இயேசுவே நீர் புதிதாகக் கொண்டுவந்தது என்ன?

அவ்வுணவில் அடையாளங்கள் தவிர வேறொன்றும் நிகழ்ந்தது. இயேசு அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து படைப்பின் வார்த்தைகளை நினைவூட்டும் *வார்த்தைகளைக்* கூறுகிறார். கடவுள் சொன்னார்ளு அவை அவ்வாறே ஆயின. இதை உண்ணுங்கள்..... இதைப்பருகுங்கள்..... இது உங்களுக்காகப் பலியாகும் என் உடல். அப்ப இரசத் தோற்றத்தில் எம்மாற்றமும் இல்லை. ஆனால் அவற்றின் உட்பொருள் புது அடையாள முக்கியத்துவம் பெறுகிறது. அவை நம்மில் பிரசன்னமாகும் உயிர்த்த இயேசுவிடமிருந்து

பெரும் வாழ்வைத் தருகின்றன. நமக்கு வாழ்வளிக்கும் கிறிஸ்துவின் உடல் இரத்தத்தால் நாம் ஊட்டம் பெறுகிறோம். இது புது ஊனுடலெடுத்தலின் வடிவம். இஃது இறைவனில் ஒரு புதுவாழ்வு

இங்குதான் நான் என்னைக் காண்கிறேன். மானிடரை ஒப்புரவாக்கவும் கடவுளரசைக் கட்டியெழுப்பவும் அழைக்கப்பட்ட துன்புறும் ஊழியனாக நான் நிறைவு பெற்று என் குரல் வழியாக தம் மக்களைப் பெயர் சொல்லி அழைக்கும் ஆயனின் பெயரால் அவர்களை நற்செய்திப் பாதையில் வழிநடத்தும் இப்பணியில் நான் என்னைக் காண்கிறேன், குருவாம் இயேசுவில் இணைகிறேன். எனக்காக அனைத்தையுமே துறந்துவிடும் எவரும் நூறுமடங்கு திரும்பிப் பெறுவான் என்றார் இயேசு. இதை நான் ஆனந்த நிறைவோடு என் வாழ்வில் அனுபவித்திருக்கிறேன்.

ஜூலை 1986

5. என் வாழ்வில் ஜெபம்

என்னைப் பொறுத்தவரையில் ஜெபம் அறிவுப்புலத்தைக் கடந்த ஒரு விசுவாச அனுபவம். தன்னையும் உலகையும் பற்றிய ஒரு புதிய உணர்வுளூ தன்னையும் பிறரையும் உலகையும் கடவுளின் கண்கொண்டு பார்க்கும் அனுபவம் இது. நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். நான் வாழ்ந்த விசுவாசம் இறைமக்கள் வழியாக என் பெற்றோரிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட கொடை. இதை உதறித்தள்ள வேண்டும் என நான் உணர்ந்த நேரம் வந்தது. ஏனெனில் இது பிறரால் எனக்குக் கொடுக்கப்பட்ட ஒன்று. இதை நானாகவே கண்டுபிடிக்க விரும்பினேன். விசுவாசத்தைக் கண்டடைதல் என்பது என்னை முழுதும் ஆட்கொண்ட ஒரு தீரமிக்க பயணமாக மாறியது. இந்நோக்குடனே நான் என் குருமட வாழ்வைத் தொடங்கினேன். என் விசுவாத்தோடு ஒருங்கிணையா எதையும் நான் ஏற்றுக்கொள்ள மறுத்தேன். இறையியல் வல்லுனர்களின் கற்பனைகளில் கடவுள் வெளிப்படுத்திய உண்மைகளில் வெவ்வேறு தரங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தேன். இயேசு என்ற மனிதரை, அவர் வாழ்ந்த நற்செய்தியைக் கண்டேன். உயிர்த்த இயேசுவுக்கும் எனக்குமிடையே ஓர் உறவு ஆழமாக வளர்ந்து சென்றது. என்னில் நான் உணர்ந்த அவருடைய அன்புப் பிரசன்னத்தோடு ஒப்பிடும் போது இறையியல் கோட்பாடுகள் இரண்டாம் தரமாகப்பட்டன. இயேசு என் வாழ்வின் மையமானார்ளூ அவரைச் சுற்றி என் விசுவாசம் படிப்படியாகக் கட்டி எழுப்பப்பட்டது.

என் அன்றாட வாழ்வில் இயேசுவின் பிரசன்னத்தை நான் உணரத்தொடங்கினேன். என்னிடம் பதில் தேடும் ஓர் அமைதியான அன்பொழுகும் இதமான பிரசன்னம்! என் இதயத்தில் அவரின் பிரசன்னத்தை நான் அதிகமாக உணர்ந்த நேரங்களெல்லாம் ஜெபமாக மாறின. நற்செய்தி நூல்களில் இயேசு கடவுளரசின் மதிப்பீடுகளைப் போதித்து அதையே தன் வாழ்வாக மாற்றினார் என்பதை உணர்ந்தேன். என் விசுவாசத்தின் நிஜமாக இயேசு வாழ்ந்தார்.

பலகாலங்களுக்குப் பிறகுதான் நான் தந்தையை என் வாழ்வின் அங்கமாகக் கண்டேன். திருச்சபை தன் ஜெபங்களை இயேசுவில் வெளிப்பட்ட தந்தைக்கே செலுத்தியது. இயேசு தந்தைக்குச் செல்லும் வழி என்பதை நான் புரிந்துகொள்ள வழிபாடு எனக்கு உதவியது. இதிலிருந்து என் ஜெபவாழ்வு இயேசு வழியாக தந்தைக்கு என்ற ஒரு புது பரிணாமத்தைப் பெற்றது.

என்னிலும் பிறரிலும் இறைபிரசன்னத்தை நான் உணர்வது எனக்கு ஜெபமாக மாறிவிட்டிருந்தது. இதில் பேசுதலும் செவிமடுத்தலும் அவசியமாகிறது. பேசுவதைவிட அதிகம் செவிமடுத்தலே ஜெபத்தின் மையமாக ஆகிறது.

இறை அன்பின் அனைத்து வெளிப்பாடுகளுக்காகவும் நான் ஜெபத்தில் நன்றிகூறிப் பேசுகிறேன். என் பிரச்சினைகள் குறித்தும் நான் பேசுகிறேன். இயேசுவே இத்தகைய நேரங்களில் நீர் என்ன செய்திருப்பீர்? உமது பாதையில் நான் பின்தொடர வேண்டும்ஞு உமது ஆவி என்னை வழிநடத்தட்டும்! தனிப்பட்ட தேவைகளுக்காக நான் ஜெபிப்பது அபூர்வம். எனக்கு என்ன தேவை என்பது என்னைவிட தந்தைக்கு

நன்றாகத் தெரியும். எனவே தனிப்பட்ட உதவிகளுக்காகவோ அல்லது தனிப்பட்ட மனிதர்களுக்காகவோ ஜெபிக்கும் போது மனசாட்சி உறுத்துவதாக உணர்கிறேன். நான் ஜெபத்தில் கேட்ட உதவியைப் போன்ற அல்லது அதைவிட முக்கியமான ஒன்றை மறந்துவிட்டு மகிழ்ச்சியை இழப்பதைவிட எல்லாவற்றையும் ஆண்டவரிடமே ஒப்படைத்துவிட்டு அவரோடு இணைந்து தந்தையை நோக்கி ஜெபிக்கிறேன்.

சிலநேரங்களில் சில மனிதர்கள் தவறிச்செல்லும்போது அல்லது மிதிவண்டியில் 15 கி.மீ. வரை சென்று திருப்பலிகள் வரை ஆற்ற நேரிட்டு நான் மிகவும் சோர்ந்து போகும் போது நான் இப்படி ஜெபிக்கிறேன்: ஆண்டவரே, உமக்காக இல்லையெனில் நான் இதைச் செய்யவேமாட்டேன்...... எனக்குத் தெளிவாத் தெரியவில்லைளூ தெளிவாகப் புரியவில்லை. ஆனால் உம் சித்தமே நிறைவேறட்டும்....... இயேசு ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன்.

இன்று வழக்கத்திலுள்ள ஒப்புரவு அருட்சாதன முறை பாவங்களை நினைத்து அவற்றை பட்டியல் போட வைக்கும் வழக்கம் எனக்கு அருவருப்பாக இருக்கிறது. என் சாக்கடையைத் தோண்டி என் தோல்விகளையெல்லாம் அடுக்கிக் கொண்டே செல்வது போதும் போதும் என்றாகிவிட்டது. கடவுளுக்கு எல்லாமே தெரியும். அவர் என்னை ஒரு மனித ஆளாகவே படைத்தார். எல்லா மனித பிரச்சனைகளையும் அவர் வாழ்ந்திருக்கிறார். நான் இருப்பது போலவே என்னைப் படைத்து என்னை நேசிக்கிறார். என்னால் வேறு என்ன செய்யமுடியும்? இயேசுவே நான் என்னை நேசிக்கிறேன்ளூ ஏனெனில் நான் இருப்பதுபோல என்னை நீர் என்னை நேசிக்கிறீர். என்னை ஏற்று உம் சித்தம் போல் மாற்றியருளும். உண்மையில்

நானாக இல்லாத அனைத்தையும் மன்னித்து மறந்துவிடும். ஏனெனில் நான் விரும்பாததைச் செய்கிறேன்ளு விரும்புவதை செய்யாமல் விடுகிறேன்......

ஒரு சமூகம் உண்மையானது என்பதன் அடையாளம் அல்லது ஒரு உண்மையான சமூகத்தைக் கட்டியெழுப்பத் தேவையானது ஓர் அர்த்தமுள்ள உண்மையான ஒப்புரவுக் கொண்டாட்டம். அது அருள் அடையாளக் கொண்டாட்டமாகவும் இருக்கலாம்ளு இல்லாமலும் இருக்கலாம். இக்கொண்டாட்டம் இறைவனிடம் திரும்பி பிறரை ஏற்றுக் கொள்வதன் வழியாக ஒவ்வொரு மனிதரின் மனந்திரும்பலைம் மனமாற்றத்தையும் வலியுறுத்துகிறது.

இறைவன் அருகிலிருப்பதை, அவருடைய ஆறுதலளிக்கும் பிரசன்னத்தை, வழிந்தோடும் அன்பை உணரும் போது ஜெபம் இறைவனில் என்னையே நான் இழந்து இறைவனுக்கே என் ஆராதனையாக மாறுகிறது.

ஆனால் சில நேரங்களில் எல்லாமே வறண்டு போய், அர்த்தமற்று, ஆர்வம் குன்றி, கவனம் சிதறடித்து நேரத்தை வீணடிப்பதுபோல் தோன்றுகிறது. என்ன செய்வது? சிலநேரங்களில் கவன சிதறடிப்புகளை என் ஜெபத்தோடு ஒன்றிணைக்க முயல்கிறேன். ஆண்டவரே என் மேலிரங்கி எனக்கு உதவியருளும். ஜெபப் பயிற்சிகளும் ஜெபமுறைகளும் பயனுள்ளதாக அமையலாம். யோகா பயிற்சிகள், சுவாசப்பயிற்சிகள், சாதனா முறைகள்... எல்லாமே மனதை ஒருமுகப்படுத்த உதவலாம். ஆனால் இவை ஜெபத்தின் சராம்சமாகிய முழு சரணாகதிக்கு மாற்றாக அமைய இயலாது.

குழு (சமூக) ஜெபம்: ஒருமனப்படாத எந்த குழுவும் சமூக ஜெபத்தில் ஈடுபடமுடியாது. சேர்ந்து வாழ்வதும் சேர்ந்து உணவருந்துவதும் சமூகத்தை உருவாக்குவதில்லை. கருத்து வேற்றுமைகள் நடுவிலும் ஒரே மனமும் ஒரே உள்ளமும் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் நம்பிக்கையும், திறந்த மனமும் அங்கு இருக்கவேண்டும். இவை இருக்கும் போதுதான் பொது ஜெபம் உண்மையில் சமூக ஜெபமாக மாறும். ஜெபத்தில் ஒருவர் நட்பிலும் நம்பிக்கையிலும் தன்னையே திறந்துகாட்ட முனையும் போது மட்டுமே சமூகம் வளர்ச்சியடையும். சமூக வளர்ச்சியின் அடையாளம் சமூக ஜெபம் ஆகும்.

திருப்பாடல் ஜெபம் கடினமான ஒன்று. ஆனால் ஆரம்பகட்டத் தடைகளைத் தாண்டிச்சென்றால் மிகுந்த பயனளிக்கும் ஜெபமாக அது மாறும். திருப்பாடல்களைப் பற்றிய குறைந்தபட்ச வரலாற்று அறிவு இருந்தாலே போதும். காலத்தால் அழியா இப்பாடல்கள் கடவுளின் வார்த்தைகளிலே கடவுளோடு பேசுவதற்கு ஒரு வழியாக மாறிவிடுகிறது. திருப்பாடல் ஒன்றை வாசித்தபின் அதில் நம் உள்ளத்தைத் தொட்ட வரிகளை ஆவியின் வார்த்தைகளை பகிர்ந்து கொள்வது பயனளிக்கும்.

நற்கருணை முதலில் வார்த்தைப் பகிர்தல் ஆகும். திருநூலை வாசிக்கும் போது அதன் பாரம்பரிய, பழமையான அர்த்தங்களோடு நின்று விடும் அபாயம் தவிர்க்கப்படவேண்டும். கடவுளின் வார்த்தை இன்றைய வாசகமாக நமக்கு சவால் விடும் ஒன்றாக மாறவேண்டும்.

அப்பத்தைப் பிட்டு பகிர்ந்துகொள்வது ஒரு செயல்முறை ஜெபம். இதில் நம் முழு வாழ்வுக்கான அர்த்தம் அடங்கியுள்ளது. நம் அன்றாட பணிகளில்தான் நம் முழுவாழ்வும் ஜெபமாக உருமாற்றம் பெறுகிறது. பகிர்தல் நாள் முழுதும் நீடிக்கவேண்டும். நாம் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட கொடைகளை பிறரோடு பகிர்ந்து கொள்வதைத் தவிர வாழ்வில் வேறு என்ன அர்த்தம் இருக்கிறது?

இயேசு ஏரியைக் கடந்து தன் சீடர்களோடு ஜெபிக்க மலைக்குச் சென்றார். வீசும் இளங்காற்றினூடே பேசும் கடவுளுக்கு செவிமடுக்கவும் அவரோடு பேசவும் பவுஸ்தினியா (திருமலை) செல்பவர்கள் பாக்கியவான்கள். பவுஸ்தினியா செல்லும் ரஷ்ய திருப்பயணியின் இதய ஜெபம் போன்று நம்வாழ்விலும் ஆழமான ஜெபநேரங்கள் அமைய வேண்டும். இறுதியாக ஜெபம் என்பது நமக்கு உடலளவிலும் உள்ளத்தளவிலும் அடுத்திருப்பவர் களோடு நாம் பகிர்ந்து கொள்ளும் அன்பாகும். இது எந்த அளவுக்கு தன்னைப்பற்றிய உணர்வுகள் குறைந்து ஆவியின் வாழ்வு வளர்ச்சி பெறுகிறதோ அந்த அளவுக்கு உயிராற்றலுள்ளதாக இருக்கும்.

பெப்ரவரி 1984.

௬. ஓம்: முடிவற்ற ஓசை

ஒரு விசுவாச அனுபவம்

பண்பாடுமயமாதல் பற்றி கார்ல் முல்லர் இப்படி மேற்கோள் காட்டிக் கூறுகிறார்:

ஒரு குறிப்பிட்ட கலாச்சார ஆடையை அணிந்துவரும் கிறிஸ்தவ செய்தி இன்னொரு கலாச்சாரத்தில் வேரூன்றி வளர்ந்து வடிவெடுக்கும் போது இது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில் ஊறி வளர்ந்த ஒன்றை இன்னொரு கலாச்சாரத்தில் நட்டுவைப்பது போலன்றுளூ மாறாக, கிறிஸ்தவத்திற்கு முந்திய அல்லது கிறிஸ்தவமில்லா (ஆனால் உண்மையான) கலாச்சாரம் கிறிஸ்தவ செய்தியை தன் கலாச்சார புரிதலுக்கேற்ற முறையில் மீண்டும் வடிவமைத்துக் கொள்வதே ஆகும். இதுவே பண்பாட்டு மயமாதல் என்றழைக்கப்படுகிறது.

கிறிஸ்துவுக்குமுன் ஆறாம் நூற்றாண்டு ஒரு ஆன்மீக மறுமலர்ச்சியின் காலமாக இருந்தது. இந்தியாவில் வேதங்கள் உபநிடதங்கள், ஆசியாவெங்கும் புத்தமதம், சீனாவில் கன்பியூசியஸ் மற்றும் லா–சு, பாரசீகத்தில் சொராஸ்தர், கிரேக்க நாட்டில் ஹெரக்கிளிட்டஸ் மற்றும் சாக்ரட்டீஸ், இஸ்ராயேலில் இசையாஸ், ஜெரேமியாஸ், எசேக்கியேல்...... கீழை நாடுகள் ஞானத்திலும், மேலைநாடுகள் இறைவாக்கிலும் தழைத்தன.

ஓம் என்னும் ஜெபம்

அதே காலகட்டத்தில் ரிஷிகளும் ஞானிகளும் எல்லாமாய் இருக்கின்றவருக்கும் தமக்குமுள்ள உறவைப்பற்றி



எழுதினார்கள். கடவுள் என்றால் என்ன? அவர் யார்? கடவுள் நமக்குள்ளே இருப்பதாக உணர்ந்தார்கள். மதங்களும் பிரிவுகளும் தோன்றும் முன்பே, உருவங்களும் நாமங்களும் வருவதற்கு முன்பே கடவுள் ஓம் என்ற ஓசையிலே, ஆதி சப்தத்திலே, வெளிப்பட்டார். படைப்பின் தொடக்கத்தில் அசைவாடிக்கொண்டிருந்த கடவுளின் ஆவி எழுப்பிய ஓசை: ஓம். ஓம் எல்லா மதங்களையும் சாதிகளையும் கோட்பாடுகளையும் கடந்தது. கடவுள் முன் எல்லா மாந்தரின் ஒற்றுமையின் சின்னம்: ஓம். இந்த ஓம் படிப்படியாக வார்த்தையாக உருமாறியது. மோயீசன் கடவுளிடம் பெயர் கேட்டபோது அவர் சொன்னது: ஓம் நானே இருக்கிறவர் நான் உன்னோடு வாக்கு மாறாதவர் என்றும் இரக்கமுள்ளவர். இதுவே தங்கள் உள்ளத்தில் ஆழத்தில் கடவுளைக் கண்ட ரிஷிகளின் ஜெபம். அவர்களின் முதல் ஓசை ஜெபம் நீண்ட மூச்செடுத்து தியான உணர்வில் மெதுவாக உச்சரிக்கப்படும் ஓம் என்பதே. இதுவே காலப்போக்கில் நாம ஜெபமாக மாறியது: ஓம் சிவாய.... ஓம் கிறிஸ்தாய.....

அறிவுசார் மரபுகளில் தியானம், சிந்தனை, தீர்மானம் இவையே ஜெபத்தின் முக்கிய அம்சங்களாகக் கற்றிருக்கிறோம். இவை அனைத்துமே நேரப்போக்கென உணர்ந்தேன். மீண்டும் குழந்தையைப்போல் ஓம் என்னும் ஜெபத்தின் ஆழத்தைக் கண்டுபிடிக்கக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

தந்தை வி. டெஸ்மெத் தன் இந்திய மெய்யியல் குறிப்புகளில் இவ்வாறு சொல்கிறார்:

பிரம்மன்–ஆத்மனில் நம் மனத்தை ஒருமுகப்படுத்த நாம் அனைத்து வார்த்தை களையும் தன்னகத்தே கொண்ட ஓம்

(m + c + k;) என்ற வார்த்தையை தியானிக்க வேண்டும். ஓ என்பது அ–விலிருந்து உ–வரையுள்ள எல்லா உயிர் ஒலிகளை உள்ளடக்கிய ஒலி. ம் என்பது ஆதி ஒலி அல்லது தாய் ஒலி எனப்படுகிறது. குழந்தை உச்சரிக்கும் முதல் ஒலி ம் என்பதுதான். இவ்வொலியை நீட்டினால் எல்லையற்ற அமைதியில் அது தன்னை இழக்கிறது. எல்லா வார்த்தைகளும் எதார்த்தத்தை விவரிக்கவே முயல்கின்றன. ஆனால் விவரிக்க இயலா முழுமுதல் பரம்பொருளை அவை விவரிக்கவோ அல்லது எடுத்துரைக்கவோ தவறிவிடுகின்றன. ஓம் இதைச் செய்ய முயல்கிறது. எனவே விவரிக்க இயலா பரம்பொருளைச் சுட்டும் மிகச்சிறந்த சின்னமாக விளங்குகிறது ஓம்.

புகழ்ச்சி, உச்சரிப்பின் உன்னதம், சரி என ஏற்றுக்கொள்ளும் ஆம், ஆமென் இவையே ஓம்.

மூவொரு கடவுளை நோக்கி...

முதல் கிறிஸ்தவ சமூகம் தந்தை மகன் தூயஆவியாகிய மூவொரு கடவுள் என்னும் மறை உண்மையைக் கண்டுணர்ந்தது. தந்தை தூயஆவி இவர்களின் இருப்பை வெளிப்படுத்துபவராக கிறிஸ்து விளங்குகிறார். இந்திய ரிஷிகள் இம்மறைஉண்மையை திரிமூர்த்தி என கல்லில் வடித்துக்காட்டினர். திரிமூர்த்தி இறைமையின் மூன்று முகங்கள்: படைப்பவர், காப்பவர், அழிப்பவர். இதையே உண்மையை சத் சித் ஆனந்தா ஸ்ரீ இருப்பின் அறிவின் ஆனந்தத்தின் ஊற்று என இன்னொரு விதத்தில் எடுத்துரைக்கின்றனர். இவை பொக்கிஷமாகப் பேணப்பட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டிய வார்த்தையின் விதைகள் இவை வழியாக இந்தியா திரித்துவத்தின் முழுமையைக் காணவேண்டும்.

தந்தை

தந்தை மகனால் வெளிப்படுத்தப்படுகிறார். பழைய ஏற்பாட்டில் தந்தை குறிப்பிடப் படவில்லை. கடவுளோடுள்ள ஆழமான உறவு பழைய ஏற்பாட்டில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது: நீங்கள் என் மக்களாக இருப்பீர்கள்ளூ நாம் உங்கள் கடவுளாக இருப்போம். புதிய ஏற்பாட்டில்தான் குறிப்பாக திருமுகங்களிலும் (என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளும்) அருளப்பர் நற்செய்தியிலும்தான் (தந்தாய் எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக...) தந்தை என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப் படுகிறது.

பொதுவாக இறைத்தந்தையை ஒரு நரைமுடி தாடியுடைய கிழவாரகவும் அவர் கையில் ஒரு சிலுவைளூ அதில் சிலுவையிலறையுண்ட இயேசுவாக மகன்ளூ அவர்களுக்கு மேலே ஒரு புறாவாக தூயஆவிளூ இவர்கள் அனைவரையும் இணைக்கின்ற திரித்துவத்தைக் குறிக்கும் ஒரு முக்கோணம் இப்படித்தான் நாம் உருவகித்துப் பார்க்கிறோம். இது மக்களின் கற்பனையில் எழுந்த ஒன்று. கடவுள் தன்னை வெளிப்படுத்துமுன் அவரைப்பற்றி விவரிப்பது இயலாத ஒன்றாகவே இருந்தது. ஆனால் ஜோதி சாஹி கூறுவதுபோல் கடவுளின் ஊனுடலெடுப்பிற்குப்பின் இயேசு என்னும் வரலாற்று மனிதரில் கடவுளைக் நாம் காண்கிறோம்ளூ தொடுகிறோம்.

அதுபோல கடவுளில் ஆண் என்றுமில்லை, பெண் என்றுமில்லைளூ தந்தையென்றுமில்லை, தாயென்றுமில்லை. பின் ஏன் இயேசு கடவுளை தந்தையாக் காட்டுகிறார்? ஏன்

தாயாகக் காட்டவில்லை? இது ஓர் ஆண் ஆதிக்கமா? பழங்கால மதங்களில் மக்கள் பெண் தெய்வங்களையும் வழிபட்டனர். கடவுள் மனிதர்களை தமது சாயலாகப் படைத்தாரூ அவர்களை ஆணாகவும் பெண்ணாகவும் படைத்தார்.

மகன்

இயேசுவுக்கும் அவரது தந்தைக்குமிடையே உள்ள அதிசயமான உறவுக்குள் நுழையாமல் அவரைப் புரிந்துகொள்ள முடியாது. அவரது பணிவாழ்வில் மனிதர்கள் மேல் தந்தை கொண்டுள்ள அன்பும் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க அவர் கொண்டுள்ள வேட்கையும் வெளிப்படுகிறது. விசுவாசத்திற்கும் தூயஆவி வழியாக வரும் தந்தையின் வெளிப்பாட்டிற்கும் உயிர்த்த கிறிஸ்துவே அடிப்படை. இவ்விசுவாசம் வாழையடி வாழையாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வன்புறவு துன்பத்தையும் அதன் குணமளிக்கும் முறைகளையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு புதிய பரிணாமத்தை வாழ்வுக்குத் தருகிறது. கடவுள் அன்புமயமானவர். அங்கே சுயஅன்புக்கு இடமில்லை. அவர் அனந்த காலம் தொட்டே இறைமகனைத் தருவிக்கின்ற தந்தை–தாய். இந்த மகன் மரியின் வழி கருவுற்று நம் மனித வாழ்வில் பிறந்தவர்.

தூய ஆவி

பலகாலமாக எனக்கு தூய ஆவி அறியாக் கடவுளாகவே இருந்தார். இவர் தந்தையையும் மகனையும் நெருக்கமான அன்பினால் இணைப்பவர். இந்த அன்பில் திரித்துவத்தில் மக்கள் அனைவரும் பங்குபெற்று மாற்றம் பெற அழைக்கப்படுகிறார்கள். ஆவியின் வெளிப்பாடுகள் பல:

- படைப்பின் தொடக்கத்தில் அசைவாடிக்கொண்டிருந்தார்.
- முதல் மனிதனின் மூச்சுக்குழலினுள் ஊதப்பட்டு உயிரளித்தவர்.
- 40 நாள் பெருவெள்ளத்துக்குப்பின் அமைதியின் புறாவாக புதுப்படைப்பின் முதல் சின்னத்தை நோவாவுக்குக் கொண்டுவந்தவர்
- இஸ்ராயேலரை வழிநடத்தும் பொறுப்பை மோயீசனுக்கு வழங்க எரியும் புதாராகத் தோன்றியவர்
- நித்திய உடன்படிக்கையின் பலியைத் தகனம் செய்யும் நெருப்பாகத் தோன்றினார்.
- பாலைவனத்தில் இஸ்ராயேலர்களை வழிநடத்தும் நெருப்புத்தூணாகத் தோன்றினார்.
- யோர்தானில் இயேசு திருமுழுக்கு பெற்றபோது அமைதியின் புறாவாகத் தோன்றினார்.
- முதல் கிறிஸ்தவ சமூகம் உருவான பெந்தேகோஸ்தெ நாளில் அக்னி நாவாகத் தோன்றினார்.
- பழங்கால இறைவாக்கினர்களைத் தூண்டியவர்�ளு இன்றும் இக்கால இறைவாக்கினர் களின் தூண்டுதலா இருக்கிறார்.
- இறைமக்கள் அனைவரிலும் அவர் வாழ்கிறார்ளு நீதி, அமைதி, விடுதலை, அன்பு நிறைந்த அரசை அமைக்க இயேசுவின் அழைப்புக்கு பதிலிறுக்க நம்மை அவர் தூண்டுகிறார்.

செயலில் விசுவாசம்

திருத்துவ விசுவாசத்தின் மீதான என் சிந்தனைகளை நிறைவு செய்ய ஒரு கிராமிய மருத்துவமனையில் பணியாற்றும் ஒரு பெண் மருத்துவரை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அவருடைய விசுவாசம் தன் நண்பர்கள் உடனுழைப்பாளர்களோடு அவர் கொண்ட உறவு, பிணியாளர்களுக்கு அவர் செய்யும் பணி இவற்றால் வலுப்பெற்றுள்ளது.

தங்கள் வாழ்வில் விசுவாசத்தைக் காட்டும் இவர்கள் நம்மைச் சுற்றி வாழ்கிறார்கள். இவர்களுள் சிலர்:

- அன்றாட அலுவல்களுக்கு அப்பால் இறைமையைக் கண்டு, உணரும் ஓர் அறிவுஜீவி.
- பெண்களிடத்தும் அவர்களது போராட்டங்களிலும் தன்னை அர்ப்பணித்து ஒருவருக்கொருவர் காட்டும் அக்கறையில் திடம் காணும் கிராமியப் பெண் மற்றும் தொழிற்சங்கத் தலைவி.
- மக்கள் பணி மகேசன் பணி எனச்சொல்லும் மருத்துவப் பணிப்பெண்.
- இத்தவக்காலத்தில் ஆன்மீகத்தில் நான் இன்னும் வளர்வேன் என் நம்புகிறேன் என எழுதும் 84 வயது நண்பர்.
- எனக்கு அச்சமில்லை஡ு கடவுள் என்னோடிருக்கிறார் எனச்சொல்லும் மழலை.
- தங்கள் நோய்களை ஏற்றுக்கொண்டு விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் நமக்கு பாடம் கற்பிக்கும் நோயாளிகள்.

- தீவிரப் பணியாற்றிய ஒருவர் முற்றிலும் பிறரைச் சார்ந்து வாழும் நிலை ஏற்பட்ட போதிலும் தன் ஆழ்ந்த விசுவாசம் நம்பிக்கை மற்றும் நகைச்சுவை உணர்வினால் நம்மைத் தூண்டும் விதம்.

- இனிய குரலில் பாடி, ஓவியங்கள் வரைந்து, ஆலயவிழாவுக்கு காகித மலர்கள் செய்யும் ஊனமுற்ற சிறுவன்

- தன் நிழலைப் போன்று தேய்ந்து போனாலும் புன்னகை செய்யும் கேன்சர் நோய் பிடித்த இளைஞன்

- குழந்தைகளின் ஏன் என்ற ஆயிரம் கேள்விகளுக்கு மிகவும் பொறுமையோடு பதில் சொல்லும் அம்மாக்கள்

- முற்றிலும் முடங்கிப் போன நோயாளிக்காக தங்கள் வாழ்வையே அர்ப்பணிக்கும் சகோதரி, மகள், மனைவி இவர்கள் தங்கள் வாழ்வில் காட்டும் விசுவாசத்தால் என் விசுவாசத்தை நான் வாழ எனக்கு உதவிசெய்கிறார்கள். நான் சமூகத்தோடு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கென அப்ப இரசப் பீடத்தை சுற்றி அமர்ந்து வழிகாட்டும் நல்லாயனின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்கையில் இவர்கள் அனைவரும் என் கண் முன் நிற்கிறார்கள்.

- நல்லாயனின் வழிகள் நீதி, அமைதி, அன்பு. இவர் காட்டும் பாதை நீதிக்கான, அமைதிக்கான மக்கள் போராட்டங்களில் நம்மை இட்டுச்செல்லும். அங்கேதான் நம் விசுவாசம் வளர்ச்சி பெறும் நம் வாழ்வு அர்த்தம் பெறும்.

பெந்தேகோஸ்தே 03–06–1990

7. அறுபது வருடங்களில் ஆனந்தம்

பூமியில் நான் மேற்கொண்டுள்ள புனித பயணத்தின் பாதைகளில் நான் சந்தித்த நிகழ்வுகளில் பல்வேறு வழிகளில் ஆனந்தம் அல்லது மகிழ்ச்சியை நான் அனுபவித்திருக்கிறேன். இம்மகிழ்ச்சிக்கு பல வடிவங்கள் இருந்தன: முதலில் சிரிப்பொலி, பின் நேரம் செல்லச் செல்ல சிரிப்பொலி புன்னகையாக மாறி அதன்பின் அது உள்வாங்கப்பட்டு கண்களில் வெளிப்பட்டு இறுதியாக இதயத்தில் சென்று குடியிருந்தது. இந்த குறுகிய அறுபது ஆண்டுகளில் நான் அனுபவித்த மகிழ்ச்சியை நான் எடுத்துரைக்க முயல்கிறேன்.

சிரிப்பொலி

உன் வாயின் இரு முனைகளையும் உயர்த்துங்கள். அழுவதைவிட சிரிப்பதே நலம். ஆயினும் பலநேரங்களில் வேடிக்கையாக யாராவது ஏதாவது சொன்னால் நான் சிரிக்கும் போது அழுதேன்; கண்ணீரோடு சிரித்தேன். எனது சிரிப்புக்கு ஒரு சிறப்பு இருந்தது.

சிரிப்பு பார்க்கப்பட வேண்டும் கேட்கப்படக்கூடாது என்பார்கள். நான் இந்தியாவிற்கு வந்த ஆரம்ப நாட்களில் ஒவ்வொரு மாதமும் ஆயர் இல்லத்துக்குச் செல்லும் போதும் என் சிரிப்பொலி மேல்மாடியிலிருக்கும் ஆயரின் அறை வரை எதிரொலிக்கும். பொதுவாக நான் முதலில் நல்ல புனிதமான பொருளாளர் தந்தையை சந்திப்பது வழக்கம். அவரது அறை ஆயரின் அறைக்குக் கீழே அமைந்திருந்தது. நான் ஆயரின் அறைக்கதவைத் தட்டும் போது நீங்கள் பொருளாளர்



அன்னையோடு சிரித்துக் கொண்டிருந்ததை நான் கேட்டேன் என்று சொல்வார். நான் ஆயரோடு அரை மணி நேரம் பேசிக் கொண்டிருப்பேன். அவர் தன் கடந்தகாலங்களைப் பற்றி பேசிக்கொண்டிருப்பார். ஆயராக வாய்ப்பு வந்தபோது அதை வேண்டாமென உதறித் தள்ளியது. பின் கீழ்ப்படிதல் வார்த்தைப்பாட்டிற்குக் கட்டுப்பட்டு அதை ஏற்றுக்கொண்டது. திருத்தந்தை 12-ஆம் பத்திநாதரால் திருநிலைப் படுத்தப்பட்டது. பின் சாதிப்பிரச்சினையால் கிழிந்து போன மறைமாவட்டத்தில் அவர் சந்திக்க வேண்டியிருந்த பல பிரச்சினைகள், மொட்டைக் கடிதங்கள்.... இப்படி பேசிக்கொண்டே செல்வார்.

பியர் ஜிலே இந்தியாவுக்குப் புறப்படுவதற்குமுன் என் தாயை சந்தித்து என்னை அவர் சந்திக்கும் போதெல்லாம் அவர் என்னை சிரிக்க வைப்பார் என வாக்குக் கொடுத்தார். அதில் ஆச்சரியப்படும்படி வெற்றியும் பெற்றார்! துன்பங்கள் தடைகள் மத்தியில் அவருக்கிருக்கும் நகைச்சுவை உணர்வு அனைவரும் அறிந்த ஒன்று. அவர் சொன்ன மிகச்சிறந்த ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி முட்டம் படகு கட்டும் திட்டத்தில் பணிபுரியும் தொபியாசைப் பற்றியது. ஒரு முக்கியமான கடிதத்தை பதிவுத்தபாலில் அனுப்பவேண்டி தபால் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல பியர் தொபியாசை கேட்டுக்கொண்டார். அக்கடிதத்தில் பிளாஸ்டிக் கார் பற்றிய எல்லா ஆவணங்களும் இருந்தன.

தபால் நிலையத்திற்குச் செல்லும் வழியில் தண்ணீர் குடிக்க சாலையோர கிணறு ஒன்றுக்கு சென்றார். மிக முக்கியமான ஆவணங்கள் அடங்கிய அந்த தபால் உறையை கீழே அருகில் வைத்துவிட்டு தண்ணீரும் அருந்திவிட்டு திரும்பிப் பார்த்தால் தபால் உறையைக் காணவில்லை.

தொப்பியாகக்கு பக் கென்றிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தால் அருகே ஒரு பசு அப்புக்கியமான தபாலை அதிலிருந்த எல்லா ஆவணங்களோடும் மென்று மெதுவாக அசைபோட்டுக் கொண்டிருந்தது! தொப்பியாள் கவலையோடு காவல் நிலையத்துக்குச் சென்று புகார் கொடுத்தார். ஆனால் பியர் சொன்னதுதான் வேடிக்கை. தொப்பியாள், நீ போய் மாட்டின் வாயில் ஒரு வாளியைக் கட்டித்தொங்கவிடு. மறுபக்கம் வழியாக அக்கடிதம் வெளியே வந்ததும் எடுத்து வந்துவிடு...! திருமலையில் நாங்கள் ஒரு சமூகமாக வாழ்வதால் நாங்கள் கூடிவரும் போதெல்லாம் வாய்விட்டு சிரிக்க பல வாய்ப்புகள் இருந்தன. கதை சொல்வதில் பியர் ஒரு மன்னன். அவருடைய நகைச்சுவைகள் பிரமாதமாக இருக்கும்.

எதிர்பாராத, வேடிக்கையான ஒரு நிகழ்ச்சி சிரிப்பை ஏற்படுத்துகிறது. இச்சிரிப்பு எளிதில் பரவும், பிறரோடு தொடர்பு கொள்ள உதவும்.

புன்னகை

நேரம் செல்லச் செல்ல சிரிப்பொலி புன்னகையாக மாறுகிறது. சிரிப்பொலியை ஒருவர் கேட்கலாம். ஆனால் புன்னகையை பார்க்கத்தான் முடியும். சிரிப்பு வெளியில் உள்ள எதிர்பாராத, கோமாளித்தனமான ஒருசெயலின் விளைவு. ஆனால் புன்னகை உள்மனத்தில் உள்ள ஆனந்தம், அமைதி, அன்பு, பரிவு இவற்றின் வெளிப்பாடு. இது பிறரோடு பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இது மனிதர்கள் நிகழ்வுகள் அனைத்தையும் புதுஒளியில் காணவல்லது. இது கடவுள் உலகைப் பார்ப்பதுபோல தீர்ப்பிடுவதற்காக அல்ல மாறாக அதனோடு தொடர்பு கொள்ளவும் அதற்காக அர்ப்பணமாகவுமே.

உயிர் வாழும் கிறிஸ்துவில் கொழுந்துவிடும் விசுவாசத்திலிருந்து எழும் உண்மை ஆனந்தம் இப்புன்னகைக்கும் ஈடுபாட்டிற்கும் நடுவில்தான் அமைந்துள்ளது.

அதேநேரத்தில் இந்த அமைதியும் ஆனந்தமும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தப்பட முடியாமல் போய்விடலாம். முகத்தின் மிருதுத்தன்மை போய்விடலாம். மெதுவாகப் பரவிவரும் பக்கவாதத்தினால் முகம் கடினமாகி உருமாறிக்கூட போய்விடும். அதன்பின் ஒன்றே ஒன்றுதான் மிச்சமிருக்கும். அவை தான் கண்கள்.

கண்கள்

எவ்வளவோ ஆழமான உண்மைகளைக் கண்கள் வெளிப்டுத்துகின்றன! ஏமாற்றம், தண்டனை, துயரம், மன்னிப்பு, துணிவு, ஆனந்தம், மகழ்ச்சி....... இப்படி எத்தனையோ! கண்களில் என்னைப் பாருங்கள். எவ்வித வார்த்தைகளுமின்றி அவை ஆயிரம் செய்திகள் சொல்லும்.

உங்கள் பெரிய கண்களைக் காட்டவேண்டாம்....... பயமாக இருக்கிறது. நிறைய நேரம் இப்படி என்னிடம் மக்கள் கூறுவதுண்டு. இதயத்தின் மொழியை நன்றாகப் பேசுவது கண்கள்தான். வார்த்தை மொழியின் வறண்ட வார்த்தைகளால் விவரிக்கமுடியா நிஜங்களை அற்புதமாக எடுத்துரைக்கும் கண்கள். இயேசு சொன்னார்: கண்தான் உடலுக்கு விளக்கு. கண் ஒளியுள்ளதாக இருந்தால் உடல் முழுவதும் ஒளியுள்ளதாக இருக்கும். (மத்.6,22).

உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட விலையுயர்ந்த மகிமையை நீங்கள் காணும் பொருட்டு அவர் உங்கள் அகக்கண்களுக்கு

ஒளியூட்டுவாராக (எபே.1,18). நம்முடையவும் பிறருடையவும் கண்களைத் திறப்பதே நமது பணி. நீ அவர்களை இருளிலிருந்து ஒளிக்கு.... திரும்புமாறு அவர்கள் கண்களைத் திறக்க வேண்டும் (திப.26,18)

ஆண்டவரின் கண்கள் மக்கள்மீதே இருக்கின்றன (திபா.2,4) கடவுளின் கண்களால் உலகைக் காண நாம் அழைக்கப்படுகிறோம். உலகில் நாம் மேற்கொண்டுள்ள திருப்பயணத்திற்கு இஃது உதவும்.

இதயம்

அனைத்துமே வாழ்வின் மையமான இதயத்தை நோக்கியே குவிகின்றன. கடவுளோடு கொள்ளும் ஒளிமிக்க தொடர்பில் இதயம் மனிதனின் வாழ்வை மாற்றி அதை வெட்டவெளிச்சமாக்குகிறது. இங்குதான் ஆனந்தம் வாழ்வாகிறது. இது கடவுளின் ஒளியால் உலகையும் தன்னையும் பிறரையும் வெளிக்காட்டும் ஒளியாக மாறுகிறது. இந்த ஒளி நிஜங்களை மறைக்கும் பொய்மை அல்ல. உடலின் வலிமை குறையக் குறைய இந்த ஒளி வளர்கிறது. ஆனால் ஒருநாள் வரும். அப்போது குறுகலான வாயில் வழி நுழைவது கடினமாக இருக்கும். ஆனந்தம் ஒரு நூலிழை நம்பிக்கையாக மட்டுமே இருக்கும். ஆண்டவரது இல்லத்திற்குச் செல்வோம் என்று அவர்கள் அழைத்தபோது நான் அகமகிழ்ச்சி கொண்டேன். (திபா.121,1) நீங்கள் அவரைக் கண்டதில்லை எனினும் நம்பிக்கை கொண்டு சொல்லொண்ணா ஒப்பற்ற மகிழ்ச்சியடைந்து பேருவகை கொள்கிறீர்கள். (1பேதுரு 1,8).

ஆகஸ்ட் 29, 1984.

8. துன்பம்: வாழ்வின் ஓர் அங்கம்

துன்பம் வாழ்வின் எண்ணற்ற நிஜங்களை உள்ளடக்குகிறது. இஃதை என் வாழ்வின் ஓர் அங்கமாக - உடல்சார் துன்பம், மன-உடல் துன்பம், இதயத்துன்பம், கருணையுள்ளம் என - நான் எடுத்தியம்ப முயல்கிறேன்.

1. உடல்சார் துன்பம்

நோயினாலோ, விபத்தினாலோ, அல்லது சித்திரவதையினாலோ நான் என்றுமே துன்பத்தை அனுபவித்ததில்லை. சித்திரவதை என்றாலே நடுங்கிச் சாவேன். ஏனெனில் என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. உடல் துன்பத்தோடுகூட மனித மாண்பையே அது தரக்குறைவாக்குகிறது. அஃது இன்னொரு கூடுதல் துன்பம். இக்காலத்தில் ஆட்சியிலிருப்பவர்கள் தேசிய பாதுகாதுகாக்க என்று இம்முறையை அதிகம் கையாள முயல்கிறார்கள். என்னைச் சித்திரவதை செய்பவர்களிடம் நான் இப்படித்தான் கூறுவேன் என்று நினைக்கிறேன்: நீங்கள் என் உடலைத்தான் கொல்லமுடியும், என்னைக் கொல்ல முடியாது.

வெறும் உடல் சார்ந்த துன்பம் என்று ஒன்று இல்லை என்று நான் நினைக்கிறேன். துன்பத்தை உணர்கின்ற ஆள் என்று ஒருவர் இருக்கவேண்டும். துன்பம் நிஜமாவதற்கு இந்த சுய உணர்வு அவசியம். போர்க்காலங்களில் பல நேரங்களில் வீரர்கள் காயமடைந்த பின்னும் எதுவும் நடக்காதது போல் தொடர்ந்து போரிட்டுக் கொண்டேயிருப்பார்கள். எப்பொழுது தங்கள் உடலில்



தந்தையின் அனுபவ பகிர்வுக்கு செவிமடுக்கும் புதிய தலைமுறை

இரத்தத்தைப் பார்க்கிறார்களோ அப்போதுதான் வலியையே உணர ஆரம்பிக்கிறார்கள். இதுபோலவே பரவச நிலையில் இருப்பவர்களுக்கு அவர்கள் உடலில் சூடுபட்டால்கூட தெரிவதில்லை. துன்பத்தை அனுபவிக்க சுய உணர்வு இருக்க வேண்டும். சுய உணர்வு இல்லையெனில் உடல், தசை, நரம்பு எல்லாமே வலியுணர்வுக்கேற்றபடி செயல்படுகின்றன. ஆனால் துன்ப உணர்வு ஏற்படுவதில்லை. இதனால் தான் அறுவை சிகிட்சை மேசையில் மயக்க மருந்து கொடுத்தபின் துன்ப உணர்வுக்கு இடமில்லாமல் போகிறது. இதனால்தான் கொஞ்சமாவது சுய உணர்வு இல்லையெனில் விலங்குகளுக்கு துன்ப உணர்வு இருக்கமுடியுமா என்ற கேள்வி எழுகிறது.

உடல்சார் துன்பங்களுக்கு ஓர் எல்லை உண்டு. ஓர் அளவைத் தாண்டியபின் துன்பத்தைப் பற்றிய உணர்வே இல்லாமல் போகும். இந்த உணர்வற்ற நிலை இறுதி உணர்வற்ற நிலையாகிய சாவுக்கு இட்டுச் செல்லலாம். உடல் துன்பம் மனிதனுக்கே உரிய சுய உணர்வினால் தான் அறியப்படுகிறது. இதனால்தான் ஒரே வகையான துன்பத்தை வெவ்வேறு மனிதர்கள் அவர்களது சுய உணர்வுக்கேற்ப வெவ்வேறு விதங்களில் அனுபவிக்கிறார்கள் என்பது விளங்குகிறது. இலட்சக்கணக்கான மக்கள் இள வயதில் பட்டினியால் பாதிக்கப்பட்டு தங்கள் பசியைக் கூட அறிய முடியாமல் மரத்துப்போய் வாழ்வே விரக்தியாகி தங்கள் அடிமைத்தனத்தை எதிர்த்தெழும் வலுவற்றுப்போவது தான் மிகப்பெரிய சோகம்.

2. மன-உடல்சார் துன்பம்

சிலநேரங்களில் துன்பம் உடலிலிருந்துதான் வரவேண்டுமென்றில்லை. அது மனதிலோ அல்லது ஒருவர் கற்பனையிலோ தோன்றலாம். என்னைப் பொறுத்தவரையில் என்னைப் பற்றியே சிலநேரங்களில் ஐயங்கள் எழுவதுண்டு. பார்க்கின்சன் நோயின் அறிகுறிகள் குறிப்பாக கை கால்கள் நடுங்குவது நான் தூங்கும் போது ஏற்படுவதில்லை. ஆனால் நான் விழித்தெழும்போது நடுக்கம் பெரும்பாலும் மீண்டும் வந்துவிடுகிறது. என் உடல் நடுக்கம் வெறும் கற்பனைதானா? நான் அறிய விரும்பினேன்.

எனது இடது கை சும்மாயிருக்கும்போது அதன் இருவிரல்களில் நடுக்கம் ஏற்படத் தொடங்கியது. எனக்கு இதுதான் பார்க்கின்சன் நோயின் முதல் அறிகுறி. 1970ஆம் ஆண்டு எனக்கு நினைவிருக்கிறது, பரக்குன்றின் ஒரு கிளைப்பங்கில் திருப்பலியில் மறையுரை ஆற்றிக் கொண்டிருந்தபோது திடீரென சில நொடிகள் என் உடலெல்லாம் நடுங்கியதை உணர்ந்தேன். வாசக மேடையிலே நான் மயங்கி விழுந்துவிடுவேனோ என்ற அச்சம் எனக்கு. ஆனால் அந்நடுக்கம் உடனே நின்று விட்டது. இந்நிலைக்கான ஆரம்பம் முட்டத்தில் மத்திய அரசோடு இணைந்து நடத்திய திட்டம் குறித்து ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டத்தில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்நிகழ்ச்சிகள் என்னை வெகுவாகப் பாதித்தன. ஒருநாள் இரவு நான் திடீரென விழித்தெழுந்தேன். என் தலை இரண்டாக வெடித்துவிடும் போல் தோன்றியது. நாகர்கோவில் மருத்துவமனைக்கு என்னை எடுத்துச் செல்லப்பட்டு மூளைவீக்க நோய்க்கான சிகிட்சையளித்தார்கள். 1972-ல் மருத்துவ ரீதியாக உறுதிசெய்தார்கள். நான் ஒரு

பார்க்கின்சன் நோயாளி. இதனால் இந்நோயைப்பற்றியும் அதன் சிகிட்சை பற்றியும் நான் அதிகம் வாசிக்க ஆரம்பித்தேன். பார்க்கின்சன் நோய் பற்றிய செய்தி மடலில் நரம்பியல் மருத்துவர் குழு ஒன்று இவ்வாறு எழுதியது: உங்களுக்குத் தோன்றும் அறிகுறிகளை நீங்கள் கற்பனை செய்யவில்லை. எனவே நன்றாக இருக்க முயல்வதில் எப்பயனும் இல்லை. உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு உங்களுடைய தகுந்த சிகிட்சையும் விடாமனமும்தான்

இந்நோயில் நான் தனியாகவா இருக்கிறேன்? துரதிர்ஷ்டவசமாக அதுதான் இல்லை. பிரிட்டனில் ஆயிரத்தில் ஒருவருக்கும் 60 வயது தாண்டியவர்களில் நூற்றுக்கு ஒருவரும் இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பார்க்கின்சன் நோயாளிகளில் ஏழில் ஒருவருக்கு 30 அல்லது 40 வயதுகளிலே இந்நோய் வந்துவிடுகிறது. பார்க்கின்சன் நோயின் காரணங்கள் என்ன என்பது பற்றிய தெளிவு இன்னும் அதிகமாக இல்லை.

பார்க்கின்சன் நோய் என்றால் என்ன? இந்நோய்க்கு மூன்று அறிகுறிகள் தென்படும்.

1. நடுக்கம்
2. தசைகள் விறைப்பாதல்
3. உடல் இயக்கம் மந்தமாதல் – நகர்வது கடினமாதல்

நோயாளி ஓய்வாக இருக்கும் போது நடுக்கம் அதிகமாகிறது. ஆனால் தூங்கும் நேரத்தில் மறைந்துவிடுகிறது. இந்நடுக்கம் ஓர் உறுப்பிலோ அல்லது உடலின் ஒரு பகுதியிலோ ஏற்படலாம். நடுக்கத்தைப் பற்றி நினைக்க ஆரம்பித்தால்

நடுக்கம் அதிகமாகி விடும்.

தசைகள் விறைத்துப்போதல் இன்னும் மோசமானது. உணர்ச்சியற்ற முகத்தோற்றம், நகரா இருப்பு, சட்டையில் பொத்தான் மாட்டிவிடுவது, எழுதுதல் போன்ற சிறு செயல்களைக் கூட செய்ய இயலாமை இவை அனைத்துமே இயங்குவதில் ஏற்படும் மந்தத்தினால் ஏற்படுபவை. உண்மையில் இயங்குவதில் ஏற்படும் மந்தநிலையே பார்க்கின்சன் நோயினால் வரும் நிலைகுலைவுகளில் மிக்கொடியது. மூளை வேகமாக செயல்படுகிறது. ஆனால் மூளையின் வேகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல் உடல் தள்ளாடுகிறது. இதுவே வாழ்க்கையை வெறுத்துப்போகச் செய்கிறது. பார்க்கின்சன் நோய் அறிவுத்திறனைப் பாதிப்பதோடு தன்னம்பிக்கையையும் இழக்கச் செய்கிறது.

தசைகள் விறைத்துப் போவதால் தோள்களிலும் முதுகிலும் ஒருவகையான வலியும் காலில் தொடைமுதல் விரல் நுனிவரை சுளுக்குப் பிடிப்பும் ஏற்படுகிறது.

மிகவும் அதிக தொல்லை தருகின்ற அறிகுறிகள் நடப்பதில், விழுங்குவதில், பேசுவதில் ஏற்படும் தடைகள் ஆகும். கால்கள் தரையில் ஒட்டி உறைந்துவிடுவது போன்று ஆகிவடுவதால் நடக்கத் தொடங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. நடக்கும்போது திடீரென நாம் விரும்பாமலே நின்றுவிடுகிறது. அடிக்கடி சமநிலை பாதிக்கப்பட்டு விழுந்து விடுவோமோ என்ற அச்சம் இயல்பாக நடப்பதற்குத் தடையாக அமைந்துவிடுகிறது.

குரலொலி குறையத் தொடங்குகிறது. வார்த்தைகள் தெளிவு குன்றுவதால் சில நோயாளிகளால் புரிந்துகொள்ளும் விதத்தில் பேசமுடியாமல் போய்விடுகின்றன.

உமிழ்நீரை தானாகவே விழுங்கமுடியாமல் போவதால்

வாயிலிருந்து உமிழ்நீர் வழிவது இந்நோயின் சாதாரணமான அறிகுறி.

பார்க்கின்சன் நோயின் காரணம் என்ன?

மூளையில் உள்ள சில நரம்பு அணுக்கள் இயல்பாக இயங்க முடியாமல் போவதால் இந்நோய் ஏற்படுகிறது. சில நோயாளிகளுக்கு மூளை வீக்கத்தினால் இந்நோய் ஏற்படுகிறது. ஆனால் பெரும்பாலும் 60 வயதைத் தாண்டியவர்களுக்கே இந்நோய் வருகிறது. இது மூளையில் நரம்பு மண்டல மையப்பிழம்பின் அடிப்பகுதியில் அமைந்துள்ளது. இங்கு நரம்புகளில் சமிக்ஞைகளை அனுப்பும் டோப்பமைன் என்னும் திரவம் சுரக்கிறது. பார்க்கின்சன் நோயாளிகளுக்கு இந்த டோப்பமைன் குறைவுபடுகிறது. இதை ஈடுசெய்யும் வகையில் லேவா-டோப்பா மற்றும் ஆன்டிகோலினர்ஜிஸ் என்னும் மருந்துகள் நரம்பணுக்களை இயல்பாக மீண்டும் இயங்கச் செய்ய உதவுகின்றன. நரம்புமண்டல மையப்பிழம்பின் குறிப்பிட்ட செயல்கேட்டினால் உடலின் தசைகள் விறைத்துப் போகின்றன அல்லது நாம் நினைத்த நேரத்தில் இயங்குவதற்கு தயார் நிலையில் இல்லாமல் போய்விடுகின்றன. நடுக்கம்கூட இதனால்தான் ஏற்படுகிறது.

இந்நோயைக் குணமாக்கமுடியுமா?

இந்நோயின் அறிகுறிகள் தொடர்ந்து வலுப்பெற்றுக் கொண்டே வரும். எனவே முடிந்த அளவுக்கு நோயாளி சுதந்திரமாக இருக்கத்தக்கவாறு அவற்றை அமைத்துக் கொள்ளவேண்டும். சர்க்கரை வியாதிபோல் இதுவும் குணமாக்கமுடியா நோய். என்னிலே நான் முடங்கிப் போகாமல் எனது குறைபாடுகளை நான் ஏற்றுக் கொள்ள எனக்குக்

கற்றுத்தரும் நான் தோழனாக பார்க்கின்சன் நோயை நான் ஏற்றுக் கொள்ள பழகிக் கொண்டுள்ளேன். என் வாழ்வையே மாற்றி அமைத்த ஒரு கொடையாகவும் புதுவகையான ஒரு வாழ்வுக்கும் அருள் பலவற்றின் ஊற்றாகவும் இந்நோயை நான் ஏற்றுக் கொள்கிறேன். பார்க்கின்சன் நோய் எனக்குக் கற்றுத்தந்த பாடங்களுக்காக நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

3. தசையால் ஓர் இதயம்

கல்லான நம் இதயத்தை கடவுள் தசையாலான இதயமாக மாற்றுவார் என இறைவாக்கினர்கள் வாயிலாக கடவுள் அறிவித்துள்ளார். துரதிர்ஷ்டவிதமாக கடவுளுக்கென தங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தங்கள் இதயங்களை வினோதமான முறையிலே மாற்றிக் கொள்கிறார்கள். சிலநேரங்களில் அன்பே வறண்டுபோன சுள்ளிக் குச்சிகளாக தங்கள் இதயங்களை மாற்றிக் கொள்கிறார்கள். கடவுளரசின் பொருட்டு மணத்துறவு மேற்கொள்ள கடவுள் அழைக்கும் போது இதையா கேட்கிறார்? எத்தனையோ மணத்துறவிகளுக்குத் தங்கள் வாழ்வின் இறுதியில் தங்கள் இதயங்கள் என்று காணிக்கையாக்க மிச்சமாக இருப்பதெல்லாம் உலர்ந்த குச்சிகளைத்தான்!

கல்வி அறிவற்ற, அனால் பொதுஅறிவுமிக்க ஒரு சிறுமி என்னிடம் சொன்னாள்: அன்பிருக்குமிடத்து துன்பமிருக்கும். அக்கறையின்மை ஒன்று மட்டும்தான் அன்பும் துன்பமும் இருப்பதை அறியாமல் உலகில் காலந்தள்ளமுடியும்.

இதை என் மக்களோடு என்வாழ்நாள் முழுவதும் நான் அனுபவித்திருக்கிறேன். எத்தனை முறை அவர்கள் என்னைக் காட்டிக் கொடுத்ததாக அல்லது வழிதவறிச் சென்றதாக, என்னை ஏமாற்றியதாக நான் உணர்ந்தபோதெல்லாம் நான்

கடுந்துயரடைந்திருக்கிறேன்? அவர்கள் என் மக்கள் என்பதை எந்த அளவுக்கு உணர்ந்தேன் என்றால் அவர்கள் முதன்முதலில் கடவுளின் மக்கள் என்பதையும் கடவுளின் வழிகள் என் வழிகளைவிட வெறுபட்டவை என்பதையும் மறந்தே விட்டேன். அந்த நாட்கள் என் உடலிலும் இதயத்திலும் நான் கடுந்துயர் அனுபவித்த நாட்கள். அங்கே துன்பம் எல்லையற்று ஆழத்தின் ஆழத்திற்கே சென்றுவிடுகிறது. இத்துன்பத்தைப் புரிந்துகொள்ளவோ பகிர்ந்து கொள்ளவோ யாராலும் முடியாது. ஜெபத்தில்தான் இது மெல்லத் தணியும். என் பொருட்டு நீங்கள் இழந்தவைகளை நூறுமடங்கு பெற்றுக் கொள்வீர்கள் என்று இயேசு மொழிந்தார். இது உண்மை. இது மறுக்கப்பட முடியாது. ஆண்டவரின் வழிகள் நமது வழிகளினின்று எவ்வளவோ வேறுபட்டவை. எனவே அவருடைய வாழ்வில் என்னையே வார்த்து துன்பத்தின் உண்மையான பொருளை அது இரக்கம் அல்லது கருணை என்பதை அவர் வாழ்வில் கண்டடைய வேண்டும்.

4. கருணை மிக்க கடவுள்

மனிதகுலம் அதன் வாழ்வில் வரும் துன்பத்தின் காரணத்தையும் பொருளையும் கண்டறிய பெரும் பாடுபட்டிருக்கிறது. பொருளற்ற துன்பம் தாங்கமுடியாக ஒன்றாகி மனநோய்க்கும் இறுதியில் தற்கொலைக்கும் இட்டுச்செல்கிறது. சில நாடுகளில் வளர்ந்து வரும் தற்கொலைகளின் எண்ணிக்கை அங்கே வாழ்வின் மீதான திருப்தியின்மையின்மை வளர்ந்துவருவதன் அடையாளம் ஆகும்.

முழுமையான பற்றற்ற நிலைவழி துன்பங்களைத் தவிர்க்க ஒரு வழியை புத்தமதம் கண்டுள்ளது. இதனால் ஒரு மனிதன்

வாழ்வில் விருப்பு வெறுப்புகளின்றி எவ்வித தீங்குமின்றி வாழ்வைக் கடத்தமுடியும்.

இந்து மதம் துன்பத்தை இப்பிறவியிலோ அல்லது முற்பிறவியிலோ நாம் செய்த பாவங்களின் பலன் என நம்புகிறது. நம் செயல்களுக்குக் கழுவாயாக இது பொறுமையோடு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். பிறர் துன்பங்கள் மீது ஏன் ஒரு அக்கறையற்ற நிலை ஏற்படுகிறது என்பது இதனால் புரிகிறது. துன்பத்தை துடைப்பதென்பது தூய்மைப் படுத்தப்படுதலைத் தள்ளிப்போடுவதாகும்.

பல நூற்றாண்டுகளாக யூத மக்கள் துன்பத்தின் பொருளைப் பற்றி சிந்தித்திருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் கடவுள் தன்னை கோபங்கொண்டு பழியுணர்வுடன் பாவிகளைத் தண்டித்து நீதிமான்களுக்கு வெகுமதி அளிக்கும் நீதியின் கடவுளாக வெளிப்படுத்தி யிருக்கிறார். ஆனால் காலம் நிறைவுற்றபோது கடவுள் தன்னை அன்பின் கடவுளாக, மனிதரின் துன்பங்கண்டு இரங்கும் கடவுளாக, மன்னித்து மறக்கும் ஒருவராக வெளிப்படுத்தினார். மனிதர்களுடைய துன்பங்களைத் தாங்கி, பிறர் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள அழைப்பு விடுத்து, தீமையின் அடிமைத்தனத்திலிருந்து மனுக்குலத்தை விடுவிக்க என துன்பத்திற்குப் புதுப்பொருள் தந்த இயேசுவில் கடவுள் காட்சியளிக்கிறார். இது துன்பத்தை வேறுவழியின்றி ஏற்றுக் கொள்வதன்று, மாறாக மனித முழுமையே இறை மகிமை என அன்பிலும் தோழமையிலும் மனித முழுமைக்கான போராட்டத்தில் பங்கு கொள்ளுதலே ஆகும்.

மே 1984

9. வாழ்வின் அனுபவம் சாவின் அனுபவம்

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் நான் செத்துக்கொண்டேயிருக்கிறேன். இப்பொழுது நான் வாழ்ந்த இக்கணத்தை இனி நான் வாழமாட்டேன். அது முடிந்தது, அது செத்துவிட்டது. நான் செய்யமுடிந்த ஒன்றே ஒன்று என் வாழ்வின் இக்கணம் என்னும் கொடையை கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பதுதான். திரும்பி வரமுடியா இக்கணத்தை நான் முழுமையாக வாழ முயல்கிறேன். நாளையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். தந்தையில் விசுவாசம் கொள்ளுங்கள் என்றார் இயேசு. கடந்த காலத்தை ஏற்றுக் கொள்வதும் கடவுள் என் பாவங்களையெல்லாம் பின்னால் தூக்கி எறிந்து விட்டார் என்பதை ஏற்றுக் கொண்டு அவரைப் பார்த்து அகமகிழ்வதும் சிலநேரங்களில் கடினமாக இருக்கிறது.

தினமும் கொடுக்கப்படுகிற எதுவும் அதன் கவர்ச்சியை இழந்துவிடுகிறது. நாமும் அதைப் பெரிதுபடுத்துவதில்லை. இது புதுமைக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்பதை நான் உணர மறந்துவிடுகிறேன். எடுத்துக்காட்டாக, நாம் சுவாசிக்கும் காற்று நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு கொடை. வேறு எந்த கோள்களும் நமக்கு இயற்கையாகக் கிடைக்கிற காற்றைப் பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் அதை வியந்து பாராட்ட, நமது கண்டுபிடிப்பில் அக்களித்து அதைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள நாம் நேரம் ஒதுக்குவதில்லை. அதுபோலவே அன்றாடம் எடுக்கப்படும் மருந்தும் அதன்

செயல்திறனை நாளடைவில் இழந்துவிடுகிறது. கடந்த 15 ஆண்டுகளாக நான் தினமும் ஒரே மருந்தை எடுத்து வருகிறேன். என் உடல்நிலைக்கேற்ப மருந்தின் அளவு மாற்றியமைக்கப்படும். மூளையில் சுரப்பது நின்றுவிட்ட டோப்பமைன் என்னும் நீர்மத்திற்கு ஈடாக இம்மருந்து அளிக்கப்படுகிறது. இழந்துபோன டோப்பமைன் செய்ய வேண்டிய வேலைகளை இச்செயற்கையான வேதிப்பொருட்கள் ஓரளவுக்கு வெற்றிகரமாக செய்கின்றன.

நீங்கள் ஏன் ஒரு மருந்து விடுமுறை எடுக்கக்கூடாது? என்று நரம்பியல் மருத்துவர் மோகன்தான் என்னிடம் கேட்டார். இந்நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாக மருந்தின் அளவு குறைக்கப்பட்டு இறுதியில் முற்றிலுமாக நிறுத்தப்படும். அத்தியாசிய சில மருந்துகள் மட்டுமே கொடுக்கப்படும். மருந்து குறைக்கப்பட்டு வரும் நாட்களில் உடலின் எதிர்வினைகள் குறிக்கப்பட்டு ஆயப்படும். இதில் அபாய நேர்வுகள் உண்டு, கடுமையான கட்டுப்பாட்டுக்குட்பட்டே இது செய்யப்பட வேண்டும் என்று மருத்துவர் கூறியிருந்தார். கடவுளிலும் நரம்பியல் மருத்துவரிலும் நம்பிக்கை கொள்ள இன்னொரு வாய்ப்பு.

மருந்து விடுமுறையை நாங்கள் தொடங்கிய போது நிலமை நம்பிக்கையற்றுப் போய்விட்டது. பிரச்சினைகள் ஒவ்வொன்றாக வந்தன. நடப்பது கடினமாயிற்று. மூளையின் அவசரக்கட்டளைகளுக்குப் பணிய முடியாமல் திடீரென ஒருகால் உறைந்துவிட்டதைப் போலாகி கீழே விழுந்துவிடும் அபாய நேர்வு ஏற்பட்டது. ஆனால் அப்படியொரு வீழ்ச்சி இன்னும் நிகழவில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். என்னைக் கரம்பற்றி வழிநடத்த எனக்கொரு துணைவன்

உண்டு. அவன் தடுமாறினாலும் வீழ்வதில்லை. ஏனெனில் ஆண்டவர் அவனைக் கரம்பற்றி அழைத்துச் செல்கிறார். (தி.பா. 36) எனக்குப் பிடித்தமான திருப்பாடல் இது. அண்மையில்தான் திருப்பாடல்களின் பெரும் மதிப்பை நாங்கள் கண்டுபிடித்தோம்.

நெருக்கடி இன்னும் அதிகரித்தது. என்னால் காலூன்றி நிற்கமுடியா நிலை வந்தது. அருகிலுள்ள நிறுவனம் ஒன்றிலிருந்து சக்கர நாற்காலி ஒன்றைக் கொண்டு வந்தார்கள். நான் அதை ஏற்க மறுத்துவிட்டேன். சில நாட்களுக்குப் பின் என்னால் மீண்டும் நடக்கக் கற்றுக் கொண்டேன். நாட்கள் செல்லச் செல்ல நம்பிக்கையுள்ள உதவியாளர் ஒருவரின் துணையோடு நான் சுதந்திரமாக நடக்கிறேன். நெருக்கடியின் மிகமோசமான கட்டத்தில் நான் முற்றிலும் சார்புநிலைக்குள் ளானேன். நான் மொத்த சரணடைந்து இம்மதிப்புக் குலைவை நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால் எனக்களிக்கப்பட்ட எல்லா அன்புக்கும் கவனிப்புக்கும் மத்தியிலும் நான் தனிமையை உணர்ந்தேன்.

நான் தனியாக இருக்கும் போது விழுந்துவிடாதபடி சிறிதாய் அடியெடுத்து நடக்கிறேன். என் அறையிலிருக்கும்போது மரச்சாமான்களைப் பிடித்துக்கொண்டு ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு தவழ்கிறேன். ஆனால் இதனால் அதிக பயனில்லை. இப்படிப்பட்ட முயற்சிகளினால் நான் அதிகம் களைப்படைந்தேன். ஒருநாள் மிகவும் களைப்பாக இருந்தால் படுக்கச்சென்றேன். அப்போது நேரம் மாலை 6.15 மணி. பின் திடீரென எழுந்திருந்து நேரம் என்ன என்று கேட்டேன். அப்போது மணி 6.45 தான் ஆகியிருந்தது. எனக்கு அது காலைப் பொழுதுபோலவும் இரவெல்லாம்

தூங்கிவிட்டது போலவும் ஓர் உணர்வு. ஆனால் நான் அரை மணி நேரம்தான் தூங்கியிருந்ததாகச் சொன்னார்கள். என் மனதில் ஒரே குழப்பம். படுக்கையிலிருக்கும்போது நான் சந்திக்க வேண்டிய வேறு பிரச்சினைகள் இருந்தன. என் உடல் மரக்கட்டைபோல் கனத்து நான் இழுத்துச் செல்லவேண்டிய ஒன்றாகத் தோன்றியது. படிப்படியாக என் உடல் வேறு யாருடைய உடல்போலவோ மாறிவருகிறது.

என் நாவு பசைபோலாகி அதிலிருந்து வினோதமான ஒலிகள் வருவது போன்று தோன்றியது. உதவிக்காக அழைக்கிறேன், ஆனால் வாயில் ஒலி எதுவும் எழுவதில்லை. பேசுவதற்கு நான் வலிமையான முயற்சி எடுக்கவேண்டும். நான் மெதுவாக மங்கிய ஒலியில் பேசுகிறேன். மனம் ஒளியற்று குழம்பிப்போன நிலையில் சில பிரச்சினைகளை என்னால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. மூச்சுவிடவே நான் போராட வேண்டியிருக்கிறது. இது என்னை மூச்சு வாங்கச் செய்கிறது. என் மூச்சைக் கட்டுப்படுத்த நான் முயற்சி செய்கிறேன். மூச்சுத்திணறலால் சாப்பிடுவதே எனக்குக் கடினமாக இருக்கிறது. ஆஸ்த்மா நோயினால் பாதிக்கப்பட்டவன் போலாகிவிட்டது. உணவு விழுங்க முடியாநிலை. உணவைப் பார்த்தவுடன் வயிறு குழம்பி வாந்தியெடுப்பது போலொரு உணர்வு. அளவுக்கதிகமாக உணவு எடுத்துவிட்டால் வாந்தி கண்டிப்பாக வருகிற ஒன்று. இப்பரிசோதனை காலத்தில் நான் ஐந்து கிலோ எடை இழந்தேன். ஒடுக்கப்படுவதுபோன்றொரு உணர்வும் அச்சமும் என்மீது படையெடுத்தது.

ஒருவருடைய வாழ்வு முடியும் தருவாயில் அவருடைய கடந்தகாலம் எல்லாம் மனத்திரையில் ஓடுமென்றும்

மனந்திரும்புவதற்கு நேரமிருக்குமென்றும் சொல்லப்படுகிறது. துரதிர்ஷ்டமாக எனக்கு அப்படி ஒரு அனுபவமில்லை. மரத்துப்போன, வெறுமையான ஓர் உணர்வுதான் எனக்கு. ஆண்டவரின் ஜெபத்தை சொல்லி முடிக்கவோ எச்செபத்தையும் ஒப்புக்கொடுக்கவோ என்னால் இயலாத நிலை. ஒரு பயங்கரமான தனிமை என்மீது படையெடுப்பதை உணர்கிறேன். இது சுயமைய சிந்தனை, பேராவல் இவற்றோடு கலந்தது. என்னால் ஜெபிக்க இயலவில்லை. இருப்பதெல்லாம் வெறும் கரங்கள்... கடவுள் என் குறைகளைப் பார்ப்பதில்லை என்பதை நான் மறந்திருந்தேன். அவரது அன்பு எல்லாவற்றையும், ஏன், பாவங்களையும் ஊடுருவ வல்லது.

என் உடல், என் இதயம், என் முழுமையும் இறைத்தந்தையில் நம்பிக்கை கொள்ள ஏங்குகிறது. நான் வந்ததைப் போலவே உலகை விட்டு செல்லும்போதும் வெறுங்கைகளோடு ஒப்புக் கொடுக்க எதுவுமின்றி கருணையுள்ள தந்தை கரம்பற்றி என்னை வாழ்வின் பந்திக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்ற ஒரே ஜெபத்தோடு செல்வேன். அங்கு நான் அன்புசெய்யப்பட்டு வாழ்வின் பயணத்தில் குறுக்கிட்ட மனிதர்களை சந்தித்து அவர்களின் மன்னிப்பை நானும் என் மன்னிப்பை அவர்களும் அனுபவிப்போம். இந்த அன்பு உடலின் உணர்வுகளாலன்றி கடவுளோடுள்ள நேரடித் தொடர்பில் மலரும் உள்ளுணர்வில் வாழ்வாக, மகிழ்வாக, முழு சரணாக, அமைதியாக வெளிப்படும்.

என் வாழ்வு முழுவதும் விசுவாசத்தோடு என் இறுதிநாள் மட்டும் என்னைப் பராமரித்த எல்லோருக்கும் நான் எந்நன்றி சொல்வேன்? ஆண்டவர் அவர்களுக்கு வெகுமதி அளிப்பார் என்று எனக்குத் தெரியும். தேவையிலிருப்பவரின் பாதங்களைக்

கழுவுவதில் அவரைப் பின்பற்ற அவர் நம்மை அழைக்கின்றார். ஒருநாள், விரைவில், கடவுளில் நாம் பகிர்ந்து கொள்ளும் முழு மகிழ்வில் ஆனந்தத்தோடு நாம் மீண்டும் சந்திப்போம். நீண்ட இருள்சூழ்ந்த சுரங்கப்பாதையின் இறுதியில் சற்று ஒளி தென்படுகிறது. நான் மெதுவாக சில நேரங்களில் நம்பிக்கையற்று, சில நேரங்களில் நம்பிக்கையோடு முன்னேறுகிறேன். பாதையின் இறுதியை நான் அடைவேன் என்றும் அங்கு என்னைத் தூய்மைப்படுத்தி விடுவிக்கும் பேரொளியைக் காண்பேன் என்பதும் நிச்சயம்.

எனது உடல் திருமலை ஆசிரம சிற்றாலயத்தின் எதிரே பூமித்தாயின் உதரத்தில் இறக்கப்படும். என்னை அறிந்த எல்லோருக்கும் ஒரு பிரசன்னமாக நானிருப்பேன். நான் உயிருடன்தான் இருக்கிறேன் என்பதையும் இயேசுவுக்காகவும் அவர் சீடர்களுக்காகவும் தந்தை தயாரித்துள்ள பந்தியிலே மகிழ்வோடு பகிர்ந்துகொள்ள அவர்கள் வரும்வரை அவர்களுக்காக நான் காத்திருப்பதையும் அவர்கள் நினைவுகூர்வார்கள்.

வாரும். ஆண்டவர் இயேசுவே வாரும்.

ஜூலை 1985

என் வாழ்வின் முக்கிய நாட்களில் சில...

1934 ஆகஸ்ட் 29	– பெல்ஜியத்தில் பிரஸ்ஸல்ஸ் நகரில் பிறப்பு
1949 ஜூலை 17	– லுவைன் நகரில் குருவாகத் திருநிலைப்பாடு
1950 ஆகஸ்ட் 16	– இந்தியாவுக்குப் புறப்பாடு
1950 அக்டோபர் 3	– கோட்டாறு மறைமாவட்டத்திற்கு வருகை
1951 ஜூன் 7	– முளகுமூடு உதவி அருட்பணியாளராக நியமனம்
1952 ஜூன்	– 'பரக்குன்று பங்குப்பணியாளராக நியமனம்
1954	– பனையேற்றுத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் ஆரம்பம்
1954 ஜூன்	– மேல்பாலை நடுநிலைப்பள்ளியின் ஆரம்பம்
1958	– பரக்குன்று ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது
1962	– பெல்ஜியத்தில் முதல் விடுமுறை
1963 பெப்ரவரி	– கோட்டாறு சமூக சேவை சங்கம் அமைக்கப்படுதல்
1965 செப்டம்பர் 5	– நல்லாயன்புரம் ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது
1968	– மீன்துறையில் ஈடுபாடு
1970	– பெல்ஜியத்தில் இரண்டாவது

		விடுமுறை
1971	–	சமூகநல வளர்ச்சித் திட்டத்திற்கான (CHD) ஆரம்ப நடவடிக்கைகள்
1972	–	மேல்பாலையின் பங்குப்பணியாளராக நியமனம்
1972	–	பார்க்கின்சன் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது
1974	–	மீனவர் சங்கங்கள் செயல்பட ஆரம்பிக்கின்றன.
1974 பெப்ரவரி 27	–	பங்குப்பணியிலிருந்து விடுபட்டு KSSS–ன் முழுநேர இயக்குனராக நியமனம் திருமலை ஆசிரமத்தில் சேர்ந்த நாள்
1976	–	திறந்த ஆசிரமத்தின் தொடக்கம்
1983	–	மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து
	–	மாவட்ட மீனவர் சங்கங்களின் இணையமாகின்றன
1983 ஏப்ரல் 10	–	KSSS–ன் இயக்குனர் பொறுப்பிலிருந்து விடுபடுதல்
1987 ஜனவரி 1	–	CHDP–ன் திட்ட இயக்குனர் பொறுப்பிலிருந்து விடுபடுதல்
1987 ஜூன்	–	மண்பாண்ட தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திலிருந்து பின்வாங்குதல் திருமலை ஆசிரமத்தில் தொடரும் பிரசன்னம்
10.10.2002	–	இறப்பு [சங்கனாங்கடை ஆசிரமம்]

உயிர்த்த இயேசு

இடைக்கோடு

ஜோதி சாஹியின் மொசைக் சித்திரம்